குறிப்பு

## கூறு: 1 ஆவூர்மூலங்கிழார்பாடல்கள்

**அகம் 24 156 341 -**

**புறம் 38 40 166 177 178 196 261 301.**

1. பாட அமைப்பு ஆவூர் மூலங்கிழார் பாடல்கள்
1.1 அறிமுகம்
1.2 குறிக்கோள்கள்
1.3 அகநானூறு விளக்கம்
ஆவூர் மூலங்கிழார் பாடல்கள்
1.4 அகநானூறு 24, திணை – முல்லை
1.5 அகநானூறு 156, திணை – மருதம்
1.6 அகநானூறு 351, திணை – பாலை
1.7 புறநானூறு விளக்கம்
1.8 புறநானூறு 38
1.9 புறநானூறு 40
1.10 புறநானூறு 166
1.11 புறநானூறு 177
1.12 புறநானூறு 178
1.13 புறநானூறு 196
1.14 புறநானூறு 261
1.15 புறநானூறு 301
1.16 தொகுத்துக் காண்போம்
1.17 சோதித்தறியும் வினாக்கள்
1.18 பயிற்சி வினா
1.19 மேலும் படித்தறிக

### 1.1. அறிமுகம்

பண்டை இலக்கியங்கள் தமிழ் நாட்டின் பண்பாட்டை உலகறியச் செய்யும் வகையில் திகழ்வன. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பண்டை இலக்கியங்கள் என்று அழைக்கப் பெறுவன. இவையே சங்க இலக்கியங்கள் என்னும் பெயரில் வழங்கப் பெறுகின்றன. காலத்தால் மிகப் பழையனவாகிய இந்நூல்கள் கி.பி. முதல்

நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றியவை என்பது பல்லோர் கருத்து. காதலும் போரும் பண்டை இலக்கியங்களின் அடிக்கருத்தாக அமைந்தன. அகம், புறம் - பற்றி இப்பாடப் பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பு

## 1.2. குறிக்கோள்கள்

- அகம், புறம் என்பன இவ்விலக்கியங்களின் பாடு பொருளாகும் அகம் காதல் - வீட்டு வாழ்க்கை பற்றித் தெரிந்து கொள்வீர்கள
- புறம் - வீரம் - நாட்டு வாழ்க்கை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- ஆவூர் சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர். மூலங்கிழார் தன்னாட்டை மறவாமல் பாடியுள்ளார். காவிரி பாயும் நாட்டைச் சுட்டியுள்ளார். நாடு - ஆர் - காவிரி நாடுகள் நீர்வளத்தாலும், பொருள் வளத்தாலும் நிறைதற்கு ஏதுவாய காவிரி என்பதை ஆவூர் மூலங்கிழார் பாடல்கள் மூலம் தெரிந்து கொள்வீர்கள்

## 1 .3. அகநானூறு விளக்கம்

'அகம்' என்ற பெயரமைந்த நூல் இது ஒன்றே. இந்நூல் நெடுந்தொகை என்றும் வழங்கப்பெறும். நானூறு பாடல்களை நூற்றைம்பது புலவர்கள் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார். அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் உருத்திரசன்மன், தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. பாடல்களைப் பகுத்துள்ள முறையாலும் தொகுத்துள்ள முறையாலும் சிறப்புடையது.

**ஆவூர் மூலங்கிழார் பாடல்கள்**

| | | |
|---|---|---|
| 1 முதல் 120 பாடல்கள் வரை | - | களிற்றியானை நிரை |
| 121 முதல் 300 பாடல்கள் வரை | - | மணிமிடை பவளம் |
| 301 முதல் 400 பாடல்கள் வரை | - | நித்திலக் கோவை |

இந்நூல் 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப்பேரெல்லையும் உடையது.

| | | |
|---|---|---|
| 1, 3, 5, 7, 9 | - | முதலான ஒற்றைப்படை எண் பெற்ற பாடல்கள் பாலைக்குரியன. |
| 2, 8, 12, 18 | - | எண் பெற்ற பாடல்கள் குறிஞ்சிக்குரியன. |
| 4, 14 | - | நான்கை ஒட்டியன முல்லைக்குரியன |

| | | |
|---|---|---|
| 6, 16 | - | ஆறை ஒட்டியன மருதத்துக்குரியன. |
| 10, 20 | - | எண்ணுடையன நெய்தலுக்குரியன. |

## 1.4. அகநானூறு: 24 திணை - முல்லை

குறிப்பு

**தலைவன் கூற்று**

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன
தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரல்அம் துவலை தூவலின் மலரும்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை
விசும்புஉரி வதுபோல் வியல் இடத்து ஒழுகி
மங்கும் மாமழை தென்புலம் படரும்
பனிஇரும் கங்குலும் தமியள் நீந்தித்
தம்உள ரோளே நன்னுதல், யாமே
கடிமதிற் கதவம் பாய்தலின் தொடிபிளந்து
நுதிமுகம் மழுகிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா ஒண்மணி
கழிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை உதைப்புத்
தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்துக்
கழித்துஉறை செறியா வாள்உடை எறுழ்த்தோள்
இரவுத் துயில் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே

இப்பாடலுக்கு

1. தலைமகன் பருவங் கண்டு சொல்லியது
2. வினைமுற்றும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதுமாம் என்று

இரண்டு துறைகள் கூறப்பட்டுள்ளன.

1. தலைவன் வேந்தன் ஆணையை மேற்கொண்டு, தலைவியைப் பிரிந்து பாசறையின் கண் தங்கியிருந்தான். தலைவியை விட்டுப் பிரியும் போது திரும்பி வரும் பருவத்தைக் கூறிப் பிரிந்தனன். தலைவன் கூறிய பருவம் வந்ததாயினும் தலைவன் பாசறையிடம் செல்ல இயலவில்லை.

குறித்த பருவம் வந்தும் சென்று தலைவியைக் கூடாது ஈண்டு இருக்கின்றோமே எனத் தலைவன் இரங்கிக் கூறினான்.

2. “இரவுத் துயில்மடிந்த தானை
உரவுச் சினவேந்தன் பாசறையேமே“

குறிப்பு

எனத் தலைவன் கூறுதலின் “வினைமுற்றுந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉம் ஆம்” என்று இரண்டாவது கூற்று அமைந்தது. இரவுத் துயில் மடிந்ததானை என்பதனான், படைகள் போர் முடிந்த நிலையில் இரவு நேரத்தே நிம்மதியாக உறங்குகின்றன. இதனால் வினை முற்றும் தலைமகன் என்பதும் பொருத்தமாக உள்ளது.

வேள்வி செய்யாமையான் தாழ்ந்த நிலையடைந்த ஊர்ப்பார்ப்பான், கூரிய அரத்தால் சங்குகளை அறுத்து வளைகள் செய்தது போக எஞ்சிய சங்கின் தலைப்பைப் போன்ற, கட்டுண்ட பிணிப்பு அவிழாக - விரியாத சுரிந்த முகத்தினை உடைய பகன்றையின் அரும்புகள், வீசிச்சிதறுகின்ற அழகிய மழைத்துளிகள் வீசுதலால் மலர்ந்து நின்றன. அங்ஙனம் மலரும் காலமாகிய குளிர்ந்த மழை பெய்து ஓய்ந்ததை மாதத்தின் கடைநாளில் (முன்பனிப் பருவத்தின் கடைசி நாளில்) காலையில் எழுகின்ற சூரியன் (மேகத்தில்) மறைந்திருக்கும்படியான வாடைக் காற்றுடன் கூடிய விடியற்காலத்தே, இருண்ட கரிய மழை மேகங்கள் வானமே தோல் உரிவது போல அகன்ற வானிடத்தே இயங்கி, தென் திசைக்கண் போய்ச்சேரும், பனியுடன் கூடிய இத்தகைய கரிய இரவின் கண் சிறந்த நெற்றியினை உடையளாய நம் தலைவி வெள்ளத்தின் கண் தனியளாய் நீந்தி தமது ஊரின்கண் உள்ளாள்.

யாம், கவலை உடைய மதிற்கதவிடத்துப் பாய்தலினால், மருப்பில் அணியப்பட்டுள்ள புண்பிளந்து, அதனால் கூரிய முனை மழுங்கிய மொட்டையான, வெண்மையான கோடுகளையும், சிறிய கண்களையும் உடைய யானையின் நீண்ட நாக்கினை உடைய மணி ஓசையும், கழிகளுடன் பிணிக்கப்பட்ட கரிய தோலால் ஆகிய கேடகத்தும் பொழியம் அம்புகள் தைத்தலால் எழும் ஓசையும், முழங்கும் ஓசையினை உடைய முரசொலியுடன் சேர்ந்து ஒலிக்கும் படியான நள்ளிரவுப் பொழுதின் கண்ணே உறையினின்றும் உருவப் பெற்று மீண்டும் உள்ளிடாத வாளினைக் கொண்ட வலிய தோளினையும், இரவில் அயர்ந்து தூங்கும் தானைகளைக் கொண்டவனுமாகிய மிக்க

சினம் பொருந்திய வேந்தனது பாசறைக்கண் உள்ளோம். (என் செய்வாம்) என்று தலைவன் கூறினன்.

**குறிப்பு**

பகன்றை மலருக்குச் சங்கின் நுனி உவமையாகக் கூறப்பெற்றுள்ளது. மேகங்கள் தென்புலம் படர்வது விசும்பு உரிவது போல் உளது என்ற உவமையும் பொருத்தமாக உள்ளது. தலைவன் வேந்துறு தொழில் காரணமாகப் பிரிந்துள்ளான்.

தலைவி இல்லத்தில் தனியளாய் ஆற்றி இருந்தனள். இதனான் முல்லை உரிப்பொருள் கூறியவாறாயிற்று. இது பகைவயிற் பிரிவாகும். பகன்றை, மாமழை முல்லைக் கருப்பொருள், பாசறைக் காட்சி அழகுறச் சித்தரிக்கப் பட்டுள்ளது. யானையின் மணி ஒசை, கணை ஓசை, இரண்டும் முரசு ஓசையுடன் சேர்ந்து முழங்குகின்றன.

---

## 1.5. அகநானூறு - 156

**திணை - மருதம்**

**தோழிகூற்று:- தலைமகளை இடத்து உய்த்து வந்து தோழி தலைமகனை வரைவு கடாயது**

---

முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு
மூட்டுறு கவரி தூக்கி அன்ன
செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர்
மூதா தின்றல் அஞ்சிக் காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇக்
காஞ்சியின் அகத்துக் கரும்பு அருத்தி ஆக்கும்
தீம்புனல் ஊர திறவி தாகக்
குவளை உண்கண் இவளும் யானும்
கழுநீர் ஆம்பல் முழுநெறிப் பைந்தழை
காயா ஞாயிற்று ஆகத் தலைப்பப்
பொய்தல் ஆடிப் பொலிக என வந்து
நின்நகர்ப் பிழைத்து தவறோ பெரும,
கள்ளுங் காணியும் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நூல்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சித்
தணிமருங்கு அறியாள் யாய் அழ

மணிமருள் மேனி பொன்நிறம் கொளலே.



**குறிப்பு**

தலைவன் தலைவியைச் சந்திக்க வருகிறான். பகற்காலமாயின் பகற்குறி என்றும் இரவுக்காலமாயின் இரவுக்குறி என்றும் குறியிடம் பெயர் பெறும். தோழி, தலைவியைக் குறியிடத்தே விடுத்துத் தலைவனிடம் செய்தி கூறுவாள். பின்னர்த் தலைவன் தலைவி இடத்துச் சென்று அவளைச் சந்தித்து உரையாடி மகிழ்வான். ஈண்டுத் தோழி தலைவியைக் குறி இடத்தே விடுத்து தலைவனிடத்து, விரைவில் திருமணம் செய்து கொள்வாயாக என்று கடாவினள்.

வரைவு கடாதல் குறிஞ்சித் திணைக்குரியது. களவொழுக்கத்தில் தோழியால் கூறப்பெறுவது. இப்பாடல் மருதத் திணைக்குரியது. மருதத்தில் களவு திணைமயக்கம் ஆகும்.

முரசங்களை உடைய செல்வரது குதிரையது தலையின் உச்சியிடத்தே இணைத்துத் தைத்த கவரியை நிமிர்த்து வைத்துளது போன்று, செழுமை வாய்ந்து வயலிடத்தே விளைந்த நெல்லின் சிவந்த அரிகளை உடைய இளங்கதிர்கள் தோன்றுகின்றன. அவ்விளங்கதிர்களை முதிய பசு தின்பதைக் கண்டு, அஞ்சிய வயற்காவலன் நெற்கதிரைத் தின்னாதவாறு தடுத்து, கரும்பினை உண்ணுமாறு செய்தனன். பாகலின் சிறந்த கொடியைப் பகன்றைக் கொடியுடன் அறுத்து, அவற்றால் அப் பசுவைக் காஞ்சி மரத்திடத்துக் கட்டி வைத்தனன். இத்தகைய நீர்வளம் பொருந்திய ஊரையுடைய தலைவனே,

பெருமானே, எம் அன்னை துறையிடத்து நிலைபெற்றுள்ள தெய்வத்திற்குக் கையுறைப் பொருள்களாக, கள்ளினையும், மாலையினையும் நிமிர்ந்த கொம்புகளையும் தொங்கும் காதுகளையும் உடைய வெள்ளாட்டுக் கிடாயையும் செலுத்தினள். செலுத்தியும் தன் மகளுக்கு உற்ற நோய் இதுதான் என்று அறியாளாய் அழுதனள். தலைவியின் நீலமணி போன்ற அழகிய மேனி, பசலையால் பொன்னிறம் அடைந்தது.

குவளை மலர்போலும் மையுண்ட கண்ணிணை உடைய தலைவியும், யானும் செவ்விதாக கழுநீர், ஆம்பல் இவற்றின் இதழ் ஒடியாத பூக்களுடன் தூய பசியதழை உடை மேனியிடத்து அலைத்திட, ஞாயிற்றின் ஒளி மிகுதியும் காய்தல் இல்லாத காலைப் பொழுதின் கண்ணே சிற்றில் விளையாடி, (பின்னர்) நின்னைக் கண்டு நீ வாழ்வாயாக எனக் கூறிவந்து, நின்னுடன் நகையாடா நின்றோம். நின்னுடன்

குறிப்பு

நகையாடியதால் எம் தலைவியின் மேனி பொன்னிறம் அடைந்தது. நகையாடியது தவறோ? எனக் கூறினள் தோழி.

தலைவியின் மேனி பசலை படராது இருத்தல் வேண்டும், எனின் இவளை விரைந்து வரைந்து கொள்க. மேலும் எம் அன்னை அழாதிருக்கவும், ஊரார் அலர் தூற்றாதிருக்கும் பொருட்டும் வரைந்து கொள்க என்பதாம்.

தீம்புனல் ஊர - மருத முதற்பொருள் கழுநீர்ப்பூ,, ஆம்பற்பூ தாழை மலர், காஞ்சிமரம், கரும்பு, நெல் முதலியன - மருதக் கருப்பொருள்கள். மருத உரிப்பொருளாய ஊடலும், ஊடல் நிமித்தமும் இப்பாடலில் இடம் பெற்றிலது. மாறாக தலைவியின் களவொழுக்கம் அறியாமல் தாய் தெய்வத்திற்குக் கையுறைப்பொருள் செலுத்தியது குறிஞ்சி உரிப் பொருளாகும்.

மருதமும் குறிஞ்சியும் திணைமயக்கம்.

சங்கப்பாடல்கள் உள்ளுறை, இறைச்சிப் பொருளுடன் அமையக் கூடியன.

இப்பாடலின் உள்ளுறை அமைந்துள்ளது. விளைந்த பின்னர்ப் பெரும்பயன் அளிக்கக்கூடிய இளம் நெற்கதிரை பசு தின்னாதவாறு, கரும்பினை அருந்தச் செய்து கட்டி வைத்தனன். பெரும்பயன் கொள்வான் பொருட்டு அதுபோல, பின்னே பெரும்பயன் தரும் களவொழுக்கத்தை அழித்துப் பயன் தாராது செய்யும் அலர் கூறுவார் வாயடங்கிப் போகுமாறு வரைந்து கொள்வாயாக என்றவாறு.

**1.6. அகநானூறு 341**

**திணை - பாலை**

**தலைமகள் கூற்று - பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது**

உய்தகை இன்றால் தோழி பைபயக்
கோங்குங் கொய்குழை உற்றன குயிலும்
தேம்பாய் மாஅத்து ஓங்குசினை விளிக்கும்
நாடுஆர் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழையழி நீத்தம் சாஅய வழிநாள்
மழைகழிந்து அன்ன மாக்கால் மயங்குஅறல்
பதவுமேயல் அருந்து துளங்குஇமில் நல்ஏறும்
மதவுநடை நாக்கொடு அசைவீடப் பருகிக்

குறிப்பு

குறுங்கால் காஞ்சிக் கோதை மெல்இணர்ப்
பொன்தகை நுண்தாது உறைப்பத் தொக்குஉடன்
குப்பை வார்மணல் எக்கர் துஞ்சும்
யாணர் வேனில் மன்இது
மாண்நலம் நுகரும் துணைஉடை யோர்க்கே.

தலைவன் தலைவியைப் பிரிந்துள்ளான். அழகிய வேனிற் பருவம் வந்து விட்டது. துணையோடு இருப்போர்க்கு இவ்வேனிற் பருவம் இன்பத்தை நல்கக் கூடியது. தலைவனைப் பிரிந்துள்ள நமக்கு உய்யுமாறு இல்லையே என்று தலைவி தோழியிடம் கூறினள்.

தோழியே,கோங்க மரங்கள் மெல்ல மெல்லக் கொய்தற்கு ஏற்றவாறு தளிர்களைப் பெற்றன. தேன் பெருகா நிற்கும் மாமரத்தின் உயர்ந்த கிளைகளிலிருந்து குயிலும் கூவும்.

நாடுகள் நிறைதற்கு ஏதுவாய காவிரியின் இரு கரைகளும் பொருந்துமாறு, ஓடக்கோல் மறைய மிக்க வெள்ளம் பெருக்கெடுத்தது. வெள்ளம் வற்றிய பின்னாளில் மழை பெய்து கழிந்தால் ஒத்த பெரிய வாய்க்கால்களில் தங்கிய நீரிணை, அருகம்புல்லாகிய உணவினைத் தின்ற அசையும் கொண்டையினை உடைய நல்ல ஏறுகளும் வலிமையுடைய நாவினால் தளர்ச்சி நீங்கக் குடித்தன. பின்னர்க் குறுகிய அடிப்பகுதியை உடைய காஞ்சி மரத்தின் மாலை போன்ற பூங்கொத்துக்களினின்றும் உதிரும் பொன்னிறமான நுண்ணிய பூந்தாதுகள் மேலே உதிர்ந்திட ஒருங்கு கூடிய நெடிய எக்கராகிய மணல் மேட்டிலே உறங்கா நின்றன.

கோங்கின் தளிர்தோன்றுதல், மாமரக் கிளைகளில் குயில் கூவுதல், காஞ்சிமர நிழலில் எருதுகள் துயிலுதல் இங்ஙனமாகிய இக்காலம், துணையுடையோர்க்குச் சிறந்த இன்பத்தை நுகருதற்கு ஏதுவாகிய அழகிய வேனிற் பருவம் ஆகும். அதனால் நாம் பெற்றது ஏன்?

துணையைப் பிரிந்துள்ள நாம் உய்யுமாறு இல்லையே, என்று தலைவி கூறினாள்.இப்பாடல் பிரிதல் உரிப்பொருளால் பாலை, தலைவனும், தலைவியும் சேர்ந்து இல்லை. பிரிந்துள்ளனர் என்பது இறுதி அடியில் தெளிவாயிற்று. ஆவூர் சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர். மூலங்கிழார் தன்னாட்டை மறவாமல் பாடியுள்ளார். காவரி பாயும்

நாட்டைச் சுட்டியுள்ளார். நாடு - ஆர் - காவிரி நாடுகள் நீர்வளத்தாலும், பொருள் வளத்தாலும் நிறைதற்கு ஏதுவாய காவிரி என்றார்.



**குறிப்பு**

## 1.7. புறநானூறு விளக்கம்

அகநானூறு போன்று 'புறம்' பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டமையின் புறநானூறு என்னும் பெயரினைப் பெற்றது. இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார். நூற்று அறுபது (160) புலவர்கள் பாடிய பாடற்தொகுதி இது. புறம் புறப்பாட்டு, புறம்பு நானூறு என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு. பண்டை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள், கொடைஞர்கள் முதலானோர் பாட்டுடைத்தலைவராக இடம்பொற்றுள்ளமை இந்நூலின் சிறப்பாகும்

தலைவனும், தலைவியும் சேர்ந்து இல்லை. பிரிந்துள்ளனர் என்பது இறுதி அடியில் தெளிவாயிற்று. ஆவூர் சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர். மூலங்கிழார் தன்னாட்டை மறவாமல் பாடியுள்ளார். காவிரி பாயும் நாட்டைச் சுட்டியுள்ளார். நாடு - ஆர் - காவிரி நாடுகள் நீர்வளத்தாலும், பொருள் வளத்தாலும் நிறைதற்கு ஏதுவாய காவிரி என்றார்.

## 1.8. புறநானூறு: 38

வரைபுரையும் மழகளிற்றின் மிசை
வான்துடைக்கும் வகையபோல
விரவு உருவின கொடி நுடங்கும்
வியன்தானை விறல்வேந்தே
நீ உடன்று நோக்கும்வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆகலின்
நின்நிழற் பிறந்து நின்நிழல் வளர்ந்த
எம்அளவு எவனோ மற்றே இன்நிலைப்
பொலம்பூங் காவின் நன்நாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை

உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவது அன்மையின் கையறவு உடைத்தென
ஆண்டுச்செய் நுகர்ச்சி ஈண்டும் கூடலின்
நின்நாடு உள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்உடைத்து எனவே

**குறிப்பு**

**திணை:** பாடாண்திணை

**துறை:** இயன்மொழி

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எம்முள்ளீர் எந்நாட்டீர் என்றாற்கு ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணைவிளக்கம்:** பாடு ‸ ஆண் ‸ திணை - பாடாண்திணைபாடப்பாடுகின்ற ஆண்மகனது பெருமை, திறமை, புகழ், கொடை, அளி முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல்.

**துறைவிளக்கம்:** இயன்மொழி - இயல்பைக் கூறுதல். தலைவன் எதிர்சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்ந்து பாடுதல்.

மலையை ஒக்கும் இளங்களிறுகளின் மிது, வானத்தைத் தடவும் கூறுபாட்டை உடையனபோல, பலநிறத்தை உடையனவாகிய கொடிகள் கலந்து அசைந்து தோன்றும் பரந்த பல படைகளை உடைய வெற்றி வேந்தே, நீ முனிந்து நோக்குமிடம் பொன்பொலிய, செஞ்ஞாயிற்றின் கண்ணே நிலவு உண்டாக வேண்டினும், நீ வேண்டியதை விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றவன்.

ஆதலின் நினது நிழற்கண்ணே பிறந்து நினது நிழற்கண்ணே வளர்ந்த எமது நினைவு எல்லை சொல்ல வேண்டுமோ? வேண்டாவன்றே, இனிய நிலையை உடையதாகிய பொற்பூக்களைக் கொண்ட கற்பகக்காவினை உடைய நல்ல விண்ணாட்டவரும் தாம் செய்த நல்வினைப் பயனால் இன்பத்தைப் பொருந்துவதல்லது, செல்வத்தினை உடையோர் வறியோர்க்கு வழங்குதலும் வறுமையுடையவர் செல்வம் உடையோர் பாற்சென்று இரத்தலும் விண்ணாட்டுச் செய்யக் கடவதன்று. ஆதலின் அது செயலறவு உடைத்தெனக் கருதி. விண்ணுலகத்து நுகரும் நுகர்ச்சி. இவ்விடத்தும் எய்தக் கூடியதாம். அதனால் நின்நாட்டை நினைப்பவர் பரிசிலர், பகைவர் தேயத்தில் இருந்தாலும் நின்நாடு நின்னை உடைத்தென்று நின்னாட்டை உள்ளுவர்.

குறிப்பு

வேந்தே, நீ வேண்டியதை விளைவிக்கும் ஆற்றல் உடையவன். விண்ணுலகத்து நுகர்ச்சி ஈண்டும் அடையக் கூடியது. பகைவர், நாட்டகத்திருந்தும் பரிசிலர் நின்நாடு நின்னை உடையது என்று நின்நாட்டை நினைப்பர். ஆதலின் நின்நிழற் பிறந்த, நின்நிழல் வளர்ந்த எமது நினைவு அளவு சொல்ல வேண்டுமோ? என்று பொருள் முடிவு கொள்க. சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் படைச்சிறப்பு, வேண்டியது விளைக்கும் ஆற்றல் - விண்ணுலக நுகர்ச்சியை ஈண்டு அளிக்கும் திறம் ஆகியவற்றைப் பாராட்டிப் பேசுதலின் இது பாடாண் திணை ஆயிற்று.

கிள்ளிவளவன் இயல்பை - உடன்று நோக்கும் இடம் எரிதவழும் - அருளிநோக்கும் இடம் - பொன்பூக்கும் - வேண்டியது விளைக்கும் ஆற்றல் போன்றன கூறினமையின் துறை இயன்மொழியாயிற்று.

## 1.9. புறநானூறு : 40

நீயே பிறர்ஓம்புறும் மறமன்எயில்
ஓம்பாது கடந்து அட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழல்தைஇய
வல்லாளனை வயவேந்தே
யாமே நின் இகழ் பாடுவோர் எருத்து அடங்கப்
புகழ் பாடுவோர் பொலிவு தோன்ற
இன்று கண்டாங்குக் காண்குவம் என்றும்
இன்சொல் எண்பதத்தை ஆகுமதி பெரும
ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே

**திணை** : பாடாண்திணை **துறை** : செவியறிவுறூஉ

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணை விளக்கம் :** பாடு ̧ ஆண் ̧ திணை - பாடாண்திணை பாடப்பாடுகின்ற ஆண்மகனது பெருமை, திறமை, புகழ், கொடை, அளி முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல்.

**துறை** : அரசன் ஆற்றவேண்டிய உலகங்காவல் முறையையும், சிறந்த அறிவுரையையும் அவன் செவியிற் கூறி அறிவித்தல்

கிள்ளிவளவனே நீ பகைவரது, பாதுகாத்த மறம் நிலைபெற்ற அரண்களைப் பாதுகாவாது, எதிர்நின்று அழித்து, அவரைக் கொன்று, அவர்தம் மகுடமாகிய பசும்பொன்னால் நின் அடிகள் பொலிவு வீரக்கழல் செய்து புணைந்த ஆண்மையை உடையவன்.

**குறிப்பு**

வயவேந்தே, நின்னை இகழ்ந்து பொலிவு உரைப்போர் கழுத்தினை வளைத்து நின்னை இறைஞ்சுவர், புகழ்ந்து உரைப்போர் தோன்ற இருப்பர், இவற்றை இன்றுகண்டாற் போல காண்போம். எந்நாளும் இனிய மொழிகளோடு எளிய செவ்வியை ஆகுக, பெருமானே, ஒரு பெண்யானை கிடக்கும் சிறிய இடம் ஏழுகளிற்று யானைகளைப் பாதுகாக்கும் நாட்டினை உடைய பகைவர்தம் முடி, மன்னன் அடிகளின் கழல்களாகத் திகழும் என்றதனால் வெற்றிச் சிறப்புக் கூறப்பட்டது. இகழ்வோர் இறைஞ்சி நிற்பர், புகழ்ந்து பாடுவோர் பொலிவுடன் திகழ்வர் என்றதனால் ஆற்றல் புலப்பட்டது. ஒரு பிடி கிடக்கும் இடம் எழுகளிறுக்கு உணவு கொடுக்கும் இடம் என்றதனான் பொருட்குறைவின்மை கூறப்பட்டது. இவை பாடாண்திணைக் கூறுகள்.

பெரும, இன்சொல்லொடு எளிய செவ்வியை ஆகுக என்றதினான் அறிவுரை கூறப்பட்டது, ஆதலால் செவியறிவுறூஉத் துறை பொருந்திற்று.

## 1.10. புறநானூறு - 166

நன்று ஆய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய் போகாது
ஒன்றுபுரிந்த ஈர்இரண்டின்
ஆறு உணர்ந்து ஒருமுதுநூல்
இகல் கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய் உணர்ந்து
பொய் ஓராது மெய்கொள்இ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக,
வினைக்கு வேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண் ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த அருங்கற்பின்
அறம்புகழ்ந்த வலைசூடிச்

சிறுநுதல், பேர் அகல்அல்குல்,
சில சொல்லில், பல கூந்தல்நின்,
நிலைக்கு ஒத்தநின் துணைத் துணைவியர்
தமக்கமைந்த தொழில் கேட்பக்
காடுஎன்றா நாடு என்றாங்கு
ஈர்எழின் இடம் முட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்நாணப் பலவேட்டும்
மண்நாணப் புகழ்பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்து உற்றநின் திருந்து ஏந்துநிலை
என்றும் காண்கதில் அம்மயாமே குடர் அது
பொன்படு நெடுவரைப் புயலேறு கிலைப்பின்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை எம்ஊர் ஆங்கண்
உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வல் அத்தை யானே செல்லாது
மழைஅண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவளர் இமயம் போல
நிலீஇயர் அத்தை நிலமிசை யானே.

**குறிப்பு**

**திணை** : வாகை **துறை** : பார்ப்பனவாகை

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியம் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணை விளக்கம்** : வாகைத்திணை வாகைப்பூவினைச் சூடி போரிலே பகைவரைக் கொன்று வெற்றி அடைதல் வாகை எனப்படும்.

இயல்பாகிய கொள்கையினை உடையோர் தத்தமக்கே உரிய இயற்கைத் தகுதியினை, தனியாக வேறு பட்டுத் தோன்ற மிகுத்துக் கூறுதலும் வாகையாகும்.

**துறை விளக்கம்** : பார்ப்பனவாகை கேள்விச்செல்வத்தால் சிறப்பெய்திய பார்ப்பனன் யாகத்தால் வெற்றியைப் பெருக்குதல்

பாட்டுடைத் தலைவன் சோழநாட்டுப் பூஞ்சாற்றூரில் கௌணிய குலத்தைச் சார்ந்த விண்ணன் என்பவனின் மகனாகிய தாயன் ஆவன்.

மிக்க நீண்ட சடையினை உடைய முதிய இறைவனால் (சிவபெருமான்) பெரிதும் ஆராயப்பெற்று, வாக்கை விட்டு நீங்காது, அறம் ஒன்றையே பொருந்தி, நான்கு கூற்றை உடையதாய், ஆறு அங்கங்களாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூல் வேதம் ஆகும். அப்வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்துர் முதலான புறச்சமயத்தாரது மிகுதியைச் சாய்க்க வேண்டி இருந்தது. மெய்யைப் போன்ற பொய்யை உணர்ந்து, அப்பொய்மையை மெய் என்று கருதாமல் உண்மைப் பொருளை அப்புறச் சமயத்தார்க்கு ஏற்பக் கூறி, இருபத்தொரு வேள்விகளையும் குறையின்றிச் செய்து முடித்த, புகழ் அடைந்த தலைமைச் சிறப்புடைய அறிவுடையோர் மரபில் உள்ளவனே.

வேள்வி செய்தற்கு வேண்டி உனக்கு உரிமை பூண்ட காட்டு நிலத்து வாழும் பல்லை உண்ணும் மானின் தோல் நினது தோளின்கண் தோன்றும் பூணூல் மீது சிறந்து தோன்றா நின்றது. கொடுமை நீங்கிய பெறுதற்கரிய கற்பனையும், அறநூலால் புகழப்பட்ட சாலகத்தையும் அணிந்து, சிறிய நெற்றியினையும், பெரிய அகன்ற அல்குலையும்,[1] மென்மையான சொற்களையும், பலவாகிய கூந்தலையும் உடைய நின்னுடைய துணைவியராகிய காதலிமார் தத்தமக்குரிய ஏவல் தொழிலைக் கேட்டுச் செய்யா நின்றனர். காடென்றும், நாடென்றும் சொல்லப்பட்ட அவ்விடத்தே, காட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும் குறைவின்றி, நீர் நாணும்படி யாகத்தே நெய்யை வழங்கியும் எண் இறப்பப் பல வேள்விகளை விரும்பிச் செய்தனை. இதனால் நிலனே நாணுமாறு புகழ் பரப்பினை அரிய வேள்வி முடியாகிய காலத்தே விருந்தினரைப் பேணிய, நின் திருந்திய மேம்பட்ட நிலையை யாம் எந்நாளும் காண்போமாக.

மேற்றிசைக்கண், பொன்படுகின்ற குடகுமலைக் கண்ணே, மேகத்திடத்தே இடியேறு முழங்க மழை பெய்தமையால் பூக்களைப் பரந்து வருகின்ற புதுநீரை உடைய காவிரி உலகத்தைப் பாதுகாக்கும், குளிர்ந்த நீர்வளம் உடைய கொல்லையை உடைய எம் ஊரிடத்தின் கண் உண்ணப்படுவனவற்றை உண்டும், தின்னப்படுவனவற்றை, தின்றும் ஏறப்படுபனவற்றை ஏறியும் நீ தந்த பரிசிலைக் கொண்டாடுதற் பொருட்டு யான் செல்லாநின்றேன். நீ போகாது, மழை தலை எடுப்ப,

நெடிய பக்க மலைகளை உடையதாகிய மூங்கில் வளரும் இமய மலை போல, இந்நிலத்தின் மிசை நிலை பெறுவாயாக.

உரவோர் மருக, கலைப்பச்சை பொலிய நின் துணைத்துணைவியர் தொழில் கேட்ப, யாகத்தில் நெய் வழங்கியும், யாகங்கள் பலவேட்டும் புகழ்பரப்பியும் விருந்து பேணியும் நின் திருந்து ஏந்துநிலை இன்று போல என்றும் காண்போமாக. எம் ஊரிடத்து உண்டும், தின்றும், ஊர்ந்தும் நீ வழங்கிய பரிசில் கொண்டு கொண்டாடுவோமாகச் செல்வேன். நீ தானும் இமயம் போல நிலமிசை நிலை பெறுவாயாக, என்று இயைக்க,

குறிப்பு

பல்வேறு யாகங்களைச் செய்து உயர்ந்து நின்றமையின் வாகைத்திணை. விணணந்தாயனின் முன்னோர் கல்வி கேள்விகளிற் சிறந்து நின்று, வேள்வியால் வெற்றிபெற்றுத் திகழந்தனர். - பார்ப்பனவாகைத் துறை.

துணைவியர் உடன் இருப்ப யாகம் செய்யும் முறை விளக்கப் பெற்றது. யாகத்திற்கு வந்த விருந்தினர்களைப் பேணியமுறை சுட்டப்பெற்றது. யாகத்தின் போது பரிசாகப் பொருள் நிலம் முதலியன வழங்கப்பெற்றதையும் அறிய முடிகின்றது, இறுதியில் வாழ்த்தும் முறை இடம் பெற்றுள்ளது.

## 1.11.புறநானூறு - 17

ஒளிறுவாள் மன்னர் ஒண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்நாள் திரங்கிப்
பாடிப் பெற்ற பொன்அணி யானை
தமர்எனின் யாவரும் புகுப அமர்எனின்
திங்களும் நுழையா எந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி இருந்த
குறும்பல் குறும்பில் ததும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்
தீம்புளிக் கனாவொடு துடரி முனையின்
மட்டுஅறல் நல்யாற்று எக்கம் ஏறிக்
கருங்கனி நாவல் இருந்து கொய்து உண்ணும்
பெரும்பெயர் ஆதி பிணங்கு அரில் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்

பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச்சீர் சா லாதே

**குறிப்பு**

**திணை:** பாடாண்திணை **துறை:** இயன்மொழி

மல்லிகிழான் காரியாதியை ஆவூர் மூங்கிழார் பாடியது திணை, துறை விளக்கங்கள் முன்னர்க் கொடுக்கப்பட்டுள.

**மல்லிகிழான் காரியாதி**

இவன் குடநாட்டை உடையவன். தன்னை நாடி வருவார்க்கு வேண்டியன நல்கும் கொடையாளன். மல்லி என்னும் ஊரைச் சார்ந்தவன்.

**பாடற்பொருள்**

விளங்கிய வாளை உடைய வேந்தரது ஒளி பொருந்திய விளக்கத்தினை உடைய உயர்ந்த அரண்மனை இடத்து கண் ஒளி கெடப் பலநாள் நின்று உலர்ந்து அவ்விடத்துப் பாடிப்பெற்றனர் பொன் அணி யானைப் பரிசில்.

மன்னனுக்குச் சிறந்தார் ஆயின் எல்லோரும் அவனது அரண்மனையின் கண் எளிதிலி புகப் பெறுவர். போர் எனின் திங்களாலும் நுழையப்படாத பொறிகளைப் பொருந்திய வாயிலை உடையது. கள்ளை ஒருவருக்கொருவர் மாறுமாறாக நீட்டிட, ஒன்றற்கொன்று அணித்தாய் இருந்த குறிய பல அரணின் கண்ணே இருந்து அக்கள்ளை நிரம்ப உண்டு வைகுவர், சிறிது நேரம் கழித்துச் செருக்கினால் நீர்வேட்கை மிக்குப் புளிச்சுவையை வேட்டு நிற்பர். மதத்தாற் சிவந்த கண்ணை உடைய ஆடவர், அவர்கள் இனிய புளிப்பை உடைய களாப் பழத்துடனே, துடரிப் பழத்தையும் சேர்த்து உண்பர். அதுவும் வெறுத்தால், கரைகளில் உள்ள மரங்களின் பைந்தேன் அரித்தொழிகுகின்ற நல்ல கான்யாற்றினது மணற்குன்றின் கண்ணே ஏறி, கரிய நாவல் பழத்தைப் பறித்து இருந்து உண்பர். இச்சிறப்பிற்குரிய பெரிய பெயரை உடைய ஆதியினது, பிணங்கிய அரில்பட்ட காட்டை

குறிப்பு

உடைய குடநாட்டின் கண் (எயினர்) மறவர் வேட்டையாடிக் கொண்டுவந்த எய்ப்பன்றியினது வெட்டப்பெற்ற ஊண் துண்டங்களை நிணமிக்க புதிய செவ்வியை உடையவற்றை, நன்கு வேகவைத்தவற்றைப் புதிய வெண்சோற்றுத்திரளுடன் வருவார்க்கெல்லாம் ஒப்புக்கொண்டு வந்து, தடையில்லாமற் சொரிய, பெரிய பனை ஓலையான் செய்யப்பெற்ற குடையிலே அவற்றைப் பெற்று நுகர்வர். குடையிலே பெற்று நுகரும்படியான பெரிய புலர்ச்சியையுடைய விடியற்காலத்து சீருக்கு நிகர் ஒவ்வாதாகும் யானைப் பரிசில்.பாடிப்பெற்றது யானைப் பரிசிலாயினும் பன்னாள் நின்று திரங்கிப் பெற்றமையின் பனங்குடையின் மிசையும் வைகறைச் சீருக்கு நிகர் ஒவ்வாதாயிற்று.

ஆதியின் போர்த்திறமை - காலம் நீட்டியாது பரிசில் நல்கும் பண்பு - பாடாண்திணைக்குரியன.

காரியாதிக்குத் தமராயினார் அரண்மனையில் (கோயிலுள்) இனிது புகுவர். மாறுபட்டோர் புகுதற்கு அரியர் என அவன் இயல்பு கூறப்பட்டது.

## 1.12. புறநானூறு - 178

கந்து முனிந்து உயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
கால்இயல் புரவி ஆலும் ஆங்கண்
மணல்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணார் ஆயினும் தன்னொடு சூளுற்று
உண்ம்என இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்
ஈண்டோ இன்சாய லனே வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
அஞ்சி நீங்கும் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே

**திணை:** வாகை துறை: வல்லாண்முல்லை.

பாண்டியன் கீரஞ்சாத்தனை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணை விளக்கம்:** முன்னர்க் கூறப்பட்டது.

குறிப்பு

வல்லாண் முல்லை ஒரு வீரனுடைய வீட்டையும், ஊரையும், இயல்பினையும் சொல்லி அவன் ஆண்மைத் தன்மையை நன்மை பெருகச் சொல்லுதல்.

கீரஞ்சாத்தான், கீரன் என்பானின் மகன். பாண்டிவேந்தன் கீழ் இருந்த குறுநிலத்தலைவன் சான்றோா் பால் அவன் கொணட அன்பு ஆவூா் மூலங்கிழாரைப் பெரிதும் கவா்ந்தது. அதனை இப்பாட்டில் எடுத்துரைக்கின்றாா்.∴

கட்டப்பெறும் கம்பத்தை வெறுத்து நெட்டுயிா்ப்பு விடும் யானையோடு, குதிரைப் பத்தியை வெறுத்துக் காற்றுப் போலும் விரைந்து செல்லும் இயல்புடைய குதிரை ஆலிக்கும் அவ்விடத்து, இடுமணல் மிக்க முற்றத்தின் கண் புக்க சான்றோா் (முன் உண்டமையின்) அப்பொழுது உண்ணாராயினும் தன்னுடனே சாா்த்திச் சூளுற்று சோ்ந்து உண்மின் என்று அவரை வேண்டிக்கொள்ளும் பெரிய பெயரை உடையவன் சாத்தன். எம் போல்வாா் இடத்து இனிய சாயலன். இங்ஙனம் மெல்லியனாயினும் விரும்பாதாா் வீசும் படைக்கலம் தம்மிற் கலந்த அஞ்சத்தக்க போரின்கண் - தன்வீரா் வீரபானத்தை உடைய கலத்தினராய், அதனை உடைய செருக்கால் உள்ளுா்க் கண் பேராண்மையுடையராய் போா்க்களத்து அஞ்சி ஓடுங்காலை - அவா்க்கு அரணாகத் தான் தன் வலிமையான் யாவரினும் முந்துற்று நிற்பன.

சான்றோா்களை மதிக்கும் இயல்பினன் சாத்தன். நீங்கள் உண்டால்தான் உண்பேன் இல்லை எனில் உண்ணமாட்டேன் என்று சூளுற்று உரைக்கக் கூடியவன். தன் வீரா்கள் குடிமயக்கத்தால் நெடுமொழி மறந்து அஞ்சி நின்ற இடத்து, போரின்கண் அவா்க்கு அரணாக நிற்கக் கூடியன். இதனால் அவனது வலிய ஆண்மைத்தன்மை கூறப்பெற்றது.

## 1.13. புறநானூறு - 196

ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவா்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்என மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போா் வாட்டல் அன்றியும் புரப்போா்

புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்து ஆகியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனால்
நோயிலர் ஆகநின் புதல்வர், யானும்
வெயில்என முனியேன் பனியென மடியேன்
கல்குயின்று அன்னஎன் நலகூர் வளிமறை
நாண்அலது இல்லாக் கற்பின் வாள்நுதல்
மெல்இயற் குறுமகள் உள்ளிச்

செல்வல் அத்தை சிறக்கநின் நாளே

குறிப்பு

**திணை:** பாடாண்திணை **துறை:** பரிசில் கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணை விளக்கம்:** முன்னர்க் கூறப்பட்டது.

**துறை:** பரிசில் கடாநிலை

யாவரும் பரிசிலர் பெற்றார் யான் பெற்றிலேன் எனத் தன் பரிசில் வேட்டையைக் கொடுப்போனிடத்துப் புலப்படுத்திக் கூறுதல் - பரிசில் கொடாது காலம் நீட்டித்த தலைவனிடத்துத் தன்னிலையை எடுத்துரைத்துப் பரிசில் வேண்டிக் கடாவுதல். பாட்டுடைத்தலைவன் இவன் தமிழக மூவேந்தரிலும் மேம்பட்டவன். இவனை மருதன் இளநாகனார், நக்கீரனார், காரிக்ண்ணனார், இடைக்காடனார், பேரிசாத்தனார் போன்ற பெரும்புலவர்களும் பாடியுள்ளனர். இயற்பெயர் - நன்மாறன் - பாண்டியர் குலத்தவன். இலவந்திகைப் பள்ளி என்னும் இடத்தில் இறந்தமையின் இங்ஙனம் அழைக்கப் பெற்றான்.

தம்மாற் கொடுக்க இயலும் பொருளை இயலும் என்று கூறிக் கொடுத்தலும், யாவர்க்கும் தம்மாற் கொடுக்க இயலாத பொருளை இல்லை என்று சொல்லி மறுத்தலும் ஆகிய இரண்டும் தாளாண்மைப் பக்கத்து உளவாகிய நடபின் பாற்பட்டனவே. தனக்கு இயலாததனை இயலும் என்றலும் தனக்கு இயலும் பொருளை இல்லை என்று மறுத்தலும் ஆகிய இரண்டும் பொருள்கேட்டு வந்தவர்களை விரைந்து மெலிவிக்கும். மேலும் ஈவோர் புகழ் குறைபடுதற்கு உரிய வழியாகும். இப்பொழுது நீ எம்மளவிற் செய்த செய்தியும் ஆகும். இ஻து எத்துணையும் எம் குடியிலுள்ளார் முன்பு காணாதது, யாம் கண்டேம்.

குறிப்பு

இத்தீங்கினால் (சான்றோர் நோவன செய்த குற்றத்தால் மக்கள் நோயுற்று வருந்துதல் கூடாது) நின் பிள்ளைகள் நோயின்றி இருப்பாராக. யானும் வெயிலென்று நினைந்து நின் போக்கை வெறுக்க மாட்டேன். பணி என்று கொண்டு மடிந்திறேன். என்னை விட்டு நீங்காது - கல்லாற் செய்தாற் போன்ற - பிணித்து நிற்கும் வறுமையின் மிகுதியால் காற்றை மட்டும் மறைக்கும் மனை இடத்து நாண் அல்லது வேறில்லாத கற்பினையும், ஒளியை உடைத்தாகிய நுதலினையும், மெல்லிய இயலினையும், உடைய என் மனைவியை நினைந்து செல்வேன், நின் ஆயுள் மிகுந்து சிறப்பதாக. நன்மாறன், பொருள் கொடுத்தால் புலவர் நீங்கி விடுவாரோ என்ற நல் எண்ணத்தினால் பொருள் கொடாது நீட்டித்தான். மன்னன் தன்குடும்ப நிலைமையை உணராது இருத்தற் கண்டு நீ காலம் நீட்டித்தது தவறு. நின் புகழுக்குக் குறைவுதரக் கூடியது. என் வீடு நோக்கிச் செல்வல் என்றார். விரைந்து பரிசில் நல்கு என்பது அதன் கருத்து.

## 1.14. புறநானூறு - 261

அந்தோ எந்தை அடையாப் பேர்இல்
வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்
வெற்றுயாற்று அம்பியின் எற்றுஅற்று ஆகக்
கண்டனென் மன்ற சோர்கஎன் கண்ணே
வையங் காவலர் வளங்கெழு திருநகர்
மையல் யானை அயாஉயிர்த்து அன்ன
நெய்உலை சொரிந்த மைஊன் ஓசை
புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆரப்
பயந்தனை மன்ஆன் முன்னே இனியே
பல்ஆ தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரல் கூகை அழைப்ப வாட்டி
நாகுமுலை அன்ன நறும்பூம் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரை இவண் தந்து நடுகல் ஆகிய
வென்வேல் விடலை இன்மையின் புலம்பிக்
கொயம்மழித் தலையொடு கைம்மையு கலங்கிய

குறிப்பு

கழிகல மகடூஉப் போல
புல்லென் றனையல் பல்அணி இழந்தே (19)

**திணை:** கரந்தை துறை: கையறுநிலை, பாண்பாட்டுமாம், ஆவூர் மூலங்கிழார் பாடியது.

**திணை விளக்கம்**: கரந்தை - தொல்காப்பியர் கரந்தை என்று தனித்திறணை சுட்டினார் இலர். வெட்சித்திணையுள் கரந்தையின் துறைகளைக் கூறியுள்ளார். வெட்சி வீரர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்டு வருதல் கரந்தைத் திணையாகும்.

**கையறுநிலை:** தன் தலைவன் இறந்து பட்டானாக, கையற்ற நிலையில் - பற்றற்ற நிலையில் இறந்தவனை எண்ணிப் பாடப் பெறுவது கையறுநிலை கையறுநிலை பற்றுக்கோடு அற்றநிலை.

பண்பாட்டு பெரும் போர் செய்து இறந்து பட்ட வீரர்க்குச் சாப்பண்ணைப் பாடிப் பாணர் தம் கடன் கழித்தலைக் கூறுவது.

அந்தோ எம் இறைவனது (தலைவனது) அடையாத பெரிய இல்லமே, வண்டுகள் படியும் மதுவினால் ஒழியாத கலத்துடனே, யாவர்க்கும் இல்லை என்னாமல் அளவில்லாமல் வழங்கும் மிக்க சோற்றை முரிந்த குறட்டை உடைத்தாகிய முற்றம் நீரற்ற யாற்றின் ஓடம் எத்தன்மைத்து, அத்தன்மைத்தாகக் கண்டேன், உறுதியாக, அம்முற்றத்தைக் கண்ட என் கண்மணி சோர்ந்து வீழ்வனவாக, உலகத்தைக் காக்கும் வேந்தருடைய செல்வம் மிக்க திருநகரின் கண்ணே, மதத்தான் மயங்கிய யானை வருந்துதலான் நெட்டுயிர்ப்புக் கொண்டாற் போன்று, நெய் காய்கின்ற உலையின் கண் சொரியப்பட்ட ஆட்டிறைச்சியினது ஓசையுடன் அமைந்த கறிப்பொரிய சிலைப்புது மாந்தர் தம் ஒளி மழுங்கின கண்கள் நிறையுமாறு முன்னர் உண்டாக்கினாய், சமைத்தனை.

இப்பொழுது, பல ஆநிரையைக் கொண்ட கற்கவேண்டாத வலியவில்லை உடையோன், வீரர்களை அழைத்து அலைத்தனன். இதுகண்டு மிக்க குரலினை உடைய கூகை தன் இனத்தை அழைத்தது. (தனக்கு உணவு கிடைப்பது கண்டு) பசுவின் காம்பினை ஒத்த மணம் வீசும் கரந்தையை அறிவுடையோர் சூட்டும் முறையிலே சூட்ட, நிரையை இவ்வூரின் கண்ணே மீட்டுக் கொண்டு வந்து தந்து, வெற்றி பொருந்திய வேலை உடைய விடலை - இறைவன் - போரிலே இறந்து பட்டு நடு கல்லாயினன் - இறைவன் இல்லாமையால் அவனுடைய மனைவியைக்

கொய்யப்பட்ட மொட்டை ஆகிய தலையுடன் கைமை நோன்பு கொண்டனள். கலக்கமுற்ற, அணியப்பெற்ற அணிகலன்கள் நீக்கப்பெற்ற அவன் மனைவியை ஒப்பப், பல அழகும் இழந்து பொலிவு அழிந்தனை. அடையாத பெரிய இல்லம், கழிகல மகடூஉப் போல அழகு இழந்து பொலிவிழிந்து காணப்பெற்றது.

**குறிப்பு**

ஆநிரைகளை மீட்டு வந்த, பாடலில் கரந்தை - நிரை இவண் தந்து என்ற சொற்களால் புலனாகி, கரந்தைத் திணையை உணர்த்தற்று. நிரை மீட்டு வந்த கரந்தைத் தலைவன் இறந்து பட, நடுகல்லாயினன். முன்னர் மக்கள் செதுக்கண் ஆரமையூண்
வழங்கினன். இன்று அது இல்லை இதனால் கையறுநிலைத் துறையாயிற்று.

## 1.15 புறநானூறு - 301

பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரய
அமரின் இட்ட அருமுன் வேலிக்
கல்என் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு தானைநும் அரசும் ஓம்புமின்
எனைநாள் தங்கும்நும் போரே அனைநாள்
எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்
எதிர்சென்று எறிதலும் செல்லான் அதனால்
அறிந்தோர் யார்அவன் கண்ணிய பொருளே
பலம்என்று இகழ்தல் ஓம்புமின் உதுக்காண்
நிலன்அளப்பு அன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
எல்இடைப் படர்தந் தோனே கல்லென
வேந்துஊர் யானைக்கு அல்லது
ஏந்துவன் போலான்தன் இலங்குஇலை வேவே (16)

**திணை:** தும்பை **துறை:** தானைமறம்

ஆவூர் மூலங்கிழார் பாடியது

**திணை விளக்கம்:** தும்பை பகைவரோடு போர்புரிதலை விரும்பித் தும்பைப் பூவைச் சூடுதல் தும்பைத் திணையாகும்.

குறிப்பு

**தானைமறம்:** போர் செய்தற்கு எதிர்ந்த இருவகைச் சேனைகளும் தம்முள் பொருது மடியாத வண்ணம் ஒருவீரன் பாதுகாத்த ஆற்றலின் உயர்ச்சியைக் கூறுதல்.

பல் சான்ற வீரர்களே, மணம் செய்யப் பெறாத நலம் கனிந்த மகளிர் தம் கூந்தல் ஓர் ஆடவராலும் தீண்டப்படாதவாறு போல, போரை முன்னிட்டு நடைபெற்ற கடத்தற்கரிய முள்வேலி சூழ்ந்த கல் என ஆரவாரிக்கும் பாசறைக்கண் உள்ள பல சான்ற வீரர்களே! முரசு முழங்கும் தானையை உடைய நும் வேந்தனைப் பாதுபாப்பீராக விளங்குகின்ற உயர்ந்த கொம்புகளை உடைய நும்முடைய களிறுகளையும் நன்கு காப்பீராக - எத்தனை நாள்கள் நும்முடை போர் இங்கு நிகழும். அத்தனை நாளும் எம் இறைவன் தன்னை எறியாதாரை எறிவது என்பது எங்குளது? எம் இறைவன் பகைவர் தனக்கு நிகரின்மையின் எதிரே சென்று எறிந்திலன், எறிந்தோரையும் எதிர்த்து எறிதல் செய்யானாகச் செய்தே, எறியாரை இவன் எறிதல் செய்யானாகச் செய்தே எறியாரை இவன் எறிதல் யாண்டுளது? ஆதலால், எம் இறைவன் கருதிய காரியத்தை மும்முள் அறிந்தவர் யார்? அவர் எம்முன் வருக. யாம் பலராக உள்ளோம் என்று செருக்குடன், இகழ்வரை ஒழிவீராக இதனைக் காண்பீராக, நிலத்தைத் தாவடி இட்டு அளப்பது போல, எல்லை காணப்படாமையின் நில்லாது நெடுகும் நெறிக்கண், விரைந்து பாய்ந்து செல்லும், வளவிய செலவினை உடைய குதிரையின் போர்ப் பண்புகளைப் புகழ்ந்து கொண்டு, இரவுப் பொழுதில் வந்தமையின் தன் நெடுமனை சென்றுள்ளான்.

கல் என்ற ஆரவாரத்துடன் நும்முடைய வேந்தன் ஊர்ந்து வரும் யானையை எறிவதற்கன்றி தன்னுடைய விளங்குகின்ற இலை போன்ற முகத்தை உடைய வேலைக் கையில் ஏந்தான் போல் நின்றான். அதனால் நும் வேந்தனை வரவிடுங்கள்.

தகுதியுடைய பகைவரோடு மட்டும் போர் புரியும் இயல்பினன் என்பதும், வேந்தனொடு மட்டும் போர்புரியும் ஆற்றல் உடையவன் என்பதும் அவனுடைய போராற்றலைக் காட்டி நின்றமையின் தும்பை ஆயிற்று.

பகைவர் பலராயினும் எதிர்ப்புணர்வு இன்மையின் பயனின்றாம். தலைவன் இரவென்றும் பாராமல் செல்லும் ஆற்றலுடையவன். இவன் என்ன கருதுகின்றான் என்பதை அறிந்தவர் யார்? என்று சிறப்பித்துக்

கூறப்படுகின்றமையின் தானைமறம்.இப்பாடலின் தலைவன் யார் என்று அறியுமாறில்லை.

குறிப்பு

## 1.16. தொகுத்துக் காண்போம்

- அகம், புறம் என்பன இவ்விலக்கியங்களின் பாடு பொருளாகும் அகம் காதல் - வீட்டு வாழ்க்கை பற்றித் அறிந்து கொண்டீர்கள்.
- புறம் - வீரம் - நாட்டு வாழ்க்கை பற்றித் அறிந்து கொண்டீர்கள்.
- ஆவூர் சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர். மூலங்கிழார் தன்னாட்டை மறவாமல் பாடியுள்ளார். காவரி பாயும் நாட்டைச் சுட்டியுள்ளார். நாடு - ஆர் - காவிரி நாடுகள் நீர்வளத்தாலும், பொருள் வளத்தாலும் நிறைதற்கு ஏதுவாய காவிரி என்பதை ஆவூர் மூலங்கிழார் பாடல்கள் மூலம் அறிந்து கொண்டீர்கள்.

## 1.17. சோதித்தறியும் வினாக்கள்

1. பண்டை இலக்கியம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

2. கையறுநிலை என்றால் என்ன?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3. தானைமறம்- விளக்கம் தருக?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………

4. மல்லிகிழான் காரியாதி என்பான் யார்?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………

## 1.18 பயிற்சி வினா

1. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆவூர் மூலங்கிழார் பாடியது பற்றிக் கட்டுரை வரைக.

2. சங்கப்பாடல்கள் உள்ளுறை, இறைச்சிப் பொருளுடன் அமையக் கூடியன என்பது குறித்துக் கட்டுரை வரைக.

## 1.19. மேலும் படித்தறிக

1.அகநானூறு, முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

2. புறநானூறு, ஔவை துரைசாமிப் பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், சென்னை

# கூறு - 2 கந்தரத்தனார் பாடல்கள் - அகம்: 23, 95, 191 – குறு: 155 - நற்: 116, 146, 238: 306, சிறைக்குடி ஆந்தையார் பாடல்கள்

2. பாட அமைப்பு

2.1 அறிமுகம்

2.2 குறிக்கோள்கள்

2.3 அகநானூறு 23

2.4 அகநானூறு 95

2.5 அகநானூறு 191

2.6 குறுந்தொகை 155

2.7 நற்றிணை 116

2.8 நற்றிணை 146

2.9 நற்றிணை 232
2.10 நற்றிணை 306
2.11 சிறைக்குடி ஆந்தையார் குறுந்தொகை 56
2.12 குறுந்தொகை 57
2.13 குறுந்தொகை 62
2.14 குறுந்தொகை 132
2.15 குறுந்தொகை 168
2.16 குறுந்தொகை 222
2.17 குறுந்தொகை 273
2.18 குறுந்தொகை 300
2.19 நற்றிணை 16
2.20 தொகுத்துக் காண்போம்
2.21 சோதித்தறியும் வினாக்கள்
2.22 பயிற்சி வினா
2.23 மேலும் படித்தறிக

## 2.1. அறிமுகம்

சங்கப்புலவர்களுள் ஒருவர் கந்தரத்தனார். இவர் பாடியனவாக அகநானூற்றில் மூன்று பாடல்களும் (23, 95, 191) குறுந்தொகையில் ஒருபாடலும் (155) நற்றிணையில் நான்கு பாடல்களும் (116, 146. 238, 306) காணப் பெறுகின்றன. கந்தரத்தனார் என்ற பெயர் வேறு புலவர்களுக்கும் உண்டு. காவிரிப் பூம்படடினத்துக் கந்தரத்தனார், உரோகத்துக் கந்தரத்தனார் என்ற புலவர்களும் சங்கப் புலவர் ஆவர்.

## 2.2. குறிக்கோள்கள்

- அகநானூறு - தலைவி கூற்று- தலைவன் கூற்று தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது பற்றித் அறிந்து கொள்வீர்கள்.
- தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது. காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- தோழி கூற்று பிரிவர் எனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. இது வரைவு நீட்டிப்பு ஆற்றாளாய தலைவி, தோழிக்கு வன்பொறை எதிரழிந்து சொல்லியது. பொருள்

கடைக்கூட்டியநெஞ்சினை நெருங்கித் தலைவன் செலவு அழுங்கியது பற்றி அறிந்து கொள்வீர்கள்.



## 2.3. அகநானூறு - 23

குறிப்பு

பாலை - தலைவி கூற்று, தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுஉலந் தன்றே பறைக்குரல் எழிலி,
புதன்மிசைத் தளவின் இதல்முள் செந்நாளை
நெருங்குகுலைப் பிடவமொடு ஒருங்குபிணி அவிழக்
காடே கம்என் றன்றே; அவல
கோடுஉடைந் தன்ன - கோடல் பைம்பயிர்ப்
பதவின் பாவை முநைஇ மதவுநடை
அண்ணல் இரலை அமர்பிணை தழீஇத்
தன்அறல் பருகித் தாழ்ந்துபட் டனவே
அனைய கொல் வாழி தோழி, மனைய
தாழ்வின் நொச்சி சூழ்வன் மலரும்
மௌவல் மாச்சினை காட்டி
அம்அளவு என்றார், ஆண்டு செய் பொருளே

தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளான். செல்லும் முன்னர் மௌவல் பூக்கத் தொடங்கும் காலத்தளவு வேற்று நாட்டில் இருப்பேன். அதுதான் கால அளவு - அக்காலம் வந்ததும் திரும்பி வந்து விடுவேன் என்று கூறிச் சென்றனன். அவன் திரும்பாதது கண்டு அவன் குறிப்பிட்ட காலம் இக்காலம் தானே, அதனைத் தாண்டி நிற்பதொன்றோ கூறுவாயாக, எனத் தோழியிடம் கூறினள்.தோழியே முழவின் குரல் போன்ற ஒலியினை உடைய மேகம் மண் இடம் எல்லாம் குளிரும்படி, குளிர்ந்த மழையைப் பெய்து ஒலி அடங்கிவிட்டது. புதரின் மீது படர்ந்துள்ள சிவல் முள்ளைப் போன்ற செம்முல்லையினது சிவந்த அரும்புகள் நெருங்கிய குலையினை உடைய பிடாவின் அரும்புடன் ஒரு சேர விரிந்து மலர்ந்ததினால், காடு கம்மென்று மணம் வீசுகின்றது.

பள்ளங்களில் உள்ள சங்கு உடைந்தாற் போன்ற வெண்மையான கோடலது பசிய பயிரோடு அறுகங்கிழங்கைத் தின்று தெவிட்டுதலின் செருக்கிய நடையினையும், தலைமைச் சிறப்பினையும் உடைய ஆண்

மான் விரும்பிய பெண் மானைத் தழுவி குளிர்ந்த நீரைப்பருகி ஓரிடத்தே சேர்ந்து தங்கிவிட்டன. மனையிடத்தே முல்லை சூழ்ந்து மலரும் இடமாகிய தாழ்ந்த நொச்சியினது கரிய கிளையைக் காட்டி, தாம் வேறு நாட்டில் இருந்து பொருள் ஈட்டும் காலத்தளவு அந்த முல்லை மலர்கள் பூக்கத்தொடங்கும் அக்காலத்து அளவே என்றார் அன்றோ? இக்காலம் தலைவன் கூறிய அந்தக் கால அளவிற்றா? அதனைத் தாண்டி நிற்பதா, கூறுவாயாக என்றாள் தலைவி.

**குறிப்பு**

தலைவன் பொருள் தேடப் பிரிந்துள்ளான் என்பது ஆண்டுச் செய்பொருளே என்பதால் பெறப்பட்டது. நிலம் குளிர மழை பெய்தது, காடு கம்மென்று மணம் வீசியது, மான் பிணைகள் நீரைப் பருகி ஓரிடத்தே தங்கிவிட்டன. இவையெல்லாம் கார்காலத் தொடர்பினவாயினும் பிரிவு தலைவியின் உள்ளத்தே நிலைபெற்றிருத்தலின் பாலை உரிப்பொருளாயிற்று.

தலைவன் குறித்த காலத்தே வாராமையின் பொருள் சிறந்ததொன்றோ என்றாள் தலைவி.

## 2.4. அகநானூறு - 95

பாலை -தலைவி கூற்று

பைபயப் பசந்தன்று நுதலும்; சாஅய்
ஐதுஆ கின்றுஎன் தளிர்புரை மேனியும்
பலரும் அறியத் திகழ்தரும் அவலமும்
உயிர்கொடு கழியின் அல்லதை நினையின்
எவனோ வாழி தோழி! பொரி கால்
பொகுட்டு அரை, இருப்பைக் குவிகுலை கழன்ற
ஆலி ஒப்பின் தூம்பு உடைத் திரள்வீ
ஆறுசெல் வம்பலர் நீள்இடை அழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
சுரம்பல கடந்தோர்க்கு இரங்குப என்னார்
கௌவை மேவலராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ

புரைய அல்லஎன் மகட்குஎனப் பரைஇ
நாம்உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர் யாம் என்னிதற் படலே

போக்குடன் பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைவன் பொருள் தேடுதற்குச் செல்ல விரும்பினான். தலைவியும் உடன்பட்டனள். தலைவன் செல்லுதற்குத் தான் உடன்பட்டதைத் தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தோழி, வாழிய, என் நெற்றியும் மெல்ல மெல்லப் பசந்தது. தளிரை ஒத்த என் உடம்பும் மெல்ல மெலிதாகின்றது. யான் படும் துயரமும் பலரும் அறியத் தோன்றுகிறது. இவை என் உயிரைக் கொண்டு செல்வன அன்றி, ஆராயுங்கால் வேறு என்ன செய்யக் கூடியன.

பொரிந்த அடிப்பகுதியினையும், கொட்டைகளை உடைய அரையினையுமுடைய இருப்பை மரத்தினது குவிந்த குலையினின்றும் கழன்ற பனிக்கட்டி போன்ற உள்துணையினை உடைய திரண்ட பூக்களை, பாலை நிலவழியாகச் செல்லும் புதியோர் அந்த நெறியின் வழியாகச் செல்லுதற்கு அஞ்சி போக்கினைத் தவிர்த்ததினால் ஈன்ற கரடிகளின் பெருங்கூட்டம் கவர்ந்து உண்ணா நின்றன. இத்தகைய பல சுரங்களைக் கடந்து சென்ற நம் தலைவர் தன்பொருட்டுத் தலைவி வருந்துவள் என்று தினையாராய், ஊரினர் அலர் விரும்புவராயினர். இவ்வூரிலுள்ள இழிந்த இயல்புடைய பெண்டிர் கூறுவனவாகிய இன்னாத சொற்கள் என்மகட்குப் பொருந்துவன அல்ல என்று தெய்வத்தைப் பரவி கூறினள். நம் களவு ஒழுக்கத்தினை அறிந்து வைத்தும், அமைதி உற்றிருக்கும் கொள்கையினை உடைய அன்னை முன்னர் யாம் இக்களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஒழுகுதல் யாங்ஙனம் கூடும்? என்று தலைவி கூறினள்.

தலைவியின் மேனியில் தோன்றிய பசலையும், அவலமும். அவள் உயிரைக் கொண்டு செல்லக்கூடியன என்பது கருத்து. ஈன்ற கரடிகள் சீறித்திரியும் இயல்பினவாதலின் வழிச் செல்வோர் அச்சுரத்தின் வழிச் செல்லவில்லை. மேலும் தன்மகள் மீது பழிச்சொல் வரக்கூடாது. பழியொடு படாத இனிய வாழ்க்கை அமைய வேண்டும் என்பதற்காக அன்னை தெய்வத்தை வேண்டினள். தாயின் இத்தகு அன்பு நிலையைக் கண்ட தலைவி இனியும் யாம்

களவொழுக்கத்தில் ஈடுபடுதல் கூடாது என்ற மனநிலையை உடையவளாயினள்.

சுரம் என்பதால் - பாலை நிலம் - முதற்பொருள், எண், இருப்பை - கருப்பொருள். தலைவியைப் பிரிந்து தலைவன் சென்றிருப்பதால் பாலை உரிப்பொருளாகும்.

## 2.5. அகநானூறு - 191

பாலை - தலைவன் கூற்று, தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது

அத்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ
எரியிதழ் அலரியொடு இடைபட வரைஇ
வெண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணித்
தோல்புதை சிரற்று அடிக் கோல்உடை உமணர்
ஊர்கண்டு அன்ன ஆரம் வாங்கி
அருஞ்சுரம் இவர்ந்த அசைவுஇல் நோன்தாள்
திருந்துபகட்டு இயம்பும் கொடுமணி புரிந்தவர்
மடிவிடு வீளையொடு கடிதுஎதிர் ஓடி
ஓமையம் பெருங்காட்டு வருஉம் வம்பலர்க்கு
ஏமம் செப்பும் என்றூழ் நீளிடை
அரும்பொருள் நசைஇப் பிரிந்துறை வல்லி
சென்றுவினை எண்ணுதி யாயின் நன்றும்
உரைத்திசின் வாழிஎன் நெஞ்சே, நிரைமுகை
முல்லை அருந்தும் மெல்லிய வாகி
அறல்என விரிந்த உறலின் சாயல்
ஒலிஇரும் கூந்தல் தேறும் என
வலிய கூறவும் வல்லையோ மற்றே

தலைவன் பொருள்தேடச் செல்லுவதற்குப் பிரிய எண்ணினன். தலைவனின் நெஞ்சு அவனைச் செல்லுமாறு தூண்டிற்று. ஆனால் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லுதலை விரும்பவில்லை. பிரிந்தால் தலைவியின் நிலை என்னாகுமோ, என்று எண்ணினன். அதனால் பொருள்தேட எண்ணிய தன் நெஞ்சிற்கு பிரிவுணர்த்தும் சொற்களைச் சொல்ல வல்லையோ என்று வினவினன், நீ வல்லை அல்லை என்று கூறித் தன் செலவினைத் தவிர்த்தனன்.

என் நெஞ்சே வாழிய பாலை நிலத்து உச்சியிற் கொண்ட புதிய பாதிரிப்பூக்களை நெருப்புப் போன்ற இதழ்களை உடைய அலரிப்பூக்களுடன் இடையிடை கலந்து, வெண்மையான தாழம்பூவின் தோட்டுடன் வைத்துக் கண்ணியாகத் தொடுத்துள்ளனர். வண்டுகள் மொய்க்கும் கண்ணியினை உமணர்கள் அணிந்துள்ளனர். உமணர்கள், தோலால் செய்யப்பெற்ற செருப்பினை அணிந்துள்ளமையின் ஒலிக்கும் அடியினையும், கோலினையும் உடையவராவர். ஊர்திரண்டு வந்தாற் போன்று எருதுகள் பூட்டிய வண்டிகளை ஓட்டி வருகின்றனர். ஏறுதற்கரிய மேடுகளை உடைய காட்டில் ஏறிவந்த எருதுகள் தளர்வில்லாத தாளினையுடையன. அவ்வெருதுகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள வளைந்த மணிகளின் ஒலி எங்கும் ஒலிக்கும்.

உமணர்கள் விரும்பி வாயினை மடித்து எழுப்பும் சீழ்க்கைஒலி, எருதுகளின் மணி ஒலியோடு சேர்ந்தும் ஒலிக்கும். இவ்வொலி விரைந்து எதிரே சென்று, ஓமை மரங்கள் நிறைந்த பெரிய காட்டின் வழிவரும் புதியராய் வழிச் செல்வோர்க்குப் பாதுகாவலைத் தரும் வெப்பம் மிக்க நெடிய காட்டிலே ஈட்டுதற்கு அரிய பொருளை விரும்பி, நம் தலைவியைப் பிரிந்து உறையும் வன்மை உடையையாய் சென்று பொருள் ஈட்டும் வினையை எண்ணினாய் அங்ஙனம் எண்ணவில்லையாயின்.உறுதற்கு இனிய மென்மைத் தன்மையையும் முல்லையின் நிரைத்த அரும்புகளையும் நிறையச்சூடி, மென்மைத் தன்மை உடையளாய், கருமணல் போன்ற ஒளியும் நிறமும் கொண்டு. தழைத்த கரிய கூந்தலையும் உடைய நம் தலைவி தெளிந்திருப்பாள் என்று, பிரிவினை உணர்த்தும் வலிய சொற்களை அவளிடத்துச் கூறவும் வன்மையுடையையோ?

வன்மையிடையையாயின் அவளிடத்தே சென்று பெரிதும் கூறி அவளைத் தேற்றுவாயாக என்று தலைவன் கூறினான். "வாழி என் நெஞ்சே" என்று தலைவன் நெஞ்சே முன்னிட்டுக் கூறினன். மேலும் பொருள் ஈட்ட எண்ணியதும் நெஞ்சு தான், அவனைத் தூண்டியதும் நெஞ்சுதான் ஆனால் பிரிவைத் தலைவியிடத்துச் கூறும் வன்மை நெஞ்சிடத்து இல்லை. இதனால் தான் கூறவும் வல்லையோ என்றான் வல்லையல்லை என்று பொருள் தந்ததினால் தலைவன் செலவழுங்கினன். இதில் அருஞ்சுரம் என்பதனால் முதற்பொருள் பெறப்பட்டது. ஓமையம் பெருங்காடு கருப்பொருள். பிரிந்து உறைதல்

எண்ணம் - உரிப்பொருள். முதலைந்து வரிகளில் சமணர்களின் இயல்புகள் சுட்டப்பெற்றன.

குறிப்பு

எருதுகளின் மணி ஒலியும், உமணர்களின் சீழ்க்கை ஒலியும் சேர்ந்து ஒலித்தலினால் அக்காட்டின் வழிச் செல்வோர் வம்பலர்க்கு அஞ்சாமல் செல்லும் நிலை ஏற்ப்பட்டது.

**2.6.குறுந்தொகை -155**

முல்லை-தலைவி கூற்று, தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது

முதைப்புனங் கொன்ற வார்கலி உழவர்
விதைக்குறு வட்டில் போதொடு பொதுளப்
பொழுதொ தான்வந் தன்றே மெழுதுஆன்று
ஊதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பின் ஆர்ப்பச் சுரன் இழிபு
மாலை நனிவிருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே

தலைவன் கூறிச்சென்ற பருவம் வந்தமை அறிந்த தலைவி, இன்னும் அவர் வந்திலர் என்று கூறி வருந்தியது.

பழைய கொல்லையில் இருந்த மரங்களை வெட்டி உழுது பயிரிடும் நிலமாக்கிய உழவர்கள் உழுதபின்னர் விதைப்பதற்காக விதையைச் சிறிய வட்டிகளில் கொண்டுசெல்வர். வீடு திரும்பும் பொழுது வட்டிகள் நிறையும் வண்ணம் மாலையில் மலர்ந்த முல்லைப் பூக்களைக் கொண்டு வருவர். அத்தகைய மாலைப்பொழுது வந்தது. அரக்காற் செய்த கருவில் அமைத்து., கொல்லன் ஊதுலையில் வைத்துச் செய்யப்பட்ட பிளந்த வாயினை உடைய தெளிந்த ஓசையினை உடைய மணிகள் மரங்கள் நெருங்கியுள்ள இந்தக் குறுங்காட்டில் ஒலிக்கும்படி அவர் தேர் வரவில்லை.

மணி ஒலிக்க கடத்தற்கரியவழியைக் கடந்து மாலைக் காலத்தில் விருந்து நுகரும் பொருட்டு, தலைவன் தேர் வருகின்றது என்று கூறும் உரை - சொல் வரவில்லை என்னும் குறிப்பினை உடையது.

முல்லை நில மக்கள் காடுகளை அழித்து நிலமாகப் பண்படுத்தி உழுது பயிரிட்டனர். விதைப்பதற்கு விதை எடுத்துச்

குறிப்பு

செல்லும் சிறிய வட்டிலுக்கு வட்டி என்று பெயர். கார்காலம் முல்லைக்குரியது.. கார்காலம் வந்து விட்டதைக் குறிப்பால் உணர்த்துகின்றது மேற்சுட்டிய காட்சி. போது – மலர். ஈண்டு கார்காலத்தில் பூக்கும் முல்லை மலரைக் குறித்தது. விதையுடன் செல்வோர் வட்டில் நிறைய பூவுடன் திருப்புவர் இது முல்லை நில வழக்கம். அதைப் போன்று தலைவன் வினைமுடிந்துத் திரும்புங்கால் தலைவி விருந்து அயர்தல் வழக்கம்.

தலைவன் திரும்பி வருகிறேன் என்று கூறிச்சென்ற கார்காலம் வந்துவிட்டது. ஆனால் தலைவன் வரவில்லை. ஆதலால் தலைவி வருந்துகின்றாள்.

**2.7.நற்றிணை - 116**

குறிஞ்சி, இது வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைவி, தோழிக்கு வன்பொறை எதிரழிந்து சொல்லியது.

தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாம் அறிந்து உணர்க என்ப மாதோ
வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று
இருவெதிர் ஈன்ற ஏற்றிலைக் கொழுமுனை
சூன்முதிர் மடப்பிடி நாண்மேயல் ஆரும்
மலைகெழு நாடன் கேண்மை பலவின்
மாச்சினை துறந்த கோன்முதிர்பெரும்பழம்
விடர்அளை வீழ்த்துக் காங்குத் தொடர்பு அறச்

சேணும் சென்றுஉக் கன்றே! அறியாது
ஏகல் அடுக்கத்து இருள்முகை இருந்த
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார் என் திறத்து அலரே

மலையும், மலை சார்ந்த நிலப்பகுதி, புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இதன் உரிப்பொருள்.

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாது காலம் நீட்டித்தனன். இதனைக் கண்டு தலைவி ஆற்றாளாயினள், தலைவியின் வருத்தத்தைக் கண்ட தோழி தலைவன் விரைந்து வருவன், நீ வருந்தாது

சிறிது வலிந்து பொறுத்திரு என்றனள். இதனைக் கேட்ட தலைவி தோழி எதிர்த்து மனம் அழிந்து கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

குறிப்பு

பெரியோர் கொடிய தீமை பயக்கின்ற தொழிலைச் செய்வோரைக் கண்டு உள்ளத்தால் அதனைப்பற்றி ஆராய்ந்து அத்தகைய தீய தொழில்களை இனிச்செய்யாது இருப்பீர்களாக என்று அவர்களிடம் பலவாறு எடுத்துக் கூறி பொறுமையுடன் இருப்பர்.

இங்ஙனம் பொறுமையுடன் இராது. கருப்பம் முதிர்ந்த இளம் பெண்யானை, அறியாமையால் தன் வயிற்றிலுள்ள சூல் அழிந்து வெளியே வந்து விழுமாறு பெரிய மூங்கிலின் முளைத்தெழுந்த இலை இல்லாத கொழுவிய முறையை விடியற்காலத்தே தின்னும் மலைப்பகுதிக்கு உரிமை உடையவன் மலைநாடனாகிய நம் தலைவன். அவன் என்னைக் கைவிட்டமையினால் அவனுடைய நட்பானது, பலாவின் கரியகிளையினின்றும் கனிந்து கீழே விழுந்த பெரிய பழம், பிறர் உண்ணாதவாறு மலையின் பிளவிலே விழுந்தாற் போலே பயன்படாதொழிந்தது. தலைவன் வரைவு நீட்டித்ததை அறியாது பெரிய மலைப்பகுதியை அடுத்துள்ள இருள்செறிந்த குவட்டில் உள்ள நல்ல ஊரின்கண் இருக்கும் பெண்டிர், என்னை இன்றும் பழிகூறி அலர் தூற்றுகின்றனர். இதனை யான் எவ்வாறு ஆற்றுவேன்? பொறுத்திருப்பேன் எனத் தலைவி தோழியிடம் கூறினள்.

மலைகெழு நாடன்-ஏகல் அடுக்கம்-குறிஞ்சி நல்லூர் என்பதில் குறிஞ்சியின் முதற்பொருள் பெறப்பபட்டது. மடப்பிடி, வெதிர், பலவின்பழம்- இவை குறிஞ்சிக் கருப்பொருள்களாகும். தலைவன் திருமணம் செய்து கொள்ளாது நீட்டிக்க குறிஞ்சி மகளிர் அலர் தூற்றினர் என்பதால் உரிப்பொருள் பெறப்பட்டது. தலைவனது நட்பு பலவின் கனி போன்றது. அந்நட்பு தனக்குப் பயன்படாது ஆயினமை பற்றித் தலைவி கூறும் பலவின் பழம் பிறர்க்குப் பயன்படாது. மலைப்பிளவிலே விழுந்தது போலாயிற்று என்ற உவமை சுட்டத்தக்கதாகும்.

அகப்பாடல்கள் சிலவற்றில் தோழி, தலைவி போன்றோர் தாம் நேரடியாகக் கூற வேண்டிய குறிப்புப் பொருளைக் கருப்பொருள்கள் வாயிலாக கூறுவர். இது உள்ளுறை உவமை எனப்படும். இப்பாடலில் உள்ளுறை இடம் பெற்றுள்ளது.

குறிப்பு

பெண்யானைக்கும், தலைவிக்கும் உள்ளுறை கூறப்படுகின்றது. சூல் முற்றிய இளைய பெண்யானை மூங்கிலினது முளையைத் தின்றால் கருப்பம் அழிந்து போகும் என்று அறியாமல் அம்முளையைத் தின்று அதனால் கருப்பம் அழிந்து கீழே விழ, வருத்தமுற்று நின்றது.

அதுபோல நாணம் முதலியவற்றால் மேம்பட்டிருந்த தலைவி, தலைவனது கேண்மை இடையறவு படுங்கால் ஊரினர் அலர் தூற்றுங்கால் தனது பண்பு முதலியன அழியும் என்று அறியாமல் தலைவனுக்கு உடன்பட்டு இப்பொழுது எழுந்த அலரால் எல்லாம் இழந்து நின்றனள் என்பது இதில் உள்ள உள்ளுறையாகும்.

### 2.8 நற்றிணை 146

குறிஞ்சி, இது பின்னின்ற தலைவன், முன்னிலைப் புறமொழியாகத் தோழி கேட்பச் சொல்லியது.

வில்லாப் பூவின் கண்ணி சூடி
நல்லே முறுவலஎனப் பல்ஊர் திரிதரும்
நெடுமாப் பெண்ணை மடல்மா நோயே
கடன்அறி மன்னர் குடைநிழல் போலப்
பெருந்தண் என்ற மரன்நிழல் சிறிதுஇழிந்து,
இருந்தனை சென்மோ வழங்குக சுடர்என
அருளிக் கூடும் ஆர்வ மாக்கள்
நல்லேம் என்னும் கிளவி வல்லோன்
எழுதி யனை காண்தகு வனப்பின்
ஐயள மாயோள் அணங்கிய
மையல் நெஞ்சம் என்மொழிக் கொளினே

தலைவன் தலைவியை அடைதற்குத் தோழியை இரந்து நின்றும், தன் குறை நீங்கப் பெறாத நிலையில் வருந்தி தோழியிடம் நேரடியாக கூறாமல், அவள் கேட்குமாறு தன் நெஞ்சை விளித்து முன்னிலைப் புறமொழியாகக் கூறியது. இப்பாடலில் தலைவன் தன் நெஞ்சத்தைப் பார்த்து,

நெஞ்சமே அன்புடைய, மகிழ்ச்சியை உடைய மக்கள் ஓவியன் ஒருவனை நல்லன் என்று பாராட்டுகின்றனர். நல்லேம் என்னும்

புகழ்ச்சொல்லை அடையாகப் பெற்ற ஓவியம் தீட்டுவதில் வல்லோன் எழுதி வைத்ததைப் போன்று காணுதற்குத்தக்க அழகினை உடையவள் நம் தலைவி - அத்தகு அழகினை உடைய மெல்லியல் மாமை நிறத்தை உடையாள் வருத்தியதால் நீ அவளிடத்து மயங்கினாய். மேலும் கூவிளம் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியைத் தலையிற்சூடி இவன் நல்ல தேரினன் என்று பல ஊர்களிலும் திரிந்த அவ்வூரிலுள்ளவர்கட்கு அறிவிக்கக்கருதி, நெடிய கரிய பனைமடலாற் செய்யப்பட்ட குதிரையேறிச் செல்கின்ற நீ, நூலோர் நல்லன என உரைத்தவற்றைச்செய்தலே கடன் என்று அறிந்து அவற்றையே செய்யும் வேந்தருடைய வெண்குடை நிழல் போல, மிக்க குளிர்ச்சி பொருந்திய இந்த மரத்தின் நிழலில் குதிரையினின்றும் இறங்கி சிறிது பொழுது தங்கிச் செல்வாயாக; ஞாயிற்றின் வெயில் வெம்மையாக இருப்பதால் அருள் உள்ளத்தால் நம்மைக் காண்பதற்காக கூடி நிற்கும் அன்புடைய மக்கள், யாம் உமக்கு நல்லம் எம்மில்லம் வருக என்று சொல்லும் இயல்பினராதலால், மயங்கிய நெஞ்சமே எம் சொல்லைக்கேட்டு அதன் வழி நிற்பாயாக என்றனன்.

## குறிப்பு

தன்னை விரும்பிய தலைவியைத் தலைவன் அடைய முடியாத, திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையில் மடல் ஏறுவான். பனை மட்டையால் செய்த குதிரையில் ஏறி ஊரினைச் சுற்றிவருவான். பூளை, ஆவிரை, உழிஞை முதலிய மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை அணிந்து கொள்வான். தான் மடலேறிய செய்தியை தோழி மூலம் அறியச் செய்வான். இதனை அறிந்த தலைவியின் பெற்றோர் தலைவனுக்குத் தலைவியைத் திருமணம் செய்து கொடுப்பர். இதிலும் மடல் ஏறுவேன் என்று தலைவன் கூறலாமே தவிர தலைவி எந்நிலையிலும் கூறுதல் கூடாது.

ஓவிய வல்லோன் தீட்டிய ஓவியத்தை ஒத்த காண்தகு வனப்பினள் எனத் தலைவியின் அழகு அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

## 2.9 நற்றிணை 232

முல்லை, இது தலைமகள் பருவங்கண்டழிந்தது

குறிப்பு

வறங்கொல வீந்த கானத்துக் குறும்பூம்
கோதை மகளிர் குழுஉநிரை கடுப்ப
வண்டுவாய் திறப்ப விண்ட பிடவ
மாலை அந்தி மால்அதர் நண்ணிய
பருவஞ் செய்த கருவி மாமழை
அவர்நிலை அறிமோ ஈங்குஎன வருதல்
சான்றோர்ப் புரைவதோ அன்றே மான்றுடன்
உரவுஉரும் உரறு நீரில் பரந்த
பாம்புபை மழுங்கல் அன்றியும்ம மாண்ட
கனியா நெஞ்சம் தானும்
இனிய அல்லநின் இடிநவில் குரலே

காடும் காடு சார்ந்த நிலப்பகுதியும் முல்லை நிலம் எனப்படும். இருத்தலும், இருத்தல் நிமித்தமும் இதன் உரிப்பொருளாகும். தலைவன் பிரிந்து சென்ற காலத்து, தலைவி அழுது புலம்பாமல், மனத்தைத் தேற்றி பொறுமையுடன் இருத்தல், இருத்தல் எனப்படும்.

தலைவன் திருமணத்தின் பொருட்டுப் பொருள் தேடப் பிரிந்துள்ளான். அவன் திரும்பி வருவேன் என்று கூறிச் சென்ற பருவம் வந்தும் தலைவன் வந்திலன். தலைவன் வாராமை கண்டு மனன் அழிந்த தலைவி மேகத்தை நோக்கிக் கூறியது.

சிறிய அழகிய பூவணிந்த கூந்தலையுடைய ஆயமகளிர் கூடுகின்ற கூட்டம் போல கோடையின் வெம்மையால் பட்டுப்போன காட்டிலே கார்காலத்தில் பெய்த மழையால் பூத்துநிற்கும் பிடவ மலர்களிடத்துத் தேனை உண்ணுதற்காக வண்டுகள் வாய்திறந்து ஒலிக்கின்றன. அந்திமாலைப் பொழுதில் நாம் காம நோய் மிகும்படி, கார்ப்பருவத்தைத் தோற்றுவித்து, மின்னல் முதலாகிய தொகுதியுடன் திகழும் கரிய மேகமே. நீ அவர் நிலைமையை இங்கு யான் கூற அறிந்து கொள்வாயாக, என்று கூறி நீ வருதல்.

சான்றோர் செய்கையை ஒத்ததாக அமையாது, ஒரு சேர மயங்கி, நின் இடித்து முழங்கும், குரல்வலிய இடியாய் முழங்கும் தன்மையினால், நிலத்தில் பரவியுள்ள பாம்புகள் வேண்டுமானால் படம் மயங்கி அடங்கிப் போகலாம். அதுவல்லால் உன் இடியோசையால்

மாட்சிமையுடைய தலைவனது நெஞ்சம் கனியுமாறு செய்ய இயலாது. ஆதலால் நின் இடிமுழக்கம் எனக்கு இனிமை செய்வன அல்ல, என்றாள் தலைவி.

**குறிப்பு**

அந்திமாலை முல்லைக்குரிய சிறுபொழுது, பருவம் செய்த கருவி மாமழை - கார் காலத்தைத் தோற்றுவித்த மேகம் - கார்காலம் பெறப்பட்டது. கானம் -முதற்பொருள்.

சான்றோர் பிறர் நோயைத் தம் நோய் போல் கருதி நீக்க முற்படுவர், மேகமே நீ சான்றோரை ஒப்பாய் அல்லை, ஏனெனில் நீ என் காமநோயை நீக்கும் தன்மையைக் கருதவில்லை என்றாள் தலைவி. இதனால் கார்ப்பருவம் வந்தும் தலைவன் வாராமையின் தலைவி மனன் அழிந்தமை பெறப்படுகின்றது.

## 2.10. நற்றிணை 306

குறிஞ்சி, இது புனமடிவு உரைத்துச் செறிப்பறிவுறீயது, சிறைப் புறமுமாம்.

தந்தை வித்திய மென்தினை பைபயச்
சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ
குளிர்படு கையள் கொடிச்சி செல்கென
நல்ல இனிய கூறி மெல்லக்
கொயால் தொடங்கினரே கானவர், கொடுங்குரல்
குலவுப் பெறை இறுத்த கோல்தலை இருவி

விழவு ஒழி வியன்களம் கடுப்பத்தெறுவரப்
பைதல் ஒருநிலை காண வைகல்
யாங்கு வருவது கொல்லோ தீஞ்சொல்
செறிதோட்டு எல்வளைக் குறுமகள்
சிறுபுனத்து அல்கிய பெரும்புற நிலையே

தலைவன் தலைவியைக் காணுதற்குத் திணைப் புனத்திற்கு வந்து மறைந்து நின்றனன், இதனை அறிந்த தோழி, புனங்கொய்தலையும், தலைவி வீட்டில் இற்செறிக்கப்பட்டதனையும் கூறினால் விரைந்து திருமணம் செய்து கொள்வான் என நினைத்து நமர்

தினைப்புனம் அறுவடை செய்தனர் தலைவியும் இற்செறிக்கப்பட்டாள் என்று அறிவுறுத்தினள்.

களவுக் காலத்தில் தலைவன் தலைவியைச் சந்திக்க வருவன். பகலில் சந்திக்கும் இடம் பகற்குறி எனப்படும். இரவில் சந்திக்கும் இடம் இரவுக்குறி எனப்படும். இப்பாடலில் தலைவன் பகற்குறியிடத்துத் தலைவியைச் சந்திக்கிறான். இனி பகற்குறியில் சந்திக்க இயலாது என்பதை இப்பாடலில் உரைக்கின்றாள் தோழி. மேலும் கானவர், தினைப்புனம் என்பன குறிஞ்சிக் கருப்பொருள்கள் ஆகும்.

தலைவனே கானவர் தினைப்புனத்திலே கிளியே ஓட்டுதற்குரிய கருவியைக் கையிலே கொண்டுள்ள கொடிச்சியே நீ வீட்டிற்குச் செல்வாயாக என்று கூறிவிட்டு, தினையைக் கொய்யத் தொடங்கினர். எம் தந்தை விதைத்த தினைப்புனத்திலே தினைக்கதிர்களை மெல்ல மெல்லக் கொண்டு செல்கின்ற கிளிகளை இனி யாங்ஙனம் வெருட்டுதல் கூடும்? அகன்ற விழாக்களம் திருவிழா நடந்து முடிந்ததன் பின் பொலிவிழந்து காணப்படும். அதுபோல வளைந்த கதிர்களாகிய சுமையைத் தாங்கிநின்ற தினைத்தாள்கள் கொண்ட தினைப்புனம் கதிர்கள் கொய்யப்பெற்ற நிலையில் பொலிவிழந்து காணப்படுகின்றது. இனிய சொற்களைப் பேசும் நெருங்கிய தொகுதியான ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த எங்கள் தலைவி முன்னர் சிறிய தினைப்புனத்திலே, பெரிய கட்டுப் பரணியின் மேலே நின்றனள். முன்னர் நின்ற நிலையை எண்ணி அவளைப் பார்க்கும் பொருட்டு, தலைவன் பகற்காலையில் இனிவருதல் யாங்ஙனம் இயலும்? இயலாதே என்றனள் தோழி.

தினைப்புன அறுவடை முடிந்துவிட்டது, தலைவி தினைப்புனக் காவலுக்கு இனி வரமாட்டாள், இல்லத்தை விட்டு வெளியே வர முடியாது. ஆதலின் அவளைக் காணவருதல் பயனின்று என்று கூறினாள் தோழி. பகலிலும் காண வரமாட்டாள், இரவிலும் வரமாட்டாள், என்றதனால் விரைவிலே அவனைத் திருமணம் செய்து கொள்க என்று குறிப்பால் அறிவுறுத்தினாள்.

தினை அறுவடை முடிந்து நின்ற தினைப்புனம் திருவிழா நடந்து முடிந்த களம் போலப் பொலிவிழந்து காணப்பெற்றது என்னும் உவமை சிறப்பாகவும், பொருத்தமாகவும் அமைந்துள்ளது. தினைப்புனமானது

தினைக் கதிர்களால் மட்டும் பொலிவுடன் காணப்பெறவில்லை,



தலைவியின் வருகையாலும் பொலிவுடன் காணப்பெற்றது எனக் கொள்ளல் சிறப்பு.

குறிப்பு

## 2.11. சிறைக்குடி ஆந்தையார் குறுந்தொகை - 56

பாலை தலைவன் கூற்று

தலைவன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்து தானே போகின்ற வழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடையக் கையள் எம்மொடு உணீஇயர்
வருகதில் லம்ம தானே
அளியளோ அளியள் எம் நெஞ்சு அமர்ந்தோளே

தலைவன் பிரிய நேர்ந்த இடத்துத் தலைவியை உடன் அழைத்துக்கொண்டு செல்க எனத் தோழி உரைத்தனள். அதற்கு உடன்படாமல் தனியே பிரிந்து சென்றனன். தலைமகன் தான் சென்ற பாலை நிலத்தின் தீமையை கண்டு தலைவன் இத்தகைய பொல்லாங்கை உடைய இவ்விடத்தில் தலைவி வருவாளாயின் மிகவும் இரங்கத் தக்காள் என்று கூறினன்.

தனக்கு வேண்டிய இரையைத்தேடி வேட்டையாடி உண்ணும் செந்நாய், பாலை நிலத்தில் நீரற்ற சுனையில் தோண்டி உண்டாக்கிய நீரை உண்டு நின்றது. அங்ஙனம் உண்டு எஞ்சிய நீரில் காட்டு மல்லிகைபூ வீழ்ந்து, மூடி விடுகின்றது. அழுகல் நாற்றத்தை உடைய, அளவாற் சிலவாகிய நீரை வளையலை உடைய கையாள் எம்மோடு சேர்ந்து உண்ணுதற்கு தலைவி வரட்டும்; வந்தால் என் நெஞ்சிடத்து விரும்பி அமர்ந்துள்ள அத்தலைவி மிகவும் இரங்கத் தக்காள் என்று தலைவன் கூறினன். பொல்லாங்கை உடைய இவ்விடத்திதற்கு தலைவி வருதற்கு உரியள் அல்லள் என்பது கருத்து.

பாலை நிலத்தில் கிடைக்கும் சுனை நீரை திறம்படச் சித்தரித்துக் காட்டியுள்ளார் புலவர். நீர் மிகுதியில்லை என்பதைச் சின்னீர் என்ற தொடரால் சுட்டினார் மல்லிகைப்பூ கிடந்து மூடிக் கொண்டுள்ளது. நெடுநாள் அந்நீரில் இருத்தலின் நீரில் அழுகிவிட்டன.

அப்படிக்கிடக்கும் நீரும் தூய நீரன்று. செந்நாய் உண்டு எஞ்சிய நீர் என்பதனால் நீர் தூய்மை கெட்டுவிட்டது என்பது புலனாகும்.

தலைவன் தலைவியைப் பிரிந்து வந்தானாயினும் அவளை எப்பொழுதும் நினைக்கும் தன்மையன் என்பது, "நெஞ்சு அமர்ந்தோள்" என்று அவன் கூறுவதனாள் பெறப்படுகின்றது.



குறிப்பு

### 2.12.- குறுந்தொகை 57

நெய்தல் தலைவி கூற்றுகாப்பு மிகுதிக்கண் ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பூவிடைப் படினும் யாண்டுகழிந்து அன்ன
நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவுஅரி தாகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுக தில்ல கடனறிந்து
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கு

தலைவியைப் புறத்தே செல்லவிடாமல் தாய் முதலியோர் பாதுகாத்து நின்றனர். தலைவனைப் பிரிந்திருந்த தலைவி, பிரிவை ஆற்றாதவளாகி, தோழியை நோக்கி தலைவனும் யானும் தனித்து இருத்தலினும், அவனோடு சேர்ந்துள்ள பொழுதே ஒருங்கே உயிர்விடுதல் நன்று என்று சுறினள்.

தோழி!

கற்புக்காலத்துக் கணவனும், மனைவியும் இல்லறத்தில் செய்யக்கடவனவாகிய முறைகளை அறிந்து, பிறவி தோறும் தலைவனும், தலைவிவுமாகிய இருவராகப் பயின்று வந்த இந்த உலகத்தில், பிரிவினால் ஒருவா் ஒருவராகி துன்பத்தை அனுபவித்து வருகின்றோம். இத்துன்பத்தினின்றும் நீங்கித் தப்புதற்கு பூவானது பிரிவின்றி இணைந்து வாழும் மகன்றிற் பறவைகட்கு இடையில் பட்டாலும் அக்காலம் பல ஆண்டுகள் கழிந்தாற்போல துன்பந்தருவதாக, நீரின்கண் உறைகின்ற மகன்றிற் பறவைகள் எண்ணி, புணர்ச்சியை விரும்பி நிற்பன. அப்புணர்ச்சியைப் போல, பிரிதல் அருமையாகிய, நீங்காத காமமொடு தலைவன் உயிரும். என் உயிரும் ஒருங்கே போவனவாகுக. இ∴து என் விருப்பம் என்று தவைவி கூறினள்.

தலைவனைப் பிரிந்து இருத்தலினும் உயிர்நீங்குதல் சிறப்புடையது என்று தலைவி எண்ணினள்.

மகன்றில் நீர்வாழ் பறவைகளுள் ஒன்று. இப்பறவைகள் ஆணும் பெண்ணுமாக எப்பொழுதும் பிரிவின்றியே இருப்பன. இணைந்திருக்குங்கால் மலர் இடையே விழுந்ததினால் பிரிய நேரிட்டாலும் ஆற்றாத துன்பம் அடைவன.

கற்புக்காலத்துக் கணவனும், மனைவியும் நடத்தும் இல்லறத்துக்குரிய முறைகளைக் கடன் என்றார். தலைவனோடு சேர்ந்துள்ள காலத்திலேயே தலைவன் உயிரும், தலைவிஉயிரும் ஒருங்கே நீங்கினால், மறு பிறப்பில் நட்புடையராகப் பிறப்போம் என்பது தலைவியின் உட்கிடக்கை.

## 2.13.குறுந்தொகை: 62

குறிஞ்சி தலைவன் கூற்று தலைமகன் - இடந்தலைப் பாட்டின் கண் கூடல் உறு நெஞ்சிற்குச் சொல்லியது.

கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறுஇதழ்க் குவளையொடு இடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே

தலைவன் இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியோடு அளவளாவி மகிழ்ந்தனன். அடுத்த நாளிலும் முதல் நாள் தலைவியைக் கண்ட இடத்தில் அவளைக் கண்டு இன்புற்று மகிழ எண்ணினன். தன் நெஞ்சை நோக்கி, தலைவி நறுமையும், மென்மையும், உடையள், இன்றும் அவளைப் பெறுவேன் என்று கூறினன்.

நெஞ்சமே காந்தள் மலரையும் தோற்றிய அரும்பிலிருந்து உண்டாகிய செவ்வி மலர்களாகிய முல்லைப்பூக்களையும், மணக்கின்ற இதழ்களை உடைய குவளைமலர்களோ இடையிடையே பொருந்தும்படி கலந்து, அழகியதாகத் தொடுக்கப்பட்ட மாட்சிமைப்பட்ட மாலையைப் போன்றவள் தலைவி. அம்மாலை போல நறிய நாற்றத்தை உடைய தலைவியது மேனியானது, தளிரைக் காட்டிலும் மென்மையானது, நிறமும் பொருந்தியது தழுவுதற்கும் இனியது. இன்றும் அவளைப் பெறுவேன்

என்று தலைவன் கூறினன். தலைவியை முன்பு தழுவி இன்புற்றது போல இப்பொழுதும் இன்புறுவேன் என்பது கருத்து.

குறிப்பு

தலைவியைச் சந்தித்த இடத்தில் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் மீண்டும தலைவியை முன்னாட்கண்ட இடத்திலே (இன்றும்) சென்று அவனைச் சந்தித்தல் இடந்தலைப்பாடு எனப்படும்.தலைவி மேனியின் சிறப்புக் கூறப்பட்டது. ஒருமலர் அன்று பலமலர்கள் இணைத்துத் தொடுக்கப்பட்ட மாலை போல நாறியது. தளிரைக் காட்டிலும் மென்மையும் நிறமும் பொருந்தியது. அதனால் தழுவுதற்கும் இனியது என்றான் தலைவன்.

### 2.14. குறுந்தொகை 132.

குறிஞ்சி தலைவன் கூற்று - கழற்றெதிர் மறை

கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்கு மறந்து அமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்ஆன் நடுங்கு தலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன
சாஅய்நோக் கினளே மாஅ யோளே

பாங்கன் தலைவனிடத்து, ஒரு பெண் காரணமாக உள்ளம் உடைதல் அழகோ என இடித்துரைத்தனன். தலைவன் பாங்கனை நோக்கி, தலைவியின் இயல்பும் வனப்பும் கூறி அவளை யாங்ஙனம் மறந்து அமைவேன் என எதிர்மறுத்துக் கூறினன்.

தோழி (பாங்கனே) மாமை, நிறத்தை உடைய தலைவி தழுவுவதில் விரைவுடையவள், விரும்பத்தக்க அழகினை உடையவள், குவிந்த மென்மையான முலையினை உடையவள், நீண்ட கூந்தலை உடையவள், பக்கத்தில் மேயச்சென்ற விரைந்து சுரத்தலை உடைய நல்ல பசுவினது. நடுங்குந் தலையை உடைய கன்று தன் தாய்ப்பசுவைக் காணவேண்டும் என்ற விருப்பத்தோடு இருந்தாற்போல தன் விருப்பத்தை வெளிப்படுத்தும் மெலிந்த பார்வையை உடையவள். ஆதலின் யான் எங்ஙனம் அவளை மறந்து அமைவேன் என்று தலைவன் கூறினன்.தலைவி மாஅயோள், விரைவுடையவள், அழகினள், முலையள், கூந்தலள், நோக்கினள், அத்தகையள் மறத்தற்கரிய இயல்புடையவள் என்பது கருத்து.தலைவனுக்குப் பசுவும், தலைவிக்கு ஈன்ற அணிமையை

உடைய நடுங்குகின்ற தலையை உடைய கன்றும் உவமைகளாகக் கூறப்பட்டன.

குறிப்பு

தலைவி, ஈன்ற அணிமைத்தாய கன்று தன் தாய்ப் பசுவைப் பார்த்து நிற்றலைப் போன்ற விருப்பத்தை உடையள் ஆதலினாலும் மனங்கவரும் இயல்புடையவள் ஆதலினாலும் அவளை மறத்தல் அரிது என்று தலைவன் கூறினான். இப்பாடலில் குறிஞ்சிக்குரிய முதற்பொருளோ, கருப்பொருளோ இடம் பெற்றில. உரிப்பொருளால் குறிஞ்சி ஆயிற்று.

## 2.15.குறுந்தொகை 168

பாலை தலைவன் கூற்று, பொருள் வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நன்மா மேனி
புனற்புனை அன்ன சாய் இறைப் பணைத்தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே

தலைவன் பொருள்தேடச் செல்லுமாறு நெஞ்சு துணிந்தது தலைவியைப் பிரிந்து உயிர்வாழ்தல் அரிது என்று தலைவன் நெஞ்சிற்குக் கூறினன்.நெஞ்சே, தலைவி, மழைக்காலத்தில் மலரும் பிச்சியினது நீர் ஒழுகும் பொழுவிய அரும்புகள் பலவற்றைப் பெரிய பசுமை கொண்ட பனங்குடையில் ஒருங்கே மூடி வைத்து, பெருமழை பெய்த விடியற்காலத்தே விரித்து விட்டாற் போன்ற நறுமையும், தன்மையும் கொண்ட நல்ல மாமையை உடைய மேனியள், நீரில் விடும் தெப்பத்தைப் போன்ற வளைந்த சந்தினை உடைய பருத்த அவள் தோள்களைப் பொருந்துதலும் பிரிதலும் இலம், அவளைப் பிரிவேமாயின் உயிர்வாழ்தல் அதனைக் காட்டிலும் இலமே என்றான் தலைவன்.

தலைவியைப் பிரிதல் அரிது என்பது கருத்து. தலைவியின் மேனி அழகையும், தோள் அழகையும் தலைவன் கூறியதற்குக் காரணம் அவற்றிள் கவரப்பட்டு பிரியாமையினால் ஆகும். எப்பொழுதும் தலைவியின் தோளோடு ஒன்றுபட்டிருத்தலின் புதிதாக மணத்தலும், பின்பு

தணத்தலும் இலம், பிரியன் வாழ்தல் அதனினும் இலம் என்றான். அதனினும் என்ற சுட்டு தணத்துலும் இலம் என்பதிலுள்ள இன்மையைச் சுட்டிநின்றது.

குறிப்பு

பித்திகம் மாரிக்காலத்தில் அரும்பி மலரக் கூடியது பித்திகத்தின் வளவிய அரும்புகளை முதல்நாள் மாலை நேரத்தில் பறித்து வைத்து மூடிவைப்பர். மறுநாள் காலை மலர்ந்து மணம் வீசக்கூடியது. தலைவியின் மேனி பித்திகை மலர் போன்று குளிர்ச்சியுடையது, மணமுடையது என்னும் உவமை சிறப்பானது.

இப்பாடல் உரிப்பொருளால் பாலை, பாலைக்குரிய முதற்பொருளோ, கருப்பொருளோ சுட்டப்பெறவில்லை. பொருள் தேடச் சென்றால் பிரியவேண்டும் என்ற எண்ணமே உரிப்பொருளாயிற்று.

## 2.16. குறுந்தொகை 222

குறிஞ்சி தலைவன் கூற்று, பெட்டவாயில் பெற்றுஇரவு வலியுறுத்தல்

தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோடு ஒழுகின்
ஆண்டும் வருகுவன் போலும் மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கண்
துளித்தலைத் தலைஇய தளிர்அன் னோளே

தலைவியும் தோழியும் நீராடியது கண்டு, அவர்கள் ஒருங்கு இருந்த இடத்து தோழி மாட்டுத் தலைவிக்கு உளதாய, ஒற்றுமை எண்ணினன் தலைவன். தலைவியை அடைதற்குரிய வாயில் இவளே, இவள் வாயிலாக நாம் இரந்து குறைபெறுதும் என்று தலைவன் நினைத்தனன்.

மழைக்காலத்தில் மலரும் மாட்சிமைப்பட்ட பிச்சியினது, நீர் ஒழுகும் வளமுடைய அரும்பினது, சிவந்த புறத்தை ஒத்த கொழுவிய கடையையும் குளிர்ச்சியையும் உடைய கண்களையும், மழைத்துளியைத் தன்னிடத்தே பெற்ற தளிர்போன்ற மென்னையையும் உடையவள் தலைவி. அவள் தன் தோழி தெப்பத்தின் தலைப்பகுதியைக் கைக் கொண்டால் தானும் அதன் தலைப்பகுதியைக் கைக்கொள்வாள். தோழி தெப்பத்தின் கடைப்பகுதியைக் கைக்கொண்டால் தலைவியும்

**குறிப்பு**

அக்கடைப்பகுதியைக் கைக்கொள்வாள். தோழி தெப்பத்தைக் கை சோர விட்டு விட்டு நீரோடு சென்றால் தலைவியும் அங்கு வருகுவள் போலும் என்றான் தலைவன். இத்தோழி தலைவியொடு மனம் ஒத்த நிலையினள். ஆதலின் இவள் வாயிலாக தன்குறை இரந்து தலைவியைப் பெறலாம் என்று தலைவன் நினைத்தனன்.

தலைவியும் தோழியும் நீராடியபோது தலைவன் கண்டனன். ஆதலின் அக்காலத்து நிகழ்ச்சிகளைக் கூறினன். புணைவேழக் கரும்பால் செய்யப்படும் தெப்பம் மாரிக் காலத்து அரும்பி மலரும், பித்திகம் - பிச்சிப்பூ செம்மையும், தண்மையும் ஒருங்கே பெற்றது. முந்தை பாட்டிலும் (168) இடம்பெற்றது காண்க.

தளிர் மென்மைக்கும் தன்மைக்கும் உவமை. மேனியின் நிறத்திற்கும் பொருந்தும். நீராடிய அண்மையிற் கண்டனனாதலின் மழைத்துளி பொழியப்பெற்ற தளிரை உவமையாகக் கூறினன்.

குறிஞ்சிக்குரிய முதற்பொருளோ கருப்பொருளோ இடம் பெற்றில. தலைவியை அடைய விரும்பும் எண்ணத்தினால் குறிஞ்சி உரிப்பொருளாயிற்று.

## 2.17. குறுந்தொகை 273

பாலை- தோழி கூற்று பிரிவர் எனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்
பெருங்காட்டு உளரும் அசைவளி போலத்
தண்ணிய கமழும் ஒண்ணுத லோயே
நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்பு
அறியாது ஏறிய மடவோன் போல
ஏமாந் தன்றுஇவ் வுலகம்
நாம்உளேம் ஆகப் பிரியலன் தெளிமே.

தலைவன் தன்னைவிட்டுப் பிரியக் கூடும் என எண்ணித் தலைவி வருந்தினள், இதனைக்கண்ட தோழி, தலைவியை நோக்கி, தலைவன் பிரிய நினைத்தானாயினும், நம் நிலைமை நோக்கிப் பிரிய மாட்டான்

குறிப்பு

என்று கூறித் துணிவை உண்டாக்கினள். இரவு நேரத்தில் தாதை உடைய அரும்புகள் விளங்குமாறு பெரிய காட்டில் வீசி வருகின்ற அசைகின்ற காற்றைப் போன்ற குளிர்ந்தனவாகிய நறுமணம் வீசுகின்ற ஒளி பொருந்திய நெற்றியை உடையாய்.

தலைவன் பிரிந்துவிடுவான் என நீ வருந்துவாய் ஆயின்யான் அறிந்ததைச் சொல்லுவேன். கேட்பாயாக, பெரிய தேன் கூடு கொண்ட மலைப்பக்கத்தில் அத்தேனிறாலைப் பெறும் பொருட்டு பழைய கண்ணேணியின் மீது அறியாமல் ஏறிய அறிவில்லாதவனைப் போல, இவ்வுலகம் ஏமாந்தது, நாம் உயிரோடு இருக்க,தலைவன் உன்னைப்பிரிந்து செல்ல மாட்டான், இதனைத் தெளிவாயாக, எனத் தோழி தலைவியிடம் கூறினள்.

பழையதாகிய கண்ணேணி ஒடிந்து போகும் நிலையில் உள்ளது. அதனை அறியாமல் ஏறிய மடவோன் சிறிது ஏறியதும் அவ்வேணியின் இயல்பு அறிந்து இனி ஏற முடியாது, ஏறக்கூடாது என்று அஞ்சி மீண்டும் கீழே இறங்கிவிடுவான். அதுபோல சேய்நாடு சென்று வினை முந்துறக் கருதிய தலைவன் தலைவியைப் பிரிந்து மேற்கொளள எண்ணிய அப்பிரிவு, தலைவியின் உயிர் இழப்பையும் அதனால் தனக்கு இன்னாமையையும் தருதலை அறிந்து வெளி ஊர் செல்லுதலைத் தவிர்ப்பான் என்பது தோழியின் கூற்று.மால்புகண்ணேணி, மூங்கிலினது கணுவைக் கழிக்காமல் அக்கணுவையே படியாகக் கொண்டு செப்பம் செய்து ஏணியாக, ஏறக்கூடியது மால்பு. உரிப்பொருளால் பாலை.

## 2.18. குறுந்தொகை 300

குறிஞ்சி தலைவன் கூற்று- இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன்,- பிரிவச்சமும், வன்புறையும் **கூறியது.**

குவளை நாறும் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறும் தேம்பொதித் துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமைரக் கொங்கின் அன்ன
நுண்பல் தித்தி மாஅ யோயே,
நீயே, அஞ்சல் என்றஎன் சொல்அஞ் சலையே
யானே, குறுங்கால் அன்னம் குவமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்

விடல்சூ ழலனால் நின்னுடை நட்பே

குறிப்பு

இயற்கைப் புணர்ச்சிக்கண். தலைவன் தலைவியை நோக்கி, நின்னை நான் பிரியேன். பிரியின் ஆற்றேன். என்றனன. அது கேட்ட தலைவி பிரிவு என ஒன்று உண்டோ என அஞ்சினள். அஞ்சிய தலைவியை நோக்கி நீ அஞ்சற்க இவ்வுலகத்தைப் பெறினும் நின்னைப் பிரியேன் என்று தலைவன் வற்புறுத்திக் கூறினன்.குவளை மணத்தினைக் கொண்டு மணம் வீசும் திரண்ட கரிய கூந்தலையும் ஆம்பல் மலரின் மணத்தைக் கொண்டு மணம் வீசும் தேன் பொதிந்த சிவந்த வாயையும், ஆழமான நீர்நிலையில் வளரும் தாமரையின் பூந்தாதைப் போன்ற நுண்ணிய பலவாகிதேமல் புள்ளியையும் உடைய மாமை நிறமுடையாய், நீ யான்பிரிவேன் என்று கருதி அஞ்சாதேஎன்று யான்கூறும் சொல்லைக்கேட்டு அச்சம் கொள்ளாதே. யான், நின்னுடைய நட்பினை, சிறிய கால்களை உடைய அன்னப் பறவைகள் குவிந்து நிற்றலை உடைய மணலின் கண்ணே தங்கியிருக்கும் கடலால் சூழப்பெற்ற இந்த நில உலகத்தைப் பெற்றாலும் விடுதல் அறியேன், என்று தலைவன் தலைவியிடம் கூறினன். என்சொல் அஞ்சலையே என்றதனான் பிரிவச்சமும், நின்நட்புவிடல் சூழலன் என்றதனால் வன்புறையும் பெறப்பட்டன.

தலைவியின் உறுப்பழகிற்கு மூன்று உவமைகள் கூறப்பட்டுள. மூன்றும் நீர்ப்பூக்கள்

| | | |
|---|---|---|
| கூந்தல் | - குவளைமலர் | - குவையிருங் கூந்தல் |
| வாய் | - ஆம்பல் மலர் | - தேன்பொதித்துவர்வாய் |
| தேமல் | - தாமரை மலர் | - நுண்பல் தித்தி (பூந்தாது) |

முதல் நான்கடிகள் தலைவி குறித்த விளி,

இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவன் கூற்றாதலின் குறிஞ்சி உரிப்பொருளாயிற்று.

## 2.19. நற்றிணை -16

பாலை-இது பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினை நெருங்கித் தலைவன் செலவு அழுங்கியது

புணரில் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியில் புணராது புணர்வே ஆயிடைச்
செல்லினும் செல்லாய் ஆயினும் நல்லதற்கு
உரியை வாழிஎன் நெஞ்சே பொருளே

குறிப்பு

வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ யானே
விழுநீா் வியலகம் தூணி யாக
எழுமாண் அளக்கும் விழுநெதி பெறினும்
கணங்குழைக்கு அமா்த்த சேயரி மழைக்கண்
அமா்ந்தினிது நோக்கமொடு செகுத்தனன்
எனைய ஆகுக வாழிய பொருளே

செல்லினும் என்பதற்கு சோ்ப்பினும் (மூன்றாது அடி) என்ற பாட பேதமும் உண்டு.

தலைவன் தலைவியை விட்டு பிரிந்து பொருள் ஈட்டுதற்குத் திட்டம் இட்டுள்ளான் தலைவனின் நெஞ்சம் அவனைப் பொருள் ஈட்டிவரத் தூண்டுகிறது. தலைவனோ தலைவியை விட்டுப்பிரிவதற்கு விரும்பவில்லை. தலைவியின் அமா்த்த நோக்கம் அவனைக் கட்டுப்படுத்தி விட்டது. இதனைவிட, தேடிச்சென்று ஈட்டும் பொருள் சிறந்ததாக முடியாது எனக்கூறி பொருள்தேடத் தூண்டிய நெஞ்சினை ஆராயும் படி கூறி பொருள் தேடச் செல்லாது வீட்டில் தங்கினன்.

என் நெஞ்சமே நீண்டகாலம் வாழ்வாயாக பொருள் தேடவேண்டும் என்று இப்பொழுது நீ கருதிய பொருள், யாம் இல்லத்திருந்து தலைவியைப் புணருங்கால், இல்லத்துத் தங்கிய வழி அடையக்கூடிய பொருள் அன்று. இதனை விடுத்து பொருள் தேடச் சென்றாலோ, தலைவியைப் புணரும் புணா்ச்சி இனி அடையக் கூடியதன்று. பொருள் தேடுவதற்குச் சென்றாலும். பிரியாது இல்லத்திருந்தாலும் இரண்டினுள் நல்லதொரு காரியத்தைச் செய்தற்கு உரியை ஆவாய். யான் அறிந்த அளவில் பொருள்கள் நிலைபேறுடையன அல்ல வாடாத மலா்களை உடைய பொய்கைக்கண் ஓடுகின்ற மீன் செல்லும் வழியானது இருந்த இடம் தெரியாமல் கெடும். அது போலத்தான் பொருள்களும் மறையும். பெரிய கடலால் சூழப்பெற்ற அகன்ற இந்த நிலமே அளக்கும் கருவியாகக் கொண்டு ஏழு மரக்கால் அளவு அளக்கத்தக்க மாட்சிமைப்பட்ட பெரிய செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் விரும்ப மாட்டேன் கனத்த குழைய உடையாளுடைய இவளது மாறுபட்ட செவ்வரி படா்ந்த குளிா்ந்த கண்கள் என்னிடத்துப் பொருந்தும் நோக்கத்தால் உள்ளம் அழிக்கப்பட்டேன். ஆதலின் நெஞ்சே

பொருள்தேட நின்னொடு வாரேன். அப்பொருள் எத்தன்மையதாயினும் ஆகுக. அப்பொருள் போற்றுவர் இடத்து வாழ்வதாக.

தலைவன் பிரிந்து செல்லவில்லை. பொருள் தேட நினைத்தது மட்டுமே என்றாலும் பொருள் தேடப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் ஏற்பட்ட அளவிலே பாலை உரிப்பொருள் பெற்றது. இப்பாடல் தலைவியைப் பிரிந்து சென்றால் புணரும் புணர்ச்சி இல்லாதாகிவிடும் - பிரியில் புணராது புணர்வே - என்றது ஆழ்ந்த பொருளுடையது.. தலைவன் பிரிந்து சென்றால், பிரிவைத் தாங்காது தலைவி இறந்துபடுவள். அதனால் இனி புணர்ச்சி இன்று என்பதாகும். தலைவி எத்தகைய மென்மையான உள்ளம் கொண்டவள் என்பதும் தலைவனிடத்து ஈடுபாடு மிகவும் கொண்டவள் என்பதும் பெறப்படும். பொருளினும் இன்பம் சிறந்து என்பது கருத்து.

பொருள் நிலையாது என்பதற்கு மீன் ஓடும் நெறிகெடுவது போல என்று உவமை கூறியுள்ளது. மிகவும் பொருத்தமானது. பாலைக்குரிய முதற்பொருளோ, கருப்பொருளோ இப்பாடலில் இடம் பெற்றில. உரிப்பொருளால் பாலையாயற்று இப்பாடல்.

## 2.20. தொகுத்துக் காண்போம்

- அகநானூறு - தலைவி கூற்று- தலைவன் கூற்று தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது. காப்பு மிகுதிக்கண் ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச்சொல்லியது பற்றி அறிந்து கொண்டீர்கள்
- தோழி கூற்று பிரிவர் எனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. இது வரைவு நீட்டிப்பு ஆற்றாளாய தலைவி, தோழிக்கு வன்பொறை எதிரழிந்து சொல்லியது. பொருள் கடைக்கூட்டியநெஞ்சினை நெருங்கித் தலைவன் செலவு அழுங்கியது பற்றி அறிந்து கொண்டீர்கள்.

## 2.21. சோதித்தறியும் வினாக்கள்

1. உள்ளுறை உவமை என்றால் என்ன?

2. தலைவியைப் பிரிந்து தலைவன் சென்றிருப்பதால் பாலை உரிப்பொருளாகும். எங்ஙனம்?
3. தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது யாது?
4. கந்தரத்தனார் என்பார் யார்?

## 2.22. பயிற்சி வினா

1.தலைவன் கூற்று தலைமகன் இடந்தலைப் பாட்டின் கண் கூடல் உறு நெஞ்சிற்குச் சொல்லியது பற்றிக் கட்டுரை வரைக.

2. தலைவன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்து தானே போகின்ற வழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியதைச் சிறைக்குடி ஆந்தையார்பாடல் வழி -விளக்குக.

## 2.23. மேலும் படித்தறிக

1. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, கௌரா புத்தக மையம், திருச்சி - 01
2. புலியூர் கேசிகன், அகநானூறு, சீதை பதிப்பகம், சென்னை
3. ராமரத்தினம், குறுந்தொகை, கங்கை புத்தக நிலையம், சென்னை - 17

## கூறு :3 நக்கீரர் - நெடுநல்வாடை

**3. பாட அமைப்பு**

**3.1 அறிமுகம்**

**3.2 குறிக்கோள்கள்**

**3.3 நெடுநல்வாடை**

**3.3.1 மழையும் வெள்ளமும்**

**3.3.2 காலமும் மகளிர் வழிபாடும்**

**3.3.3 மனையுறை புறவுகள்**

3.3.4 மகளிரின் குளிர்காலத்துக் கோலம்

3.3.5 கூதிர்ப்பருவத்து நுகர்ச்சி

3.3.6 அரண்மனை அமைப்பு

3.3.7 அரண்மனை நெடுநிலை

3.3.8 அரண்மனை முன்றில்

3.3.9 ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு

3.3.10 கருப்பக்கிருகம்

3.3.11 பெரும் பெயர்ப் பாண்டில்

3.3.12 கட்டில் ஒப்பனைத் திறம்

3.3.13 மெல்லணை

3.3.14 துணை துறந்திருக்கும் கோப்பெருந்தேவியார் தன்மை

3.3.15 தோழியர் செயல்

3.3.16 செவிலியரின் தேற்றவுரைகள்

3.3.17 கோப்பெருந்தேவியின் ஆற்றாவொழுக்கம்

3.3.18 கொற்றவையை வெற்றி வேண்டல்

3.3.19 வீரர்கள் விழுப்புண் காட்டல்

3.3.20 விழுப்புண் காணும் வேந்தன் நிலைமை

3.4 தொகுத்துக் காண்போம்

3.5 சோதித்தறியும் வினாக்கள்

3.6 பயிற்சி வினா

3.7 மேலும் படித்தறிக

## 3.1. அறிமுகம்

நெடுநல்வாடையின் ஆசிரியர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். பாண்டிய மன்னாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிய புகழ்ந்து பாடப்பெற்றது. இது 188 அடிகள் கொண்ட ஆசிரியப் பாவால் ஆனது.

குறிப்பு

கூதிர்கால வருணனை யவனர் நகரைச்சுற்றிக் காவல் செய்தல், மாலைக்காலத்தில் மகளிர் வழிபாடு போல்வது. இப்பாட்டின் தொடக்கமாகும். மேலும் புனையா ஓவியம் போன்ற தேவியின் அவலநிலையும், வேந்தனின் பாசறைத் தொழிலும் இதில் குறிப்பிடத்தக்கன. இப்பாடலில் 'வேம்பு' தலையாத்த நோன்காழ் எ∴கம்' என அடையாள மாலைகூறப்படுதலால் இது அகப்பாட்டு மரபில் வழுவிப் புறப்பாட்டு ஆயிற்று என்பர். ஆயினும் இக்கால ஆய்வாளர் இதனை அகப்பாட்டு என்றே ஏற்கின்றனர். இதன்படி பிரிதலும், பிரிதல் நிமித்தமுமாகிய பாலைத் திணையின் கண் அடங்கும். வேம்பு என்னும் சொல்லால் சுட்டி ஒருவர் பெயர் சொல்லப்பட்டுள்ளது எனக் கொண்டால் இது வாகைத் திணையாய்ப் புறப்பொருட்பகுதியாகும்.

## 3.2. குறிக்கோள்கள்

- மாலைக்காலமும் மகளிர் வழிபாடும் மனையுறை புறவுகள் மகளிரின் குளிர்காலத்துக் கோலம் கூதிர்ப்பருவத்து நுகர்ச்சி ஆகியன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- அரண்மனை அமைப்பு அரண்மனை நெடுநிலை அரண்மனை முன்றில் ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு கருப்பக்கிருகம் ஆகியன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- பெரும் பெயர்ப் பாண்டில்- மெல்லணை, துணை துறந்திருக்கும் கோப்பெருந்தேவியார் தன்மை, கட்டில் ஒப்பனைத் திறம், வீரர்கள் விழுப்புண் காட்டல் ஆகியன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- இந்நெடுநல்வாடையின் கருத்து வேந்தனின் வெற்றியைச் சிறப்பிப்பதாதலின் வாகைத் திணையுள் கூதிர்ப் பாசறை என்னும் துறையாயிற்று என்பது பறிறித் தெரிந்து கொள்வீர்கள்

## 3.3 நெடுநல்வாடை

### 3.3.1 மழையும் வெள்ளமும்

வையகம் பனிப்ப வலனேர்பு வளை இப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென கோவல
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பெடு கலங்கிக் கோட
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயேன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிரப் பன்ன கூதிர்ப் பானாட்
பன்கொடி முசுன்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைக் தொழுதி
இருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப
வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கழுகின் மணியுற ழெருத்திற்
கோழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறு கொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சிமைய குரூஉத்துளி தூங்க
முடலையாக்கை முழுவலி மாக்களின் தன்மை
மாடம் ஓங்கிய மல்லன் மூதூர்
ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
படலைக் கண்ணிப் பரேர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவளி மாக்கள்

வண்டுமுசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர



குறிப்பு

**மழையும், வெள்ளமும்**

உலகம் குளிரும்படி தான் கிடந்த மலையை வலஞ்சூழ எழுந்து வளைத்து பருவம் பொய்யாத முகில் கார்காலத்து மழையைப் பொழிந்தது.

அங்ஙனம் பெய்த மழையாலே பெருகின வெள்ளத்தை வெறுத்த கொடிய கோலினையுடைய இடையர்கள் ஏற்றையுடைய முந்நிரைகளையும் மேடாகிய முல்லை நிலத்திலே மேயவிட்டு தாம் பயின்ற இடத்தை நீங்கிப் போந்தமையால் உண்டான தனிமையாலே வருத்த மெய்திக் காந்தள் மலரின் நெடிய இதழ்களால் தொடுத்த தம் தலைமாலையில் நீர் தங்கியிருப்பதால் வருந்தி, கலக்கமெய்தி, தம் உடம்பில் குளிர்ச்சி வருத்துவதால் பலரும் ஒருங்கு கூடிக் கையினில் நெருப்பினை உடையவராய்த் தம்பற்கள் பறை கொட்ட நடுங்கினர். விலங்குகள் நெய்தல் தொழிலை விட்டொடுங்கியும், குரங்குகள் மிக்க குளிர் கொண்டு வருந்தியும் மரத்தில் உறையும் பறவைகள் காற்று மிகுதியால் நிலத்தே விழவும் பசுக்கள் கோபத்துடன் உதைத்துக் கன்றுகளைப் பாலுண்ணாதபடி தவிர்ப்பவும் மலைகளைக் குளிப்பிப்பது போன்றும் குளிர்மிக்க அக்கூதிர்க் காலத்து நள்ளிரவு விளங்கியது.

புல்லிய கொடியினைய முசுட்டையின் திரண்ட வெண்மலர் பொன்னிறமான பீர்க்கு மலரோடே புதர்கள் தோறும் மலரா நிற்ப, பசிய காலையுடைய கொக்கின் மெல்லிய சிறகையுடைய திரள்கள் வண்டலிட்ட களிபரந்த வெண்மணற் பரப்பிடத்தே நாரைகளோடே இருந்து நீரின் செலவினை எதிர்த்தேறும் கயல்மீன்களைப் பிடித்துத்தின்னும்படி அம்மீன்கள் எதிரேறாநிற்ப மிகுதியாக பொழிந்து விட்டமையால் நீர் உலர்ந்து உயர்ந்து எழுந்த வெண்மேகங்கள் சிறிய சிறிய துளிகளை மெல்லத்தூவா நின்றது.

அழகிய இடத்தையுடைய அகன்ற வயல்களிலே நிறைந்த நீராலே மிக்கெழுந்த வளவிய இலையையுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர்கள் முற்றி வளையவும் பெரிய

அடியினையுடைய கமுகமரத்தின் மணிநிறக்கழுத்திலுள்ள மடலிடத்தே விரிந்த பாளையிடத்துத் தாறுகளில் உள்ள நுண்ணிய நீர் திரளும்படி, பக்கங்கள் திரண்டு, தெளிந்த நீரை அகத்தேயுடைய பச்சைகாய்கள் இனிமையுண்டாகுமாறு முற்றவும், செறிந்த மலையுச்சியிடத்தே பன்னிற மலரும் விரவிய சோலைகளின் கொம்புகள் தம்மிடத்தே மழைத்துளிகளை ஏற்றுக் கொள்ளுதலால், ஆண்டு அத்துளிகள் நிறமுடையனவாய்த் தூங்கா நின்றன.

இங்ஙனம் முல்லை நிலத்து மாவும். மாக்களும் குளிரால் வருந்தாநிற்ப, நகரத்தில் மாடம் முதலிய ஓங்கிய வளப்பமுடைய பழைய ஊர்களின்கண் உள்ள ஆறு கிடந்தாற்போன்ற அகன்ற தெருக்களிடத்தே பொங்கல் வெண்மழை துவலையாகப் பொழிதலால் தம்மேல் விழும் குளிர்ச்சி மிகுந்த துளிக்கும், குளிர்க்கும் அஞ்சாதவராய்த தாழைவரவன மாலைபுனைந்து முன்னும் பின்னும் தூங்கப் பெற்ற ஆடையுடையராய்ப் பருத்து அழகிய திண்ணிய தோள்களையும், முறுக்கேறிய உடலையும், நிரம்பின மெய்வலியையும் உடைய கல்லாமாந்தர் வண்டுகள் மொய்க்கும் கள்ளை நிரம்பவுண்டு களித்துப் பகல்கழிந்த அந்திப் பொழுதிலும் தம்மனம் விரும்பிய இடங்களிலே திரிதலைச் செய்தார்.

### 3.3.2.காலமும் மகளிர் வழிபாடும்

வெள்ளி வள்ளி வீங்கு இறை பணைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவற்
பூங்குழைக்கு அமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடசைப் பெய்த
செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை யயர

வெளுக்கப்பட்டதாகிய சங்கு வளையல் இறுகின முன் கையையுடைய மூங்கில் போன்ற தோலினையும் மெத்தென்ற சாயலினையும், முத்துப் போன்ற பல்லினையும், பொலிவுடைய மகர குழைத்துப் பொருந்தின உயர்ந்து தோன்றுகின்ற அழகினையுடைய குளிர்ந்த கண்ணினையும் உடைய மடப்பம் பொருந்திய மகளிர்

பூந்தட்டிலே பெய்த மலரும் செவ்விதாகிய பிச்சியின் அரும்பும் மலர்ந்து மணங்கமழ்தலானே, மாலைப் பொழுது இ∴து என்றறிந்து, இரும்பாற் செய்த தகளிக்கண் திரியிட்டு, நெய்யூற்றி, தீபமேற்றி நெல்லையும், மலரையும் சிதறி, இல்லுறை தெய்வத்தைக் கைகுவித்து வணங்கினர். இங்ஙனம் அங்காடித்தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாடியது.

### 3.3.3.மனையுறை புறவுகள்

மனையுற புறவின் செங்காற்சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
இரவும் பகலும் மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன இருப்பப்

மனையின் கண்ணே இருக்கும் புறாக்களின் செங்காற் சேவல், தான் இன்புறுகின்ற பெடையோடே சென்று அம்பலங்களிலே இரைதேடி உண்ணாமல் இரவிது, பகலிது என அறியாது மயங்கிச் செயலற்று மதலைப் பள்ளியிடத்தே கடுக்கும் காலை மாறி மாறி ஆற்றி இருந்தது. (மதலை - கொடுங்கையைத் தாங்கும் பலகை)

### 3.3.4.மகளிரின் குளிர்காலத்துக் கோலம்

கடியுடை வியனகர்ச் சிறுகுறுந்தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கல் பலகூட்டுமறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்து
இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கூதிர்ப்பருவத்தில் பயன்படாய் பொருள்கள்
கைவல்கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தருஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்

போர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப

காவலையுடைய அகன்ற மனைகளிலே குற்றேவல் செய்யும் வினைஞர் கொள் போன்ற நிறமுடைய நறிய சாத்தம்மியிலே கத்தூரி முதலிய பசுங்கூட்டினை அரைக்க வடநாட்டில் உள்ளார் கொணர்ந்த வெண்ணிறமுடைய சிலாவட்டம் தென்றிசையிற் பிறந்த சந்தனத்தோடே பயன்படாமற் கிடப்ப மகளிர்கள் குளிர்மிகுதியாலே தம் கூந்தலில் குளிர்ந்த மலர் மாலைகளை இட்டு முடியாராய் மங்கலம் கருதி ஒரு சில மலர்களேயே இட்டு முடித்தலை விரும்பிச் குளிர்ந்த நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே தீமுட்டி அதன்கண் கரிய அகிலோடே கண்ட சருக்கரையும் கலந்து புகைத்தனர்.

**கூதிர்ப்பருவத்தில் பயன்படாப் பொருள்கள்**

கைத்தொழிலில் வல்லவனால் செய்யப்பட்ட அழகிய சிவந்த நிறமுடைய ஆலவட்டம் (விசிறி) பிரிக்கப்படாமல் உறையிடப்பட்டுக் கிடந்ததால், அதன் மேற்பகுதியில் சிலந்தி வலை பின்னியிருந்தது. இளவேனிற்காலப் படுக்கைக்கு இன்றியமையாத் தென்றற் காற்றைத் தரும் பலகணிகள் தம் திண்ணிய கதவுகள் நன்கு பொருத்தித் தாழிடப்பட்டு அசையாது கிடந்தன.

**3.3.5.கூதிர்ப்பருவத்து நுகர்ச்சி**

கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்
பகுவாய்த் தடவில் செந்நெருப் பார
ஆடல் மகளிர் இசைவேக்கையும் செயலும்
ஆடல்மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த இன்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பக் பெயல்கனைந்து

குறிப்பு

கூதிர்நின் றன்றாள் போதே மாதிரம்

கல்லென்னும் ஒகையினையுடைய சிறிய மழைத் துளியை வாடைக்காற்று எங்கும் பரப்புவதால் இளைஞரும், முதியருமாகிய எப்பருவத்து மக்களும் குவிந்த வாயையுடைய குடத்தின் நீரைக் குடியாது, நீங்கி அகன்ற வாயையுடைய சிவந்த நெருப்பின் வெம்மையை விரும்பி நுகர்ந்தனர்.

ஆடுதற் தொழிலில் வல்ல விறலியர் வாய்ப்பாட்டு இசைக்கும் பொழுது அப்பாட்டினை யாழ் தன்னிடத்தே ஏற்றுக் கொள்ளும்படி நரம்பைக் கூட்டுதற்கு முயன்றனர்.

கூதிர்பருவத்துக் குளிர்ச்சியாலே தன் நிலை குலைந்த இனிய குரலாகிய நரம்பைப் பரியவாய் எழுகின்ற தம் மார்பின் வெப்பத்தே தடவிக் கரிய தண்டினையுடைய சிறிய யாழைப் பண்நிற்கும் முறையிலே நிறுத்தினர். மேலும் கணவரைப் பிரிந்த மகளிரும் வருந்தும்படியாக காலமழை பெய்து கூதிர்காலம் நிலைபெற்றது எல்லோரையும் வருந்துவதாய்.

### 3.3.6.அரண்மனை அமைப்பு

விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கோ
பொருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து
ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பிற்

திசைகளிலே விரிந்த கதிர் பரப்பும் அகன்ற ஞாயிரானது நிலத்தில் இரண்டித்து நாட்டப்பெற்ற இரு கோல்களின் நிழலும் சாயாதபடி தரைபோக ஓடுகின்ற இயக்கம் நிகழ்வதாகிய சித்திரைத்திங்கள் பத்தாம் நாள் தொடங்கி இருபதாம் நாள் முடிய நிகழும் நாட்களில், ஏதாவதொரு நாள் பகல் பதினைந்து நாழிகையளவில் சிற்பநூல் அறிந்த தச்சர் கூரியதாக நூலை நேரே படித்துத் திசைளைக் குறித்துக் கொண்டு திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் குறைவறப் பார்த்து அரசர்கள் வாழ்வதற்கு ஏற்ப மனைகளையும், வாயில்களையும் மண்டபங்களையும் பிறவற்றையும்

கூறுபடுத்தி இவைகளனைத்தையும் ஒருசேர அகப்பட வளைத்தெடுத்து உயர்ந்தோங்கிய மதில் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பு

### 3.3.7.அரண்மனை நெடுநிலை

பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமான் கதவம் பொருத்தி இணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காமைத்ததுத்
தாளொடு குயின்ற போரமை புணர்ப்பபிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி யப்பிய நெய்பணி நெடுநிலை

ஆணிகளும். பட்டங்களுமாகிய பெரிய இரும்பாலே கட்டிச் செவ்வரக்கை அதன் மீது, இரண்டாய் பகுக்கப்பட்ட கதவுகளைச் செருகி அதில் குவளை மலர் உருக்களையும், புதிய பிடிகளையும் பொருத்தி தாழக்கோலோடே சேரப்பண்ணின பொருத்துவாய் அமைந்த கூட்டத்தினையுடையனவாய் தொழில் வல்ல தச்சன் செய்ததாலே இடைவெளிகள் சிறிதும் இல்லாமல், வெண் சிறுகடுகு அப்பிவைத்த நெய்யணிந்த நெடிய நிலைகள் உருவாக்கப்பட்டன.

### 3.3.8.அரண்மனை முன்றில்

வென்றெழு கொடியோடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதிர் சிறப்பின்
தருமணல் நெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமோ டுகளு முன்கடைப்
பனைநிலை மனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத்தெவிட்டும் புலம்ப விடு குரலொடு
நிலவுப் பயன் கொள்ளும் றெடுவண் முற்றத்து
கிம்புரிப் பகுவாய் அம்பண நிறையக்
கலிழ்ந்து வீழ் அருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்

கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்

குறிப்பு

**அரண்மனையின் முன்றில்**

வெற்றிக்கொடியுடன் கூடிய யானைகள் சென்று புகும்படி உயர்ந்தனவும், மலையை நடுவே வெளியாகத் திறந்தாற் போன்றனவுமாமகிய கோபுர வரியல்களையும், திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையுடைய கொண்டு வந்து பரப்பிய மணல்பரந்த அழகிய அரண்மனை முன்றிலையும், நெடிய மயிரையுடைய கவரிமாவினேற்றை குறிய கால்களையுடைய அன்னத்தோடே தாவித்திரியும் வாயில் முன்னிடங்களையும் உடையதாய் குதிரைகள் அதிகளவு புல்லைத்தின்று அது தெவிட்டும் தன்னையைத் தோற்றுவிக்கின்ற குரலோடு, நிலாவின் பயனை அரசன் கொள்ளும் படி நெடிய வெள்ளிய நிலா முற்றத்தின் கண்ணே அருவியின் ஓசையைப் போன்று, ஓசைகள் தோன்றின. மேலும் செருக்கின மயில் ஆரவாரிக்கும் கொம்போசை போன்ற இனிய ஓசையும் மலையில் எழுவதைப் போன்று அரண்மனை முன்றிலிலும் ஓசை எழுந்தது.

**3.3.9. ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு**

யவனர் இயற்றிய வினைமான் பாவை
கையேந் தையகல் நியைநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்

அவ் அரண்மனை தானும் யவனராற் செய்யப்பட்ட தொழில் மாண்புடைய பாவை விளக்கானது தன் கையில் ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளிநிறையும் படி நெய் ஊற்றி, பெரிய திரிகளைப் பந்தல்களிலே கொளுத்தி வைத்த நிறமுடைய தலையினையுடைய மேல்நோக்கி எரிகின்ற விளக்கை நெய்வற்றின காலந்தோறும் நெய்வார்த்தும் ஒளிமழுங்கின காலந்தோறும்

தூண்டியும், பரந்து பட்ட இடத்திலுள்ள இருள் நீங்கும்படியும் செய்யக்கூடிய தலைமையினையுடைய பாண்டியனது அரண்மனை சிறு குறுந்தொழில் செய்யும் ஆண்மக்களும் அணுக இயலாத அரிய காவல் உடையதாக விளங்கியது.

குறிப்பு

### 3.3.10.கருப்பக்கிருகம்

வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குகஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்சாழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளை இக்
கருவாடு பெயரிய காண்பின் நல்லில்

பாண்டிய நாட்டில் அரண்மனை மட்டுமின்றி மக்கள் வசிக்கும் இல்லங்களும் உயர்ந்து ஓங்கி விளங்கின. இதனை மலைகளைப் போன்ற உயர்ச்சி உடையதாய், அம்மலைகளைச் சேர்ந்து இந்திரவில் கிடந்தாற் போன்று வீழ்ந்து கிடக்கும் பன்னிறக் கொடிகளையுடையவாய், வெள்ளியைப் போன்று விளங்கும் சுதை (சுண்ணாம்பு) தீட்டப்பட்டனவாய் நீலமணி போன்ற நிறமுடைய தூண்களையுடையதாய் செம்பினால் செய்ததைப் போன்ற மதிலில் அழகிய பல பூக்களையுடைய ஒப்பற்ற பூங்கொடி போன்ற ஓவியங்கள் பொறிக்கப்பட்ட இல்லங்கள் காண்பதற்கினிதாக இருந்தன.

### 3.3.11.பெரும் பெயர்ப் பாண்டில்

தசநான் கெய்திய பனைமருள் நோன்நாள்
இகன்மீக் கூறும் ஏந்தெழில் வரிநுதல்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையும் ஒப்ப வல்லோன்
கூறுளிக் குயின்ற ஈரிலை யிடையிடுபு
தூங்கியல் மகளிர் வீங்குமலை டுப்பப்
புடைதிரண் டிருந்த விடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருத்தி அடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்வெயர்ப் பாண்டில்

குறிப்பு

நாற்பது வயது நிரம்பியதும் முரசம் போன்ற கால்களையுடையதும், போர் தொழிலிலே புகழப்பட்டதும் உயர்ந்த அழகினையும் புகார் நிறைந்த நெற்றியினையுடையதும், போரின்கண் விழுப்புண் பட்டிறந்ததுமாகிய யானையின் மருப்புக்களை (தந்தங்களை) கட்டிலின் நான்கு பக்கங்களிலும் செலுத்தி, தொழில் வல்ல தச்சன் கூறிய உளியால் அழகிய இலையை அதன் மேற் பலகையில் வரைந்து சூல்முற்றிய காலத்து மகளிரின் பால்கட்டி வீங்கின மார்பகத்தைப் போன்று புடைதிரண்டிருந்த கால்களையுடையவனாய், குடத்திற்கும், கட்டிற்கும் இடைப்பட்ட பகுதி மெலிதாகவும் உள்ளிப்பூண்டின் கிழங்கு போன்ற உறுப்புகளையுடையனவும் ஆகிய கால்களை தன்னிடத்தே வைக்கப் பெற்று பெரிய எல்லையைப் பெற்ற அழகிய கச்சுக் கட்டில் என்று புகழப்பெற்றது.

### 3.3.12.கட்டில் ஒப்பனைத் திறம்

மடைமாண் நுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேகம் நாற்றிக் குத்துறுத்துப்
புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇய துகள் தீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படப்

அக்கட்டில் முத்துக்களால் தொடுக்கப் பெற்ற தொடர்மாலையால் அலங்கரிக்கப்பட்டது. கட்டிலின் உள்ளிடத்தே புலியின் வரிகள் குத்தப்பட்ட அழகிய தட்டம் போன்ற தகடு வேயப்பெற்றது. அதன்மேல் நிறமூட்டப்பட்ட பல்வேறு மயிரையும் உள்ளே அடக்கி அதன்மேல் சிங்கம் வேட்டையாடுதல் போன்றும், காட்டில் பல்வேறு மலர்கள் பூத்திருப்பது போன்றும். ஓவியம் வரையப் பெற்ற மெல்லிய போர்வையைப் போர்த்து அக்கட்டில் ஒப்பனை செய்யப்பெற்றது.

### 3.3.13.மெல்லணை

துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்

காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரிந்த சேக்கை

குறிப்பு

காதற் துணைகளாய்த் தம்முட்புணர்ந்த அன்னப்பறவைகளின் வெள்ளிய மயிரை இணைத்து இயற்றிய படுக்கையை மேன்மையுண்டாகுமாறு விரித்து, அதன் மேல் தலையணை, சாயணை முதலிய அணைகளையும் இட்டு வைத்து, நன்கு கஞ்சியிட்டுக் கழுவப்பட்டு மலரிதழ்களை அகத்தே வைத்து மணமேற்றப்பட்ட தூய மடியினை விரிக்கப்பட்ட படுக்கையின் மேல் கோப்பெருந்தேவியார் அமர்ந்திருந்தார்.

### 3.3.14.துணைதுறந்திருக்கும் கோப்பெருந்தேவியார் தன்மை

ஆரந் தாங்கிய அலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணை துறந்து
நன்னுதல் உலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகில் மரீஇய ஏந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு
புனையா ஓவியங் கடுப்பப் புனைவில்

காதற்றுனை துறந்திருக்கும் ஓர் ஒப்பற்ற பெண்ணாகிய கோப்பெருந்தேவியார் முத்தாற் செய்த கச்சுச் சுமந்த பருத்த மார்பிடத்தே, குத்துதல் அமைந்த தாலியையுடைய மங்கலநாண் ஒன்றுமட்டுமே கிடக்க, தன் கணவனைப் சிலவாகிய மெத்தென்ற மயிரினையும், மிக்க ஒளி ஒழுகிய மகரக்குழை களையப்பட்டமையால், அக்குழை கிடந்து அழுத்திய தழும்பிருந்த சிறிதே தாழ்ந்த காதினையும் முன்னர் பொன்னார் செய்த தொடி கிடந்தழுத்திய தழும்பு கிடந்த மயிர் ஒழுங்கையுடைய முன்கையிடத்தே, இப்பொழுது வலம்புரியை அறுத்தியற்றிய வளையல் ஒன்றுமே இட்டுகாப்பு நாண் கட்டப்பெற்று

வாளையினையும் பகுத்த வாயை ஒப்ப முடக்கத்தையுண்டாக்கிச் சிவந்த விரலிடத்தேயிட்ட சிவந்த நிறத்தையுடைய முடக்கென்னும் மோதிரத்தையும் முன்பு பூத் தொழிலையுடைய துகில் கிடந்த உயர்ந்த வளைவினையுடைய இடையிலே இப்பொழுது மாசேறிய அழகிய நூற்புடவையை உயைடவளாய் வடிவம் மட்டும் வரைந்து வண்ணங்களைக் கொண்டு எழுதாத ஓவியத்தைப் போன்று காட்சியளித்தாள்.

### 3.3.15.தோழியர் செயல்

துளிரேர் மேனித் தாய சுணங்கினஅம்பணைத் தடைஇய மென்றோள் முகிலமுலை
வம்புவிசித் தியாத்த வாங்சாய் நுசுப்பின்
மெல்லியல் மகளிர் நல்லடி வருட

துயிலா நிலையில் வருந்திக்கொண்டிருக்கும் கோப்பெருந்தேவியைக் கண்டு., தளிர் போன்ற மேனியினையும், பரந்த சுணங்கினையும், அழகிய மூங்கில் போலும் தோளினையும், தாமரை மொட்டுகளைப் போன்ற மார்பகத்தினையும், வளைவுடைய இடையினையும் உடைய சிலதியர் (தோழியர்) அக்கோப்பெருந்தேவியார்க்கு உறக்கம் உண்டாக்குமாறு அவர்தம் அடியை வருடினர்.

### 3.3.16.செவிலியரின் தேற்றவுரைகள்

நரைவரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணை யோரென
உலகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக் கலுழ்ந்து

நரை கலந்த கூந்தலையுடையவரும், சிவந்த முகத்தையுடையாருமாகிய செவிலித்தாயர் கோப்பெருந்தேவியார் ஆற்றாமை மிகுதலாலே பலரும் திரண்டு அளவில் குறுகியனவும், நீண்டனவுமாகிய மொழிகள் பலவற்றையும் பலகாற்சொல்லி நினக்கினிய

கேள்வர் (கணவர்) வருவர் வருந்தாதே! என்று அவள் மனத்திற்கினியவாகிய சொற்களை சேர்ந்து கூறிக் தேற்றினர்.

### 3.3.17.கோப்பெருந்தேவியின் ஆற்றாவொழுக்கம்

நண்சேறு வழித்த றோனிலைத் திரள்கால்
ஊறா வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகு செய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெல்ல மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா

தோழியர் அடிவருடியும், செவிலியர் ஆறுதலான மொழிகளைப் பேசியும் ஆறுதல் கூறிய நிலையிலும், அவைகளால் ஆறுதல் கொள்ளாளாய் மிகவும் கலங்கி நுண்ணிய சாதிலிங்கம் பூசின வலிய நிலையினையுடைய திரண்ட மேற்கட்டியின் கால்களைக் குட்டமைந்த கட்டிற் காலருகே நிறுத்தி, அவற்றின் மேற்கட்டிய துணியின் மேல் ஞாயிற்றோடு மாறுபட்ட திங்களின் ஓவியத்தோடு சேர்ந்து எழுதப்பட்ட உரோகணியின் ஓவியத்தைக் கண்டு (திங்கள் - சந்திரன். திங்கள் மண்டிலமாகிய வட்டத்துள்ள திங்கள் ஆடவனாகவும், உரோகினியை அவன் அருகமைந்த மடந்தையாகவும் ஓவியம் வரையப்பட்டது) உரோகினியாகிய இளம்பெண் காதலரோடு பிரிவின்றி உடனுறைவதைப் போன்று நம்மால் இருக்க இயலவில்லையே என்ற கருத்தினையுடையவளாய் நீண்ட நேரம் அவ்வோவியத்தையே நோக்கி அதன் காரணமாகத் தன் கண்களில் துளிர்க்கும் கண்ணீரை தன் விரலாற் சேர்த்தித் தெறிந்து, தனிமையில் இருந்து வருந்தினள் அன்பு மிக்க கோப்பெருந்தேவி.

### 3.3.18.கொற்றவையை வெற்றிவேண்டல்

இன்னா அரும்படர் தீர விறல் தந்து
இன்னே முடிகதில் அம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்

குறிப்பு

ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம் போந்து
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்
தெற்கோ் பிறைஞ்சிய தலைய நற்பகல்
பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ரழல

வேந்தன் போர்த்தொழில் முடித்து வந்தாலெழிய கோப்பெருந்தேவியின் துயர் தீராது என்பதை உணர்ந்த பெண்ணொருத்தி, வெற்றியின் பொருட்டுச் கொற்றவையை வேண்டும் நிலையில், கொற்றவையிடம், எமது வேந்தனின் பாசறைத்தொழில் விரைவில் முடியட்டும் என வேண்டினாள்.

ஒளி விளங்கும் முகபடாத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப் பயின்ற யானையினுடைய நீண்டு திரண்ட பெரிய கைகள் அற்று நிலத்தே வீழ்ந்து புரளும்படி, அவ்யானைகளை முன்னர்கொன்று, பின்னர்ப் பகைவருடைய ஒளியுடைய வாய் பிளத்தலானே, சீரிய புண்பட்டவராகிய வீரருடைய புண்ணிற்கு மருந்திடுவது போல, அரசன் தன் பாசறையை விட்டு நீங்கி புண்பட்டோரைக்கண்டு ஆறுதல் கூறத்தலைப்பட்டனன். அப்பொழுது இரவுப் பொழுதாகையால் பாசறை முழுவதும் விளக்குகள் ஏற்றப்பட்டன. எரியும் விளக்கின் வாடைக்காற்று வீசுந்தோறும் தெற்கு நோக்கிய தலையினை உடையவாயச் சாய்ந்து எரிந்தன.

### 3.3.19.வீரர்கள் விழுப்புண் காட்டல்

வேம்தபுதலை யாத்த நோன்காழ் எ∴கமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங்களையாப் பாய்பரிக் கலிமா
இருந்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்

வேப்பந்தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலோடே, முன்னர்ச்செல்கின்ற படைத்தலைவன் புண்பட்ட மறவர்களை அடையாளம் காட்டிச் செல்ல. பெரிய தாள்களையுடைய யானைகளும் விரைந்து செல்லும் தன்மையுடைய குதிரைகளும், எறிதுளியாற் சேறுபட்ட அத்தெருவின்கண் உள்ள சேற்றை உதைத்தலால் அச்சேற்றுத்துளிகள் மன்னன் மீது தெறித்தன.

### 3.3.20.விழுப்புண் காணும் வேந்தன் நிலைமை

படைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலசொடு முரணிய பாசறைத்தொழிலே.

பாசறையில் உள்ள புண்பட்ட வீரர்களைக் காண்பதற்காக வந்த வேந்தன் தன் இடத்தோளினின்றும் நழுவி விழுந்த மேலாடையை இடப்பக்கத்தே ஒரு கையாலணைத்துக் கொண்டு, வாளைக் கையில் ஏந்தி, போரிடக்கூடிய வன்மைத்தன்மை வாய்ந்த காளையின் தோளிலே வைத்த வலக்கையினை வைத்தவனாய் விழுப்புண்பட்ட வீரரைத் தன் செய்நன்றியறிதலும் அன்பும் தோன்ற முகத்தால் பொருந்த நோக்கிப் பரிகரித்து, முத்துமாலை கட்டிய கொற்ற வெண்குடை தவ்வென்னும் ஒலிபட்டசைந்த மழைத்துளியை அவன்மேல் படாதவாறு மறைந்து நிற்ப, நள்ளென்னும் நடுயாமத்தும் பள்ளி கொள்ளானாய்ச் சில மறவர் தன்னைச் சூழ்ந்து வரத் திரிதருகின்ற அரசன் பாசறையிடைத்தே இருந்து செய்கின்ற போர்த்தொழில் நிகழ்ந்தது..

பாசறையின் கண் இருந்து செய்யும் தொழிலாகலின் போர்த்தொழிலை ஒற்றுமை நயங்கருதிப் பாசறைத் தொழில் என்றார். மேலும் இந்நூலின்கண் பாடல் வையகம் பனிப்ப என்பதில் தொடங்கி, பாசரைத் தொழிலே என்பதில் முடிகிறது. இதுவரையில் சொல்லப்பட்ட விரிந்த பொருளை வானம் கார்கலத்து மழைபெய்தது. அதன்பின்னர் கூதிர்க்காலம் நிலைபெற்றது. அக்கூதிர்காலத்து நடுயாமத்தே வாயிலினையும், முன் கடையினையும், முற்றத்தினையும், சிறப்பினையுமுடைய அரண்மனையில், கட்டிலில் தங்கியிருக்கும் கோப்பெருந்தேவிக்குத் துன்பம் தீரும்படி இனிதே முடிக வேந்தன் பாசறைத் தொழில் என்று கூட்டி பொருள் முடிவு செய்க.

### 3.4. தொகுத்துக் காண்போம்

- மாலைக்காலமும் மகளிர் வழிபாடும்- மனையுறை புறவுகள்- மகளிரின் குளிர்காலத்துக் கோலம்- கூதிர்ப்பருவத்து நுகர்ச்சி ஆகியன பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- அரண்மனை அமைப்பு -அரண்மனை நெடுநிலை- அரண்மனை முன்றில்- ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு -கருப்பக்கிருகம் ஆகியன பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- பெரும் பெயர்ப் பாண்டில்- மெல்லணை, துணை துறந்திருக்கும் கோப்பெருந்தேவியார் தன்மை, கட்டில் ஒப்பனைத் திறம், வீரர்கள் விழுப்புண் காட்டல் ஆகியன பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- இந்நெடுநல்வாடையின் கருத்து வேந்தனின் வெற்றியைச் சிறப்பிப்பதாதலின் வாகைத் திணையுள் கூதிர்ப் பாசறை என்னும் துறையாயிற்று என்பது பறிறித் தெரிந்து கொண்டீர்கள்.

## 3.5. சோதித்தறியும் வினாக்கள்

1 நெடுநல்வாடையின் ஆசிரியர் யார் ?

………………………………………………………………………………
………………………………………………………………………………
…………………………………………………………

2. கருப்பக்கிருகம் என்பது என்ன ?

………………………………………………………………………………
………………………………………………………………………………
…………………………………………………………

3. கோப்பெருந்தேவியின் ஆற்றாவொழுக்கம்- விளக்குக?

………………………………………………………………………………
………………………………………………………………………………
…………………………………………………………

## 3.6. பயிற்சி வினாக்கள்

1. விழுப்புண் காணும் வேந்தன் நிலைமையைக் கட்டுரைக்க

2.பாண்டிய நாட்டில் அரண்மனை மட்டுமின்றி மக்கள் வசிக்கும் இல்லங்களும் உயர்ந்து ஓங்கி விளங்கின- விளக்குக

## 3.7. மேலும் படித்தறிக

குறிப்பு

1. இரா.ருக்மணி, நெடுநல்வாடை, காவ்யா பதிப்பகம், சென்னை

## கூறு 4

## குமட்டூர்க் கண்ணனார் பாடியது இரண்டாம் பத்து

4.பாட அமைப்பு

4.1 அறிமுகம்

4.2 குறிக்கோள்கள்

4.3 பதிற்றுப்பத்து நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும்

4.4 பதிகம்

4.5 பாட்டுடைத் தலைவன்

4.6 பாடல் தலைப்புகள்

4.6.1 புண்ணுமிழ் குருதி

4.6.1.1 புண்ணுமிழ் குருதி பெயர்க்காரணம்

4.6.2 மறம் வீங்கு பல்புகழ்

4.6.2.1 மறம் வீங்கு பல்புகழ் பெயர்க்காரணம்

4.6.3 பூத்த நெய்தல்

4.6.3.1 பூத்த நெய்தல் பெயர்க்காரணம்

4.6.4 சான்றோர் மெய்ம்மறை

4.6.5 நிறைய வெள்ளம்

4.6.5.1 நிறைய வெள்ளம் பெயர்க்காரணம்

4.6.6 துயிலின் பாயல்

4.6.6.1 துயிலின் பாயல் பெயர்க்காரணம்

4.6.7 வலம்படு வியன்பனை

4.6.7.1 வலம்படு வியன்பனை பெயர்க்காரணம்

4.6.8 கூந்தல் விறலியர்

4.6.8.1 துறை விளக்கம் - இயன்மொழி

4.6.8.2 கூந்தல் விறலியர் பெயர்க்காரணம்

4.6.9 வளனறு பைதிறம்

குறிப்பு

4.6.9.1 வளனறு பைதிறம் பெயர்க்காரணம்

4.6.9.2 துறை விளக்கம் - பரிசில் துறைப் பாடாண்பாட்டு

4.6.10 அட்டுமலர் மார்பன்

4.6.10.1 அட்டுமலர் மார்பன் பெயர்க்காரணம்

4.7 தொகுத்துக் காண்போம்

4.8 சோதித்தறியும் வினாக்கள்

4.9 பயிற்சி வினாக்கள்

4.10 மேலும் படித்தறிக

## 4.1 அறிமுகம்

பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் பற்றியது. முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. எஞ்சிய எட்டுப் பத்துக்கள் மட்டுமே கிடைக்கின்றன. இது முழுவதும் சேரமன்னர்களைப் பற்றிய பாடல்களாக அமைந்துள்ளமை இதன் சிறப்பு ஆகும். பண்டைக்கால மன்னர்களின் வீரத்தையும், கொடைச்சிறப்பையும், வெற்றிச் சிறப்பையும் எடுத்துக்காட்டும் வண்ணமாக இதில் பாடல்கள் அமைந்துள்ளன. மன்னர்கள் மட்டுமல்லாது வீரர்கள், யானைகள், குதிரைகள் போன்றவையும் போரில் ஈடுபட்ட வீரக் காட்சியைப் புலப்படுத்துவதாக இப்பகுதி அமைந்துள்ளது. இது அறிமுகப் பகுதியாக விளங்குகின்றது.

## 4.2 குறிக்கோள்கள்

- பதிற்றுப்பத்து நூல் அமைப்பு பற்றி அறிந்து கொள்வீர்கள்
- பாடிய புலவர்களைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள்
- பண்டைக் கால மன்னர்களின் வீரத்தைப் பற்றி புலவர்களின் வாயிலாக விளங்கிக் கொள்வீர்கள்

## 4.3 பதிற்றுப்பத்து நூற் குறிப்பும் ஆசிரியர் குறிப்பும்

பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பத்துப்புலவா்கள் பாடிய பப்பத்துப் பாடல்களே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். முதல்பத்தும்

இறுதிப்பத்தும் இன்று கிடைத்தில. ஒவ்வொரு பாட்டின் முடிவில் துறை, வண்ணம், தூக்கு (இசை) பெயர் என்பனவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. ஒவ்வொரு பாட்டின் பொருளாற் சிப்புடைய தொடர் அவ்வப்பாட்டின் பெயராக அமைந்துள்ளது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் காணப்படுகிறது. பாடப்பட்டோர் பாடியோர் விவரம் வருமாறு.

இரண்டாம் பத்து - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் - குமட்டூர்க் கண்ணனார்

மூன்றாம் பத்து - பல்யானைச்செல்கெழுகுட்டுவன் - பாலைக் கௌதமனார்

நான்காம் பத்து - களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் - காப்பியாற்றுக் காப்பியனார்

ஐந்தாம் பத்து - கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் - பரணர்

ஆறாம் பத்து - ஆடுகோட்டுச் சேரலாதன் - காக்கை பாடினியார்

ஏழாம் பத்து - செல்வக்கடுங்கோ வாழியாதன் - கபிலர்

எட்டாம் பத்து - தகடூர் எறிந்த பெருந்சேரல் இரும்பொறை - அரிசில்கிழார்

ஒன்பதாம் பத்து - இளஞ்சேரல் இரும்பொறை - பெருங்குன்றூர்கிழார்

## 4.4 பதிகம்

மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகன்
அமைவர லருவி இமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னாயர் வணக்கி
நெய்தலைப் பெய்து கையிற் கொளீஇ
அருவிலை நன்கலம்வியரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதனைக்
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு

## 4.5 பாட்டுடைத் தலைவன்

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் இவன் உதியன் சேரலுக்கும் வெளியன் வெண்மாள் நல்லினிக்கும் பிறந்தவன். வடநாட்டை வென்று இமயத்தின் உச்சியில் தனது விற்கொடியைப் பொறித்தவன்.

பாடியோர் குமட்டூர்க்கண்ணனார். இவரது சொந்த ஊர் குமட்டூர் என்பதை இயற்பெயர் முன் அமைந்துள்ள குமட்டூர் என்ற அடை மொழியால் அறியமுடிகின்றது. இவர் அந்தண மரபைச் சார்ந்தவர் என்பது பதிகத்தால் புலனாகிறது. மேலும் இமயவரம்பனைப் பாடியதற்காக உம்பற்காடு என்ற பகுதியில் ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகவும், அவனது தென்னாட்டு வருவாயுள் பாகமும் பெற்றாரெனவும் பதிகம் குறிப்பிடுகின்றது. பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தை தவிர இவர் பாடியவையாக வேறு பாடல்கள் கிடைத்தில.

## 4.6 பாடல் தலைப்புகள்

புண்ணுமிழ் குருதி, மறம் வீங்கு பல்புகழ், பூத்த நெய்தல், சான்றோர் மெய்ம்மறை, நிரைய வெள்ளம், துயிலின் பாயல், வலம்படு வியன்பணை, கூந்தல் விறலியர், வளனறு பைதிரம், அட்டுமலர் மார்பன் என்பன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் நிலைபெற்ற பெரிய புகழையும், குற்றமற்ற வாய்மொழியையும், இன்னிசை முழக்கும் முரசத்தினையும் உடைய உதியஞ்சேரலுக்கும் வெளியன் வெண்மாள் நல்லினிக்கும் பிறந்தவன். அருவிகளை உடைய இமயமலையின் உச்சியில் தனது விற்கொடியைப் பொறித்தவன். இமயம் முதல் குமரிவரை தமிழகம் விளங்குமாறு தன் செங்கோல் ஆட்சியினை நடத்தி தகைசால் சிறப்பொடு வாழ்ந்தனன். அரிய மன்னர்கள் வெற்றிகொண்டு தன்னை வணங்குமாறு செய்தவன். பயனில்லாத வன்சொற்பேசும் யவனர்களைச் சிறைப்படுத்தி அவர்கள் தோற்றமையால் அவர்தம் தலையில் நெய்யைப் பெய்து கையைப் பிணித்து வெற்றி கண்டவன். தண்டமாக அவர்களுடைய அரிய அணிகலன்களை வயிரங்களோடு பெற்று அவர்களை விடுதலை செய்தவன். பாணர், கூத்தர் முதலியவர்களுக்கும் பிறர்க்கும் பழமைச் சிறப்புடைய மூதூர்களைப் பரிசாகக் கொடுத்தவன். தன்னை எதிர்த்த

பகைவர்களைத் தேய்த்து அழித்த அச்சம் தருகின்ற வலிய முயற்சியினை உடையவன். இவனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு.

குறிப்பு

### 4.6.1 புண்ணுமிழ் குருதி

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந்து அட்ட துளங்குஇரும் கமம்சூல்
நளிஇரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூர்உடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடும்சின விறள் வேள் களிறுஊர்ந் தாங்குச்
செவ்வாய் எஃகம் விலங்குநர் அனுப்ப
அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மாலைக் கலவை போல அரண்கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை
பலர்மொசிந்து ஓம்பிய திரள்பூம் கடம்பின
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்றுஎறி முழங்குபணை செய்த வெல்போர்
நார்அரி நறவின் ஆர மார்பின்
போர்அடு தானைச் சேரலாத!
மார்புமலி பைந்தார் ஓடையோடு விளங்கும்
வலன்உயர் மருப்பின் பழிநீர் யானைப்
பொலன்அணி எருத்தம் மேல்கொண்டு பொலிந்த நின்
பலர்புகழ் செல்வம் இனிது கண்டு இருமே
கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுவர் மறந்தபக் கடந்தே



**துறை** : செந்துறைப் பாடாண்பாட்டு

குறிப்பு

**வண்ணம்** : ஒழுகுவண்ணம்

**தூக்கு** : செந்தூக்கு

**பெயர்** : புண்ணுமிழ் குருதி

மலைபோல் எழும் கடல் அலைகள் வெள்ளிய சிறுநீர் துளிகளாக உடைந்து சிதறுமாறு காற்று அடித்தது. நிறைந்த நீரும் செறிந்த பரப்பினையும் உடைய கரிய அக்கடலின் நடுவிடத்தே சென்று, பிறரை வருத்துதலைச் செய்யும் அவுணர்கள் அரணாக நின்று பாதுகாக்கும் சூரவனமாவாகிய மாமரத்தினை வேருடன் வெட்டிக் குறைத்த மிக்க புகழும் கூடிய சினமும் விறலும் உடைய செவ்வேள், பிணிமுகம் என்னும் தன் யானையின் மீதேறிச் சிறப்புடன் செல்வத்தைப் போன்று;

சேரலாதன் போர்க்களத்தினுள் நுழைந்து கூரிய வாயினை உடைய வாளால் எதிரிகளின் உடலங்களை அறுத்தான்; அவரது அரிய மார்பு பிளத்தலால் உண்டாகிய புண்களினின்றும் இரத்தம் சிந்தியது. அங்ஙனம் ஒழுகிய குருதியால் பெரிய உப்பங்கழியிடத்து, நீலமணி போன்ற நீரானது குங்குமக் குழம்பினைப் போலச் செந்நிறம் அடைந்தது. இவ்வாறு கழியின் நிறம் மாறுபடுமாறு பகைவர்களின் அரண்களை அழித்துத் தன் தோள்வலியினால் மேம்பட்டு விளங்கும் உயர்ந்த மன எழுச்சி உடையவனே! பகைவர் தாம் பலராய்க் கூடி நின்று காத்த மலர்ந்த பூக்களை உடைய காவலோடு அமைந்த கடப்ப மரத்தினை அடியோடு வெட்டிக் கொணருமாறு தம் படைவீரர்களை ஏவி, போரிலே வெற்றி பெற்று, முழங்குகின்ற முரசினைச் செய்து கொண்ட, வெல்லும் போரினையும் நாரால் வடிக்கப்பட்ட கள்ளினையும், ஆரம் அணிந்த மார்பினையும் அஞ்சாது நின்று போர் புரியும் தானையையும் உடைய சேரலாதனே,

முருக்க மரங்கள் செறிந்துள்ள மலை இடத்தே இரவில் உறங்கும் கவரிமான்கள், பகற்போதில் தாம் உண்ட நரந்தம் புற்களையும், அவை வளர்ந்திருக்கும் பரந்துவிளங்கும் அருவிகளையும் கனவிற் கண்டு மகிழும் ஆரியர் நிறைந்து வாழும் பெரிய புகழை உடைய இமயம் முதல் தென்திசைக் கண் உள்ள குமரிவரை இடைப்பட்ட நாட்டிலுள்ள செருக்குற்று மீக்கூறும் மன்னர்களின் மறம் கெட்டழியுமாறு பொருது வென்றாய். அங்ஙனம் வெற்றி பெற்ற நினது

மார்பில் உள்ள மாலை நீ ஏறிச் செல்லும் யானையின் ஓடையளவு தாழ்ந்து அதனொடு விளங்கும்.

வெற்றியால் உயர்ந்த மருப்பினை உடைய குற்றமற்ற யானையின் பொன்னரிமாலை அணிந்த பிடரிமேல் ஏறியிருந்து சிறப்புற்று விளங்குகிறாய். பலரும் புகழும் நின்னுடைய செல்வச் சிறப்பினையாம் இன்புறக் கண்டு மகிழ்ந்தோம்; நீ வாழ்க.

நெடுஞ்சேரலாதன் இமயம் வரை தன் புகழைப் பரப்பி, மறம் செருக்கிய ஆரிய மன்னர்களைவென்று மேம்பட்டனன். தென்திசைக் கண் கடம்பெறிந்து இமயம் வரை இவனர் ஆட்சி நிலவிற்று.

### 4.6.1.1 புண்ணுமிழ்குருதி பெயர்க்காரணம்

பகைவரது மார்பிலிருந்து வழிந்த குருதியின் மிகுதியால் பெரிய உப்பக்கழியில் உள்ள நீலமணி போன்ற நீர் தனது நிறம்மாறி குங்குமக் குழம்பைப் போல் சிவப்பாயிற்று.

'அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீறநிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல'

இப்பாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வெற்றிச்சிறப்பும், செல்வச் சிறப்பும் கூறப்பட்டன.

**திணை** : பதிற்றுப்பத்துப் பாடல்களுக்குத் திணை கூறப்படவில்லை. துறை,

வண்ணம் தூக்கு பெயர் மட்டுமே கூறப்பட்டுள.

**துறை** : செந்துறைப் பாடாண்பாட்டு

செந்துறையாவது, விகார வகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது; உலகினுள் இயற்கைவகையான் இயன்ற மக்களைப் பாடுதல்.

**வண்ணம்** : **ஒழுகுவண்ணம்**

இது வண்ணவகை இருபாதினுள் ஒன்று. ஒழுகிய ஓசையாற் செல்வது. தேன் ஒழுக்கு நெய் ஒழுக்கினைப் போன்று ஓசை இடையிடையே அற்றுச் செல்லாது ஒரே சீராக ஒழுங்கு பட்டுச் செல்வது.

**தூக்கு : செந்தூக்கு**

அஃதாவது ஆசிரியப்பா. தூக்கு என்பது செய்யுள் அடிவரையறை கொண்டு பாக்களைத் துணிப்பது. பாவகையுள் இன்ன

பா எனத் துணித்துக் கூறுவது. ஈற்றயலடி முச்சீரினை உடைமையின் ஆசிரியப்பாவாகிய செந்தூக்கு ஆயிற்று. இவ்விளக்கத்தினை இவை பெற்ற பிற பாடல்களுக்கும் கொள்க.

குறிப்பு

### 4.6.2 மறம் வீங்கு பல்புகழ்

வயவர் வீழ வாளரின்மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசுதலை பனிப்பக்
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே
தார் அணி எருத்தின் வாரல் வள்உகிர்
அரிமான் வழங்கும் சாரல் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சுஅதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசு துயில் ஈயாது
மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற்கு இனிதுநின் செல்வம் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு கமழுங் குளவி
வாடாப் பைம்மயிர் இளைய ஆடுநடை
அண்ணல் மழகளிறு அரிதிமிறு ஓப்பும்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்து அவண் இறுத்த இரும்பேர் ஒக்கல்
தொல்பசி உழந்த பழங்கண் வீழ
எ.்.கு போழ்ந்து அறுத்த வால்நிணங் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனைஅமை கள்ளின் தேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தின் இருஞ்சிறகு அன்ன
நிலமதின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வலால்அரைக் கொளீஇ
வணர்இரும் கதுப்பின் வாங்குஅமை மென்தோள்
வசையில் மகளிர் வயங்கிழை அணிய
அம்பு மெய் ஆர்த்த சுற்றமொடு
நுகர்தற்கு இனிதுநின் பெருங்கலி மகிழ்வே (25)

**துறை : செந்துறைப் பாடாண்பாட்டு**

**வண்ணம் : ஒழுகுவண்ணம்**

**தூக்கு : செந்தூக்கு**

**பெயர் : மறம் வீங்கு பல்புகழ்**

வீரர்கள் தோற்று நிலத்தே விழுமாறு வாட்போரைச் செய்து அவர்கள் இடங்களைக் கவர்ந்து கொள்ளும் சுற்றத்தாருடைய அரசர்கள் தலை நடுங்கி வணங்கி, அவர்தம் காவல் மரமாகிய கடம்பினை அடியோடு வெட்டி அழித்து,மிக்க சினத்தை உடைய சேர வெந்தே!

பிடரிமயிர் பொருந்திய கழுத்தினையும், நீண்ட கரிய நகங்களையும் உடைய சிங்க ஏறு உலாவும் மலைச்சாரலில் பிறவிலங்குகளின் இனம் இனமாய்த் தொகுதி கொண்டிருக்கும் கூட்டம், நெஞ்சு நடுக்குற்று மாய்வதைப் போல முரசுகள் முழங்கும் தம் அரண்மனைக்குள்ளே இருக்கும். நாற்றிசையிலும் வாழும் அரசர்கள் இரவிலும் உறங்காமல் நெஞ்சம் நடுங்கிக் கொண்டிருப்பர். அவர்களின் நெஞ்சு நடுங்குதற்குக் காரணமான நின்வீரத்தால் மிக்கு விரிந்து பல துறையால் வரும் புகழ், கெட்டற்கு எமக்கு இனிதாய் இருந்தது.

மறம் வீங்கு பல்புகழுடைய நின் செல்வத்தைக் கேள்விப்படுந்தோறும் நின்னைக் காணவேண்டும் ஏனற விருப்பத்தால், உதிராத பசிய மயிரினையும் இளைய தன்மைக்கு ஒத்த அசைந்த நடையினையுமுடைய பெருமை பொருந்திய இளங்களிற்றினை மொய்க்கும் வண்டு, ஞிமிறு முதலியவற்றை மணம் கமழும் காட்டு மல்லிகையால் ஓட்டுகின்ற கன்றோடு கூடிய பிடிகளை உடைய குன்றுகள் பலவற்றை கடந்து வந்து தங்குதற்குரிய உன் அரண்மனையின் ஓரிடத்தே என் சுற்றத்தார் வந்து தங்கி உள்ளனர்.

என் சுற்றத்தார் நெடுநாட்களாகப் பசியால் வாடி வருந்தியுள்ளனர் . அவ்வருத்தம் அறவே நீங்குமாறு வாளால் வெட்டப்பெற்ற வெள்ளிதாகிய ஊனின் கொழுவிய இறைச்சியும், ஆட்டிறைச்சியும் செய்து சமைத்த வெண்மையான சோறும் ஆகிய இவ்விரண்டுன் அரும்பு பெய்து பக்குவம் செய்யப்பட்ட கள்ளின் தெளிவையும் உண்டனர். மழை நீரால் நனைந்த பருந்தினுடைய ஈரம் மிக்க சிறகைப் போன்ற கிழிந்த மண்படிந்து மாசுபடிந்து உடையை நீக்கி நூற்கப்படாத நூலாகிய பட்டால் இயன்ற ஆடைகளை இடையில் உடுத்திக் கொண்டனர். சுருண்ட கூந்தலையும் வளைந்த மூங்கில் போலும் தோள்களையும் உடைய குற்றமில்லாத மகளிர் விளக்குகின்ற அணிகலன்களை அணிந்துகொண்டு நின்றனர். நின்னை மிகவும் விரும்பி நின்னைச் சூழ்ந்திருக்கும் நின் சுற்றத்தாருடன் வீற்றிருக்கும் நினது பெரிய

திருவோலக்க இன்பம் கண்டு மகிழ்வதற்கு இனிதாக உள்ளது. இதன்வாயிலாக சேரலாதன் விருந்து படைக்கும் சிறப்பும் சுற்றத்தார்களைப் பேணும் பண்பும் புலனாயின.

#### 4.6.2.1 மறம் வீங்கு புகழ் பெயர்க்காரணம்

கல்வி, செல்வம் முதலியவற்றால் அடையக்கூடிய பல்வகையான புகழ்களையும் தன் வீரம் ஒன்றினாலேயே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பெறுதலின் அவனது புகழ் மறம்வீங்கு பல்புகழ் என்று குறிக்கப்பட்டது. இப்பாடலில் நெடுஞ்சேரலாதனின் வெற்றிச் சிறப்பும் திருவோலக்கச் சிறப்பும் ஒருங்கு கூறப்பட்டன.

### 4.6.3 பூத்த நெய்தல்

தொறுத்த வயல் ஆரல்பிறழ்நவும்
ஏறுபொருத செறு உழாதுவித்துநவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இரும்கண் எருமையின் நிரைதடுக் குநவும்
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்
ஒலிதெங்கின் இமிழ்மருதின்
புனல்வரியல் பூடம் பொய்கைப்
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவின் அழிய நாமம் தோற்றிக்
கூற்றுஅடூஉ நின்ற யாக்கை போல
நீ சிவந்து இறுத்த நீர்அழி பாக்கம்
விரிபூம் கரும்பின் கழனி புலலெனத்
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலைப் பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க
ஊரிய நெருஞ்சி நீறுஆடு பறந்தலைத்
தாதுஎரு மறுத்த கலிஅழி மன்றத்து
உள்ளம் அழிய ஊங்குநர் மிடல்தபுத்து
உள்ளுநர் பனிக்கும் பாழா யினவே
காடே கடவுள் மேன, புறவே
ஒள்இழை மகளிரொடு மள்ளர் மேன

ஆறே அவ்வனைத்து அன்றியும் ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறம் தராஅக்
குடியுறம் தருநர் பாரம் ஓம்பி
அழல்சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழை வேண்டு புலத்து மாரி நிற்ப்
நோயோடு பசி இகந்து ஒரீஇப்
பூத்தன்று பெருமந் காத்த நாடே (28)

**துறை : செந்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கும், வஞ்சித்தூக்குமாம்**
**பெயர் : பூத்த நெய்தல்**

ஆநிரைகள் புல்மேய்தற்கான மேட்டு நிலங்கள் ஆரல் மீன்கள் பிறழும் வயல்காளாயின. பன்றிகள் தம்முடைய மருப்புகளால் நிலத்தைக் கிண்டிப் புழுதி ஆக்கியமையின் உழாமலேயே விதைவிதைக்கும் வயல்களாயின. கரும்புகள் நடப்பட்டுள்ள பாத்திகளில் இடையில் பூத்துள்ள நெய்தற்பூக்கள் பெரிய கண்களை உடைய எருமைப் கூட்டத்தைப் பிற இடத்திற்கு மேயச்செல்லாதவாறு தடுத்து நிறுத்தும் வயல்களாயின. இளைய மகளிர் கூடி ஒலிமிக்க துணங்கைக் கூத்து நடைபெறும் இடங்கள் வளைந்த தலைகளை உடைய முதிய பசுக்கள் மகளிர் தழையுடைகளினின்றும் உதிர்ந்த ஆம்பலை உண்ணுதற்குரிய இடங்களாயின. இவ்விடங்களில் தென்னைகள் தழைத்து வளர்ந்திருக்கும் பல்வேறு பறவைகள் வந்து தங்குவதற்கு ஏற்றார்ப்போல மருதமரங்கள் வளர்ந்திருக்கும். தண்ணீர் பாய்ச்சுவதற்குரிய வாய்க்கால்களைக் கொண்ட அழகிய பொய்கைகளும் உடைமையால், புலவர்களால் சிறப்பித்துப் பாடுதற்கமைந்த செல்வம் பொருந்திய நாடுகள் நின்னிடம் பகைமை கொண்டன.

மேற்கூறிய வளம்மிக்க நாடுகள் தம் அழகு அழியுமாறு அந்நாடுகளில் வாழும் மக்களுக்கு அச்சத்தைத் தோற்றுவித்து நீ வெகுண்டு படையெடுத்துச் சென்று அந்நாடுகளை முற்றுகை இட்டுத் தங்கினாய் கூற்றுவனால் கொல்லப்படுகின்ற உடம்பு பொலிவிழந்து தோன்றுமாறு போல, ஊர்கள் தம் நீர்மை அழிந்து பொலிவிழந்து

குறிப்பு

தோன்றின. மலா்ந்த பூக்களுடன் கூடிய கரும்பு விளையும் கழனிகள் புல்லென்று தோன்றின. முறுக்கியது போன்ற காய்களை உடைய விடத்தேரை மரங்களுடன் கரிய உடை மரங்களும் நெடிது வளா்ந்தோங்கி நின்றன. நுனி பிளந்த தலைமயிரினை உடைய பேய்மகள் திரியலாயினள் ஊா்மன்றங்களில் நெருஞ்சிக் கொடிகள் தோன்றிப் படரலாயின. நீறுபட்ட போா்க்களத்தின் புழுதிபடித்து பாழிடமாயின. ஆடுமாடுகளோ மக்களோ செல்லாது நீங்கினமையால் ஊா்மன்றங்கள் ஆரவாரம் இல்லா தொழிந்தன. அங்குச் செல்ல வேண்டிய அவசியம் இருந்து செல்லக் கருதுவோா் மன எழுச்சி கெட அச்சத்தால் உடல்கள் நடுங்கினா். அத்துணைப் பாழிடங்கள் ஆயின. அம்மன்றுகள் (ஆனால் சேரமன்னனால் பாதுகாக்கப்படும் நாடுகள் சிறந்து நின்றன).

பெருமானே, காடுகள் முனிவா்கள் விரும்பி வாழும் உறைவிடங்கள் ஆயின. முல்லை நிலங்கள் ஒள்ளிய அணிகலன்கள் அணிந்த மகளிரொடு மள்ளா்கள் விரும்பி வாழும் இடங்களாயின. அந்நாட்டிலுள்ள பெருவழிகள், வழிபறிப்போா் விலங்குகள் இவற்றால் ஏற்படும் இடையூறுகள் இன்று யாவரும் விரும்பிச் செல்லுதற்குரிய இடங்களாயின. இவை அல்லாமலும் எண்வகைக் கூலங்களையும் விற்கும் வணிகா்கள் குடியினைப் பேணிக் காத்து வருகின்றாய். குடிமக்களைப் பாதுகாக்கும் பெருங்குடி மக்களது குடும்பத்தைப் போக்குகின்றாய். நினது செங்கோல் ஆட்சிச் சிறப்பால் செவ்வாய் சென்ற இடத்தே சுக்கிரன் செல்லாமையால் நின்நாட்டு மக்கள் வேண்டும் புலங்களில் வேண்டுங் காலத்து மழை பொழிகின்றது. நினது குடிமக்கள் நோயும். பசியும் நீங்கி மகிழ்ந்து வாழ்கின்றனா். இவ்வாறாக நின்னால் காக்கப்படுகின்ற நாடு பொலிவு பெற்று விளங்குகின்றது.

சேரலாதனைப் பகைத்த நாடுகள் பாழிடங்கள் ஆயின.. பாதுகாக்கப் பெற்ற நாடுகள் பொலிவு பெற்று விளங்கின.

#### 4.6.3.1 பூத்த நெய்தல் பெயா்க்காரணம்

கரும்புநடு பாத்தியில் நீா் இடையறாது இருத்தலின் நெய்தல் தோன்றிற்று. நெய்தலிடத்துள்ள தேனின் மிகுதியால் மேயும் எருமைக் கூட்டத்தைப் பிற இடத்துக்குச் செல்லாதவாறு தடுத்தது. தடுத்து

அருகிலுள்ள கரும்பினைக் காக்கும் சிறப்பினைப் பாராட்டி இப்பாடலுக்குப் பூத்த நெய்தல் என்று பெயரிட்டனர்.

**தூக்கு**

ஆசிரிய அடிகளுக்கு இடையிடையே வஞ்சி அடிகளும் இடம் பெற்றமையின் செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் ஆயிற்று.

குறிப்பு

### 4.6.4 சான்றோர் மெய்ம்மறை

நிலம்நீர் வளிவிசும்பு என்ற நான்கின்
அளப்புஅரி யையே,
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை
போர்தலை மிகுந்த ஈர்ஐம் பதின்மாரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனைய கைவண் மையையே
அமர்கடந்து மலைந்த துமபைப் பகைவர்
போாபீடு அழித்தத செருப்புகல் முன்ப,
கூற்று வெகுண்டு வரினும் ஆற்றும் ஆற்றலையே
எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
வானுறை மகளிர் நலன் இகல் கொள்ளும்
வயங்கு இழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கு ஈர் ஓதிக் கொடுங்குழை கணவ,
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையேர் உழவ, பாடினி வேந்தே
இலங்குமணி மிடைந்த பொலன்கலத் திகிரித்
கடல்அக வரைப்பின் இப்பொழில் முழுது ஆண்டநின்
முன்திணை முதல்வர் போல நின்று நீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோஇவ் உலகமோடு உடனே (22)

**துறை** : **செந்துறைப் பாடாண்பாட்டு**

**வண்ணம்** : **ஒழுது வண்ணமும், சொற்சீர் வண்ணமும்**

**தூக்கு** : **செந்தூக்கு**

**பெயர்** : **சான்றோர் மெய்ம்மறை**

நிலம், நீர், காற்று, ஆகாயம் என்ற நான்கு பூதங்களையும் போல நீயும் நின் பெருமையால் அளந்து அறிய முடியாதவனாக உள்ளாய். விண்மீன்கள், கோள்கள், சந்திரன், சூரியன், மிக்க நெருப்பு ஆகிய இவ்வைந்தும் சேர்ந்தாற்போல போரெலாளியினை உடையாய்!

போர் செய்வதில் மிக்க மேம்பாடுற்ற நூற்றுவர்களுக்குப் போரில் துணை வலியாகும் நெறியில் இறுதிவரை உதவியாய் இருந்த அஞ்சாமை பொருந்திய ஆண்மையினை உடைய அக்குரனை ஒத்த பெருங்கொடைத் தன்மையை உடையாய், போரில் வஞ்சனை இன்றிப் பொருது நின்ற நின் தும்பைப் பகைவர் நின்னொடு பொருதற்கு வந்தனர். அவர்தம் போரினையும் பெருமையினையும் அழித்தொழித்து மேலும் போர் செய்தலை விரும்பி நின்றாய் கூற்றுவனே சினங்கொண்டு வந்தாலும் நீ அவனைப் புறக்கிட்டு ஓடச்செய்யும் ஆற்றல் உடையையாவாய் பகை மன்னர் எழுவரை வென்று அவர்தம் ஏழுமுடிப் பொன்னாற் செய்த ஆரம் அணிந்த திருமகள் விரும்பி உறையும், பரந்த மார்பினையும், வண்மை மிக்க பெரிய கையினையும் உடையவன் நீ. போர்புரியும் நின் வீரர்களுக்கு மாாபுக் கவசம் போன்றவனே!

விண்ணுலகத்து மகளிர் தம்முள் மாறுபட்டு மாறு கொள்வதற்குக் காரணமான மெய்ந்நலமும், விளங்குகின்ற தலையணிகளால் மறைப்புண்ட வண்டுமொய்க்கும் கூந்தலும், செவியிடத்தே வளைந்த குழையையும் உடையவள் ஆகிய தேவியின் கணவ, பலவாகிய யானைக் கூட்டத்தோடு வெல்லுகின்ற கொடிகள் உயர்ந்து அசையா நிற்கும் படையினைக் ஏராகக் கொண்டு, பகைவர்களது படையாகிய புலத்தை உழுகின்ற உழவனே. பாண்மகளின் பாட்டிற்கு மகிழ்ந்து வேண்டியன பரிசாக வழங்கும் வேந்தனே!

விளங்குகின்ற மணிகள் செறிந்த பொன்னாற் செய்யப்பட்ட கலன்களைப் பூண்டு அரசின் ஆணைச்சக்கரத்தைச் செலுத்தி கடல் சூழ்ந்த நிலவுலகத்தே நின் குலத்து முன்னோர்களைப் போன்று, நிலைபெற இருந்து இவ்வுலகின்கண், கெடாத நல்ல புகழை நிறுவி, அதனுடனே நீ மெலிவின்றி வாழ்வாயாக!

பாரதப் போரில் நூற்றுவர்களுக்குத் துணையாக இருந்தவன் கர்ணன். சிறந்த கொடையாளன். ஆனால் இப்பாடலில் அக்குரன்

போன்றவன் என்று சுட்டப்பெற்றனன். அக்குரன் போலும் கர்ணன் என்று நினைத்தற்கு இடம உண்டாயினும் ஆதாரம் இல்லை.

(அக்குரன் பாரதத்தில் கூறப்படுபவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாக விளங்குபவன்)

**குறிப்பு**

அறப்போர் செய்யும் வீரர்களைச் 'சான்றோர்' என்பது தமிழ் மரபு. அச்சான்றோர்களுக்குத் தலைவனாகவும் முன்னணி வீரனாகவும் சேரலாதன் நின்று பகைவர்களால் தம் படைகளுக்கு எவ்வித இடையூறும் வராமல் பாதுகாத்தமையின் "சான்றோர் மெய்ம்மறை" என்று சிறப்பித்துக் கூறப்பட்டனன்.

இப்பாடலில் இமயவரம்பின் நெடுஞ்சேரலாதனின் குணநலனும் ஆற்றலும் ஒருங்கு கூறி வாழ்த்தப்பட்டன.

### 4.6.5 நிரைய வெள்ளம்

யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத்து இறுத்து
முனைஎரி பரப்பிய துன்னருஞ் சீற்றமொடு
மழைதவழ்பு தலைஇய மதில்மரம் முருக்கி
நுரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்துஆடு கழங்குஅழி மன்மருங்கு அறுப்பக்
கொடிவிடு குரூ உப்புகை பிசிரக் கால்பொர
அழல் கவர் மருங்கின் உருவுஅறக் கெடுத்துத்
தொல்கவின் அழிந்த கண்ணகன் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீர்இவர்பு பரந்த நீர்அறு நிரை முதல்
சிவந்த காந்தள் முதல்சிதை மூதில்
புலவுவில் உழவில் புல்லாள் வழங்கும்
புல்இலை வைப்பின் புலம் சிதை அரம்பின்
அறியா மையான் மறந்து துப்பு எதிர்ந்தநின்
பகைவர் நாடும் கண்டுவந் திசினே
கடலவும் கல்லவும் ஆற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நல்நாட்டு
விழவு அறுபு அறியா முழவு இமிழ் மூதூர்க்
கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்

சீர்பெறு கலிமகிழ் இயம்பு முரசின்
வயவர் வேந்தே, பரிசிலர் வெறுக்கை
தார் அணிந்து எழிலிய தொடிசிதை மருப்பின்
போர்வல் யானைச் சேர லாத,
நீவாழி யர்இவ் உலகத் தோர்க்கும் என
உண்டுஉரை மாறிய மழலை நாவின்
மென்சொற் கலப்பையர் திருந்துதொடை வாழ்த்த
வெய்துறவு அறியாது நந்திய வாழ்க்கைச்
செய்த மேவல் அமர்ந்த சுற்றமோடு
ஒன்றுமொழிந்து இடங்கிய கொள்கை என்றும்
பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலின் நோய்இகந்து ஒரீஇய
யானர்நன் நாடும் கண்டுமதி மருண்டனென்
மண்ணுடை ஞாலத்து மன்உயிர்க்கு எஞ்சாது
ஈத்துதை தண்டாக் கைகடுந் துப்பின்
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர்கெடு விழவின்
நேடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்தருள் பண்புபல நயந்தே (40)

**குறிப்பு**

**துறை : செந்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : நிரைய வெள்ளம்**

**சேரலாதனே!**

நின் பகை நாட்டில் மேகங்கள் தவழும் மதில்களையும், அதனை அடுத்த காவற்காடுகளையும் அழித்து, வரிசையாகக் களிறுகள் செல்லும்; பகைவர்க்கு நிரைய பாலரைப் போலும் துன்பத்தைத் தரும்நின் படை வெள்ளமானது (நிரையம் - நரகம், நரகத்து வாழ்வார்) நாற்றிசையும் பரந்து சென்று சேரும்; தாம் கழங்கு ஆடி உள்ளம் சோர்ந்து,

அகநகர்க்கண்ணே மடிந்துறையும் பகை மன்னருடைய சுற்றமாகிய படைகளை அழிக்கும்; நீயோ பகைவர் நாடடில் அழிக்கக் கருதிய ஓர் யாண்டு அளவும் தங்கி, போர்முனைப்பட்ட ஊர்களில் தீப்பரவக் கொளுத்தி உருத்தெரியாதபடி, அழித்தனை; நின்னால் கொடுக்கப்பட்ட அவ்வூர்களில் நெருங்குதற்கரிய சீற்றமொடு காற்று மோதுதலால். கொடி விட்டு எழும் நிறமுடைய புகை, பிசிராக உடைந்து கெடும். தீப்பட்டு வெந்தழிந்த இடங்களைத் தம் உருக்குலைய நீ அழித்தலால் முன்னையிருந்த அழகிய நிலை இழந்து தோற்றமளிக்கும்.

தொல்கவின் அழிந்த இடம் அகன்ற ஊர்களில் வெள்ளிய பூக்களை உடைய வேளைக் கொடியும் பசிய சுரைக் கொடியும் செழித்து வளர. பீர்க்கங்கொடி ஏறிப்படர்ந்த பழைய வீடுகள் பலவாகும். நீர் அற்ற உழுகால்களில் வேரொடு காய்ந்து அழிந்து சிவந்த காந்தள் நிறைந்து கிடக்கும்; புலால் நாற்றம் வீசும் வில்லேந்தி, உயிர்க்கொலை செய்யும் இழிந்தோர் உறையும் பனையோலை வேய்ந்த பாழ்வீடுகளே உள்ள ஊர்களை உடையநின் பகைவரின் நாடுகள் பல கண்டு வந்தேன். பகைப் புலங்களை அழிக்கும் நின் மறமாண்பினைத் தம் அறியாமையாலே மறந்து நின்னை எதிர்த்துத் தம் நாடுகளை இழந்தனர். அத்தகைய நாடுகள் பலவும் கண்டுவந்தேன்.

கடலில் உண்டாகும் பொருள்களும், மலைப் பொருள்களும், ஆறுபாயும் முல்லை நிலத்தும். மருத நிலத்தும் தோன்றிய பொருள்களும் பிறவும் ஆகிய பற்பல வளங்கள் பொருந்திய இடங்களை உடையது நின்நாடு. அகன்ற நல்ல நாட்டில் இடையறாதவாறு திருவிழாக்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். முழவு முழங்கும் மூதூர்களில் பலவகைப்பட்ட கொடிகளின் நிழலே இருக்கும். பொன்னை மிகவும் உடைய கடை வீதிகளிலே சிறப்புப் பெற்ற வெற்றியும் கொடையும் தெரிவிக்கும் முரசு முழங்கும். வளமிக்க வீரர்களின் வேந்தே, பரிசிலர்களின் செல்வமாக இருப்பவனே, மாலை அணிந்தமையால் அழகுற்று விளங்குவதும், பகைவர் மதிலைக் குத்திப் பூண் சிதைந்த கொம்புகளை உடையதும் பேரில் வல்லமை உடையதும் ஆகிய யானைப் படைகளை உடைய சேரலாதனே,

கள் உண்டமையால் சொல்குழறப் பெற்ற நாவினையும், மென்மையான சொற்களையும் யாழ் முதலிய இசைக் கருவிகள் கட்டப் பெற்ற

பையினையும் உடைய பாணர், விறலியர் முதலியோர் யாழினை இசைத்தலோடு இவ்வுலக மக்கள் நன்மை பெறும் பொருட்டு நீ வாழ்வாயாக என்று வாழ்த்தினர்.

துன்பத்தைச் சிறிதும் அறியாது செல்வம் முதலியவற்றால் பல நலமும் பெருகிய வாழ்க்கையினையும் உண்மையே உரைத்து புலனைந்தும் அடங்கப் பெற்ற கோட்பாட்டினையும் தாம் வாழும் ஊரிலிருந்து எக்காலத்தும் நீங்காமல் இன்பம் நுகரும் தன்மையினையும், நரகம் அடையா வகையில் நல்வினையே செய்யும் வேட்கையினையும் உடைய உயர்ந்தோர் தாம் செய்யும் நல்லறங்களையே விரும்பிச் செய்யும் சுற்றத்தாரோடு விரும்பி வாழும் நாடு, பலரும் புகழும் பண்பினை உடைய நீ காத்தோம்புகின்றாய் ஆதலின் நோய் முதலிய துன்பங்கள் நீங்கப் பெற்றுள்ளது. அவர்கள் வாழும் புதிய வருவாயினை உடைய ஊர்களைக் கண்டு மதி மயங்கினேன்.

மண்ணுலகத்தில் வாழும் நிலைபெற்ற உயிர்களுக்குக் குறைவறக் கொடுத்து, கை ஓய்தல் இல்லாத கொடையும் மிக்க வன்மையும் உடையோய், அறிவு ஒழுக்கங்களால் உயர்ந்த குடிகட்கு பெரிய நல்கி, பெருமையுடைய பொருள்களை வழங்கி இன்பம் தரும் சிறப்போடு பொருந்திய திருமாலைப் போன்ற நல்ல புகழ்குன்றாத வலியினை உடைய வீர, நின் பண்புகள் பலவற்றையும் காணவேண்டும் என்று விரும்பிய விருப்பத்தினால், நின் பகைவர் நாடுகளையும் நீ காத்து வரும் நாடுகளையும் கண்டு மதி மருண்டேன்.

#### 4.6.5.1 நிறைய வெள்ளம் பெயர்க்காரணம்

இப்பாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் யானைப்படை சிறப்பிக்கப்பட்டுள்ளது. அவனது களிறுகள் எண்ணிறந்தவனாய் நிரை நிரையாக வெள்ளம் போல பரந்து செல்லக்கூடியது. பகைவர்கட்கு நரகத்தைப் போன்று துன்பம் செய்யக் கூடியது. இதனால் நிரைய வெள்ளம் என்னும் பெயர் பெற்றது.

இப்பாடலில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வெற்றிச் சிறப்பும், நாடுகாத்தற் சிறப்பும் உடன் கூறப்பட்டன.

#### 4.6.6 துயிலின் பாயல்

கோடுஉறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி

நாடுகண்டு அன்ன கணைதுஞ்சு விலங்கல்
துஞ்சுமரக் குழா அந் துவன்றிப் புனிற்றுமகள்
பூணா ஐயவி தூக்கிய மதில
நல்எழில் நெடும்புதவு முருக்கிக் கொல்லும்
ஏனம் ஆகிய நுனைமுரி மருப்பின்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரம்கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நிடினை யாகலின் காண்குவந் திசினே
ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்நகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கின்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்
பாயல் உய்யுமோ தோன்றல் தாவின்று
திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்கு கதிர் வயிரமொடு உறழ்ந்து பூண்சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்
புரையோர் உண்கண் துயிலின் பாயல்
பாலும் கொளாலும் வல்லொய் நின்
சாயல் மார்பு நனி அலைத் தன்றே

குறிப்பு

**துறை : செந்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : துயிலின் பாயல்**

**சேரலாதனே!**

பகைவர் நாட்டின்கண் மலையுள்ள இடங்களில் அம்மலைதானே மதிலாகவும், மலை இல்லாத இடங்களில் மதிலே அரணாகவும் இவ்வாறு மலையொடு மாறாட அடுத்த இடத்தை உடைய புறமதில் இருந்தது. அகன்ற நாட்டை கண்ட போன்ற பரந்த இடத்தினை அகத்தே கொண்ட அம்புக்கட்டுகள் கொண்ட இடைமதிலும் இருந்தது.

மதிற்கதவின் பின்புறத்தே கணைய மரங்கள் செறிந்திருப்பதும் இளைய மகள் அரைத்துப் பூசிக்கொள்ளும் ஐயவியாகிய வெண்சிறு கடுகு அல்லாத, ஐயவித் துலாம் என்னும் மரங்கள்

தொங்கவிடப்பட்டிருப்பதும் ஆகிய இடத்தை உடைய அகமதில் இருந்தது. இம்மூன்று மதில்களுள் அகமதிலின் கண் உள்ள அழகிய நெடிய கதவுகளை உடைத்து அழித்தனால் நுனிமுறிந்து ஒடியப் பெற்ற கொம்புகளை உடைய இளைய யானைகள் பன்றிகளைப் போன்று தோற்றமளித்தன. மதம் சொரிந்து மிக்க சினம் கொண்டு பகைவருடைய கணைய மரம், காவல்மரம் ஆகியவற்றை அழித்தன. இளங்களிறுகள் பிளிறும் பாசறைக் கண்ணே நீ நெடிது தங்கிவிட்டாய் ஆதலின் நின்னைக் காண்டற்கு இங்கு வந்தேன்.

நின்மனைவி அறக்கற்பினை உடையவள். அடக்கம் பொருந்திய மென்மைத்தன்னை படைத்தவள் ஊடற்காலத்தினும் இன்மொழியே பகரும் இனிய புன் சிரிப்பினை உதிர்க்கும் இயல்பினள். அமுதம் நிரம்பிய வாயினையும் விரும்பத்தக்க கண்களையும், ஒளி விளங்கும். நெற்றியினையும், அசைந்த நடையினையும் உடையவள். இத்தகைய இயல்புகளை இயல்புகளை உடைய நின் மனைவி நின் பிரிவை எண்ணி, நின்னை வருந்துதற்கும் உரியளாவள்.

**சேரர் குடித்தோன்றலே!**

அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற ஒளிவீசுகின்ற பசிய பொன்னாலாகிய நினது அணிகலன்கள் விளங்குகின்ற கதிர்களை உடைய வயிரமணிகளுடன் மாறுபட்டு ஒளிவிட்டு விளங்குகின்றன. அரசர் எழுவர் முடிப்பொன்னால் செய்யப் பெற்ற ஆரம் அணிந்து திருவீற்றிருந்த விரிந்த மார்பு கற்பால் உயர்ந்த நின்காதல் மகளிர் மைதீட்டிய கண்கள் உறங்குவதற்கு இனிதாகிய பாயலிடத்தை (பாயல் - படுக்கை) நீ போருக்குச் செல்லுங்கால் நீக்குதலும், மனைவியின் இருக்குங்கால் நீக்காது கோடலும் வல்லவன். நினது மென்மை அமைந்த மார்பு அவளது உள்ளத்தை வருத்துகின்றதாதலால் படுக்கைக்கண் கிடந்து வருந்தும் வருத்தத்தினின்றும் உய்யாளாதலால், விரைந்து சென்று அவளை அடைக. விரைந்து சென்று அவளைக் காப்பாற்றுக.

இப்பாடல் புறப்பாடல், புறப்பாடலில் அகத்திணைக் கூறுகள் பேசப்படுகின்றன. வினை முடித்து இன்ன பருவத்தே எனச் சொல்லிச் சென்ற தலைவன், குறித்த பருவம் வந்த பின்னும் இல்லத்திற்குத் திரும்பாது பாசறையின்கண் தங்கியிருந்தனன்.

இங்ஙனம் பாசறைக்கண் தங்கியிருந்த சேரலாதன் பால் மாதேவியிடமிருந்து தூது சென்றோன் கூற்றாக அமைந்தது இப்பாடல்.

### 4.6.6.1 துயிலின் பாயல் பெயர்க்காரணம்

உரிமைக்குலமகளிர் தம் கணவரது விரிந்த மார்பில் கிடநது உறங்குவதைப் பெரிதும் விரும்புவர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது மார்பை மகளிர்க்குப் பாயல் எனச் சிறப்பித்தமையான் இதற்குத் துயிலின் பாயல் என்று பெயராயிற்று.

இதனால் சேரலாதனின் வெற்றிச் சிறப்பும் குலமகளிரோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும் கூறப்பட்டன.

### 4.6.7 வலம்படு வியன்பனை

புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே
பெரிய தப்புநர் ஆயினும் பகைவர்
பணிந்துஇறை பகரக் கொள்ளுநை ஆதலின்
துளங்குபிசிர் உடைய மாக்கடல் நீக்கிக்
கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன்பணை
ஆடுநர் பெயர்ந்துவந்து அரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோள் இயவர்
அரணங் காணாது மாதிரம் துழைஇய
நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகஇந் நிழல் என
ஞாயிறு புகன்ற தீது தீர் சிறப்பின்
அமிழ்துதினழ் கருவிய கணமழை தலைஇக்
கடுங்கால் கொட்கும் நன்பெரும் பரப்பின்
விசும்புதோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மார்ப பாடினி வேந்தே (14)

**துறை : செந்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : வலம்படு வியன்பணை**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அலைகின்ற அலைகள் சிறுசிறு திவலைகளாக உடையுமாறு, கரிய கடலைக் கடந்து சென்று, அங்குள்ள பகைவரது காவல் மரமாகிய கடம்பினை வெட்டி வீழ்த்தினை அவ்வாறு

குறிப்பு

வெட்டி வீழ்திய கடம்ப மரத்தினால் வெற்றி பொருந்திய சிறந்த முரசினைச் செய்தான், பகைவரை வெல்லும் போர் முரசம் இருக்கும் இடத்திற்கு வீரர்கள் திரும்பப் போந்து அரிய பலியினை இட்டுப் பரவினர். பின்னர் குறுந்தடியினைக் கொண்டு அம்முரசின் கண்ணில் அறைந்து ஒலிக்கச் செய்தனர். தொடியணிந்த தோளை உடைய வீரர்கள்.

ஞாயிறு பகையாகிய இருளைக் கெடுப்பதற்கு விரும்பிச் செல்லும். குற்றமில்லாத சிறப்பினையும், நீர் மிகுதியாகக் கொண்டு திரண்டு எழுகின்ற மேகக் கூட்டங்கள் பரவுமாறு மிக்க காற்று வீசுகின்ற பரந்த இடத்தினை உடைய வானளாவி நிழல் செய்யும் நின் வெண்கொற்றக் குடையைச் சுற்றிப் பாதுகாப்பான இடம் ஒன்றையும் காணாது அது குறித்துத் திக்கனைத்தும் தேடி அலையும், விரிந்த இடத்தை உடைய பசுமையான நிலத்து வாழும் மக்கள் எல்லாம் இக்குடை நிழற்கண்ணே வருவார்களாக என்று சொல்லிப் பரவுதற்கு ஏதவாகிய பசியபூண் அணிந்த மார்பினை உடையோய், பாடினிக்கு அவள் வரிசையறிந்து சிறப்பிக்கும் அரசே, நின்னுடைய பகைவர்கள் பொறுத்தற்கரிய பெரும்பிழை செய்தாராயினும், அப்பிழையினை நினைந்து வருந்தி நின்பால் அடைந்து பணிந்து வணங்கித் திறை செலுத்துவாராயின், நீ அவர்களுடைய குற்றங்களை எல்லாம் பொறுத்து, அவர் செலுத்தும் அத்திறையினை ஏற்று அருளுகின்றாய், ஆதலின் நின் அருளுக்கு ஒப்பானது ஒன்றை ஆராய்ந்து காணலுறின் உயர்வும் ஒப்பும் உடையது ஒன்றும் இல்லை என்பதாம்.

#### 4.6.7.1 வலம்படு வியன்பனை பெயர்க்காரணம்

இப்பாடலில் பனை என்பது முரசம், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தனது முரசம் போர் செய்து வருந்தாமல் பகைவர்கள் அஞ்சி நடுங்குமாறு, புறமுதுகிட்டு ஓடுமாறு முழங்கி, அவனுக்கு வெற்றி ஏற்படுமாறு செய்தமையால் 'வலம்படு வியன்பணை' என்று குறிப்பிடப்பட்டது.

### 4.6.8 கூந்தல் விறலியர்

உண்மின் கண்ணே, அடுமின் சோறே
எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கை
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப

குறிப்பு

இருள்வணர் ஒலிவரும் புரி அவிழ் ஐம்பால்
ஏந்துகோட்டு அல்கும் முகிழ்நகை மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே
பெற்றது உதவுமின் தப்பின்று பின்னும்
மன்உயிர் அழிய யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவுஎதிர் கொண்ட
தண்இயல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குப தாயினும்
சேர லாதன் பொய்யலன் நசையே (12)

**துறை : இயன்பொழி வாழ்த்து**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : கூந்தல் விறலியர்**

கள்ளைப் பருகுங்கள், உணவைச் சமையுங்கள், உண்ணுதற்குரிய ஊன்கறியை அறுப்பிராக. புழுக்குதற்குரிய கறி வகைகளை உலையில் ஏற்றுவீர்களாக; இருண்டு கடை குழன்று தழைத்து முழ அவிழ்ந்து ஐவகையாய் முடிக்கப்படும் கூந்தலையும் உயர்ந்த பக்கத்தினை உடைய அல்குலையும் முல்லை தகுதியினை உடைய விறலிகளே,

நீங்கள் அணிந்துள்ள பொன்னாலாகிய அணிகலன்கள் ஒலிக்குமாறு, வருகின்ற மக்களுக்கு இல்லை என்று கூறாதபடி உண்டற்குரியவற்றைப் பெருகச் சமைப்பீர்களாக;

கள்ளும் சோறும் ஊனுமேயன்றி இமயவரம்பனிடம் பெற்ற செல்வத்தையும் வந்தடைந்தோர்க்குச் கொடுத்து உதவுங்கள். அவ்வாறு செய்வதால் குறைவொன்றும் இல்லையாம் மண் திணிந்த நிலவுலகத்தைக் காப்பதை மழை பெய்தலைத் தலைப்படாது மாறி, நிலை பெற்ற உயிர்கள் நீர் இன்மையால் அழிவெய்துமாறு பல ஆண்டுகள் காறும் வருத்தி, மழையைப் பெய்யாது பொய்த்தாலும், இமயவரம்பன் சேரலாதன், பின்னும் நீங்கள் அவன்பாற் செல்லின் உங்கள் விருப்பம் பழுதாகாவாறு வேண்டியவற்றை நிரம்ப நல்குவன். விரும்பிய பரிசுப் பொருளைத் தருதலிற் பொய்த்தல் செய்யான்.



**4.6.8.1துறை விளக்கம்**

**இயன்மொழி வாழ்த்து**

சேரலாதனின் இயல்புகளும் ஒன்றான கொடையைச் சிறப்பித்துக் கூறிய காரணத்தால் இது இயன்மொழி வாழ்த்து என்று கூறப்பட்டது.

**4.6.8.2 கூந்தல் விறலியர் பெயர்காரணம்**

கூந்தல் விறலியர் என்போர் ஆடல் பாடல்களான நொடுஞ்சேரலாதனிடம் பரிசில் பெற்ற மகளிர். கூந்தல் விறலியர் பரிசுக்கு உரியவரே அன்றி சமைத்தற்கு உரியர் அல்லர். ஆயினும் வந்தவர்களுக்கு உணவு மிக வேண்டியிருப்பதனால் கூந்தல் விறலியரையும் சமைக்க அழைத்தனர். இச்சிறப்புக் கருதி கூந்தல் விரலியர் என்று இப்பாடல் பாடப் பெயர்பெற்றது.

இப்பாடலில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் கொடைச்சிறப்பும் கூறப்பட்டது.

**4.6.9 வளனறு பைதிரம்**

கொள்ளை வல்சிக் கவர்கால் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்துசுரன் அனுப்ப
ஒண்பொறிக்கழற்கால் மாறா வயர்
திண்பிணி எஃகம் புலிஉறை கழிப்பச்
செங்களம் விருப்பொடு கூலம் முற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச
வம்புகளைவு அறியாச் சுற்றமோடு அம்பு தெரிந்து
அவ்வினை மேவலை யாகலின்
எல்லு நனி இருந்து எல்லிப் பெற்ற
அரிதுபெறு பாயல் சிறுமதி ழானும்
கனவினுள் உறையும் பெருஞ்சால்பு ஒடுங்கிய
நாணுமலி யாக்கை வாணுதல் அரிவைக்கும்
யார்கொல் அளியை.
இனந்தோடு அகல ஊர்உடன் எழுந்து
நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்து நீ
வாழ்தல் ஈயா வளனறு பைதிரம்

அன்ன வாயின பழனம் தோறும்
அழல்மலி தாமரை ஆம்பலொடு மலா்ந்து
நெல்லின் செறுவின் நெய்தல் பூப்ப
அரிநா் கொய்வாள் மடங்க அறைநா்
தீம்பிழீ எந்திரம் பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்றோா் காலை
நல்லமன் அளிய தாம் எனச் சொல்லிக்
காணுநா் கைபுடத்து இரங்க
மாணா மாட்சிய மாண்டன பலவே (27)

**துறை : பரிசில்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணமும் சொற்சீா் வண்ணமும்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயா் : வளனறு பைதிரம்**

பகைப்புலத்தே சூறையாடுதலினாற் பெற்ற உணவையும் பகைமேற் செல்ல விரும்பும் கால்களையும் உடையவா் கூலிப்படையினா். அவா்கள் தம் படைவீரா்கள் செல்வதற்காகக் கற்கள் பொருந்திய நெடுவழிகளை வெட்டி சுரத்தில் அகன்ற வழிகளை அமைத்தனா். அவ்வழியே ஒள்ளிய பொறிகளை உடைய கழலணிந்த அடி முன் வைத்து பின்னே பெயா்த்து அறியாத போா்மறவா் பகை நாடு நோக்கிய வீரநடையினா். திண்ணிய தாய்க்கம்பொடு செறிக்கப்பட்ட வாட்படையைப் புலித்தோலால் செய்யப் பெற்ற உறையினின்றும் நீக்கி வினைக்குரியவாகச் செம்மை செய்தனா். சிவந்த போா்க்களத்தே செல்லும் விருப்பத்தால் கூலங்களுள் ஒன்றாகிய நிறம் நிரம்பிய செந்திணையைக் குருதியொடு கலந்து தூவிப்பலியிட்டு நீராடி வாா்க்கட்டு அமைந்த முரசத்தின் கண்ணில் குருதி பூசி வலக்கையில் ஏந்தி இருக்கும் குறுந்தடி கொண்டு முரசு முழங்கும் வீரா் தொடியணிந்த தம் தோளோச்சி அம்முரசினை முழக்குகின்றனா்.

நீயோ, கைச்சரடுகளை நீக்குதல் அறியாத போா் வீரருடன் அம்புகளை ஆராய்ந்து செய்து போா்த் தொழிலிலேயே பெருவிருப்பு உடையனாய் இருக்கின்றாய். நீ அவ்வாறு போா்வினை கருதிப்

பாசறையிலேயே தங்கி இருத்தலால் பகலில் நின் பிரிவை எண்ணி ஆற்றி இருந்து இரவின்கண் அரிதாகப் பெறுகின்ற கனவின்கண் தான் உற்ற சிறு மகிழ்ச்சியே ஏதுவாகப் பெறுகின்றாள். அம்மகிழ்ச்சியே அவள் உயிர் உடலில் இருந்து பிரியாமல் இருப்பதற்குக் காரணமாகவும் அமைகின்றது. உடல் சுருங்கியதால் எழும் அலரால் நாணம் நிறைந்த உடம்பும் ஒளி பொருந்திய நெற்றியும் உடைய அரியவையாகிய நின் மனைவியைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் போர் வினைமீது மேவிய உண்மை உடையனாய் இருக்கின்றாய், நீ யாராயினை. நீ அளிக்கத்தக்காய்.

நின்படையெடுப்பால் பகைநாட்டு ஊர்மக்கள் எல்லாம் அச்சம் கொண்டு கூட்டமாய்த் திரண்டெழுந்து பலதிசைகளிலும் ஓடி ஒளிகின்றனர். அவர்களால் பாதுகாக்கப்பெறும் ஆநிரைகள் தொகுதி தொகுதியாய் வேறு வேறு திசைகளில் பரந்து ஓடுகின்றன. உழுகலப்பை முதலியவற்றை அவர்கள் எறிந்துவிட்டமையின் விளைநிலங்கள் வளம் குன்றிக் கெட்டழிகின்றன. ஊரில் தங்கி இருந்து வாழ்வதற்குரிய வாய்ப்பினை நீ நின்போர் வினையால் நல்காமையின், வளப்பம் அழிந்த நின் பகைவர் நாடுகள் அவ்வியல்பினை அடைவனவாயின.

நின் படையெடுப்பிற்கு முன் பகைவர் நாடுகளின் பழனந்தோறும் நெருப்புப் போன்ற தாமரையும் ஆம்பலும் நெருங்கி மலர்ந்திருந்தன. நெல் விளையும் வயல்களில் பூத்திருந்த நெய்தல் மலர்கள் விளைந்த நெல்லை அரியும் இடத்துத் தொழுவரது அரிவாளின் வாயினை மடங்கச் செய்தன. கரும்பு வெட்டுவோருடைய அதனை ஆட்டிச் சாறுபிழியும் எந்திரம், கருப்பஞ்சாறு விழும் கூன்வாய் வளையவும் கருப்பஞ்சாற்றினைப் பிழிந்து கொண்டே இருந்தன. நின் படைஎடுப்பிற்குப் பின் இவ்வாறு ஆகிவிட்டன என்று வாயாற் சொல்லி காண்போர் கைகொட்டிப் பிசைந்து வருந்த பலவகையாலும் மாட்சிமை உற்றிருந்த இந்நாடுகள் கெட்டழியும் தன்மையை உடையவாயின.

பகைவர் நாடுகளின் நிலைமை, படையெடுப்பிற்குப் பின் எத்தன்மையன என்பது அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

### 4.6.9.1 வளனறு பைதிறம் பெயர்க்காரணம்

வளனறு பைதிரம் என்பதற்கு வளன் அற்ற நிலம் என்பது பொருள். இப்பாட்டில் பகைவர் நாட்டின் நிலை கூறப்படுகிறது. முன்னர்ப்

பலவளத்தாலும் மாட்சினை உற்றிருந்த பகைவர் நாடு இன்று அம்மாட்சிமை அழிந்து காணப்பெறுகிறது. இச்சிறப்புக் கருதி இப்பாடல் வளனறு பைதிரம் என்று பெயர் பெற்றது.

#### 4.6.9.2 துறை விளக்கம்: பரிசில்துறைப் பாடாண்பாட்டு

பாசறையிடத்து, தேவியின் பிரிவாற்றாமையை எடுத்துக் கூறி, இனி அவள்பாற் சென்று அடைதலே வேண்டுவது என்ற கருத்துப்பட இப்பாடல் விளங்குவதால் பாரிசில் துறையாய் விளங்குகிறது.

இதனாற் சொல்லியது அவன் வெற்றிச் சிறப்பும் குலமகனோடு இன்பம் துய்த்த சிறப்பும் உடன் கூறப்பட்டன.

### 4.6.10 அட்டுமலர் மார்பன்

நும்கோ யார்? என வினவின் எம்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கூம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்க அவன் கண்ணி
வாய்ப்புஅறி யலனே வெயில்துகள் அனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய விளையே
கண்ணின் உவந்து நெஞ்சு அவிழ்பு அறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்புஅறி யலனே
கனவினும் ஒன்னார் தேய ஓங்கிநடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி இரட்டும்
கடாஅ யானைக் கணநிரை அலற
வியல்இருபரப்பின் மாநிலங் கடந்து
புலவர் ஏத்த ஓங்குபுகழ் நிறீஇ
வரிஉளை மாவும் களிறும் தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதில் நிலைஞாயில்
அம்புடை ஆர்எயில் உள்அழித்து உண்ட
அடாஅ அடுபகை அட்டுமலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவர் ஆயினும்

பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்
கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்உயிர் அழிய ஆண்டுவல மாறித்
தண்ணிய எழிலி தலையாது ஆயினும்
வயிறுமாசு இலீயர் அவன் ஈன்ற தாயே (27)

**துறை : இயன்மொழி வாழ்த்து**

**வண்ணம் : ஒழுகு வண்ணமும், சொற்சீர் வண்ணமும்**

**தூக்கு : செந்தூக்கும், வஞ்சித்தூக்கும்**

**பெயர் : அட்டுமலர் மார்பன்**

நும் தலைவன் யார் என்று வினவுவீராயின் அவன் எங்கட்கு இறைவன் என்று கூறுவோம். கரிய கடலின் நடுவில் உள்ள தீவில் வாழ்ந்த பகைவர்களை அழித்தல் வேண்டி அவர் வாழ்ந்த தீவுக்குச் சென்று, அவர்தம் காவல் மரமாகிய கடம்பினை அடியோடு வெட்டிவீழ்த்தி அவரையும் வென்றழித்த மிக்க சினமும், மெய்வன்மையும் உடைய நெடுஞ்சேரலாதன் ஆவான். அவன் சூடிய கண்ணி வாழ்வதாக.

மாற்றார் புலத்தே, தனக்கு மாறாகத் திட்டம் இட்டுச் செய்யும் பகைவினைகள் யாவும் அவர்களுக்குச் சிறிதும் பயன்தராத வண்ணம் வெயிலிடத்தே காணப்படும் மிகச்சிறிய அணுவனவும் பயன்தராத வண்ணம் அவற்றைச் சிதைக்கும் ஆற்றலுடையவன் சேரலாதன் தன் கண்ணெதிரே நட்புடையோர் போல நடித்து தம் நெஞ்சு மலர்ந்து அன்பு செய்யாத உட்பகை கொண்ட பகைவரிடத்தேயும் கனவின் கண்ணும் பொய் கூறுதலை அறியான். பகைவர்கள் அவன் பெருமித நடைகண்டு அஞ்சி உள்ளம் குலைய பகைநாட்டின் மீது படையெடுத்துச் செல்வான்.

வடித்த ஓசையினைச் செய்யும் மணி ஒலிக்கும் மதத்தை உடைய கூட்டமாகிய யானைப்படை ஆற்றாது பிளிறிக் கொண்டு ஓடும் வண்ணம், அகன்ற பெரிய பரப்பினை உடைய பகைவர் நாடுகளை வெற்றி கொள்வான். தன்னைப் பாடி வரும் புலவர்க்கு அவர்கள் வேண்டுவன நல்கி ஓங்கிய புகழை நிலை நாட்டுவான். விரியர் கண்ணுளார் என்னும் இருவகைக் கூத்தர்க்கும் தனக்கென்று வைத்துக்கொள்ளாது விரிந்து தலையாட்டம் அமைந்த குதிரைகளையும் களிறுகளையும், தேர்களையும் வாரி வழங்குவான்.

காவற்காடும், ஆழ்ந்த கிடங்கும், நெடிய மதிலும் நிலைபெற்ற ஞாயிலும்,

அம்புக்கட்டும் உடைய கடத்தற்கரிய அகமதில் உடைய அகநகரை அழித்து எரியூட்டுவான். அங்ஙனம் எரியூட்டுவதால் எழும் சுடுபுகை படிந்த பகைவரை அட்ட செருக்கினால் விரிந்த மார்பினை உடையவன் சேரலாதன்.

எம்மைச் சார்ந்தவர்களாகிய பாணர்க்கும் கூத்தர், பொருநர் முதலிய பிறர்க்கும் தன்னிடம் பரிசில் வேண்டிவரும் எவர்க்கும் தாம் பரிசில் பெறற்குரிய வல்லைமை அற்றவராயினும் எல்லோர்க்கும் கொடுப்பதைத் தம் கடமையாகக் கொண்டவன் எம் தலைவன். அவன் செம்மை திறம்பாத நெஞ்சினை உடையவன். நிலைபெற்ற உயிர்கள் அனைத்தும் அழியுமாறு குளிர்ந்து இயல்பினை உடைய மேகம் பல்லாண்டுகள் பெய்து குளிர்ப்பிக்கும் செயலின் நீங்கி மழையினைப் பெய்யாது ஒழியுமாயினும், தன்னை அடைந்தார்க்கு வயிற்றில் பசித்தீ எழுமாறு குறைபடக் கொடுத்தல் இலன்; பசித்தீ தலைகாட்டாதவாறு அடங்கும் வண்ணம் நிரம்பக் கொடுக்கும் இயல்பினை உடையவனாதலால் அவனைப் பெற்றதாய் வயிறு குற்றமின்றி விளங்குவாளாக.

சேரலாதனாற் சிறப்புப் பெற்ற பாணன் ஒருவன் எதிரே வந்த பாணன் ஒருவனுக்கு சேரலாதனின் பெருமையைக் கூறி வாழ்த்தியதாக அமைந்தது இப்பாடல்.

#### 4.10.1.1அட்டு மலர் மார்பன் பெயர்க்காரணம்

சேரலாதனின் வலிய மார்பின் சிறப்புக் கூறப்பட்டது. பகைவரது நகரை எரிப்பதனால் எழும்புகை அவனது மார்பிலே பரவ முன்னின்று வினையாற்றுகின்றான். பகைவர்களைக் கொன்று அச்செருக்கினாலே அகன்ற மார்பை உடையவன் என்ற பொருளில் அட்டுமலர் மார்பன் என்னு குறிப்பிடப்படுகின்றான். இப்பாடலில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரச்சிறப்பும், கொடைச்சிறப்பும் ஒருங்கு கூறி வாழ்த்தியவாறாக அமைந்தது.

### 4.7 தொகுத்துக் காண்போம்



- பதிற்றுப்பத்து நூல் அமைப்பு பற்றி அறிந்து கொண்டீர்கள்

- பாடிய புலவர்களைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள்
- பண்டைக் கால மன்னர்களின் வீரத்தைப் பற்றி புலவர்களின் வாயிலாக விளங்கிக் கொள்டீர்கள்



குறிப்பு

### 4.8 சோதித்தறியும் வினாக்கள்

1. பதிற்றுப்பத்து பற்றிக் குறிப்பு வரைக

………………………………………………………………………………
………………………………………………………………………………
……………………………………………………

2. போரில் ஈடுபட்ட குதிரையின் நிலையைக் கூறுக

………………………………………………………………………………
………………………………………………………………………………
……………………………………………………

3. யானை மறம் பற்றி விளக்குக

………………………………………………………………………………
………………………………………………………………………………
……………………………………………………

4. இயன்மொழி வாழ்த்து என்றால் என்ன?

………………………………………………………………………………
………………………………………………………………………………
……………………………………………………

5. பாடாண் திணை பற்றிக் குறிப்பு வரைக

………………………………………………………………………………
………………………………………………………………………………
…………………………………………………..

### 4.9 பயிற்சி வினாக்கள்

1. குமட்டூர் கண்ணனாரின் பாடல் திறத்தைப் புலப்படுத்துக
2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரத்தைப் புலவர் வழி நின்று கட்டுரைக்க

### 4.10 மேலும் படித்தறிக

1. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து மூலமும் தெளிவுரையும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1950



## கூறு -5

## நல்லந்துவனார் - கலித்தொகை –

## நெய்தற்கலி முதல் 5 பாடல்கள்


5. பாட அமைப்பு

5.1 அறிமுகம்

5.2 குறிக்கோள்கள்

5.3 நெய்தல் திணை விளக்கம்

5.4 நெய்தற்கலி: 118

    5.4.1 கூற்று விளக்கம்

5.5 நெய்தற்கலி: 119

    5.5.1 கூற்று விளக்கம்

5.6 நெய்தற்கலி: 120

    5.6.1 கூற்று விளக்கம்

5.7 நெய்தற்கலி: 121

    5.7.1 கூற்று விளக்கம்

    5.7.2 உள்ளுறை

5.8 நெய்தற்கலி: 122

    5.8.1 கூற்று விளக்கம்

5.9 தொகுத்துக்காண்போம்

5.10 சோதித்தறியும் வினாக்கள்

5.11 பயிற்சி வினாக்கள்

5.12 மேலும் படித்தறிக


### 5.1 அறிமுகம்

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகை பின்னர் தொகுக்கப்பட்டதாகும். இது ஐந்திணை அமைப்பில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு புலவர்களும் ஒவ்வொரு திணையைப் பாடியுள்ளனர். இதனை,

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி

குறிப்பு

மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத்திரன் முல்லை நல்லந்துவன் நெய்தல்
கல்வி வலார் கண்ட கலி

என்ற வெண்பாப் பாடல் விளக்கும். நெய்தல்கலிப் பாடல்களை அறிமுகப் படுத்தும் பகுதியாக இப்பாடப் பகுதி அமைகிறது.

## 5.2 குறிக்கோள்கள்

- கலித்தொகையைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- கலித்தொகையில் வரும் நெய்தற்கலி பற்றி அறிந்து கொள்வீர்கள்
- நெய்தற்கலி பாடிய நல்லந்துவனார் பற்றி புரிந்து கொள்வீர்கள்
- நெய்தல் திணையின் முதல், கரு, உரிப் பொருள்களைப் பாடலின் மூலமாகத் தெரிந்து கொள்வீர்கள்

## 5.3 நெய்தல் திணை விளக்கம்

'வருணன் மேய பெருமணல் உலகம்' என்பர் தொல்காப்பியர். கடலும், கடல் சாாந்த பகுதியும் நெய்தல் ஆகும். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் உரிப்பொருளாகும். இத்திணைத் தெய்வம் வருணன், மக்கள்: சேர்ப்பன், நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர், பறவை: கடற்காகம், விலங்கு: சுறா, மரங்கள்: கண்டல், புன்னை, ஞாழல், மலர்கள்: நெய்தல், தாழை, கடம்பு, பண்: மீன்கோட் பறை, விளரி யாழ், தொழில்: மீன் பிடித்தல், மீன் உலர்த்தல், உப்பு உணக்கல், உப்பு விற்றல், கடல் கடந்த வணிகம், முத்துக் குளித்தல், உணவு: மீன், நீர்நிலை: கேணி, கடல்

## 5.4 நெய்தற் கலி: 118.

தலைவி கூற்று

பிரிவிடை ஆற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு அதனொடு புலம்பி, தோழி கேட்ப, அதனொடு புலந்தது.

வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்
நல்ஆற்றின் உயர்காத்து, நடுக்கற தான் செய்த

தொல்வினைப் பயன்துப்ப, துறக்கம் வேட்டு எழுந்தாற்போல்
பல்கதிர் ஞாயிறு பகல் ஆற்றி மலைசேர
ஆனால் கலுழ் கொண்ட உலகத்து மற்றுஅவன்
ஏனையன் அளிப்பான் போல் இகல் இருள் மதிசீப்ப
குடைநிழல் ஆண்டாற்கும் ஆனிய வருவாற்கும்
இடைநின்ற காலம் போல், இறுத்தந்த மருள்மாலை!
மாலைநீ - தூஅறத்துறந்தாரை நினைத்தலின் கயம்பூத்த,
போதுபோல் குவிந்த என்எழில் நலம் எள்ளுவாய்
ஆய்சிறை வண்டு ஆர்ப்ப, சினைப்பூப்போல் தளைவிட்ட,
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்
மாலைநீ - தையெனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டு
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம் பாராட்டுவாய்
செவ்வழி யாழ்நரம்பு அன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுள் புதுநலம் கடிகல்லாய்
மாலை நீ - தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ஆர்ப்ப,
பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மை பாராட்டுவாய்,
தகைமிக்க புணர்ச்சியார் , தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகம் திறந்தன்ன, முறுவலும் கடிகல்லாய்

எனஆங்கு மாலையும் அலரும் நோனாது, எம்வயின்
நெஞ்சமும் எஞ்சுமன் தில்ல - எஞ்சி.
உள்ளாது அமைந்தோர், உள்ளும்
உள்இல் உள்ளம் உள்உள் உவந்தே

### 5.4.1 கூற்றுவிளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற நிலையில் ஆற்றாத தலைவி, மாலைப் பொழுது கண்டு, அதனுடன் தனியே வருந்திக் கூறினாள். தோழி கேட்க, மாலை பொழுதுடன் புலந்து நின்றனள்.

மாலைப் பொழுதைப் பார்த்துத் தலைவி, மாலையே! வெல்லுகின்ற புகழை உடைய மன்னன் ஒருவன், சிறந்த ஒழுக்கத்துடனும், நல்ல நெறிமுறைப்படியும், பல உயிர்களையும் பேணிப் பாதுகாத்தனன். தான் செய்த பழவினைப் பயனைத் துய்த்தற்காகச்

சுவர்க்கத்தை விரும்பிச் சென்றனன். அதுபோல பல கதிர்களை உடைய ஞாயிறு இருளைப் போக்கிப் பகற்பொழுதின் கண் தான் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்து முடித்து, மலையின்கண் சென்று மறைந்தது. வேந்தனது மறைவுக்குப் பின்னர் கலக்கம் கொண்ட உலகிடத்து அவ்வேந்தனுக்குப்பின் அவன் பகைவனாகிய அரசன் சிறிது காலம் காத்து நிற்பான். அது போல தனக்கு மாறாகிய இருள் நிலவுக்கு முன் தோன்றிற்று.

குடைநிழற்கண் குடிமக்களை ஆண்டு சென்ற அரசனுக்கும், உலகை ஆளவரும் அரசனுக்கும் இடைப்பட்ட வருத்தம் தருகின்ற காலம் போல. ஞாயிறு மறைவுக்கும் நிலவுத் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலத்தே நீ வந்தாய் ஆதலால் மாலையே! நீ மயக்கத்தை உடைய மாலையாய் இருக்கின்றாய் என்றனள்.

மேலும் மாலையே - நாம் வலிமை இல்லாமல் போகுமாறு நம்மை விட்டு பிரிந்தாரை நினைக்கின்றாய். குளத்திலே பூத்த மலர்ப் போது போல்,

நின்னைக் கண்டு மனம் குவிந்த என் அழகினைக் கண்டு அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் ஆரவாரிக்கும்படி கிளை இடத்தே கட்டவிழ்ந்த பூப்போல மனம் நெகிழ்ந்து காதலரைக் கூடி இருக்கின்ற மகளின் பேரழகைப் போக்க மாட்டாய். ஆதலின் நீ மயக்கத்தை உடைய மாலையாக இருக்கின்றாய்.

மாலையே - கோவலருடைய தனிக்குழல் ஓசை தை என்று ஓசைப்பட ஒலித்தல் கேட்டு, வருத்தமுடைய நெஞ்சத்தவரின் பக்கமே வந்து, அவருடைய உயிரைக் கொள்ளாமலே அவருடைய புன்மை கூறி நிற்கின்றாய்.

யாழிடத்து நரம்பிலே எழுகின்ற செவ்வழிப் பண்போலப் பேசுகின்ற மொழியினை உடையார் பாராட்டும் பொய்யற்ற நனவிற் புணர்ச்சியாற் பெற்ற புதிய நலத்தை நீ கடிவதில்லை. ஆதலின் நீ மயக்கத்தை உடைய மாலையாய் இருக்கின்றாய்.

மாலையே - அழகிய தாழ்ந்த கிளைகளைத் தமக்கு இடமாகத் கொண்ட பேடும், சேவலும் ஆரவாரிக்கின்றன. அதனை இன்பமாகக் கருதாமல் பகையாகக் கொண்டு வெறுக்கும் நெஞ்சத்தை உடையோமாகிய எம்புன்மையைப் பாராட்டுகின்றாய்., தாழ்ந்த கொடியின் முகத்தைத் திறந்தாலன்ன, ஆடவரால் திறக்கப்படுகின்ற அழகுமிக்க

கூட்டத்தை உடைய மகளிர் தம் முறுவலை நீக்கமாட்டாய், புன்முறுவலையும் கடிவதில்லை. ஆதலின் நீ மயக்கத்தை உடைய மாலையாய் இருந்தாய்.

குறிப்பு

பிரிந்து எம்மை நினையாது. உள்ளன்பு இல்லாத உள்ளத்துடன் இருப்பாரை எண்ணி எண்ணி உவந்து நம் உள்ளம் உள்ளுகின்றது. இம்மாலை நேரமும் ஊரார் கூறும் அலரும் தாங்காதே நம் நெஞ்சம் நம்மை விட்டுப் போகா நின்றது. இனி என் செய்வேன் எனத் தலைவி வருந்திக் கூறினள்.

மாலைப் பொழுது - கணவனைப் பிரிந்து வருந்துவபவர்களை மேலும் வருத்துகின்றது. கணவனோடு சேர்ந்து மகிழ்ந்திருப்பவர்களை மேலும் மகிழ்விக்கின்றது. இதன் அருளற்ற தன்மை கண்டு, ஆற்றாத தலைவி மாலையை மருண்மாலை என்றாள்.

இப்பாடலில் நெய்தல் பொருளோ, கருப்பொருளோ இடம்பெற்றில. மாலை சிறுபொழுது முல்லைக்கு உரியது. ஏற்பாட்டினை அடுத்து வருவது இப்பாடலில் காலம் மயங்கி வந்தது.

## 5.5 நெய்தற் கலி:119.

**தலைவி கூற்று**

பிரிவிடை மாலைப்பொழுது தண்டு ஆற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது.

அகன்ஞாலம் விளக்கும் தன்பல்கதில் வாயாகப்
பகல் நுங்கிய போலப் படுசுடர் கல்சேர,
இகல்மிகு காண்பது போல அணிமதமி ஏர்தர,
கண்பாயல் பெற்றபோல் கணைக்கால மலர்கூம்ப
தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்துஞ்ச
முறுவல் கொள்பவை போல முகை அவிழ்பு புதல் நந்த
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பு இமிர்ந்து இம்மென
பறவைதம் பார்ப்பு உள்ள, கறவைதம் பதிவயிம்
கன்றுஅமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதிசேர மாலை வாள் கொள,

அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செவ்வழல் தொடங்க - வந்ததை
வால்இழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும்
காலை ஆவது அறியார்,
மாலை என்மனார் மயங்கியோரே

### 5.5.1 கூற்றுவிளக்கம்

தலைவனைப் பிரிந்திருக்கின்ற தலைவி மாலைப் பொழுது கண்டு ஆற்றாது தோழியிடம் கூறியது.

சூரியன் பரந்து உலகத்தின்கண், பல உயிர்களையும் தோற்றுவிக்கும் தன்பலவாகிய ஒளிக்கதிர்களை வாயாகக் கொண்டு பகற்பொழுதைத் தோற்றுவித்தான். மீண்டும் அவ்வாயினாலேயே விழுங்குகின்றதைப் போன்று, தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மறையும் சூரியன் மேற்குமலையைச் சேர்ந்தான்

போரில் வல்ல சக்கரப்படையை உடையவனாகிய திருமாலின் நிறம்போல இருள்பரவி வந்தது. இருளைத் தன் ஒளியாலே புறங்கண்டாற் போன்று அழகிய மதியும் தோன்றி அழகு செய்தது. உறங்கும் கண்களைப் போன்று தண்டினை உடைய தாமரை முதலிய குவிந்தன. தம்புகழ் கேட்ட சான்றோர்களைப் போல தலை சாய்ந்து மரங்கள் உறங்கின. முறுவலிப்பாரைப் போன்று அரும்புகள் அவிழ்ந்த மலர்களுடன் புதரிடத்தே விளங்கின. சிறிய மூங்கிற்குழல் போல, வண்டுகள் இம்மென நினைத்து தம் கூடுகளைச் சென்றடைந்தன. கறவை இனங்கள் தாம் தங்கும் ஊர்களிடத்தே கன்றுகள் மேல் அமர்த்த (தோன்றிய) விருப்பத்தோடே மன்றுகள் நிறையுமாறு புகுந்தன. விலங்குகள் தத்தமக்குரிய இடத்தே சென்று சேர்ந்தன. அந்தணர் தம்முறைப்படி அந்திக்காலத்தை எதிர் கொண்டனர். மகளிர் செந்தீயால் விளக்குகளை ஏற்றினர். மாலைப் பொழுது விளக்கம் கொள்ள வந்ததை ஒரு மிகுந்த அணிகலன்களை அணிந்த மகளிர் அவர்தம் உயிரை உடம்பினின்னு பிரிக்கும் கொடுமையான காலம் என்பது அறியாராய்

அறிவு மயங்கி மாலை என்று கூறிகின்றனர் என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

இப்பாடலில் நெய்தலுக்குரிய முதற்பொருளும், கருப்பொருளும் இடம்பெற்றில. கால மயக்கம் முற்பாடலுக்குரியது.

குறிப்பு

## 5.6 நெய்தற்கலி:120

**கண்டாற் கூற்று**

பிரிவிடை ஆற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு கழிய ஆற்றாளாயின் இடத்து, தலைவன் வரவும் அவளது அகமலர்ச்சியைக் கண்டார் கூறியது.

அருள்தீர்ந்த காட்சியான், அறன் நோக்கான் நயம் செய்யான்
வெருவுற உய்த்தவன் நெஞ்சம் போல், பைபய
இருள்தூர்பு, புலம்பு ஊர கனைசுடர்கல் சேர,
உரவுத்தகை மழுங்கித் தன் இடும்பையால் ஒருவனை
இரப்பவன் நெஞ்சம் போல, புல்லென்று, புறம் மாறிக்
கரப்பவன் நெஞ்சம் போல், மரம் எல்லாம், இலை கூம்ப
தோற்றம் சால செக்கருள் பிறைநுதி எயிறாக,
நூல் திசையும் நடுக்குறூஉம் மடங்கல் காலை
கூற்று நக்கது போலும், உட்குவரு கடுமாலை
மாலை நீ - உள்ளம் கொண்டு அகன்றவர் துணை தாராப்
பொழுதின்கண்
வெள்ள மான்நிறம் நோக்கிக் கணை தொடுக்கும் கொடியோன் போல்
அல்லற்பட்டு இருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ?
மாலை நீ - ஈரம்இல் காதலர் இகந்து அருளாஇடம் நோக்கி
போர் தொலைந்து இருந்தாரைப் பாடு எள்ளி நகுவார் போல்
ஆர்அஞர் உற்றாரை அணங்கிய வந்தாயோ?
மாலை நீ - கந்து ஆதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்
வெந்தது ஓர்புண்ணின் கண்வேல் கொண்டு நுழைப்பான் போல்
காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ? என ஆங்கு,
இடன் இன்று அலைத்தரும் இன்னாசெய் மாலை.
துளிகொள் துயர்தீரக் காதலர் துணைதர

குறிப்பு

மெல்லியான் பருவத்து மேல்நின்ற கடும்பகை
ஒல்லென நீக்கி, ஒருவாது காத்து ஆற்றும்
நல்இறை தோன்ற கெட்டாங்கு
இல்லாகின்றால் இருளகத்து ஒளித்தே

### 5.6.1 கூற்றுவிளக்கம்

பிரிவின்கண் ஆற்றாத தலைவி மாலைப் பொழுது கண்டு வருந்திக் கூறிய வழி மிகவும் ஆற்றாளாய பொழுது, தலைவன் வரவும், தலைவியது அகமலர்ச்சி கண்டு கண்டோர் கூறியது.

தலைவன் பிரிந்தபொழுது தலைவிக்கு வருத்தத்தையும், வந்தவழி மகிழ்ச்சியையும் தோற்றுவித்த மாலைப் பொழுதைக் கண்டோர் அருள் முழுவதும் அற்றுப் போனது போன்ற தோற்றத்தினன், அறம் செய்தல் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் என்று கருதாதவன், பலரும் கண்டு அஞ்சுமாறு செயல்புரிந்தவன். அவனது நெஞ்சின் மருட்சி போல உலகில் மெல்ல மெல்ல இருள் வந்து நிறைந்தது. கணவனைப் பிரிந்தோர்க்குத் தனிமை மேலிடும்படி செறிந்த கதிர்களை உடைய ஞாயிறு மேலை மலையைச் சென்றடைந்தது.

வறுமையால் இரத்தற்கு அஞ்சி, வலியின் தகைமை கெட்டு, பிறன் ஒருவனை வேண்டுகின்றவனின் நெஞ்சம் போல மரங்கள் எல்லாம் இலை கூம்பின. தோற்றம் மிக்க செவ்வானத்தின்கண் தோன்றிய பிறையைத் தன் எயிறாகக் கொண்டு நாற்றிசையும் நடுங்கும்படி ஊழிக்காலத்தே கூற்றுவன் உயிர்களைப் பார்த்துச் சிரித்தது போன்று யான் நடுங்குமாறு மாலையே நீ கொடிய மாலையாக இருந்தனை.

மாலைக்காலமே, நீ என் உள்ளத்தைத் தம்மிடத்தே கொண்டு என்னைப் பிரிந்தவர், எனக்குத் துணை தாராமல் இருக்கின்ற நேரத்தின்கண் வெள்ளத்தில் அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானின் துன்பத்தைப் பார்த்து, அம்பினைத் தொடுக்கும் கொடியவனைப் போல துன்பத்திலே அழுந்திக் கிடக்கின்ற என்னைக் கையறவு எய்துவிக்க வந்தனையோ? நீ கொடிய மாலையாக இருந்தாய்.

மாலைக்காமைமே. நீ போரிலே தோல்வி அடைந்திருந்தாரைப் பார்த்து, அவர்பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப் போன்று, அன்பு இல்லாத காதலர் என்னை விட்டு நீங்கி அருள் செய்யாத காலம்

பார்த்து, பொறுத்தற்கரிய வருத்தம் உற்றுள்ள என்னை வருத்துதற்கு வந்தனையோ? நீ கொடிய மாலையாக இருந்தாய்.

மாலைக்காலமே, நீ வெந்த புண்ணிலே வேல்கொண்டு நுழைப்பாரைப் போன்று, எனக்குப் பற்றுக்கோடாக அடைந்தவர் என் வருத்தத்தைப் போக்காத காலத்தே, மெய்வெம்புதற்குக் காரணமான காமநோயிலே அழுந்துகின்ற என்னைக் கலக்குதற்கு வந்தாயோ? நீ கொடிய மாலையாக இருந்தாய் என்று தலைவி கூறும்படியாக ஆற்றுதற்கு ஓர் இடனின்றி, அலைத்தலைச் செய்யும் பொல்லாங்கே செய்யும் மாலைப் பொழுதில் கண், வெறுப்புக் கொண்ட அவள் வருத்தம் தீரும்படியாகக் காதலர் வந்தார். நாற்படையும் இடைத்த அரசன் இளைத்த பருவத்தே அவன்மேல் விரைந்து வந்த கடிய பகையை நீக்குதற்கு அரசனை விட்டு நீங்காமல் நின்று காத்து நடத்தும் நல்ல இறைவன் வந்து தோன்றப் பகைகெட்டது போல இருளை அகத்தே ஒளித்துக் கொண்டு மாலைப் பொழுது இல்லாமல் போயிற்று என்றனர்.

இப்பாடலில் மூன்று தாழிசைகளிலும் பிரிந்திருப்போரை மாலைக்காலம் படுத்தும் கொடுமைகள் திறம்படச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பகை கெட்டாங்கு மாலை ஒளித்து இல்லாதாயிற்று.

## 5.7 நெய்தற்கலி: 121.

### தோழி கூற்று

ஒண்சுடர் கல்சேர, உலகு ஊரும் தகையத
தென்கடல் அழுவத்துத் திரைநீக்கா எழுதரூஉம்
தண்கதிர் மதியத்து அணிநிலா நிறைத்தர
புள்ளினம் இரைமாந்திப் புகல்சேர ஒலி ஆன்று
வள்இதழ் கூம்பிய மணிமருள் இருங்கழி
பள்ளி புக்கது போலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப!
தாங்கருங் காமத்தைத் தணந்தநீ புறம்மாற,
தூங்குநீர் இமிழ்திரை துணையாகி ஒலிக்குமே
உறையொடு வைகிய போதுபோல் ஒய்யென
நிறை ஆனது இழிதரும்உம், நீர்நீந்து கண்ணாட்கு
வாராய் நீ புறம்மாற வருந்திய மேனியாட்கு
ஆர்இருள் துணையாகி அசைவளி அலைக்குமே

கமழ்தன் தாதுஉதிர்நதுஉக, ஊழ்உற்றகோடல் வீ
இதழ்சோரும் குலைபோல, இறைநீவு வளையாட்கு
இன்துணை நீநீப்ப இரவினுள் துணையாகி (15)
தன்துணைப் பிரிந்து அயாஅம் தனிக்குருகு உசாவுமே
ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான் ஒளி சாம்பும்
நண்பகல் மதியம் போல் நலம் காய்ந்த அணியட்கு
என ஆங்கு எறிதிரை தந்திட இழிந்த மீன் இன்துறை
மறிதிரை வருந்தாமல் கொண்டாங்கு நெறிதாழ்ந்து,
சாயினள் வருந்தியாள் இடும்பை
பாய்பரிக் கடுந்தின் தேர் களையினோ இடனே

தலைவன் ஒருவழித் தணந்த இடத்துத் தலைவி ஆற்றாமை கூறி, வரையறுக்க கருதினாய் ஆயின் இ.ஃது இடம் எனச் சொல்லியது.

### 5.7.1 கூற்றுவிளக்கம்

தலைவன் தன் ஊருக்கு ஒருவழிச் சென்று திரும்பி வருவேன் என்று கூறிப்பிரிந்த இடத்து, தலைவியின் ஆற்றாமையை எடுத்துக் கூறி வரைந்து கொள்ள விரும்பினை ஆயின் இ.ஃது இடம் என்று தோழி தலைவனிடம் கூறியது.

ஒளிமிக்க ஞாயிறு, மலையிடத்துச் சென்று மறைந்தது. உலகினுள் தன் ஒளியைப் பரப்பும் தன்மைத்தாகிய தண்ணிய கதிர்களை உடைய மதி, தெளிந்த கடற்பரப்பினின்றும் அலைகளை நீக்கிக் கொண்டு மேலே எழுந்தது. அழகிய நிலவொளி எங்கும் நிறைந்திருந்தது. பறவை இனங்கள் உணவினை நிறையத்தின்று, தத்தம் இருப்பிடங்களைச் சேர்ந்ததினால் ஆரவாரம் அடங்கின. வளமை மிக்க இதழ்களை உடைய மலர்கள் கூம்பின. நிலமணி என்று மயங்கும்படி பெரிய நெய்தல் நீரோடை துயில் கொண்ட தன்மையை ஒக்கும் பரந்த கடலை உடைய தண்ணிய சேர்ப்பனே!

நீர்த்துளியுடன் இருக்கும் மலர்போல் அமையாது விரைவாக நிறுத்த இயலாது விரைவாக விழும் நீரிலே நீந்துகின்ற கண்ணை உடையவட்கு தாங்குதற்கரிய காமத்தை அடக்கி கைவிடுத்து நின் ஊரில் நீ தங்குகையினாலே அசைகின்ற கடலிலே எழுந்து முழங்குகின்ற அலைகளே துணையாக நின்று ஆரவாரிக்கும்.

குறிப்பு

நினமனை இடத்தே தங்கி வருந்திய மேனியை உடையானிடத்து நீ கொண்ட வேட்கையைக் கைவிட்டனை மணம் வீசுகின்ற குளிர்நத தாது உதிர்நது சிந்த முதிர்ந்த கோடல் மலர், தன் இதழ்களைக் கொத்தாக உதிர்க்கின்ற நிலை போல முன் கையினின்றும் வளைகள் கழலாநின்றன. இத்தகையாட்கு இருள் நிறைந்த இராக்காலத்தே அசைந்து வருகின்ற காற்றுதான் துணையாகி வருத்தா நிற்கும் நீ ஈண்டு வாராய்.

இனிய துணையாகிய நீ, இவளைக் கைவிட்டு நீங்கினை, ஒளிமிக்க கதிர்களை உடைய ஞாயிற்றின் மிக்க ஒலியான் தன்ஒளி கெடுக்கின்ற உச்சிக்காலத்து நிலவினைப் போல நலம் அழிந்த முகத்தினை உடையாளாகிய இவட்கு, தன் துணையைப் பிரிந்து வருந்தும் தனிக்குருகு, நாரைப் பேடு தான் இரவு நேரத்தில் இவட்கு உற்ற துணையாகி இவள் பற்றி வினவா நிற்கும்.

இனிய துறையிடத்தே வீசுகின்ற அலைகள் கொண்டு வந்து போடுகின்ற மீன்களை, மீள்கின்ற அலைகள் வருந்தாமல் கைக்கொண்டு செல்வனபோல் உன்நெறிமுறை கெட்டமையின் தாழ்ந்து மெலிந்து வருந்தியவளின் துயரை நின் விரைந்து செல்லும் குதிரை பூட்டப் பெற்ற திண்ணிய தேர் சென்று போக்கினால். அதுவே அவளுக்கு நல்ல காலம் எனத் தோழி கூறி வரைந்து கொள்ளக் கூறினாள்.

தலைவன் தன் ஊருக்குச் சென்று தங்கிய காரணத்தால் தலைவி இரவு நேரத்தில் தனிமைத்துன்பத்தில் வருந்தினள். ஒலிக்கின்ற அலைகளும், வீசுகின்ற காற்றும் தனிமையில் வாடும் குருகும் இவளுக்குத் துணையாக உள்ளனவேயன்றி, வேறு உற்றதுணை இல்லை என்பது இதன் பொருள்.

தென்கடல், இருங்கழி நெய்தல் - முதற்பொருள். கோடல், மீன், குருகு நெய்தற் கருப்பொருள்கள். நெய்தலில் குறிஞ்சி மயங்கிற்று.

### 5.7.2 உள்ளுறை

அ) சூரியன் மலையிடத்தே சேர்ந்தமை - தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து

தன் ஊரின்கண் தங்கியதால் களவு புலப்பட வாய்ப்பில்லை.

ஆ) மதி நிலவொளியைப் பரப்பியது - கழியிடத்தே காவல் இருந்ததையும்

இ) பறவைகளின் ஆரவாரம் கெட்டது - அலர் தூற்றம் மகளிரின் ஒலி அடங்கி

ஊர்துயின்றதையும் உள்ளுறை உவமங்களாகக் கொள்க.

குறிப்பு

## 5.8 நெய்தற்கலி: 122.

**தலைவி கூற்று**

காமம் சாலா இளமையோள் வயின் பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிட்டுப் பிரிந்து தொல்முறை மனைவியரோடு புணர்ச்சி எய்தி இருந்தான். அதனை அறிந்து ஆற்றாளாகிய தலைவி ஆற்றாமையைக் கண்டு வினாவிய தோழிக்கு அத்தலைவி அவன் ஒழுகுகின்றவாறும் தன் நெஞ்சு அவன் வயத்தது ஆயவாறும் கூறியது. மறையின் வந்த மனையோள் செய்வினை பொறை இன்று பெருகிய பருவரற் கண்ணும் என்பதனாலும் பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை என்னும் சூத்திரத்தானும் உணர்க.

கோதை ஆயமும் அன்னையும் அறிவுற
போது எழில் உண்கண் புகழ்நலன் இழப்ப.
காதல் செய்து அருளாதுதுற்நதார்மாட்டு, ஏதுஇன்றி
சிறிய துனித்தனை, துன்னா செய்து அமர்ந்தனை.
பலவும் நூறு அடுக்கினை இனைபு ஏங்கி அழுதனை
அலவலை உயையை என்ற தோழி!
கேள்இனி
மாண்எழில் மாதர் மனளிரொடு அமைந்து அவள்
காணும் பண்பு இலன் ஆதல அறிவேன்மன் அறியினும்
பேணி அவன் சிறிது அளித்தக்கால், என்
நாண்இல் நெஞ்சம் நெகிழ்தலும் காண்பல்
இருள்உறழ் இருங்கூந்தல் மகளிரொடு அமைந்து அவன்
தெருளும் பண்புஇலன் ஆதல் அறிவேன்மன் அறியினும்
அருளி அவன் சிறிய அளித்தக்கால் என்
மருணி நெஞ்சம் கிழ்தலும் காண்பல்
ஒன்இழை மாதர் மகளிரொடு அமைந்து, அவன்
உள்ளும் பண்பு இலன்ஆதல் அறிவேன்மன் அறியினும்
புல்லி அவன்சிறிது அளித்தக்கால் என்

அல்லல் நெஞ்சம் மடங்கலும் காண்பல் அதனால்
யாம நடுநாள் துயில்கொண்டு ஒளித்த
காம நோயின் கழிஇய நெஞ்சம்
தான் அவர்பால் பட்டதாயின்
நாம் உயிர்வாழ்தலோ நகைநனி உடைத்தே

### 5.8.1 கூற்றுவிளக்கம்

காமம் நிறையாத இளையாள் இடத்தே களவு ஒழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிலேயே பிரிந்து சென்று தொன்முறை மனைவியரோடு புணாச்சி எய்தி இருந்தனன். இதனை அறிந்தனள் தலைவி ஆற்றாது நின்ற தலைவியைத் தோழி நிகழ்ந்தது வினவ, தலைவி அவன் ஒழுகுகின்ற முறையையும் தன் நெஞ்சு தலைவன் மாட்டுச் சென்றதுமாகிய நிலையையும் கூறினள்.

மாலையை அணிந்த ஆயத்தாரும் அன்னையும் அறிந்துவிட்டனர். பூவழகு கொண்ட மையுண்ட நின் கண்கள் புகழப் பெற்ற அழகை இழந்துவிட்டன. காதல் செய்து அருளாது ஒரு காரணமும் இன்றியே நின்காதலன் பிரிந்து விட்டாள் அவனுடன் யாதொரு காரணமும் இன்றியே நீ சிறிதே ஊடல் கொண்டு வெறுத்தாய். அவன் செய்த குறைகளை ஒன்றும் பலவுமாக அடுக்கிக் கூறி அதிலே அமா்ந்துவிட்டாய். இப்பொழுது ஏங்கி அழுகின்றாய். நீ மனந்தடுமாறுதலை உடையாளாக இருக்கின்றாய் என்று கூறும் தோழியே, என் துன்பத்தைக் கேட்பாயாக என்று தலைவி கூறத் தொடங்கினள்.

மாண்புடைய காதல்மகளிரொடு அவன் சோ்ந்து நம் வருத்தத்தை அறியும் பண்பு அற்றவனாக இருத்தலை நான் மிகவும் அறிவேன். அறிந்தாலும் அவன் வந்து என்னை விரும்பிச் சிறிது அருள் செய்த அளவாலே, என் வெட்கம் கெட்ட நெஞ்சம் நெகிழ்ந்து போதலைக் கண்டிருப்பேன்.

இருளைக்காட்டிலும் கரிய கூந்தலை உடைய மகளிரொடு அவா் சோ்ந்து நம் வருத்தத்தை அறியும் பண்பு இல்லாதவராக இருத்தலை நான் அறிவேன். அறிந்தாலும் வந்து என்னை விரும்பிச் சிறிதே அருள் செய்தாலும் என் மயங்கிய நெஞ்சம் அதற்கு மகிழ்ந்து போவதைக் கண்டிருப்பேன்.

குறிப்பு

ஒளியுடை அணிகளை அணிந்த காதல் மகளிரொடு அவன் சேர்ந்து என்னை எண்ணிப்பார்க்கும் பண்பு இல்லாதவனாக இருத்தலை நான் அறிவேன். அறிந்தாலும் அவன் வந்து என்னைத் தழுவிச் சிறிதே அருள் செய்தக் காலை என் வருந்தும் நெஞ்சம் வருத்தமின்றி மீளுதலைக் கண்டிருப்பேன்.

ஆதலின் காமநோய்மிக்க நெஞ்சம் இரவின் நடுச் சாமத்தே நம்மைத் தூங்கவிடாதே ஒளித்தது. நெஞ்சம் அவன் இடத்துச் சென்றுவிட்டது. நாம் இருந்து உயிா் வாழும் வாழ்க்கையோ பிறர் மிகவும் சிரிப்பதற்கு இடமாயிற்று என்று தோழியிடம் தலைவி கூறினள். தலைவன் பிரிந்து சென்றதோடடைமயாது எவ்வளவு தான் பண்பற்றவனாக நடந்து கொண்டாலும் நெஞ்சம் அவன்மாட்டுச் சென்று விடுதலை தலைவி தன்மாட்டு இழிவு தோன்றுமாறு கூறிய பாங்கு நயமுடையது.

இப்பாடலில் நெய்தலுக்குரிய முதற்பொருளோ கருப்பொருளோ இடம் பெற்றில.

## 5.9 தொகுத்துக் காண்போம்

- கலித்தொகையைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- கலித்தொகையில் வரும் நெய்தற்கலி பற்றி அறிந்து கொண்டீர்கள்
- நெய்தற்கலி பாடிய நல்லந்துவனார் பற்றி புரிந்து கொண்டீர்கள்
- நெய்தல் திணையின் முதல், கரு, உரிப் பொருள்களைப் பாடலின் மூலமாகத் தெரிந்து கொண்டீர்கள்

## 5.10 சோதித்தறியும் வினாக்கள்

1. நெய்தல் திணை பற்றி விளக்குக

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………

2. நல்லந்துவனார் பற்றிக் குறிப்பு வரைக

குறிப்பு

.....................................................................................

.....................................................................................

............................................................

3. நெய்தற் திணையின் முதல், கருப் பொருள்களைக் கூறுக

.....................................................................................

.....................................................................................

............................................................

4. இப்பாடலில் இடம்பெற்றுள் உள்ளுறையை விளக்குக

.....................................................................................

.....................................................................................

............................................................

## 5.11 பயிற்சி வினாக்கள்

1. தலைவியின் புலம்பலை விரித்துரைக்க
2. கண்டார் கூற்று பற்றி விளக்குக

## 5.12 மேலும் படித்தறிக

1. நச்சினார்க்கினியர் (உ.ஆ), கலித்தொகை மூலமும் உரையும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1943

குறிப்பு

# கூறு 6

## ஓதலாந்தையார் - ஐங்குறுநூறு – பாலை முதல் மூன்று பத்து (செலவழுங்குவித்த பத்து செலவுப்பத்து இடைச்சுரப்பத்து)

## ஐங்குறுநூறு- பாலை

## ஓதலாந்தையார்

6. பாட அமைப்பு

6.1 அறிமுகம்

6.2 குறிக்கோள்கள்

6.3 ஐங்குறுநூறு விளக்கம்

6.4 பாலைத்திணை

6.5 ஓதலாந்தையார் பெயர்க்காரணம்

6.6 செலவழுங்குவித்த பத்து

6.6.1 பாடல் எண்: 301

6.6.1.1 கூற்று விளக்கம்

6.6.1.2 உரை

6.6.1.3 உரை விளக்கம்

6.6.1.4 கூற்றுப் பொருத்தம்

6.6.2 பாடல் உண்: 302

6.6.2.1 கூற்று விளக்கம்

6.6.2.2 உரை

6.6.3 பாடல் எண்: 303

6.6.3.1 கூற்று விளக்கம்

6.6.3.2 உரை

6.6.3.3 உரை விளக்கம்

6.6.4 பாடல் எண்: 304

6.6.4.1 கூற்று விளக்கம்

6.6.4.2 உரை

6.6.4.3 உரை விளக்கம்

6.6.5 பாடல் எண்: 305

6.6.5.1 கூற்று விளக்கம்

குறிப்பு

6.6.5.2 உரை

6.6.5.3 உரை விளக்கம்

6.6.6. பாடல் எண்: 306

6.6.6.1 கூற்று விளக்கம்

6.6.6.2 உரை

6.6.6.3 உரை விளக்கம்

6.6.7 பாடல் எண்: 307

6.6.7.1 கூற்று விளக்கம்

6.6.7.2 உரை

6.6.7.3 உரை விளக்கம்

6.6.8 பாடல் எண்: 308

6.6.8.1 கூற்று விளக்கம்

6.6.8.2 உரை

6.6.8.3 உரை விளக்கம்

6.6.9 பாடல் எண்: 309

6.6.9.1 கூற்று விளக்கம்

6.6.9.2 உரை

6.6.10 பாடல் எண்: 310

6.6.10.1 கூற்று விளக்கம்

6.6.10.2 உரை

6.6.10.3 உரை விளக்கம்

6.7 செலவுப்பத்து

6.7.1 பாடல் எண்: 311

6.7.1.1 கூற்று விளக்கம்

6.7.1.2 உரை

6.7.1.3 உரை விளக்கம்

6.7.2 பாடல் எண்: 312

6.7.2.1 கூற்று விளக்கம்

6.7.2.2 உரை

6.7.2.3 உரை விளக்கம்

6.7.3 பாடல் எண்: 313

6.7.2.1 கூற்று விளக்கம்

6.7.2.2 உரை

6.7.4 பாடல் எண்: 314

6.7.4.1 கூற்று விளக்கம்

6.7.4.2 உரை

6.7.4.3 உரை விளக்கம்

6.7.5 பாடல் எண்: 315

6.7.5.1 கூற்று விளக்கம்

6.7.5.2 உரை

6.7.5.3 உரை விளக்கம்

6.7.6 பாடல் எண்: 316

6.7.6.1 கூற்று விளக்கம்

6.7.6.2 உரை

6.7.6.3 உரை விளக்கம்

6.7.7 பாடல் எண்: 317

6.7.7.1 கூற்று விளக்கம்

6.7.7.2 உரை

6.7.7.3 உரை விளக்கம்

6.7.8 பாடல் எண்: 318

6.7.8.1 கூற்று விளக்கம்

6.7.8.2 உரை

6.7.8.3 உரை விளக்கம்

6.7.9 பாடல் எண்: 319

6.7.9.1 கூற்று விளக்கம்

6.7.9.2 உரை

6.7.9.3 உரை விளக்கம்

6.7.10 பாடல் எண்: 320

6.7.10.1 கூற்று விளக்கம்

6.7.10.2 உரை

6.7.10.3 உரை விளக்கம்

6.8 இடைச்சுரப்பத்து

6.8.1 பாடல் எண்: 321

6.8.1.1 கூற்று விளக்கம்

6.8.1.2 உரை

6.8.1.3 உரை விளக்கம்

6.8.2 பாடல் எண்: 322

6.8.2.1 கூற்று விளக்கம்

6.8.2.2 உரை

6.8.2.3 உரை விளக்கம்

6.8.3 பாடல் எண்: 323

6.8.3.1 கூற்று விளக்கம்

6.8.3.2 உரை

6.8.3.3 உரை விளக்கம்

6.8.4 பாடல் எண்: 324

6.8.4.1 கூற்று விளக்கம்

6.8.4.2 உரை

6.8.4.3 உரை விளக்கம்

6.8.5 பாடல் எண்: 325

6.8.5.1 கூற்று விளக்கம்

6.8.5.2 உரை

6.8.5.3 உரை விளக்கம்

6.8.6. பாடல் எண்: 326

6.8.6.1 கூற்று விளக்கம்

6.8.6.2 உரை

6.8.6.3 உரை விளக்கம்

6.8.7. பாடல் எண்: 327

6.8.7.1 கூற்று விளக்கம்

6.8.7.2 உரை

6.8.7.3 உரை விளக்கம்

6.8.8 பாடல் எண்: 328

6.8.8.1 கூற்று விளக்கம்

6.8.8.2 உரை

6.8.8.3 உரை விளக்கம்

6.8.9 பாடல் எண்: 329

6.8.9.1 கூற்று விளக்கம்

6.8.9.2 உரை

6.8.9.3 உரை விளக்கம்

6.8.10 பாடல் எண்: 330

குறிப்பு

6.8.10.1 உரை

6.8.10.2 உரை விளக்கம்

6.9 தொகுத்துக் காண்போம்

6.10 சோதித்தறியும் வினாக்கள்

6.11 பயிற்சி வினாக்கள்

6.12 மேலும் படித்தறிக

## 6.1 அறிமுகம்

ஐந்து திணைகளையும் பற்றி,

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலைஓது ஐங்குறு நூறு

என்று பாடிய புலவர்களின் பெயர்களை இவ்வெண்பாப் பாடல் வரிசைப்படுத்தும். மருதத்திணையைப் பாடியவர் ஓரம்போகியார், நெய்தல் திணையைப் பாடியவர் அம்மூவனார், குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர், பாலைத்திணையைப் பாடியவர் ஓதலாந்தையார், முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார் ஆவார்.

## 6.2 குறிக்கோள்கள்

- ஐங்குறுநூற்றைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- ஐந்திணைகளில் ஒன்றான பாலைத் திணையின் முதல், கரு, உரிப்பொருள்கள் பற்றி அறிந்து கொள்வீர்கள்
- பாலைத்திணையைப் பாடிய ஓதலாந்தையார் பற்றிப் புரிந்து கொள்வீர்கள்

## 6.3 ஐங்குறுநூறு விளக்கம்

ஐந்திணைகள் பற்றி ஒவ்வொரு திணையும் நூறு பாடல்கள் கொண்டதாகப் பாடப்பெற்ற தொகை நூலாதலின் ஐங்குறுநூறு எனப்பட்டது. மூன்றடிச் சிற்றெல்லையையும் ஆறடிப் பேரெல்லையும் உடையது.

## 6.4 பாலைத் திணை

குறிப்பு

தொல்காப்பியர் இதனை நடுநிலைத்திணை என்பர். இதற்குரிய நிலம் கூறினர் இலர். பிரிதலும் பிரிதல் நிமித்தமும் இதன் உரிப்பொருளாகும். பாலைத் திணையின் கருப்பொருள் தெய்வம் கொற்றவை, மக்கள்: விடலை, காளை, மறவர், மறத்தியர், பறவைகள்: பருந்து, கழுகு, மரங்கள்: உழிஞை, பாலை, இருப்பை, மலர்கள்: மராம்பு, பண்: பஞ்சுரப்பண், யாழ்: பாலை யாழ், பறை: ஆறலை, சூறைகோள், தொழில்: வழிப்பறி செய்தல், சூறையாடல், ஆறலைத்தல், நீர்: கிணறு, விலங்கு: வலியிழந்த புலி, ஊர்: குறும்பு. சங்க அகப்பாடல்களில் பாலைப்பாடல்களே எண்ணிக்கையில் மிக்குள்ளன.

## 6.5 ஓதலாந்தையார் பெயர்க்காரணம்

ஓதல் என்னும் ஊரினர். இன்றும் ஓதலூர் என்ற பெயருள்ள ஊர் ஒன்று கேரளாவில் உள்ளது. ஆந்தையார் என்பது இவரது இயற்பெயர். ஓதலாந்தையார் பாடல்களில் பெரும்பாலான பாலைப்பாடல்களே. ஒரு பாடல் மட்டும் முல்லைக்குரியது. இவர் வாழ்ந்த இடம் பாலை நிலம் மிக்குள்ள பகுதியாக இருந்தமையின் பாலைப் பாடல்களை மிகுதியாக பாடினர் போலும்.

## 6.6 செலவழுங்குவித்த பத்து

செலவு அழுங்குவித்தல். தலைவன் இல்லறக் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதற்குப் பொருள் ஈட்டுதல் இன்றியமையாததாகும். பொருள் ஈட்டுவதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து (ஒழுகுவது) செல்லுவது செலவு எனப்படும். அழுங்குதல் - மனம் சோர்தல். அழுங்குவித்தல் மனம் சோர்வு அடையும்படிச் செய்வித்தல்.

### 6.6.1 பாடல் எண்: 301

மால்வெள் ஓதிரத்து மையில் வால் இணர்
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்
அவ்வரை இறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே (1)

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது.

குறிப்பு

### 6.6.1.1 கூற்றுவிளக்கம்

தலைவன் தான் பொருள்வினை குறித்துப் பிரிய இருப்பதைத் தோழிக்கு உணர்திதினன். பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகனிடத்துச் சொல்லியது.

### 6.6.1.2 உரை

கரிய மேகங்கள் தவழும் மலைநாடனே! பெரிய வெள்ளிய ஒத்திரத்தின் குற்றமில்லாத வெண்மையான பூங்கொத்துக்களை, வெம்மை தாங்குதலரிய கொடிய பாலைச்சுரத்தின் வழிச்செல்வோர் தம் தலையிலே அணிந்து கொள்ளும் அழகிய மலையைக் கடந்து செல்குவையாயின் இவள் பெரிதும் வருந்துவள் என்று தோழி கூறினள்.

### 6.6.1.3 உரை விளக்கம்

ஓத்திரம், வெண்ணிலவு, என்றும் வெள்ளிலோந்திரம் என்றும் வழங்கும். ஓதீரம் ஒருவகை இலவமரம். இதன் பூ வெண்ணிறமும் நறுமணமும் கொண்டது. கரவழிச் செல்வோர் அதன் வெம்மைக்கு ஆற்றாது வெள்ளிலோத்திப் பூங்கொத்துக்களைத் தலையில் அணிந்து செல்வது வழக்கம்.

### 6.6.1.4 கூற்றுப் பொருத்தம்

நாடனே நீயும் அச்சுர வழிச்செல்லின் தலைவி ஆற்றாது மிகவும் வருந்துவளாதலின் நீ மேற்கொண்ட செலவினைத் தவிர்க்க என்று தோழி உரைத்கனன். அருஞ்சுரம் பாலை - முதற்பொருள், பிரியும் எண்ளம் - பாலை உரிப்பொருள்.

---

## 6.6.2 பாடல் எண்: 302

---

அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே
பெருந்தோள் அரிவை தகைதற்கும் உரியன்
செல்லாய் ஆயினோ நன்றே
மெல்லம் புலம்ப, இவள்அழப் பிரிந்தே. (2)

இது பொருள்வயிற் பிரியும் தலைமகன், பிரிவுடன்படுத்த வேண்டும் என்றானாக அவற்குத் தோழி சொல்லியது.

#### 6.6.2.1 கூற்றுவிளக்கம்

தலைவன் பொருள் தேடும் பொருட்டுப் பிரிய எண்ணினன். தான் பிரிய இருப்பதைத் தோழியிடம் தெரிவித்து, இதனைத் தலைவியிடம் தெரிவித்து பிரிவுக்கு தலைவி உடன்படுமாறு செய்ய வேண்டும் என்றான். அப்பொழுது தோழி தலைவற்குச் சொல்லியது.

#### 6.6.2.2 உரை

மெல்லென்ற நெய்தல் நிலத்து தலைவனே! ஈட்டுதற்கரிய பொருளை, ஈட்டுதற்காக நீ மேற்கொள்ளும் வினை முற்றுதல் இன்றித் தவறாக ஆதற்கும் உரித்து; பெரிய தோளினை உடைய தலைவி நின் பிரிவுக்கு உடன்பாடாது நின்னைத்தடுத்தற்கும் உரியள்; ஆதலின் நின் பிரிவை இவள் ஆற்றாதே அழுவாள். இவள் அழுமாறு நீ பிரிந்து செல்லாது, செலவை ஒழிவாய் ஆயின் நன்றாகும் என்று தோழி கூறினள்.

### 6.6.3 பாடல் எண்: 303

நினைத்த செயல் எல்லாம் கைகூடும் என்று சொல்ல முடியாது. கருதியது கை கூடாதவாறு ஆதலும் உண்டு என்ற உலகியல் உண்மையைத் தோழி உணர்த்தினாள். தலைவி பொருளின் நிலையாமை கருதி உடன்படாது நின் போக்கினைத் தடுத்தற்கும் உரியள் என்றாள். இதிலிருந்து தலைவி அழுமாறு பிரிந்து செல்லுதல் நன்றன்று; ஆதலின் செலவைத் தவிர்ப்பாயாக என்றாள்.

புதுக்கலத்து அன்ன கனிய ஆலம்
போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்
தண்ணிய இனிய வாக
எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே (3)

இது சுரத்து அருமை கூறி, உடன் செலவு மறுக்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

#### 6.6.3.1 கூற்றுவிளக்கம்

தலைவன், தான் பொருள்தேடப்பிரிய இருப்பதைத் தோழிக்குக் கூறினன்.. தோழி தலைவியையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டினாள். தலைவன் பாலைச் சுரவழியின் அருமை கூறி, தலைவியை உடன் அழைத்துச் செல்வதை மறுத்த பொழுது, தோழி சொல்லியது.

### 6.6.3.2 உரை

தலைவ, புதிய மட்கலத்தைப் போலும் சிவந்த நிறம் பொருந்திய பழங்களைக் கொண்ட ஆலமரம், தன்னை அடைந்த புள்ளினங்களைப் பிரியாவண்ணம் தடுக்கும். வேனிலின் வெப்பம் மிக்க அரிய காடுகள் தன்மையும் இனிமையும் உடையவாக ஆகும் பொருட்டு நீ எம்மையும் உடன் அழைத்துக் கொண்டு செல்வீராக என்றாள்தோழி.

### 6.6.3.3 உரைவிளக்கம்

ஆலம் - ஆலமரம், வேனிற்கால வெப்பத்திற்கு ஆற்றாது வருந்தி வரும் பறவை இனங்களுக்குக் கனியும், நிழலும் தந்து காத்தலும் செய்ததாக ’கனிய ஆலம் போகில் தடுக்கும்’ என்றார். (போகில்ஸ்ரீபறவை) கனியுடைய ஆலமரம் பறவையின் செலவைத் தடுத்துத் தன்பால் இருத்திக் கொள்ளும் வேனில் என்றது, தலைவியை உடன் கொண்டு செல்லவில்லை எனில் அவள் ஒருதலையாக நின் செலவினைத் தடுத்துத் தன்பால் இருத்திக்கொள்வாள் என்பது பொருள்.

### 6.6.4 பாடல் எண்: 304

**உள்ளுறை**

வேனிற் கால வெம்மைக்கு ஆற்றாது வரும் புள்ளினங்களுக்கு ஆலமரம் தண்ணிய நிழலும் இனிய கனியும் தந்து உதவுமாறு போல, எமக்கு நின் கூட்டத்தாலும், உடனுறைவாலும் சுரம் இனியவும் தண்ணியவுமாம் என உள்ளுறை கொள்க.

கல்லாக் கோவலர் கோலின் தொட்ட
ஆநீர்ப் பத்தல் யானை வௌவும்
கல்அதர்க் கவலை செல்லின் மெல்இயல்
புயல்நெடுங் கூந்தல் புலம்பும்
வயமான் தோன்றல் வல்லாது ஈமே (4)

இது பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

### 6.6.4.1 கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரிய இருந்த நிலையில் தலைமகற்குத் தோழி சொல்லியது.

குறிப்பு

#### 6.6.4.2 உரை

வலிமை மிக்க குதிரையினை உடைய தோன்றலே, தம் தொழிலையன்றிப் பிறிதொன்றும் கற்றிராத கோவலர்கள், தம் ஆநிரைக்காகத் தம் கையிலுள்ள கைக்கோலால் நீர்பெறுதல் வேண்டிப் பள்ளங்கள் தோண்டினர். அப்பள்ளத்தின் கண் ஊறிய நீரைப் பருக வந்த பிற இனங்களை விரட்டி விட்டு யானையானது தானருந்தும்.

அத்தகைய மலையிடைச் செல்லும் வழிகளிலே நீ இவளை கைவிட்டுப் பொருளீட்டச் சென்றால், மெல்லிய இயல்பினை உடைய இவள் புலம்புற்று வருந்துவளாகலின் நீ செல்லாதிருத்தல் வல்லையாகுக என்றாள் தோழி.

#### 6.6.4.3 உரைவிளக்கம்

வன்னிலங்களில் ஆநிரைகள் நீருண்ணதற்காகப் பள்ளங்களிடத்தே குழிகளைத் தோண்டுதல் வழக்கம். கோவலர் - ஆநிரை மேய்ப்போர்; கைகளில் எப்பொழுதும் கோலைக் கொண்டிருப்பர்.

#### 6.6.4.4உள்ளுறை

கோவலர் நிரைகளின் பொருட்டுத் தோண்டிய பத்தல் யானை வௌவும் என்றதனால் நீ நுகர்தற்குரித்தாய சிறந்த இவள் நலம் பசலையால் உண்ணப்பட்டுக் கழியும் என்று உள்ளுறை உவமம் கொள்க.

### 6.6.5 பாடல் எண் 305

களிறுபிடி தழிஇப் பிறுபுலம் படராது
பசிதின வருந்தும் பைதறு குன்றத்துச்
சுடர்த்தொடிக் குறுமகள் இனைய
எனைப்பயம் செய்யுமோ விடலைநின் செலவே (5)

இ∴கு உடன்போக்கு ஒழித்துத் தனித்துச் செல்வேன் என்ற தலைமகற்குத் தோழி கூறியது.

#### 6.6.5.1 கூற்றுவிளக்கம்

செய்வினைப் பொருட்டுபிரியக் கருதிய தலைவன் தலைவியை உடன் அழைத்துக் கொண்டு போதலை விடுத்துத் தான் மட்டும் செல்ல இருக்கிறேன் என்று கூறியவழி, தலைமகனுக்குத் தோழி கூறியது.

குறிப்பு

### 6.6.5.2 உரை

தலைவ, களிற்று யானையானது நீர் பெறாதும், இரை பெறாதும் உயங்குகின்ற தன் காதலியாகிய பிடியானையைத் தழுவிக் கொண்டு நின்றது. தனக்கு வேறுநிலங்களிலே செல்லுதற்குரிய வாய்ப்பும், ஆற்றலுமிருந்தும் அப்பிடியை விடுத்துப் போகத்துணியாமல் பசிப்பிணி தன்னை தின்று தீர்ப்பது போல வருத்த வருந்தியும் நிற்றற்குக் காரணமான, மழையின்மையால் பசுமையற்ற வறிய மலைகளையுடைய கொடிய பாலை நிலத்தின் கண் ஒளியுடைய தொடியினை அணிந்த இவ்விளமையுடைய எம்பெருமகள் இடைவிடாது அழுதுபுலம்பிக் கிடக்கும்படி நீ இவளைக் கைவிட்டுச் செல்லும் செலவு எத்தகைய பயனைச் செய்யும் என்றனள் தோழி.

### 6.6.5.3 உரைவிளக்கம்

ஆண்யானை வேனில் வெம்மைக்கு ஆற்றாதாயினும், தான்தழுவிநிற்கும் பிடியானை உடன்வரமாட்டாமையின் வேறுபுலம் செல்லவில்லை. வெம்மையால் பசுமையின்றிப் புற்கள் கரிந்தமையின் 'பைதறுகுன்றம்' என்றாள். தனக்குரியர் அழுது புலம்பப் பிரிந்து சென்று ஈட்டும் பொருள் நன்றாகாது என்பாள் "எனைப் பயம் செய்யுமோ" என்றாள். பிடியானையைத் தழீஇய களிற்று யானை உணவின்றிப் பசியால் வருந்திய நிலையிலும் கூட, பிரிந்து செல்ல முயலாது என்றது, நீயும் அதுபோல் பிரியாமல் இருக்க வேண்டும் என்பதாம்.

### 6.6.6 பாடல் எண் 306

வெல்போர்க் குரிசிலநீ வியன்சுரம் இறப்பின
பல்காழ் அல்குல் அவ்வரி வாடக்
குழலினும் இனைகுவள் பெரிதே
விழவொலி கூந்தல் மாஅ யோளே (6)

இது பிரியும் தலைமகற்குத் தோழி தலைமகள் பிரிவாற்றாமை கூறியது.

குறிப்பு

**6.6.6.1 கூற்றுவிளக்கம்**

பொருள்மேல் நாட்டம் கொண்டு பிரிய இருக்கும் தலைமகனிடத்து, நீ பிரிந்து சென்றால் தலைமகள்பிரிவு ஆற்றமாட்டாள் என்ற தோழி கூறியது.

**6.6.6.2 உரை**

செல்லும் போரில் எல்லாம் வெற்றிவாகை சூடும் தலைவனே, நீ தலைவியைப் பிரிந்து, அகன்ற விரிந்த பாலை வழியைக் கடந்து செல்வையாயின, பலவாகிய மணிகள் கோக்கப்பெற்ற, மேகலை அணிந்த இடையில் அழகிய வரிகள் வாட்டம் எய்தப் பெறுபவள். தலைவி நின் பிரிவாற்றாமையால் மணவிழா நாளைப் போன்ற நறுமணம் கமழும் கூந்தலையும், மாமை நிறத்தையும் உடைய இவள், குழல் இணைவது போல் மிகவும் வருந்தி அழுவாள். இவள் அவ்வாறு அழ நீ பிரிவதெங்ஙனம் என்றாள் தோழி.

**6.6.6.3 உரைவிளக்கம்**

விழாக்காலத்தே யாண்டும். மணம் கமழும். அதுவும் திருமண விழா எனில் வீடே மணக்கும். அதுபோல் தலைவியின் கூந்தல் மணங்கமழ இருந்தது. பிறர் மனம் உருகுமாறு இசைக்கும் குழல் போன்ற இவளது அழுகையொலி கேட்பார்க்கு அவளிடத்து இரக்கத்தையும், பரிவையும், நின்பாற் பழியும் தோற்றுவிக்கும் என் பதை உணர்த்தவே “குழலினும் இனைகுவள்“ என்றாள்.

**6.6.7 பாடல் எண் 307**

ஞெலிகழை முழங்குஅழல் வயமா வெரூஉம்
குன்றுடை அருஞ்சுரம் செலவு அயர்ந்தனையே
நன்றுஇல கொண்கநின் பொருளே
பாவை அன்னநின் துணைப்பிரிந்து வருமே (7)

இது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் அதன்சிறப்புக் கூறியவழி தோழி அதனை இழித்துக் கூறியது.

**6.6.7.1 கூற்றுவிளக்கம்**

பொருள் ஈட்டுதற்காகப் பிரியக் கருதிய தலைமகன், பொருளின் சிறப்பு பொருள் ஈட்டுதலின் அருமை - பொருட்பயன் பற்றித் தோழியிடம் கூறிய இடத்து, தோழி அதனை இழித்துக் கூறியது.

குறிப்பு

**6.6.7.2 உரை**

மூங்கிலாற் கடையப்பட்ட கழை இடத்து எழுந்த முழங்குகின்ற நெருப்பினைக் கண்டு வலிமை மிக்க புலிகள் அஞ்சி ஓடுகின்ற, அரிய காடுகள் பலவற்றைக் கடந்த பொருள் ஈட்டுதற்காகச் செலவினை மேற்கொண்டனை, கொண்கனே! பாவை போன்ற நின்னுடைய துணைவியைப் பிரிந்து சென்றால் அல்லது இப்பொருள் வாராதாகலான், நீ ஈட்டக் கருதிய பொருள் அறவழிப் பட்டதன்று, நின் துணைவியோடு கூடி, பிரியாதிருந்து ஈட்டுவதே பொருளாதலின், நின் செலவினைத் தவிர்ப்பாயாக என்றாள் தோழி.

**6.6.7.3 உரைவிளக்கம்**

காடுகளில் வெம்மையால் மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று இழைவதினால் நெருப்புத் தோன்றும். அவ்வாறு தோன்றும் நெருப்பு பெரும் ஓசையுடன் காடுகளை அழிக்கக்கூடியது. மூங்கிலிடத்துத் தோன்றிய நெருப்பு ஆதலின் “ஞெலிகழை முழங்கழல்” எனப்பட்டது. துணைவியொடு கூடி, அறவழிநின்று ஈட்டப்படும் பொருளே சிறந்த பொருளாகக் கருதப்படும்.

அவர் துன்புற்று வருந்த, ஈட்டப்படும் பொருளாதலின் “நன்றில கொண்க நின் பொருள்” என்றாள் தோழி. ஞெலிகழை இடத்துப் பிறந்த முழங்கழல் கண்டு வயமான் வெரூஉம் என்றது, அன்பொடு புணர்ந்த நும் இன்ப வாழ்வில் தோன்றிய இப்பொருட்பிரிவு கண்டு யாம் அஞ்சுகின்றோம் என்றனள்.

**6.6.8 பாடல் எண் 308**

பல்இரும் கூந்தல் மெல்லிய லோள்வயின்
பிரியாய் ஆயினும் நன்றே விரி இணர்க்

கால்எறுழ் ஒள்வீ தாஅய்

முரகமர் மாமலைப் பிரிந்தெனப் பிரிமே (8)

இது "பிரிவல்" என்ற தலைமகற்குத் தோழி "பிரியாது ஒழியப் பெறின் நன்று பிரிவையாயின் இம்மாமலை இப்பருவத்து எங்களை விட்டுப் பிரிந்தாற் பிரிக" எனச் சொல்லியது.

### 6.6.8.1 கூற்றுவிளக்கம்

தலைவன் தோழி இடத்துப் பிரிய உளேன் என்றான். அதற்குத் தோழி பிரியாது இருத்தலே நன்று. பிரிவதாக இருப்பின் இம்மலை இடத்து இளவேனிற் பருவம் நீங்காவாறு செய்து அதன்பின் பிரிக எனக் கூறினள்.

### 6.6.8.2 உரை

பலவாகிய கரிய கூந்தலையும் மெல்லிய இயல்பினையுமுடைய தலைமகளைப் பிரியாது ஒழுகுவையாயின் நன்றாம். பிரிவதே பொருளாகக் கொண்டால், விரிந்த கொத்துக்களை உடைய, வலிய அடிப்பகுதியைக் கொண்ட எறுழ்மரத்தின் ஒள்ளிய மலர்கள் பரவிக் கிடக்கும், முருகன் விரும்பி உறையும் இப்பெரிய மலை இடத்து இப்பருவத்தே எங்களை விட்டுப் பிரிக என்றாள் தோழி.

### 6.6.8.3 உரைவிளக்கம்

செலவழுங்குவித்தல் தோழியின் கருத்தாதலின் செல்லாய் ஆயினும் நன்றே என்றாள். எறுழ்-ஒரு வகை மரம். எறுழ மரம் பூப்பது வேனிற்பருவமாதலால் அதன் "ஒள்வீதாய மலை" எனப்பட்டது. வேனிற்பருவம் நிலைபேறிதன்றிக் கழியக் கூடியது. இம்மலையிடத்து வேனிற்பருவம் நீங்காமல் செய்வது இயலாது; அதனால் பிரிவதும் இயலாது என்பதாம்.

ஒள்வீதாய மாமலை என்று கூறியதோடமையாது, "முருகமர் மாமலை" என்றும் கூறியதனால், அன்பின்றிப் பிரிந்தார் மலை பூத்தல் கூடாது என்றும்; பிரியேன் என்று சொல்லி மணந்து, பின்

பிரியக்கூடியவரை முருகக் கடவுள் வருத்துவர் என்றும் கொண்டு, தலைமகள் வேறுபட்டு வருந்துவள் என்பது சுட்டு நின்றது.

குறிப்பு

**6.6.9 பாடல் எண் 309**

வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவுஅயர்ந் தனையால் நீயே நன்று
நின்நயந்து உறைவி கடுஞ்சூற் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ
இறுவரை நாடநீ இறந்துசெய் பொருளே (9)

இது பொருள்வயிற் பிரிவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

**6.6.9.1 கூற்று விளக்கம்**

பொருள் ஈட்டுதற்காகப் பிரிவேன் என்ற தலைமகனிடத்துத் தோழி சொல்லியது.

**6.6.9.2 உரை**

முறிந்த மலைப்பக்கத்ததை உடைய நாடனே, பிரிதற்கரிய இளவேனிற் பருவத்தையுடைய இச்சித்திரைத் திங்களிலே இவளைக் கைவிட்டு, வெப்பமுடைய சுரத்தைக் கடந்து. பொருளீட்டற் பொருட்டுச் செல்லும் செலவினை மேற்கொண்டாய் நீ இவளைக் கைவிட்டு நெடிது பிரிந்திருந்து ஈட்டும் பொருள், நின்னைப் பெரிதும் விரும்பி அவ்விருப்பமே பற்றுக்கோடாக உயிர்வாழுமியல்புடைய எம்பெருமாட்டியினது, தலைச்சூலின் கண் இறையருளால் உருவாகின்ற நின்மகனுடைய இளநகையைக் காணும்பொழுது உண்டாகும் இன்பத்தைக் காட்டிலும் பெரிதும் இனிமை நல்குவதுண்டோ? சொல்லுவாயாக என்றாள் தோழி.

திங்கள் என்பது மாதத்தைக் குறிக்காமல் பருவத்தைக் குறித்துநின்றது. "கடுஞ்சூல்" "முதற்சூல்" தலைச்சூலிற் பிறந்த முதல் மகனாதலின் கடுஞ்சூற் சிறுவன் எனப்பட்டான். முதற்குழந்தை இடத்து, பெற்றோர் பேரன்பு கொண்டு மகிழ்வர். அதுவும் ஆண் மகவாயின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. எனவேதான் தலைவி சூற்கொண்டிருத்தலைக் காட்டி இப்பருவத்தே பிரிதல் தகுதியன்றெனச் செலவழுங்குவித்ததாம்.

குழந்தை பற்றிய குறிப்பு பெரும்பாலும் மருதப்பாடல்களில் தான் இடம்பெறும். பாலைப்பாடலில் இடம் பெற்றிருப்பது அரியதொன்றாகும்.

### 6.6.10 பாடல் எண் 310

பொலம்பசும் பாண்டிற் காசுநிரை அல்குல்
இலங்குவளை மென்தோள் இழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை யாயின்
அரிதே விடலைஇவள் ஆய்நுதற் கவினே (10)

இது பிரிகின்ற தலைமகற்குத் தோழி, நீ நினைக்கின்ற கருமம் முடித்தாய். ஆயினும் இவள் நலம் மீட்டற்கு அரிது எனச் சொல்லி செலவழுங்குவித்தது.

#### 6.6.10.1 கூற்றுவிளக்கம்

தலைவன் பிரிய இருப்பது அறிந்து தோழி நீ எண்ணுகின்ற கருமம் முடித்துத் திரும்பலாம். நினைத்தவாறு பொருள் ஈட்டி வரலாம். ஆயினும் நின்பிரிவால் இவள் நலம் இழக்க, அதனை மீட்டல் அரிதாகும் எனச் சொல்லி செலவழுங்குவித்தனள்.

#### 6.6.10.2 உரை

பெருமானே! மணிகள் நிரல்பட அழுத்தப்பட்ட பசிய பொன்னாலியன்ற பாண்டில் என்னும் அருங்கலமணிந்த அல்குலையுடைய எம்பெருமாட்டி அணிகலன்களும், மெல்லிய தோளின்கண் செறிவுற்றுத் திகழும் வளையல்களும் தத்தம் நிலைகெட்டு நெகிழும்படி, பிரிந்து போதலில் வல்லைமையுடையாய் ஆயின் எம்பெருமாட்டியின் பலரும் ஆராய்ந்து நன்றென்றற்குக் காரணமான திருநுதலின் பேரெழிலை நீ மீண்டும் காண்டல் அரிதே ஆகும். இதனை நீ உணர்வையாயின் நின் விருப்பம்போல் செய்வாயாக என்றாள்.

#### 6.6.10.3 உரைவிளக்கம்

தலைவன் பிரிந்தவழி எய்தும் மெலிவினால் வளையும் இழையும் நெகிழ்தல் ஒருதலையாகலின் வளைநிலை நெகிழ என்றும், ஒருவரின் ஒருவற் பிரிதல் அருமை உடைத்தாதலின் பிரிதல் வல்லுவை ஆயின் என்றும், இவள் நுதற்கவினை மீட்டற்கு வன்மையுடையவன் அல்லன் என்பதால் அரிது என்றும் கூறினாள்.

குறிப்பு

## 6.7 செலவுப்பத்து

தலைவன் தலைமகளைவிட்டுப் பிரிந்து சென்றவிடத்து, சென்றமை பொருளாக உடைய பத்துப்பாடல்களின் தொகுதி இது.

இல்வாழ்க்கைக்குப் பொருள் மிக மிக இன்றியமையாதது. பொருள் தேடுவதற்காகத் தலைவன் தலைவியைக் கட்டாயமாகப் பிரிந்து செல்ல வேண்டிய நிலையினன். சங்கப்பாடல்களில் தலைவன் தன்முயற்சியால் பொருள் ஈட்டி இல்லற வாழ்க்கை நடத்தினன். முந்தையோர் சொத்துக்களை வைத்து குடும்பம் நடத்தியதாகக் காட்டப்பெறவில்லை. பொருள் ஈட்டச் செல்லுங்கால் தலைவியைப் பிரிந்து செல்வது இயற்கையே. கடமையும் காதலும் தம்முள் மாறுபட்டு நிற்கும். தலைவனது நிலைமை களிறுமாறு பற்றிய தேற்புரி பழங்கயிறு போலாகும். பெரும்பாலும் கடமை வெற்றிபெறும். பிரிந்து சென்ற இடத்துத் தலைவி ஆற்றி இருத்தல் வேண்டும். அதனால்தான் இருத்தல் ஓர் உரிப் பொருளாகக் கொள்ளப்பட்டது. தலைவன் பிரிந்து சென்ற விடத்து, தலைவிக்கு துணையாக இருத்தலேயன்றி ஆற்றுவிக்கும் பொறுப்பும் கடமையும் உடையவள் தோழி. சில சமயங்களில் தலைவியின் பெற்றோர் மகட்கொடை மறுத்தவழி களவில் உடன்போக்கு நிகழ்தலும் உண்டு. தலைவியின் பெற்றோர் அறியாவண்ணம் தலைவன் தோழி கையடை செய்யத் தலைமகளைத் தன்னுடன் அழைத்துச் செல்வன். இது உடன்போக்கு எனப்படும். இஃது அறத்திற்கு மாறுபட்டதாயினும் தலைமகளது கற்பறம் காக்கவேண்டி நிகழ்தலின் சமூகம் உடன்போக்கை ஏற்றுக்கொண்டது. சான்றோர் உடன்போக்கை ஒழுக்காறாகவே ஏற்றுக்கொண்டனர் உடன்போக்கு என்னும் செலவு நிகழ்ந்தவிடத்து, அச்செலவின்கண் நிகழ்ந்தனவற்றைக் கூறும் பாடல்களும் இப்பத்தின்கண் உள்ளன.

### 6.7.1 பாடல் எண் 311

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினு
ஆரிடைச் செல்வோர் ஆறுநனி வெரூஉம்
காடுஇறந் தனரே காதலர்
நீடுவர் கொல்என நினையும்என் நெஞ்சே (11)

குறிப்பு

இ∴து ஆற்றது அருமை நினைந்து, நீ ஆற்றாயாதல் வேண்டா அவர் அவ்வழி முடியச் சென்றார், என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

### 6.7.1.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் செல்லுதற்குரிய சுரத்தின் வெம்மையையும், கொடுமையையும் நினைந்து நீ ஆற்றாய் ஆதல் வேண்டாம். அவர் அவ்வழிச் சென்று சேர்ந்தார் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

### 6.7.1.2 உரை

வேங்கை மரத்திலேறி மலர்கொய்யும் மகளிர் வினையாட்டுக் காரணமாக. பஞ்சுரம் என்னும் பண்ணைப் பாடக்கேட்டவிடத்தும் கடத்தற்கரிய வழியிடைச் செல்கின்ற வழிப்போக்கர்கள். அவ்வழியில் செல்வதற்குப் பெரிதும் அஞ்சுதற்குக் காரணமாக கொடிய பாலைநிலத்தை நம் பெருமான் கடந்து அப்பாற் சென்று விட்டனரோ? ஆயின் அவர் வாழ்க!

எனினும் நம்மைப் பிரிந்து செல்லத் துணிந்த வன்கண்ணர் ஆகலின் என்னுடைய நெஞ்சம், அவர் காலம் நீட்டிப்பதால் ஆங்குத் தங்கி விடுவரோ? என்று கருதிப் பெரிதும் வருந்துகிறது என்று தலைவி தோழியிடம் கூறினள்.

### 6.7.1.3 உரைவிளக்கம்

தலைவன் சுரவழியைக் கடந்து சென்றனர் என்ற செய்தி கேட்டு தலைவி மகிழ்வள் என நினைத்தனள் தோழி. ஆனால் தலைவி அவள் கூற்றையே கொண்டு எடுத்து காடு இறந்தனரோ காதலர் என்றாள். சுரத்தின் கொடுமையை நினையாதவாறு சென்ற தலைவன் வினையின் அருமை நோக்கி விரைய முடியாதது நீட்டித்தால் கூடும் எனத் தலைவி அஞ்சினள். 'நீடுவர் கொல் என நினையும் என் நெஞ்சு' என்றனள் தலைவி.

## 6.7.2 பாடல் எண் 312

அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ
வறன்உண் டாயினும் அறஞ்சா லியரோ

வாள்வனைப்பு உற்ற அருவிக்
கோள்வல் என்ஐயை மறைத்த குன்றே (12)

இ∴து உடன்போயின் தலைமகள் மீண்டு வந்துழி நின் ஐயன்மார் பின்துரந்து வந்த இடத்து நிகழ்ந்தது என்னை? என்ற தோழிக்கு, நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைதற்கு உதவி செய்த மலையை வாழ்த்தியது.

### 6.7.2.1 கூற்றுவிளக்கம்

தலைவியும், தலைவனும் உடன்போக்கில் சென்றனர். உடன்போக்கினின்றும் மீண்டு வந்தவிடத்து வழியிடை நிகழ்ந்தது என்ன என்று தோழி வினவினள். அதற்கு தலைவி, எம் உடன்பிறந்தார் எம்மைத் தேடி வருகையில் அவர்கள் கண்ணில் படாதவாறு தலைவன் மறைந்து கொண்டனன். அவன் மறைவதற்கு மலைதான் உதவி செய்தது என்று மலையைத் தலைவி வாழ்த்தினள்.

### 6.7.2.3 உரை

ஒளியினால் அழகுடைய அருவிகளையுடையதாய், தன் கொள்கையைச் கடைப்பிடியாகக் கொண்டொழுகுதலில் வன்மையுடைய நம்பெருமானை உடன்போக்கின்கண் எம்மைத் தொடர்ந்து வந்த என் ஐயன்மார் அறியாவாறு தலைவனை மறைத்து உதவியது குன்றம். அத்தகைய குன்றும் தனக்குரிய அறத்தானே என்றும் நிறைக! உலகம் எங்கும் நீரற்ற கடுங்கோடை உண்டாயினும் நீர்வரக்கூராத அறம் நிறைந்து மிக ஓங்குவதாக என்று தலைவி மலையை வாழ்த்தினாள்.

### 6.7.2.4 உரைவிளக்கம்

அறம் - மலைக்குரிய நற்பண்புகள். சாலியர் - நிறைக என்னும் பொருளுடைய வியங்கோள் வினைமுற்று. காதலர் தாம் பூண்ட ஒழுக்கம் கெடாதவகையில் மறைதற்கு இடந்தந்து உதவியது மலை. தலைவியின் ஐயன்மாருடைய வன்கண்மையும் தலைவனது மறப்பண்பும் தலைவி அறிந்தவள் போர் நிகழின் ஏதம் வரும் என்று கலங்கினள். தலைவியும் கலக்கமடைதல் கூடாது, போர் நிகழ்தலும் கூடாது என்று தலைமகன் மறைந்தனன். போர் உண்டாகாதவாறு தடுத்த குன்றினது

குறிப்பு

சிறப்பும் தன் ஆற்றாமையும் தோன்ற தலைவி அறஞ்சாலியரோ, அறஞ்சாலியரோ என அடுக்கிக் கூறினள்.

### 6.7.3 பாடல் எண் 313

தெறுவது அம்ம நும்மகள் விருப்பே
உறுதுயர் அவலமொடு உயர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படர்அடக் கலங்க
நாடுஇடை விலங்கிய வைப்பின்
காடுஇறந் தனள்நம் காத லோளே (13)

இது தலைமகள் புணர்ந்துடன் போகிய வழிச் செவிலியின் ஆற்றாமை கண்ட நற்றாய் அவட்குச் சொல்லியது.

#### 6.7.3.1 கூற்றுவிளக்கம்

தலைமகனுடன் தலைமகள் உள்ளம் புணர்ந்து தன் ஊரை விடுத்துப் போயினள். அங்ஙனம் போயவழி, அஃதறிந்து தாய் (நற்றாய்) செவிலிக்குக் கூறியது.

#### 6.7.3.2 உரை

செவிலி கேள்! நம்முடைய காதலுக்கு இடனாயவள். மிக்க துயராகிய அவலத்தானே உயிர்தான் போய்விடுமளவிற்குத் தேய்ந்து வறிதாகிவிட்ட நம்முடைய மனத்தைத் துன்ப நினைவுகள் இடையறாது வருத்தவும், அவற்றாலே அந்நெஞ்சம் குழம்பவும் செய்து தன் நல்லியல் பிழந்து நடுங்குதயர் செய்யும் பாலைத்தன்மையானே, தன்கண் மக்கள் வாழும் நாட்டுத்தன்மை அகன்று போன பாலையாகிய காட்டினைத் தன் காதலனோடு கடந்து நம்மை நீத்துப் போயினள். இனி நும்மகள்பால் நுமக்குண்டாகும் அவா நும்மால் அழிக்கப்படற்பாலது என்றனள்.

தலைவி தயாரிடத்து அன்பினளாகக் காதலை எண்ணிப் பிரிந்தாலும் நற்றாயும், செவிலியும் தலைவி இடத்துக் கொண்ட அன்பு பெரிதாய் இருந்தமையான் அது அவர்களை வருத்துவதாயிற்று. ஆதலால் தன்னை ஆற்றிக்கொண்ட நற்றாய் களவில் தன்னைவிடச் செவிலியே தலைவிக்குச் சிறந்தவளாதலின் நும்மகள் என்று கூறி அவளைத் தேற்றினள்.

குறிப்பு

### 6.7.4 பாடல் எண்:314

அவிர்தொடி கொட்பக் கழுதுபுகவு அயரக்
கருங்கண் காக்கையொடு கழுகுவிசும்பு அகவச்
சிறுகண் யானை ஆள்வீழ்த்துத் திரிதரும்
தோளிடை முனிநர் சென்ற ஆறே (14)

இது தலைமகன் பிரிந்துழி அவனுடன் போய் மீண்டார் வழியது அருமை தங்களிற் கூறக்கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

#### 6.7.4.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் தலைவியை விடுத்துப் பிரிந்து சென்றபொழுது, சிலர் தலைவனுடன் சென்றனர்; உடன் சென்றார் மீண்டு ஊருக்குத் திரும்பி, தாம் சென்ற வழியின் அருமையைத் தலைவியிடம் கூறினர். அது கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

#### 6.7.4.2 உரை

தோழி, நம் தோளிடத்து விருப்பம் இன்றி இன்பத்தினை வெறுத்துச் சென்றவர் சென்ற நெறியின் தன்மையைச் கேள்! விளங்குகின்ற தொடியணிந்த பேய் மகள், வழிச் சென்றார் துன்புறுத்தப்பட்ட இடத்தின்கண் இறந்தோர் கருந்தலையைத் தேடித்திரிய, அவள் ஊர்ந்து வந்து கழுது இறந்தோர் தம் நிணமாகிய உணவைத் தேடி உண்ண, எஞ்சியவற்றை உண்ணுதற்காக, கரிய கண்களை உடைய காக்கையும், கழுகும் விசும்பின் கண் கத்தித் திரியா நிற்கும். சிறிய கண்களை உடைய யானை, எதிர்ப்பட்ட மறவரை ஆட்களைக் கொன்று திரியும். இத்தகைய நீண்ட இடத்தினை உடைய கடத்தற்கு அரிய காடு என்பர் நம் தலைவர் சென்ற நெறி. அது கேட்டு என் நெஞ்சம் வருந்துகின்றது என்றாள் தலைவி.

#### 6.7.4.3 உரைவிளக்கம்

கழுது - பேயில் ஒரு சாதி. இது பேய்களுக்குள் அடிமைப் பேய். முனிதல் - வெறுத்தல், பேய்மகள் இறந்தார் தலைகளை உண்ணும் இயல்பினள். அவிர்தொடி என்பது அன்மொழித் தொகையாகப் பேய் மகளைக் குறித்து இப்பாடல் தலைவியது பேரன்பினைப்புலப்படுத்துகின்றது. கணவன் சென்றவழி கொடு நெறி எனக் கேள்வியுற்ற தலைவி அவன் தன்னைப் பிரிந்தமைக்கு

வருந்துவதைக் காட்டிலும் கொடுமை நிறைந்த அக்காட்டு வழியை எவ்வாறு கடப்பர் என அவன் நிலைக்கு வருந்திக் கூறினள்.

குறிப்பு

### 6.7.5 பாடல் எண்:315

பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்
புசல் கேளார் சேயர் என்ப
இழைநெகிழ் செல்லல் உறீஇக்
கழைமுதிர் சோலைக் காடுஇறந் தோரே (15)

இது தலைமகன் சொல்லாது பிரிந்துழித் தலைமகள் வேறுபாடுகண்ட தோழி இரங்கிச் சொல்லியது.

### 6.7.5.1 கூற்றுவிளக்கம்

தலைமகள் உறங்கிக் கொண்டிருந்த பொழுது தலைமகன் சொல்லாது பிரிந்து சென்றனன். பிரிந்து சென்றமை அறிந்த தலைமகள் உடல் மெலிந்து வருந்தா நின்றனள். தலைவியது வேறுபாடு கண்ட தோழி இரங்கிச் சொல்லியது.

### 6.7.5.2 உரை

தலைவன் தலைவியைப் பிரிந்து, மூங்கில்கள் நிறைந்த சோலைகளை உடைய காடுகளைக் கடந்து, மிக்க சேய்மைக்கண் சென்றனன். தலைவன் பிரிவு, தலைவிக்குத் தான் அணிந்திருந்த இழைகள் நெகிழ மிக்க துயரத்தைத் தோற்றுவித்தது. இதனால் வருந்திய தலைவி தலைவர் இப்பொழுது நெடுந்தொலைவின் செல்லுவர் என்று அவரைக் கண்டோர் கூறா நிற்பர். அவர் பிரியும் பொழுது இனிது துயின்று கிடந்த குளிர்ந்த மலர் போன்ற நெடிய கண்கள் இப்பொழுது செய்யும் ஆரவாரத்தை அவர் கேட்பாரல்லர். ஆகவே அவ்வன்கண்ணரைக் கருதி வருந்துவதால் யாது பயன் என்றனள் தோழி.

### 6.7.5.3 உரைவிளக்கம்

இது முன்னிலை புறமொழியாகக் கூறப்பட்டது. அவர் உடனுறையும்பொழுது பிரிந்துவிடுவரோ என்று விழிப்புடன் இருந்து அவரைத் தடை செய்யவறியாமல் இனிதே துயின்றுகிடந்தன இக்கண்கள் என்பாள். ”பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்” என்றாள்.

குறிப்பு

குற்றம் தம்மிடத்திருந்தும் அக்கண்களே இவ்வூரராறியப் பசலைபூத்துக் கண்ணீர் வடித்து அவர் கொடுமையைத் தூற்றுகின்றன என்றாள்.

### 6.7.6 பாடல் எண்:316

பொன்செய் பாண்டில் பொலங்கலம் நந்தத்
தேர்அகல் அல்குல் அவ்வரி வாட
இறந்தோர் மன்ற தாமே பிறங்கு மலைப்
புல்லரை ஓமை நீடிய
புலிவழங்கு அதர கானத் தானே (16)

இது தலைமகள் மெலிவிற்கு நொந்து தலைமகன் பிரிவின் கண் தோழி கூறியது.

#### 6.7.6.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் பிரிந்து சென்றமையின் தலைமகள் மெலிந்து காணப்பட்டாள். தலைமகள் மெலிவினை அறிந்து மனம் நொந்து தலைமகளிடத்துத் தோழி கூறியது.

#### 6.7.6.2 உரை

உயர்ந்து விளங்குகின்ற மலைப்பக்கத்தே, புல்லென்ற அடிப்பகுதியை உடைய ஓமை மரங்கள் நிறைந்த காட்டின் கண், புலிகள் இயங்கா நிற்கும், அத்தகைய காட்டின்கண் பொன்னாற் செய்யப்பட்ட பாண்டிலாகிய அணிகலன் நெகிழ்ந்து ஒழியுமாறும், தேர்த்தட்டுப் போன்ற அகன்ற அல்குல் இடத்துக்கிடந்த அழகிய வரிகள் வாட்டம் எய்தி மறைந்தொழியுமாறும் நம்மைத் தெளிவாகப் பிரிந்து சென்றனராதலின் நாம் ஆற்றுமாறு என்னையோ? அறியேன் என்றாள் தோழி.

#### 6.7.6.3 உரைவிளக்கம்

அ-அழகு; வரி-உடல் பூரித்துழி உண்டாகும் இரேகைகள். உடல் மெலிந்தவழி இரேகைகள் அழிந்தொழிதல் இயல்பு தாமே இறந்தார் என்றது நம்மையும் தமக்குத் துணையாக உடனழைத்துச் செல்லாமல்

கொடிய காட்டில் தனியாகச் சென்றார் என்ற வருத்தந்தோன்றச் சொல்லியது. தலைவன் சென்ற வழியின் அருமை தோன்ற 'புலிவழங்கு அதர் கானம்' எனப்பட்டது.

**6.7.7 பாடல் எண்:317**

சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்
பைதற் வெந்த பாலைவெம் காட்டு
அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே (17)

இது தலைமகன் பிரிந்து நீட்டித்துழி, நெஞ்சினைத் தூது விட்ட தலைமகள் அதுவராது தாழ்த்துழித் தோழிக்குச் சொல்லியது.

**6.7.7.1 கூற்று விளக்கம்**

தலைமகன் தலைவியை விட்டுப் பிரிந்து சென்றனன் கூறிய காலத்தில் வராமல் காலம் நீட்டித்தனன். இதனைக் கண்ட தலைவி தன் நெஞ்சினைத் தலைவனிடத்துத் தூது விட்டனள். தூது சென்ற நெஞ்சும் உடன் திரும்பி வாராது காலம் தாழ்த்திற்று. இதனை அறிந்த தலைமகள் தோழியிடத்துச் சொல்லியது.

**6.7.7.2 உரை**

தோழியே! மழை வறனுற்றமையால் ஓரறிவுயிராகிய பசும்புற்தலையும் காண்பரிதாகப் பாழ்பட்டுப் பசுமையற்று, ஞாயிற்றின் கதிர்களாலே வெந்து கிடக்கும் பாலையாகிய வெப்பமுடைய காட்டின் கண்ணுள்ள, கடத்தற்கரிய கொடுநெறியைக் கடந்து சென்ற அவ் வன்கண்ணர்பால், நமது தூதாகப் போன என்னுடைய நெஞ்சம், நம்பால் விரைந்த மீண்டு வாராமல் ஆண்டே காலம் நீடிதாக உறைவதற்குரிய காரணந்தான் என்னவென்று ஆராய்ந்து தெளிவோம் வருவாயாக என்றாள். பொருள்வயிற் பிரிந்த தலைவன் வருந்துணையும் ஆற்றியிருத்தலே அறிவுடைமை என்று வற்புறுத்திய தோழிக்கு ஆற்றியிருப்பேன் மன் என்றாள்.

**6.7.7.3 உரைவிளக்கம்**

வெம்மையால் வழிச்செல்வாரும் இலர். வழங்குநவும் இலர். இதனால் பாழ்பட்டு நின்றது. புல்லும் வெந்து கரிந்து காடாய்த் தோன்றினமையின் "பாழ்பட்டுப் பைதற வெந்த பாலை" எனப்பட்டது.

குறிப்பு

### 6.7.8 பாடல் எண்:318

ஆய்நலம் பசப்ப அரும்படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்லிழை நெகிழ
நசைநனி கொன்றோர் மன்றஇசை நிமிர்ந்து
ஓடெரி நடந்த வைப்பின்
கோடுயர் பிறங்கல் மலைஇறந் தோரே (18)

இது நம்மைப் பிரியார் என்று கருதியிருந்த தலைமகள் அவன் பிரிந்துழி இரங்கிச் சொல்லியது.

#### 6.7.8.1 கூற்றுவிளக்கம்

தலைமகள், தலைமகன் நம்மைவிட்டுப் பிரியார் என்று கருதி இருந்தனள். ஆனால் தலைமகன் பிரிந்து சென்றனன். அவன் பிரிந்துழி இரங்கி, தலைமகள் தோழியிடத்துச் சொல்லியது.

#### 6.7.8.2 உரை

தலைவர் தாம் பன்முறையும் ஆராய்ந்து இவை நல்லன என்று கூறுதற்குக் காரணமான என்னுடைய பேரழகு பசலையுள் மூழ்கியழியவும், மறத்தற்கியலாத துன்ப நினைவுகள் இடைறாது முகிழ்த்துப் பெரிதும் வருத்தா நிற்பவும், இவை பச்சை மூங்கிலோ என்று கண்டோர் மருள்வதற்குக் காரணமான பருத்த தோளினின்றும் தொடிமுதலிய ஒளியுடைய அணிகலன்கள் கழன்று வீழவும், ஆரவாரத்தோடு மிக்கெழுந்து விரைந்து படர்ந்த தீப் பரவியழித்த பாழிடத்தோடு வறிய குவடுகள் மட்டும் உயர்ந்து ஞாயிற்றின் ஒழியாற் காய்ந்து சுடருகின்ற மலைகளையும் உடைய பாலை நிலத்தைக் கடந்து சென்றவர் தேற்றமாக இனி இவர் நமக்கு நல்குவர் என்றும் நமது விருப்பத்தையும் வேரோடு அழித்து விட்டவரேயாயினர் காண்! என்றாள் தலைவி.

குறிப்பு

### 6.7.8.3 உரைவிளக்கம்

பாலைநிலங்களிலும் மலைப்பகுதிகளிலும் வெம்மையால் மூங்கில் மரங்கள் ஒன்றேடொன்று இழைந்து தீப்பற்றி எரிவன. அத்தீ விரைந்து பரவக்கூடியது. காடு முழுவதையும் அழித்துவிடவும் செய்யும். அதனால் தான் அது "ஓடெரி" எனப்பட்டது. பிரிவால், உடல் மெலியும் பசலை பாயும், அணிகள் நெகிழும், இவற்றை எண்ணாமற் தலைவன் சென்றாதால் "நன்றி கொன்றார்" எனப்பட்டான்.

---

### 6.7.9 பாடல் எண்:319

---

கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரமுளி கானம்
இறந்தன ரோநம் காதலர்
மறந்தன ரோதில் மறவா நம்மே (19)

இது தலைமகன் பிரிந்துழி அவன் உணர்த்தாது பிரிந்தமை கூறிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

### 6.7.9.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் பிரிந்து செல்லுங்கால் தன் பிரிவைத் தோழியிடம் கூறிசெல்வன்! தலைவியிடம் கூறினால் பிரிய இயாலாது என்பதால், தோழியிடம் கூறிச் செல்லுதல் வழக்கம். தலைவன் பிரிவு குறித்து உணர்த்தாது சென்றதைத் தோழி தலைமகளுக்குக் கூறிய இடத்துத் தலைமகள் சொல்லியது.

### 6.7.9.2 உரை

தோழி! அந்தோ! நும்முடைய கழிப்பெருங்காதற்கு இடனான நம்பெருமான்; கண்டோர் கண்ணைக் குத்தும்படி ஒளிர்கின்ற ஞாயிற்றின் சுடர்கள் சுட்டெரித்த பாழ்நிலத்தையுடைய நிலத்தாலே உயிர்க்குண்டாகும் தீமையெல்லாம் நன்கு பெருகியுள்ள மரங்கள் கரிந்து வீழுங் கொடிய பாலைக் காட்டினைக் கடந்து போயினரோ? எவ்வாற்றனும் தம்மை மறந்து அமைதலில்லாத எளியேமாகிய நம்மை மறந்தோ போயினரோ? என்றாள் தலைவி.

### 6.7.9.3 உரைவிளக்கம்

மண்புரை; மண்மேடுகள்; மண்ணாற் கூரை வேய்ந்த வீடுகள்; வெப்ப மிகுதியால் மரங்கள் அழிந்தன. மண்நிறைந்த மேடுகளும், குன்றங்களுமே நிற்றலின் "மண்புரை பெருகிய மரமுளிகானம்" எனப்பட்டது. நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் என்பதைப் போன்று மறவா நம்மே - மறந்தாரே அவர் என்ற தொடர்கள் அமைந்துள.

### 6.7.10 பாடல் எண்:320

முள்அரை இலவத்து ஒள்இணர் வான்பூ
முழங்கு அழல் அசைவளி எடுப்ப வானத்து
உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும்
கவலை அருஞ்சுரம் போயினர்
தவலில் அருநோய் தலைத்தந் தோரே (20)

இது தலைமகன் பிரிந்துழிச் சுரத்து வெம்மை நினைந்து தலைமகள் சொல்லியது.

### 6.7.10.1 கூற்று விளக்கம்

தலைமகன் பிரிந்து சென்றபொழுது தலைவன் கடந்து சென்ற சுரத்து வெம்மையை நினைத்துத் தலைமகள் தோழியிடத்துச் சொல்லியது.

### 6.7.10.2 உரை

முட்கள் பொருந்திய அடிமரத்தினை உடைய இலவமரத்தின் ஒள்ளிய கொத்தடை மலர்ந்த வெண்மையான பூக்கள் முழங்குகின்ற நெருப்பினை மிகுதிப்படுத்த எழுந்த காற்று, எடுத்து வீசுதலால் வானத்திடத்து இடியின் கண் பிறக்கும் நெருப்புப்போல பெரிய நிலத்தின்கண் உதிரும். அதுபோல கவர்ந்த வழிகளை உடைய அரிய காட்டைக் கடந்து சென்றனராயினும் தலைவர், நமக்குக் கெடாத பொறுத்தற்கரிய நோயினைத் தந்தனர் காண் என்றாள் தலைவி.

### 6.7.10.3 உரைவிளக்கம்

தீப்பிடித்துக் காற்றடித்தால் தீ விரைந்து பரவும்; பட பட என்ற ஓசையும் எழும். இதனால் "முழங்கு அழல் அசைவளி எடுப்ப"

குறிப்பு

எனப்பட்டது. காற்றால் உதிரும் இலவம் பூ ஒளியாலும், நிறத்தாலும் தீச்சுடரை ஒத்துக் காணப்படும். பொருளீட்டப்போன தலைவர் பிரிவினை ஆற்றியிருத்தல் வேண்டும். நீ அங்ஙனமிராது அவலிப்பது ஏன்? என்ற தோழிக்குத் தலைவி யான் அவலிப்பது அவர் பிரிந்ததற்கன்று; வெப்பமிக்க பாலைக்கொடு நெறியை எம்பெருமான் எவ்வாறு கடப்பர் என்று பரிந்து வருந்துகின்றேன் என்று கூறினள்.

## 6.8 இடைச்சுரத்துப்பத்து

தலைவன் செயல்வகைகளுள் இடைச்சுரத்து நிகழ்வன பொருளாக வரும் பாடல்கள் பத்தின் தொகுதி ஆதலின் இப்பெயர் பெற்றது.

தலைவன் கடமை உணர்ச்சி உந்த, பொருள் ஈட்டுதற்கோ பிற செயல்வினைகளுக்கோ தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுங்கால், தலைவியின் உருவும், பண்பும், செயலும் தலைவன் உள்ளத்தே இடையறாது நின்று நினைவுபடுத்தும், நிலைத்து நிற்கும்.

தலைவன் சுரத்து இடைச் செல்லுங்கால் ஆண்டுத் தோன்றும் இயற்கைக் காட்சிகள் தலைவன் உள்ளத்தே தலைவியின் நினைவுகளைத் தூண்டுவனவாக அமையும். அப்பொழுது தலைவியை நினைத்து, தன் நெஞ்சொடு பிணங்கிச் சில சொற்களைத் தனக்குள்ளே சொல்லிக் கொள்வதும் உண்டு. சுர இடைவழியில் நெருங்கிய நண்பர்கள் வரின் அவரிடத்துக் கூற்று நிகழ்தலும் உண்டு. ஆனால் பெரும்பாலும் நெஞ்சொடு கூறுவனவாகவே அமைந்துள.

தலைமகன் உள்ளம், பிரிவின் கண்ணும் பிரிந்து செல்லும் இடைச்சுரத்தின் கண்ணும் கொள்ளும் நினைவுகள் உணர்ச்சி மயமானவை.

### 6.8.1 பாடல் எண்:321

உலறுதலைப் பருத்தின் உளிவாய்ப் பேடை
அலறுதலை ஓமை அம்கவட்டு ஏறிப்
புலம்புகொள விளிக்கும் நிலங்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை இறப்பினும்
ஒழிதல் செல்லாது ஒண்தொடி குணனே (21)

இது பிரிந்து போகின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

குறிப்பு

#### 6.8.1.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் தலைவியைப் பிரிந்து வினை மேற் சென்றனன். இடைச்சுரத்தின் வழிச்செல்லுங்கால் தலையின் நினைவு தோன்றியது. அவளது குணங்களை நினைந்து இரங்கிச் சொல்லியது.

#### 6.8.1.2 உரை

காய்ந்த தலையினை உடைய பருத்தின் உளி போன்ற கூறிய வாயினை உடைய பேடை, இலை இன்றி உலா்ந்து விரிந்து காணப்படும் ஓமைமரத்தின் அழகிய கவா்ந்த கிளைக்கண் இருந்து, துயருற்று இசைக்கும்; வறண்ட கானத்தையும், வேற்றுமொழி பேசும் மக்களையும் உடைய நாடுகள் பலவற்றையும் கடந்து சென்றாலும் ஒள்ளிய தொடியை உடையாளின் காதல் கெழுமிய குணம் நினைவின் கண் தோன்றி வருத்தா நின்றது. இனிச் செய்யுமாறு என்? எனத் தலைவன் தன் நெஞ்சிடத்துரைத்தனன்.

#### 6.8.1.3 உரைவிளக்கம்

தனித்திருந்து இசைக்கும் பருந்தின் குரல் துன்புற்று புலம்புவது போன்று இருத்தலின் 'புலம்பு கொள இசைக்கும்' என்றான். பொருள்தேடுதற்க்காகத் தன்கண் வாழும் உயிரினத்தை நிலமே சுடுகின்ற இப்பாலைக் காட்டினூடே நடந்து தமிழ்நாட்டையும் கடந்து வேற்றுமொழி பேசும் நாட்டையும் நாடிச் செல்வா். மேலும் அந்நாடுகளை அடைய பல மலைகளையும் கடந்து செல்லவேண்டி இருந்தமையின் 'மொழி பெயா் பன்மலை' எனக்கூறப்பட்டது.

ஓமைமரத்தில் தனித்திருந்து பேடைப் பருந்து புலம்புகின்ற குரல், தன்னைப்பிரிந்து வருந்தும் தலைவியின் ஆற்றாமை வடிவைத் தன் மனக்கண்முன் தோற்றுவித்தலின் 'ஒண்டொடி குணனே' என்றும் காடும் மலையும் பிறவும் கடந்து நெடுந்தூரம் வந்தாலும் தலைவியின் குணமும் செயலும் நெஞ்சில் தோன்றியது பற்றி 'ஒழிதல் செல்லாது' என்றும் கூறினான்.

குறிப்பு

### 6.8.2 பாடல் எண்:322

நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின முன்னே, இனியே
ஒண்ணுதல் அரிவையை உள்ளதொறும்
தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே (22)

இ∴து இடைச்சுரத்துக்கண் தலைமகன் தலைமகள் குணம் நினைத்தலின் தனக்குற்ற வெம்மை நீங்கியது கண்டு சொல்லியது.

#### 6.8.2.1 கூற்றுவிளக்கம்

செய்வினை பொருட்டுத் தலைமகன் பிரிந்து சென்றுளன். இடைச்சுரத்தின் கண் தலைமகன் தலைமகளின் குணங்களை நினைந்து பார்க்கலாயினன். தலைவியின் நினைவே அவனுக்கு ஏற்பட்ட வெம்மையை நீக்கியது. வெம்மை நீங்கியது உணர்ந்து தன் நெஞ்சிடத்துக் கூறியது.

#### 6.8.2.2 உரை

ஒளிபடைத்த நுதலின் உடைய தலைவியைப் பிரிந்து செல்லத் துணிந்த காலத்துச் சுரத்திடையே உள்ள வழிகள், நீண்ட மூங்கில்கள் உலறுமாறு. வேனில் நீடித்தலால் மிக்க கதிர்களையுடைய ஞாயிறு கற்களும் பிளந்து போகுமாறு காய்தலின் முன்பு வெய்யவாய்த் தோன்றின் அவனைப் பிரிந்து இச்சுரத்திடை எய்தும் இப்பொழுது, அவை அவளை நினைக்குந்தொறும் குளிர்ச்சியை நல்கி, தண்ணியவாய் இரா நின்றன.

#### 6.8.2.3 உரைவிளக்கம்

தலைமகளின் காதலும், ஆற்றாமையும் எழுந்து தலைவனை ஒரு பக்கத்தே வருத்தின; பொருள்மேல் எழுந்த ஊக்கம் ஒருபக்கத்தே ஈர்த்தது. நடுநின்ற தலைமகன், வேனிலின் வெம்மையும், வழியினது அருமையும் உள்ளவாறு கண்டு உணர்ந்ததினால் 'வெய்ய வாயின முன்னே' என்றான். சுரத்திடைக் காட்சிகள் தலைவியை நினைக்க

வைத்தன. தலைவியின் அரிய பண்புகளை எண்ணிப்பார்த்த அளவிலேயே உள்ளத்தே குளிர்ச்சியெழுந்தது. அக்குளிர்ந்த எண்ணமே வேனிலின் வெம்மையை நீக்கிற்று. அதனால் 'ஒண்ணுதல் அரிவையை உள்ளுதொறும் தண்ணியவாயன ஆறே' என்றனன்.

**6.8.3 பாடல் எண்:323**

வளஎயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீங்கி
வந்த நெஞ்சம் நீ நயந்தோள் பண்பே (23)

இ∴து இடைச்சுரத்துத் தலைமகள் குணம் நினைந்த தலைமகன் அவள் பண்புவந்தன என உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**6.8.3.1 கூற்றுவிளக்கம்**

தலைமகன் தலைவியைப் பிரிந்து சென்றனன்; இடைச்சுரத்தே தலைமகள் குணநலன்களை நினைந்தனன்; தலைவியின் பண்புகள் அரிய வழிவகைக் கடந்து வந்தன என்று உவந்து தன் நெஞ்சிற்குக் கூறியது.

**6.8.3.2 உரை**

என்நெஞ்சமே கேள், நீ காதலிக்கும் தலைமகளுடைய பண்புகள், கொடிய காட்டின்கண் கவர்ந்த வழிகள் பலவற்றையும் கடந்து வந்தன. அவை எத்தகைய வழிகள் எனில் கூரிய பற்களை உடைய செந்நாய் வயவு நோய் கொண்டு வருந்தும் . தன் பெண் நாயின் பொருட்டு, கள்ளிகள் நிறைந்த சுரத்திடையே பன்றியின் வரவை நோக்கியிருக்கும்; அத்தகைய வழிகள் பலவற்றைக் கடந்து வந்தன காண் என்றான் தலைவன்.

**6.8.3.3 உரைவிளக்கம்**

வயா- கருவுற்றிருக்கும் பெண்ணின் உயிர்கட்குத் தோன்றும் ஆசையால் உண்டாகும் நோய்.. மகளிர்க்கு வரும் வயாநோயினை அறிந்து அவர் அவாவிய பொருளை ஈட்டிக்கொணர்ந்து கொடுத்து செந்நாய் தன் பிணவின் பொருட்டு முள்ளுடைய கள்ளியங் காட்டினூடே

குறிப்பு

பதுங்கிக் கிடந்து கேழல் வேட்டையாடுதல் போன்று என்னும் பகுதி விளக்குகிறது. செந்நாயின் செயலைக்கண்ட தலைவன் நெஞ்சம் தலைமகளை நினைத்தலும், அவளுடைய குணம், செயல்கள் மனக்கண்ணில் தோன்றக் கண்டு மகிழ்வான், நெஞ்சமே நீ நயந்தோள் பண்பு ஈண்டும் வந்தன காண் என்றான்.

### 6.8.4 பாடல் எண்:324

எரிகவர்ந்து உண்ட என்றூழ் நீள்இடைச்
சிறிதுகண் படுப்பினும் காண்குவென் மன்ற
நள்ளென் கங்குல் நளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கின்
தேம்பாய் கூந்தல் மாஅ யோளே (24)

இது பிரிந்து வந்த தலைமகன் தலைமகளை நலம் பாராட்டக் கண்ட தோழி, இவள் குணத்தினை மறந்து அமைந்தவாறு யாது? என வினவினாட்கு அவன் சொல்லியது.

#### 6.8.4.1 கூற்றுவிளக்கம்

தலைவன் செய்பொருள் காரணமாகப் பிரிந்து சென்று இல்லம் திரும்பினன். திரும்பிய தலைமகன் தலைவியை நலம் பாராட்டினன். இது கண்ட தோழி, இவன் குணத்தினை மறந்து யாங்ஙனம் அமைந்தீர் என்று வினவினள். வினைவியாட்குத் தலைவன் சொல்லியது.

#### 6.8.4.2 உரை

காட்டுத்தீ எழுந்து பகலே யன்றி இரவுப் பொழுதிலும் எதிர்ப்பட்ட பொருள்களை எரித்துக் கொண்டு செல்லும் கோடை காலத்தில் நீண்ட வழியிடைக்கண், பகற்பொழுதில் சிறிது நேரம் யான் கண்ணயர்ந்தாலும், அந்தச் சிறிது நேரத்தில் காணும் கனவின் கண், நள்ளெனும் நள்ளிரவுப் பொழுதின்கண், பெரிய மனையகத்து நின்ற நிறத்தல் வேங்கை மலர் போல வீறுபெற்ற சுணங்கினையும், தேன் சொரியும் கூந்தலையும், மாமை நிறத்தினையும் உடைய தலைமகளைத் தெளிவாகக் கண்டு அமைந்தேன். ஆதலின் இவள் குணத்தினை யான் மறக்குமாறில்லை என்றான் தலைவன்.

#### 6.8.4.3 உரைவிளக்கம்

வெயில் மிகுதியுடைய நீண்ட வழியில் நெடிய நேரம் தூங்க இயலாதலின் சிறிது நேரமே உறங்க முடியும். அதனால் ”சிறுதுகண் படுப்பினும்” என்றான் வேங்கை வென்ற சுணங்கினையும் தேம்பாய் கூந்தலையும் மாமை நிறத்தினையும் உடைய தலைவி என்றது தலைவன் நலம் பாராட்டியதாகும். உறங்கும் பொழுது அவளைக் கனவில் கண்டும் கூடியும் மகிழ்ந்தேன் என்பான் “காண்குவென் மன்ற” என்றான்.

### 6.8.5 பாடல் எண்:325

வேனில் அரையத்து இலைஒலி வெரீஇப்
போகில்புகவு உண்ணாது பிறிதுபுலம் படரும்
வெம்பலை அருஞ்சுரம் நலியாது
எம்வெங் காதலி பண்புதனைப் பெற்றே (25)

இது பிரிந்து வந்த தலைமகன் சுரத்தின் வெம்மை எங்ஙனம் ஆற்றினீர்? என்ற தோழிக்குச் சொல்லியது.

#### 6.8.5.1 கூற்றுவிளக்கம்

வினைவயின் தலைவியை விடுத்து பிரிந்து சென்று வினைமுடித்துத் திரும்பினன் தலைமகன். தலைமகனைப் பார்த்து நீங்கள் சென்ற சுரத்தின் வெம்மையை எங்ஙனம் பொறுத்துக் கொண்டீர் என் வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

#### 6.8.5.2 உரை

வேனிற்காலத்தே எழுந்த சூறைக்காற்றால் அலைப்புண்ட அரசமரத்தின் முதிர்ந்த இலைகள் அசைதலால் எழுந்த ஓசைக்கு அஞ்சிய பறவைகள் தாம் இரைதேடி உண்ணுதலைச் செய்யாது வேற்று நிலங்களை நினைந்து செல்லும்படியான வெப்பம் நிறைந்த அரிய சுரத்தினை எம்மால் விரும்பப்பட்ட காதலியின் - தலைமகளின் பண்புகளைத் துணையாகப் பெற்றுக் கடந்தோம் ஆதலின் வெம்மை எம்மை வருந்தாவாயிற்று என்றான் தலைவன்.



#### 6.8.5.3 உரைவிளக்கம்

அரையம் - அரசமரம் என இக்காலத்து மருவி வழங்கப்படுகின்றது. பனிக்காலத்து இலைமுதிர்ந்து, வேனிற் தொடக்கத்தில் இலை உதிர்ந்து, முதுவேனிற்காலத்தே புதுத்தளிர் தோன்றும். வேனிற்காலத்தே புதுத்தளிர் தோன்றும் முதிர்ந்த இலைகள் உதிரும் காலமாகிய இளவேனில் என்பதுபட ”வேனில் அரையத்து இலைஒலி” என்றான். காதலியின் பண்புகளைத் துணையாகப் பெற்றமையின் அருஞ்சுரம் நிலயாதாயிற்று என்றான்.

**6.8.6 பாடல் எண்:326**

அழல் அவிர் நனைந்தலை நிழலிடம் பெறாது
மடமான் அம்பிணை மறியொடு திரங்க
நீர்மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னா மன்ற சுரமே
இனிய மன்ற யான் ஒழிந்தோள் பண்பே (26)

இ∴து இடைச்சுரத்து வெம்மை ஆற்றானாகிய தலைமகன் தலைமகள் குணம் நினைந்து நொந்து சொல்லியது.

**6.8.6.1 கூற்றுவிளக்கம்**

தலைமகன் வினைமேற் சென்று பிரிந்தனன். இடைச்சுரத்து வெம்மையை ஆற்றானாயினன். அப்பொழுது தலைமகள் குணங்களை எண்ணி மனம் நொந்து கூறியது.

**6.8.6.2 உரை**

வெப்பம் மிக்க சுரத்தின்கண் நிழலைக் காண்டல் அரிது. நிழல் உள்ள இடம்பெறல் ஆகாமையினால் மடமை பொருந்திய மானின் அழகிய பிணை தன் குட்டியோடு கூடி வருந்தா நிற்கும். மலை நீரால் பக்கம் அலைக்கப்பட்டு அறுக்கப்பட்ட மிகவும் சிறியதாய் வழியினை உடைய சுரம். தெளிவாக துன்பம் தருவதொன்றாம். ஆயினும் யான் பிரிந்து நீங்கியவள் பண்புகள் இன்பம் தருவனவாம்.

**குறிப்பு**

**6.8.6.3 உரைவிளக்கம்**

நனந்தலை - அகன்ற இடம். வெம்மை மிக்கிருத்தலின் 'அழலவில் நனந்தலை' என்றான். முல்லை நிலத்துச் செல்லாது சுரத்தின் கண் இயங்கிற்றாதலின் மடமான் அம்பினை என்றான். தலைமகளின் பண்புகள் அவன் உள்ளத்துக்கு ஊக்கமும் உவகையும் நல்கி இன்பம் பயத்தலின் "இனிய மன்ற யான் ஒழிந்தோள் பண்பே" என்றான். இன்னா இனிய முரண்அணி சிறப்பாக அமைந்தள்ளது. இத்தகைய சிறப்புடைய யான் பிரியாதினிதுறைதற்கு இயலாமல் உலகியலை அஞ்சி இவள் வழங்கும் பேரின்பத்தை நுகராமல் பொருளீட்டப் பிரிந்து போயினேன் மன் என்பான்.

**6.8.7 பாடல் எண்:327**

பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சிச்
சிறுகண் யானை நிலம்தொடல் செல்லா
வெயில்முளி சோலைய வேய்உயர் சுரனே
அன்ன ஆரிடை யானும்
தண்மை செய்தஇத் தனையோள் பண்பே (27)

இது பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின் கண் தலைமகள் குணம் நினைந்து இரங்கிச் சொல்லியது.

**6.8.7.1 கூற்றுவிளக்கம்**

தலைமகளைப் பிரிந்து சென்ற தலைமகன் இடைச்சுரத்தின்கண் தலைமகளின் குணநலன்களை நினைந்து வருந்திச் சொல்லியது.

**6.8.7.2 உரை**

மூங்கில்கள் மட்டும் உயர்ந்து தோன்றுகின்ற இந்தப் பாலைப் பரப்பின் கண்ணே வாழ்கின்ற சிறிய கண்களையுடைய யானைகள், தம்முடைய புள்ளியும் வரியும் பொருந்திய நெடிய பெரிய கை வெந்தொழியுமே என்று அஞ்சி நிலத்தைத் தொடாதே நின்றன. தொடவியலாத அத்தகைய வெயிலால் உலர்ந்த சோலைகளை உடைய இந்தப் பாலையினது அத்தகை கொடிய நடத்தல் அரிய வழியினிடத்தேயும் வந்து நம் காதலியாகிய பெருந்தகையோளின்

குறிப்பு

நற்பண்புகள் குளிர்ச்சி நல்கி நம்மைப் பேணுவனவாயின. வாழ்க அவள் மாண்பு என்றனன்.

### 6.8.7.3 உரைவிளக்கம்

யானை நிலம் தொடல் செல்லாத நிலம் ஒருபக்கம்; வெயிலால் உலர்ந்த சோலைகளை உடைய நிலம் ஒரு பக்கம்; இத்தகைய சுரநெறிகள் என்பதாம். தலைவியானவள் தன்னைப் பேணுவதொடமையாது தான் வலிந்து அவளைப்பிரிந்து செல்லும் நெறியினும் நம் நினைவிலே தோன்றி இப்பாலை வெப்பம் தோன்றாவண்ணம் நம் நெஞ்சைக் குளிர்வித்துப் பேணுவாளாயினள். பெண்ணிற்பெருந்தக்க யாவுள்? என்று விந்து பாராட்டிய படியாம்.

---

### 6.8.8 பாடல் எண்:328

---

நுண்மழை தளித்துஎன நறுமலர் தாஅய்த்  
தண்ணிய வாயினும் வெய்ய மன்ற  
மடவரல் இன்துணை ஒழியக்  
கடமுதிர் சோலைய காடுஇறந் தேற்கே (28)

இது "மழை வீழ்தலாற் சுரம் தண்ணென்றது இனி வருத்தம் இன்றிப் போகலாம்" என்ற உழையரை நோக்கித் தலைமகன் சொல்லியது.

### 6.8.8.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் செய்வினைக்காகத் தலைமகளைப் பிரிந்து சென்றனன். சென்றதோ வெம்மைமிக்க பாலைவழி. இவன் சென்றக் காலை மழை பெய்தமையின் சுரம் வெம்மை தணிந்து தண்ணென்று இருந்தது. இனி வருத்தமின்றிச் செல்லலாம் என்று உழையர் கூறினர். அதனைக் கேட்ட தலைமகன் உழையரை நோக்கிச் சொல்லியது. உழை - பக்கம்; உழையர்; அருகில் இருந்தோர்.

### 6.8.8.2 உரை

மடப்பமும் அழகும் பொருந்திய இனிய துணைவியைப் பிரிந்து, சுரத்தையும் அதனைச் சூழ்ந்த மரச் செறிவுகளையும் உடைய

காட்டினையும் கடந்து போந்த எனக்கு நுண்ணிய துளியாக மழை பெய்தமையால் நறிய மலர்கள் பரந்து தண்ணியவாய்த் தோன்றினும் கடமும் காடும் வெம்மையால் இருந்தன் என்றான் தலைவன்.

குறிப்பு

### 6.8.8.3 உரைவிளக்கம்

தான் பொருளீட்டற்குப் பிரியும் காலத்தே, யானும் உடன் வருகிறேன் என்ற தலைவியிடம், பாலைநிலம் கொடிது; நின்றளிரடி அதன் வெம்மையைப் பொறா. இங்கேயே இருப்பாயாக. யான் இவ்வேனிற் பருவம் முடிந்து தலைப்பெயல் பொழியும் முன்னரே ஒருதலையாக மீண்டு நின்பால் வருகுவன் என்று கூறி வந்தேன். இப்பொழுது தலைப்பெயல் பெய்தும் ஈண்டே இருக்கின்றேன். அவள் நிலைதான் என்னையோ? வரும்பொழுதே அவள் விரும்பியபடி அவளையும் உடன் கொண்டு வராதொழ்ந்தேனே! என்று மனம் வென்பும் தலைவன், மழைபெய்து குளிர்ந்தெனக் கூறிய வினையாளர்க்கு அந்த மழை பெய்தமையே என் மனம் வெம்பவும் காரணமாயிற்றெனக் கூறித் தலைவன் வருந்தினன்.

### 6.8.9 பாடல் எண்:329

ஆள்வழக்கு அற்ற பாழ்படு நனைந்தலை
வெம்முனை அருஞ்சுரம் நீந்தி நம்மொடு
மறுதரு வதுகொல் தானே செறிதொடி
கழிந்துகு நிலைய வாக
ஒழிந்தோள் கொண்டஎன் உரங்கெழு நெஞ்சே (29)

இ∴து, இடைச்சுரத்தின்கண் மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைமகன் உழையர்க்குச் சொல்லியது.

### 6.8.9.1 கூற்றுவிளக்கம்

தலைமகன் வினைமேற் கொண்டு பிரிந்தனன். இடைச்சுரத்தின்கண் தலைமகளை நினைந்தனன். வினைமேற் செல்லாமல் நெஞ்சு அவனை மீளும்படி தூண்டிற்று. அங்ஙனம் மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைமகன் உழையர்க்குச் சொல்லியது.

### 6.8.9.2 உரை

குறிப்பு

தலைமகன் தன்தோளிடைச் செறிந்து நின்ற வளைகள் நெகிழ்ந்து நீங்கும் நிலைமையள் ஆயினள். மனைக்கண் தனித்துறையும் தலைமகளாற் கொள்ளப்பட்ட என் திண்ணிய வலிமை உடைய நெஞ்சம் மக்கள் வழங்குதல் இல்லாத காரணத்தான் பாழ்பட்ட இடத்தினை உடைய வெவ்விய ஆறலைப்போர் வாழிடமாகிய அரிய காட்டினைக் கடந்து நம்மொடு வாராது மீளுதலைக் கருதுங் கொல்லோ. இ∴து ஏன் எனத் தலைவன் கூறினன்.

### 6.8.9.1 உரைவிளக்கம்

வெம்முனை - ஆறலைப் போர் உறையும் இடம். மறுதருவது - மீளல் உறுவது. தலைமகன் தன் பிறிவை என்னித் தலைமகள் வருந்துகின்றாள். உடம்பு மெலிந்து நின்றாள். அதனால் தொடிகழிந்து உகும் நிலையடைந்தது என்பது பட "செறிதொடி கழிந்துகு நிலையவாக" என்றான்.

தலைவன் பிரிவினை நினைத்து வளைகழன்று வருந்தும் தலைவியின் நிலைமையையே இடையறாது நினைந்து நினைந்து தன்னெஞ்சம் உருகுவதாய்த் தான் மேற்கொண்ட பொருளீட்டற்கண் ஈடுபடமறுத்தலின் செல்வது இடையூறுபடுதலின் போகவும் இயலாமல் மீளவுந் துணிவின்றித் தடுமாறும் தலைமகன் அந்நிலையினை நெஞ்சின் மேலேற்றிக் கூறினன்.

### 6.8.10 பாடல் எண்:330

வெம்துகள் ஆகிய வெயிற்கடம் நீந்தி
வந்தனம் ஆயினும் ஒழிகஇனிச் செலவே
அழுத கண்ண ளாய்நலம் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுரம் நினைக்கும்
அவிர்கோல் ஆய்தொடி உள்ளத்துப் படரே (30)

இது பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தின்கண் தன்நெஞ்சிற்குச் சொல்லியது

### 6.8.10.1 உரை

நெஞ்சமே! வெம்மையுடைய துகள்மிக்க, வெயில் காயும் காட்னைக் கடந்து வந்துளோம். எனினும் விளக்கமும் திரட்சியுமுடைய ஆராய்ந்து கொள்ளப்பட்ட தொடியினை உடைய தலைவியின் மனத்துளதாகிய நினைவு, கண்களில் நீர் சோரவும், ஒப்பனை செய்யப்பட்ட மேனிநலம் சிதையவும், சூரியனின் வெம்மை சுட்டெரிக்கின்ற சுரத்தின்கண் செல்லும் நம்முடைய செலவின் மேலதாகி அவளை வருத்துகின்றது. ஆதலின் மேலே செல்லுதலை இனி ஒழிவாயாக என்றான் தலைவன்.

### 6.8.10.2 உரைவிளக்கம்

கல்லும் மண்ணும் உடைந்து நுண்ணியபொடியாகி, மிக நுண்ணிதாயினும் வெம்மை செய்தலின் "வெந்துகள்" எனப்பட்டது. யாம் புறப்படு முன்னரே அவள் கண்கனிந்து அழத்தொடங்கிவிட்டாள் என்பான் "அழுதகண்ணள்" என்றான். நாம் பன்முறையும் ஆராய்ந்து இவை நல்ல எனப் பாராட்டிய அவளது பெண்மைப் பெருநலம் சிதையும்படி அவளை இந்நிலையில் விட்டு நாம் போதல் தகுமோ என்பான். "ஆய்நலம் சிதைய நினைப்பிக்கும்" என்றான். இந்நிலையிலேயே நாம் செல்லின் ஓரொவழி அவள் இறந்து படுதலுங்கூடும்.
ஆதலின் இப்பொழுது செல்லும் இச்செலவினைத் தவிர்வேம் என்பான் "இச்செலவு ஒழிக" என்றான். இப்பொழுது செலவழுங்கி இன்னும் அவளை நன்கு தெளிவித்துப் பின்னர்ச் செல்வோம் என்பது குறிப்பெச்சம்.

## 6.9 தொகுத்துக் காண்போம்

- ஐங்குறுநூற்றைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- ஐந்திணைகளில் ஒன்றான பாலைத் திணையின் முதல், கரு, உரிப்பொருள்கள் பற்றி அறிந்து கொண்டீர்கள்
- பாலைத்திணையைப் பாடிய ஓதலாந்தையார் பற்றிப் புரிந்து கொண்டீர்கள்



## 6.10 சோதித்தறியும் வினாக்கள்

குறிப்பு

1. ஐங்குறுநூறு பற்றி விளக்குக.

……………………………………………………………………………

…………………………

2. ஓதலாந்தையார் பற்றி விளக்குக

……………………………………………………………………………

……………………………3. பாலைத் திணை பற்றி விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………4. செலவழுங்குவித்தல் என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………

5. செலவுப் பத்து என்றால் என்ன?

……………………………………………………………………………

………………………

6. இடைச்சுரம் என்பதை வரையறு

……………………………………………………………………………

…………………………

## 6.11 பயிற்சி வினாக்கள்

1. பாலைத் திணையின் முதல், கரு, உரிப் பொருள்களைத் தொகுத்துரைக்க

2. செலவழுங்குவித்த பத்தின் மூலம் அறியலாகும் தோழியின் மனநிலையைப் புலப்படுத்துக

3. செலவுப் பத்தின் மூலம் பாலைத் திணைக் காட்சிகளைக் கட்டுரைக்க

4. இடைச்சுரப்பதின் வழி பாலைத் திணையின் கொடுமைகளை தோழி கூறுவதை விளக்குக

## 6.12 மேலும் படித்தறிக

**1. பொ.வே.சோமசுந்தரனார், ஐங்குறுநூறு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18, முதற்பதிப்பு - 1961, மறுபதிப்பு – 2009.**

குறிப்பு

## கூறு 7

## கீரந்தையார் பாடியது

## திருமால்

7. பாடஅமைப்பு

7.1 அறிமுகம்

7.2 குறிக்கோள்கள்

7.3 பரிபாடல் விளக்கம்

7.4 திருமால் - கீரந்தையார்

7.5 செவ்வேள் - குன்றம் பூதனார்

7.7 தொகுத்துக் காண்போம்

7.8 பயிற்சி வினாக்கள்

7.9 மேலும் படித்தறிக

### 7.1 அறிமுகம்

பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட சங்க இலக்கிய நூல்களில் பரிபாடலும் ஒன்றாகும். பரிபாடலில் மொத்தம் 70 பாடல்கள் உள்ளதாக திறனாய்வாளர்கள் கூறுவர். ஆனால் தற்பொழுது 22 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. வையை, செவ்வேள், திருமால் ஆகிய செய்திகளைப் பற்றி இந்நூலுள் காணப்படுகின்றன. பல அறிவியல் செய்திகளையும், முருகனின் திருமணக் கோலமும், முருகனின் திருவிளையாடல்களும், திருமாலின் அவதாரச் சிறப்புகளையும், மதுரை மாநகரின் எழில் வளத்தையும், வையையாற்றின் பெருமையினையும் இந்நூல் அதிகமாகப் பேசுகிறது. கீரந்தையார் எனும் புலவர் திருமால் பற்றிப் பாடிய 2ஆம் பாடலும், குன்றம் பூதனார் முருகனைப் பற்றிப் பாடிய 9 பாடலும் பாடப்பகுதியாக அமைகிறது.

### 7.2 குறிக்கோள்கள்

- பரிபாடல் பற்றி அறிந்து கொள்வீர்கள்

- கீரந்தையாரின் பாடற் குறிப்புகளின் மூலம் திருமாலைப் பற்றி உணர்ந்து கொள்வீர்கள்
- குன்றம் பூதனார் பாடிய பாடலின் மூலம் செவ்வேள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
- இவ்விருவரின் பாடல்கள் வாயிலாக பாடல் நுட்பத்தைப் புரிந்து கொள்வீர்கள்.

குறிப்பு

## 7.3 பரிபாடல்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடம் கொடுத்துப் பரிந்து செல்லும் ஓசையையுடைய பரிபாட்டுகளின் தொகுப்பாக உள்ளதால் இது பரிபாடல் என்னும் பெயர் ஏற்பட்டது.

இது இருபது அடிகள் முதல் நானூறு அடிகள் வரை பெற்று வரும்.

“பரிபாடற் கண் மலையும் யாறும் ஊரும் வருணிக்கப்படும்” என்று இளம்பூரணரும்,

“அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் பெற்று வரும்” என்று பேராசிரியரும்,

“தெய்வ வாழ்த்து உட்பட காமப் பொருள் குறித்து உலகியலே பெற்று வரும்” என்று நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர்.

பரிபாடலில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பதிமூன்றாவது, பதினைந்தாவது ஆகிய ஆறு பாடல்களும் திருமாலைப் பற்றியவை. ஐந்து, எட்டு, ஒன்பது, பதினான்கு, பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது, இருபத்தொன்று ஆகிய எட்டுப் பாடல்களும் செவ்வேளைப் பற்றிப் பாடப்பட்டவை. ஆறு, ஏழு, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதினாறு, இருபது, இருபத்திரண்டு ஆகிய பாடல்கள் வையைப் பற்றிப் பாடப்பட்டவை.

செவ்வேள், திருமால் வையை ஆகிய பொருள்களைப் பற்றி பதின்மூன்று புலவர்கள் பாடியுள்ளனர். ஏழு சான்றோர் பண் வகுத்துள்ளனர்.

**பாடிய புலவர்கள்**

கீரந்தையார், கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், மேயோடக் கோவனார், குன்றம் பூதனார், கரும்பிள்ளைப் பூதனார், நல்வழுதியார், நல்லெழுதியார், கேசவனார், இளம்பெரு வழுதியார், நப்பண்ணனார், நல்லழிசியார், நல்லச்சுதனார்.

குறிப்பு

**பண் வகுத்தோர்**

நன்னாகனார், பெட்டகனார், மருத்துவன், நல்லச்சுதனார், கண்ணகனார், பித்தாமத்தர், கேசவனார்

**பண்**

முதல் பன்னிரண்டு பாடல்களும் பாலையாழ் என்னும் பண்ணிலும், அடுத்து வந்த ஐந்து பாடல்கள் நோதிரம் என்னும் பண்ணிலும், அடுத்து இறுதியாக வரும் நான்கு பாடல்கள் காந்தாரப் பண்ணிலும் அமைக்கப்பட்டுள்ளன. இறுதிப் பாடலுக்குப் பண் தெரியவில்லை.

**காலம்**

பரிபாடலின் காலம் கி.பி 634 என்று எல்.டி.சாமிக்கண்ணு கூறியுள்ளார். கி.பி.மூன்றாம் நூற்றாண்டு என்று டாக்டர் மா.இராசமாணிக்கனார் கூறுகிறார். பலர் பலவாறு கூறினும் இன்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது பரிபாடல் எனக் கொள்ளலாம்.

**பாடுபொருள்**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய இந்த ஓங்கு பரிபாடல் அகத் துறையும் புறத்துறையும் ஆகிய இருபொருள் பற்றிப் பாடப்பெற்ற நூலாகும்.

**பதிப்பித்தோர்**

உ.வே.சாமிநாதையர்

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

மீ.பொன்.இராமநாதன் செட்டியார்

## 7.4 திருமால்

**கீரந்தையார் பாடியது**

பண் வகுத்தவர்: நன்னாகையார், பண்: பாலையாழ்

குறிப்பு

**தொழுது பேணுவோம்**

தொன்முறை இயற்கையின் மதியொ. . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . மரபிற்று ஆகப்
பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழூழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருவுஅறி வாரத ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தன்பெயல் தலைஇய ஊழியும் அலையிற்று
உண்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுஉயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டம்கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்திலின் முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வ! நிற் பேணுதும் தொழுதும்

ஊழிக்காலம் என்பது இவ்வுலகந் தோன்றப் பரந்து மீளவும் அழிந்து ஒடுங்குவது வரையுள்ள ஒரு பரந்த கால எல்லையைக் குறிப்பதாகும். இவ்வாறு பன்முறை நிகழ்ந்து பல்லூழிக் காலங்கள் கடந்துள்ளன என்பர். இதுகாலை நிகழ்ந்து வருவதான இவ்வூழியை வராக கற்பகம் என்றும் உரைப்பர்.

பழைமையாகத் தொடர்ந்து வருகின்றதான இயற்கை விதியின்படி, அதனையே முறையாகக் கொண்டு, பசிய பொன் மயமான தேவருலகமும், இம்மண்ணுலகமும் ஊழிமுடிவிலே அழிந்து பாழ்பட்டுப் போயின. வெளியாகிய வானமும் இல்லாது போயிற்று. ஊழிக்காலங்கள் பல இவ்வாறு தோன்றியும் ஒடுங்கியும் சென்றன. அதன்பின், கருவானது வளர்வதற்கு உரியதாகிய வானத்திசையிலே, மீளவும் கருத்தோற்றம் பிறந்தது. அஃது உருவென எதனையும் அறிதற்கு இயலாத நிலையிலே

பிறந்ததான ஒலியொன்றை மட்டுமே கொண்டதாக, நாத தத்துவப் பொருளாக இருந்தது. அத்தகைய முதலூழிக் காலமும் சென்றது. அதனையடுத்து அசையும் காற்றுப் பிறந்தது. காற்றின் இயக்கத்தோடுங் கூடியதாகத் திகழ்ந்த ஊழிகள் பலவும் தோன்றின. அதன் ஊழிக்காலங்களும் பல தோன்றிக் கழிந்தன. அதனையடுத்துத் தண்ணிய பெயலைக் கொண்டதாக நீரின் ஊழிக்காலங்கள் தோன்றின. அதனால், எங்கணும் பெருவெள்ளம் நிறைந்தது. அப்பெரு வெள்ளத்தினுள்ளே, அதனடியிலே இவ்வுலகமானது மூழ்கிக் கிடந்தது.

திருமாலாகிய நீதான், அவ்வெள்ளத்துள்ளே மூழ்கினை, ஆங்கு வெள்ளத்தடியிலே மூழ்கிக் கிடந்த இவ்வுலகினை உயரே எடுத்து வெளிக்கொணர்ந்த இச்செயலுக்கு உள்ளீடாக அமைந்தது. பெரிய இந் நிலவூழி எனப்படுகின்ற ஊழிக்காலம் ஆகும்.

இப்படித் தோன்றிய நிலவூழியும் தோன்றித், தோன்றிய பின்னரும் பலகாலங்கள் அவ்வாறே கிடந்து வந்தது. நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், குற்றமற்ற கமலம், வெள்ளம் என்று சொல்லப்படும் பேரெண்களின் அளவான காலங்கள் பலவும் அப்படியே கழிந்தன. நின் செயற்குறிப்பின் தொகுதியாகி எழுந்த இவற்றையெல்லாம் அழித்தும் மீளத் தோற்றுவித்தும் வருகின்ற திருவிளையாட்டினை நீயும் தொடர்ந்து நிகழ்த்தி வந்தனை!

நின் இச் செய்கையினை எண்ணி வரையறுத்து, இத்தன்மைத்தென உணர எவராலுமே இயலாது. பல்லூழிகளுக்கும் முற்பட்டவனாக, ஆதி முதலாக, நீதான், நீ ஒருவனே தான் இருப்பவன். ஆதலின், நின் முதுமையையும் எத்தனை ஊழிகளின் அளவென எவரும் உணர்ந்து அறிய மாட்டார்கள்! இத்தகைய பழைமையினை யுடையவனே! சக்கரப் படையினை வலக்கரத்தே ஏந்தியுள்ள தலைவனே! நின்னைத் தொழுது, நின் புகழைப் போற்றுகின்றோம். எமக்கும் அருள்வாயாக.

**தொன்மை நிலை**

நீயே, வளையொடு புரையும் வாலி யேற்கு அவன் (20)
இளையன் என்போர்க்கு இளையை ஆதலும்
புதைஇருள் உடுக்கைப் பொலம்பனை கொடியோற்கு
முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்
வடுவில் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த

கெடுவில் கேள்வியுள் நடுவர் குதலும்
இந்நிலைத் தெரிபொருள் தேரின் இந்நிலை
நின்நிலைத் தோன்றும்நின் தொல்நிலைச் சிறப்பே

சங்கினோடு ஒப்பான நிறத்தைக் கொண்ட வெண்மேனியன் பலராமன், அவனும் நீயே! அவனுக்கு இளையோனாகிய கண்ணன் நீ என்போர்க்கு அவ்வாறே அவன் தம்பியாகவும் நீயெ தோன்றுகின்றனை! நிறைந்த இருளொத்தக் கருநிற உடையையும், அழகிய பனைக் கொடியையும் உடையோனாகிய அப்பலராமனுக்கு நீ முற்பட்டவன் என்போருக்கு, அவ்வாறே அவனுக்கு மூத்தோனாகவும் காணப்படுகின்றனை!

குற்றமில்லாக் கோட்பாடுகளைக் கொண்டவர் உயர்ந்தோர். அவர் ஆராய்ந்த அழிவற்ற மறைகளுள், அவற்றின் நடுவான, அவற்றின் உட்பொருளாக அமைந்து விளங்குபவனும் நீயே! இந்நிலையவான, தெரிந்துள்ள உண்மைகளை எல்லாம் ஆராயின், இந்நிலையெல்லாம் நின்னிடத்துத் தோன்றும் நின் தொன்மை நிலையினது சிறப்பாகும்.

**உரை சிறந்தது**

ஓங்குஉயர் வானின் வாங்குவில் புரையும்
பூண்அணி கவைஇய வார்அணி நித்திலம்
நித்தில மதானி அத்தகு மதிமறுச்
செய்யோள் சேர்ந்த நின்மாசுஇல் அகலம்
வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்
வைவான் மருப்பிற் களிறுமணன் அயர்பு
புள்ளி நிலனும் புரைபடல் அரிதென
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று

ஓங்கி உயர்ந்தது வானம். அதனிடத்தே வளைந்த வானவில் தோன்றும். அதனையொத்து ஒளிவிளங்கும் பலநிறப் பூண்களை அணிந்தவன். அவற்றிற்கு இடையே வாரால் தொடுக்கப்பெற்ற அழகிய முத்தாரத்தை அணிந்திருப்பவன். அதனிடத்தே முத்துப் பதித்த பதக்கம் விளங்கத் திகழ்பவன் நீ! அழகிற் சிறந்தது அப்பதக்கம். அது முழுநிலவைப் போன்று ஒளியுடன் தோன்றும். குற்றமற்ற நின் மார்பினிடத்தே செய்யோனாகிய திருமகள் நிலையாக வீற்றிருப்பாள்.

அவளிருக்கும் நிலை நித்திலப் பதக்கமாகிய மதியிடத்தே மறு ஒன்று அமைந்து விளங்குவது போன்று காணப்படும்.

மிக்கெழுகின்ற அலைகளாலே கழுவப்பட்ட, ஒளி விளங்கும் புள்ளிகளுக்கு இடையே, கூர்மையான வெள்ளிய நின் கொம்புகளுக்கு இடையே, நிலமகள் தானும் ஒரு புள்ளி போலவே அந்நாளில் விளங்கினாள். வராகக் களிறாகிய நீதான் அவளை அந்நாளிலே எடுத்து மணந்து கொண்டாய். நின் கொம்பிடத்துப் புள்ளிகளுள், தானும் ஒரு புள்ளியளவாகவே விளங்கிய நில மகளும் ஏதும் துன்புறுதல் அரிது என்னுமாறு, அவளை நீதான் தாங்கிக் காத்தனை! இவ்வாறு ஊழி வெள்ளத்துள் மூழ்கிக் கிடந்த நிலமகளை எடுத்துக் காத்த நின் சிறப்பினை எண்ணுவோர், நின் ஆற்றலைப் புகழ்ந்து உரைப்பார்கள். அப்புகழுரைகளோடு, நின் செயலும் மென்மேலும் சிறந்து விளங்கும்.

**நின்படை**

ஒடியா உள்ளமொடு உருத்துஒருங்கு உடன்இயைந்து
இடிஎதிர் கழறும் கால்உறழ்பு எழுந்தவர்
கொடியறுபு இறுபு செவிசெவிடு படுபு
முடிகள் அதிரப் படிநிலை தளர
நனிமுரல்வளை முடியெழிபுஇழிபு
தலைஇறுபு தாரொடு புரள
நிலை தொவைபு வேர்தூ மடல்
குருகு பறியா நீளிரும் பனைமிசைப்
பலபதி னாயிரழ் குலைதர உதிர்வபோல்
நில்லாது ஒருமுறை கொய்பு கூடி
ஒருங்கு உருண்டு பிளந்து நெரிந்து உருள்பு சிதறு
பளறு சொரிய நிலம் சோரச்
சேரார் இன்னுயிர் செகுக்கும்
போர்அடு குரிசில் நீ ஏந்திய படையே

தளர்ச்சியுற்ற உள்ளத்தோடு கூடியவராக, நின்பால் சினம் கொண்டவராக, ஒருங்கே ஒன்றுபட்டுப் பலரும் திரண்டு கூடியவராக, காற்றையொத்த வலிமையும் விரைவும் கொண்ட வராக, இடியொத்த முழக்கத்தைக் கொண்டவருமாகப் பகைவர் நின்மேற் போருக்கு எழுந்தனர். அவர்களின் கொடிகள் அற்று வீழவும், செவிகள் செவிடுபட்டுப் போகவும், மணிமுடிகள் அதிர்ந்து வீழவுமாக, அவர்கள்

நின்றநிலை முற்றவும் கெட்டழியுமாறு, மிக்க குரலோடு நின் சங்கமும் அந்நாளிலே முழங்கிற்று.

நின் கையில் ஏந்திய சக்கரப் படையானது, நின் பகைவரின் தலைகள் எல்லாம் அறுபட்டு வீழவும், அறுபட்டு வீழ்ந்த அத்தலைகள் அவர் கழுத்து மாலைகளோடு கிடந்து புரளவும், அவர்களை நிலைகெட்டு அழியுமாறு செய்தது. தம் நிலை வெட்டுப்பட்டுப் போக, வேரும், தூரும், மடலும், குருத்தும் சிறிதும் அழிவெய்தாதிருக்கவும், நெடிய கரிய அப்பனைகளின் மேலுள்ள பலவான பதினாயிரம் காய்களைக் கொண்ட குலைகள் எல்லாம் அறுபட்டுத் தரையிடத்தே வீழ்ந்து சிதறுவதைப் போலப், பகைவரின் தலைகள் பலவும் அறுபட்டுச் சிதறி வீழ்ந்தன. வலியிழந்தன. சாய்ந்து, ஒரு முறையாகக் கொய்யப் பட்டுக் கூடி, ஒருங்கே உருண்டு பிளந்து சிதைந்து, விழுந்து, சிதறி உருண்டு ஓடின. அத்தலைகள் அவ்வாறு அவை அறுபட்டு வீழ்ந்தபோது, அவற்றினின்றும் வெளிப்பட்ட மூளையும் இரத்தமுமாகிய சேறு நிலத்திலே எங்கணும் பரவியது. இவ்வாறு பகைவரது இனிய உயிரைப் போக்கும், வெற்றிப் போரையுடைய தலைவனே! நின் வலிமைதான் என்னே!

**கருடக் கொடியோய்!**

ஒன்னார் உடங்குண்ணும் கூற்றம் உடலே
நின்னது திகழ்ஒளி சிறப்பில் திருமணி
கண்ணே, புகழ்சால் தாமரை அலர்இணைப் பிணையல்
வாய்மை வயங்கிய வைகல் சிறந்த
நோன்னை நாடின் இருநிலம் யாவர்க்கும்
சாயல் நினது வான்நிறை என்னும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே
அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வும்
எவ்வயி னோதயும் நீய
செவ்வாய் உவணத்து உயர்கொடி யோயே

நின் சக்கரப்படையின் உடலானது பகைவரின் உயிர்களை ஒருசேர உண்ணுகின்ற கூற்றம் ஆகும். பொன்னை உருக்கும் பொழுது எழுகின்ற செந்தீச் சுடரினைப் போல ஒளியிழந்து தோன்று விளங்கும் அதன் திறம்.

நின் திருமேனியது விளங்கும் ஒளியானது சிறந்த கரிய மணியைப் போன்றது. நின் கண்கள் புகழ்மிகுந்த தாமரை மலர்கள்

இரண்டை இணைசேரப் பிணைத்து வைத்தாற் போலத் தோன்றுவன. நின் வாய்மை பொய்யாது விளங்கும் நாளினைப் போன்றது. நின் சிறந்த தவ நிலைமையை ஆராயின் அதுதான் இப்பெருநிலத்தினும் பொறுமை மிக்கதாகும். யாவருக்கும் அருளுகின்ற நின் அருளின் தன்மையானது வானத்து மேகங்களைப் போன்றதாகும். இவ்வாறெல்லாம், நாவன்மை கொண்ட அருளாளர்கள், அருமறையின் உட்பொருளான நின்னைப் பற்றி, நின் செவ்வியைப் பற்றி, உரைத்துப் போற்றுவார்கள்.

சிவந்த வாயையுடைய கருடச் சேவலைப் பொறித்துள்ள, உயர்ந்த வெற்றிக் கொடியினை உடையோனே! முன்சொன்ன அப்பொருள்களையும், அவையன்றிப் பிறவான பொருள்களையும் ஒத்திருப்பவன் நீ! இவ்வாறு ஒப்பாயிருக்கும் நீயே, அவற்றைக் கடந்தவனாக, எவ்விடத்தானாகவும் பரந்து அவற்றைக் கடந்தவனாக எவ்விடத்தானாகவும் பரந்து விளங்குகின்றன!

**காணும் வரவு**

கேள்வியுள் கிளந்த ஆசான் உறையும்
படிநிலை வேள்வியுள் பற்றிடு ஆடு கொளலும்
புகழ்இயைந்து இசைமறை உறுகனல் முறைமுட்டித்
திகழ்ஒளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும்
நின் உருபு உடன் உண்டி
பிறர் உடம் படுவாரா
நின்னொடு புரைய
அந்தணர் காணும் வரவு

அந்தணர்க்குத் திருமால் எவ்வாறு வந்து தோன்றிக் காட்சி தருவான் என்பதனை இங்குக் கூறுகின்றார்.

வேதங்களுள் தேர்ந்த வேள்வித் தலைவன் சொல்லும் மந்திர மொழிகளினும், படிப்படியான நிலையையுடைய வேள்விச் சாலையுள் இடப்படும் யாகபலியாகிய ஆட்டினைக் கொண்டு போதலாகிய அச்செயலினும், புகழ்பாருந்த இசைக்கும் மறைவிதிகளின் படியே யாகத்தீயை முறையாக மூட்டி அது சுடரிட்டு எரியுங்காலத்தே, ஒள்ளிய அச்சுடரிடத்தே காணப்படும் வளமைப்பாட்டினை, ஏற்றுக் கொள்வதிலும் நின் உருவத்தோடு, நின் உணர்வையும், பிறரும் கண்டு போற்றி ஏற்றுக் கொள்வர். நின்னோடு கூடிய புகழ்மைக்குத் தக்கவாறு அந்தணர்

குறிப்பு

போற்றிக், காண்கின்ற நின்னுடைய வருகை இவ்வாறேயாகும், பெருமானே!

**எம் அறிவு துன்புறாதிருக்க**

வாய்அடை அமிர்தம்நின் மனத்தகத்து அடைத்தர
மூவா மரபும் ஓவா நோன்மையும் (70)
சாவா மரபின் அவரர்க்காச் சென்றநின்
. . . . . . . . . . . . மரபினோய் நின் அடி
தலைஉற வணங்கினேம் பன்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடும் கடும்பொடும பரவுதும்
கொம்பாடு அறியற்க எம் அறிவு எனவே! (76)

நின் மனத்துள்ளே, தேவர்கட்கு அமுதத்தைத் தருதற்கு நீதான் நினைத்தனை! அவ்வளவிலே அமுதம் அவர்கள் வாயினைச் சென்றும் அடைந்தது. அவர்கள் முதுமையற்ற தன்மையையும் தொலைவற்ற வலிமையையும் பெற்றனர். சாதல் அற்ற தன்மையையும் அவரகள் அடைந்தனர். இவ்வாறு, அமரர் பொருட்டாகச் சென்ற நின் அருண்மை வியத்தற்குரியது. இத்தகு நன்மை கொண்டோய்! நின் திருவடிகளைத் தலை பொருந்த யாமும் வணங்கினோம். கலக்கமற்ற நெஞ்சினோமாய், நின் பல புகழையும் சொல்லி நின்னைப் போற்றினேம். நின் திருவடிகளை வாழ்த்தினோம் எதற்காக?

எம் அறிவானது கொடுமையான தன்மை எதனையும் அறியாதிருக்குமாறு அருள்வாயாக என்பதற்காகவே! இதனை விரும்பியே எம் பல்வகைச் சுற்றத்தோடும் நின்னைப் போற்றுகின்றேம்! எமக்கும் கருணை பாலித்து அருளிச் செய்வாயாக!

## 7.5 செவ்வேள்

பாடியவர்: குன்றம் பூதனார்
பண் வகுத்தவர்: மருத்துவன் நல்லச்சுதனார்
பண்: பாலையாழ்

குன்றம்பூதனார் பரிபாடலின் 9 மற்றும் 18 - ஆவது பாடல்களைப் பாடியவர். இப்பாடல்கள் இரண்டும் செவ்வேள் பற்றியன. இவர் பாடியன இவ்விரு பரிபாடல்கள் மட்டுமே. சங்க இலக்கியங்களில் வேறெந்த

குறிப்பு

நூலிலும் இவர் பாடினார் இலர். இவர் முருகக்கடவுள் பால் அன்புடையவர் என்பதை இவ்விருபாடல்களும் உணர்த்தா நிற்கும்.

முருகப் பெருமான் வள்ளி நாயகியைக் காதலித்து மணந்து கொண்டான். இதனை அறிந்ததும் தெய்வானை அம்மைக்குச் சினம் ஒருபுறமும், அழுகை ஒருபுறமுமாக எழுந்து வருத்திற்று. இதன் தொடர்பான பல செய்திகளைச் சுவைபடக் கூறுகின்றார் ஆசிரியர்.

**கண்மழையும் வான்மழையும்**

இருநிலம் துளங்காமை வடவயின் நிவந்து ஓங்கி
அருநிலை உயர்தெய்வத்து அணங்குசால் தலைகாக்கும்
உருமுச்சூழ் சேட்சிமை உயர்ந்தவர் உடம்பு அட
எரிமலர்த் தாமரை இறைவீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறை ஊழ்த்து விழுநிகர் மலர் ஏய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற்று அண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ
மையிருநூற்று இமையுண்கண் மான்மறித்தோள் மணந்த ஞான்று
ஐஇருநூற்று மெய்ந்நயனத் தவன்மகள் மலர் உண்கண்
மணிமழை தலைஇஎன மாவேனில் காரேற்றுத்
தணிமழை தலையின்று தண்பரங்குன்று!

பெரிதான இந்நிலவுலகமானது நிலைகெட்டு அழிந்து போகாமற் படிக்கு, இதன் வடதிசைப் புறத்தே, உயர்ந்து ஓங்கிய அரிய நிலையினை உடையதும், உயரிய தெய்வத்தன்மை வாய்ந்த அணங்குகள் சிறப்புறப் பேணிக்காப்பதும், இடியேறுகள் சூழ்ந்திருக்கும் மிகவுயரிய முடிகளை யுடையதுமாகத் திகழும் இமயத்தினிடத்தே, உயர்ந்தோர் பலரும் வீற்றிருப்பார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டாட, எரியொத்த செந்தாமரை மலரைப் போலும் திருமேனியினைக் கொண்ட இறைவனான சிவபெருமான், தன் சடையிடத்தே தாங்கித் தரைக்கண் வீழச் செய்த பெரு வெள்ளமான கங்கை நீரானது, அப்பெருமானது விரித்த செஞ்சடைப் பொற்றையிடத்தே தோன்றித் தரைக்கண் விழுகின்ற ஒப்பற்ற மலரைப் போலத் தோன்றும். இவ்வாறாகக் கங்கையின் சீற்றம் தணியுமாறு தாங்கிக் காத்தவன். தானே தனிமுதல் என்னுஞ் சிறப்புடைய சலதாரி எனப் பெற்றனன்.

குறிப்பு

நீலமணிபோலும் கறைவிளங்கும் கழுத்தையுடையோனாகிய அத்தலைவனுக்கு மதிப்பு வாய்ந்த கார்த்திகை பெண்களிடத்தே தோன்றிய பெருமானே! நீதான் மைபூசிய இமைகளால் காக்கப்பெறும் மையுண்ட கண்களை உடையவளான, மான்மறியாகிய வள்ளி நாயகியை மணந்து கொண்டனை, அந்நாளிலே, ஆயிரங்கண்களை உடலிடத்துக் கொண்ட இந்திரனின் மகளாகிய தேவயானைப் பிராட்டியின் குவளை மலர் மையுண்டாற்போல் விளங்கும் கண்கள், மணிபோலும் நீர்த்துளிகளைச் சிந்தின. அதனைக் கண்டதும், பெரிதான அவ்வேனிற் காலத்தினும் மேகங்கள் திரண்டெழுந்து, தாமும் அழுவனபோல மிக்க மழையினைத் தணிணிய இப்பரங்குன்றிடத்துப் பெய்தலைத் தொடங்கியதே!

**தமிழாய்ப் பயன் கொள்வார்**

நான்மறை விரித்து நல்இசை விளக்கும்
வாய்மொழிப் புலவீா் கேண்மின்! சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போா் ஒத்து மெய்யுறு புணா்ச்சி புலத்தலிற் சிறந்தது கற்பே,
அதுதான்
இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்
பரத்தைஉள் ளதுவே பண்புறு கழறல்
தோள்புதிது உண்ட பரத்தையின் சிவப்புற
நாள் அணிந்து உவக்கும் சுணங்கறை அதுவே (20)
கேள் அணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே! அதனால்
ஆகறல் அறியா அணிஇலை நல்லாா்
இகல்தலைக் கொண்டு துணிக்கும் தவறு இலா் இத்
தள்ளாப் பொருள் இயல்பில் தண்தனிழாய் வந்திலா்
கொள்ளாா்இக் குன்று பயன்

நான்மறைகளின் வாசகங்களையும் விரித்துரைத்து, அவற்றின் நல்ல புகழை உலகுக்கு விளக்குகின்ற வாய்ப்பேச்சில் வல்லாரான வடமொழிப் புலவர்களே! சிறந்த ஒன்றைக் கூறுவோம், கேட்டுக் கொள்வீராக.

குறிப்பு

காதலோடு கூடிப் பெறுகின்ற காமவின்பமே, நுகரப்படும் காமவின்பங்களுள் சிறந்ததாகும். தம்முள் ஒருவருக்கொருவர் விருப்பங் கொண்டோரான தலைவன் தலைவியர், தம்முள் மனமொத்துப் பெருகின்ற உடற்சேர்க்கை யாகின்ற கூட்டமே காதற் காமம் ஆகும். அ∴தன்றிக் கற்புக் காமம் என்பது ஊடலினாற் சிறப்பாவதாகும். அக் கற்பறந்தான் தலைவன் இரந்து வேண்டுதலும், அதற்கிரங்கிய தலைவி தன்னை அவனுக்கு அளித்தலுமாகிய இவை உட்பொருளாகக் கொண்டு, தலைவனின் பரத்தை உறவினாலே உண்டாவதாகும். புண்புறு கழறல் என்பது, புதியவளான பரத்தையின் தோள் நலத்தை நுகர்ந்தவனாக, அவள் வீட்டிலிருக்கும் தலைவனிடத்தே, செவ்வணி அணிந்தவளாகத் தலைவியின் தோழி நாட்காலையிலே சென்று, தலைவி பூப்புற்றமையைக் குறிப்பாகத் தெரிவிக்கத், தலைவன் அதனை அறிந்தானாக வந்து, தலைவியின் கூட்டம் பெறுதல் ஆகும். தலைவியின் சுற்றத்தார் வருந்துமாறு பரத்தையானவள் தன் மனையிடத்திருந்து பழித்துரைத்தலால் உண்டாகும், தலைவி, தலைவன் கூட்டம் கணங்கறை எனப்படுவதாகும். கணங்கறை என்னும் இக்கூட்டத்துப் பயனும் ஊடலினால் உண்டாவதே ஆகும். அதனால், தம் கணவர் தம்மைவிட்டு அகன்றிருத்தல் என்பதையே அறியாதவரான, அழகிய ஆபரணமணிந்தாரான இல்லத் தலைவியர், அத்தலைவர் மீது ஊடற்பகையினை மேற்கொண்டவராக, அவரை வருத்தும் தவறினைச் செய்ய மாட்டார்கள்.

**வணக்கமும் பிணக்கமும்**

ஊழ் ஆரத்து ஒய்கரை நூக்கிப் புனல்தந்த
காழ் ஆரத்து அம்புகை சுற்றிய தார்மார்பில்
காழிஆரம் பொற்ப வருவானைத் தொழாஅ
வாழிய மாயாநின் தவறுஇலை எம்போலும் (30)
கேழ்இலார்மாண்நலம் உண்கோ திருவுடையார்
மென்தோள்மேல் அல்கி நல்கலும் இன்று
வைஎயிற்று எய்யா மகளிர் திறம் இனிப்
பெய்யா உழக்கு மழைக்காமற்று ஐய
கரையாளந் நோக்கத்தால் கைசுட்டிப் பெண்டின்
இகலின் இகந்தானை அவ்வேன் தலைக்கண்ணி

திருந்தடி தோயத் திறைகொடுப் பானை
வருத்தல் என அவற்கு மார்புஅளிப் பாளைக்
குறுகல் என்று ஒள்ளிழை கோதைகோ லாக
இறுக இறுக யாத்துப் புடைப்ப
ஒருவா் மயில் ஒருவா் ஒண்மயிலோடு ஏல
இருவா் வான்கிளி ஏற்பின் மழலை
செறிகொண்டை மேல்வண்டு சென்றுபாய்ந் தன்றே
வெறிகொண்பின் குன்றத்து வண்டு!

ஆற்றிடத்து வரும் புது வெள்ளமானது, முறையாகப் போதாலாலே தேய்ந்த கரையிடத்தள்ள வயிரம் பாய்ந்த சந்தன மரங்களை, அவ் வெள்ளமானது பேர்த்துக் கொண்டு வரும். அக்கட்டைகளின் நறுமணம் சூழ்ந்ததும், தார் விளங்குவதுமான தன் மார்பிடத்தே முத்தாரம் அழகு செய்ய வந்தான் முருகப்பிரான். அங்ஙனம் வந்தானைத் தேவானைப் பிராட்டி தொழுதபடி எதிர்கொண்டாள்.

“மாயத்தில் வல்லவனே, நீ வாழ்க! நின்பால் ஏதும் தவறில்லை. எம்மைப்போலும் நின்னைப் பிரிந்த துயரத்தால் மேனி வண்ணம் கெட்டாரது நலத்தை உண்கின்றாயோ?”

“அழகினை உடையாரான பெண்களின் மென்மை வாய்ந்த தோள்களின் மேலாகப் பொருந்தி அவருக்கு அருளுதலும், இந்நாளிலே கூரிய பற்களை உடையாரான, நின் தன்மை அறியாதவரான அம்மகளிரின் நிலைதான், இனி எப்போது பெய்யும் என்று மழைக்காக ஏங்கியிருக்கும் பசும்பயிரின் நிலையினதாக மாறுதற்குத் தானோ? ஐயனே, இதனை உரைப்பாயாக.

இவ்வாறு அன்பினால் தன்னிடத்து இளகிவராத வெம்மையான சுடுநோக்கால், தன் கைவிரலைச் சுட்டிக் காட்டியபடி, மாற்றாளான வள்ளி நாயகியின் காரணமாகத் தன்மேற் பகைத்துப் பேசி அகன்று செல்வாளான தேவானைப் பிராட்டிக்கு, முருகவேளானவன், தன் தலைக்கண்ணியை அவள் திருத்தமான அடிகளிலே தோயுமாறு திறையாகச் செலுத்தி, அவள் பாதங்களிற் பணிந்தவனாக, அவளுக்குத் திறைகொடுத்து அவளருளை வேண்டி நின்றான்.

அவளும் அவனை வருந்தாதே என்று சொல்லியவளாக, அவன் தழுவிக் கொள்ளும் பொருட்டாகத் தன் மார்பினை அவனுக்கு அளித்தபடி நின்றாள்.

குறிப்பு

அவள்பால் நெருங்காதே என்று அப்போது கூறியவளாக, ஒள்ளிய இழையணிந்த வள்ளி நாயகியானவள், தன் தலைமாலையினையே கைக் கோலமாகப் பற்றி மிகவும் இறுக்கமாக முருகனைக் கட்டிப் பிடித்தாள். தேவானைப் பிராட்டியையும் அடிக்கத் தொடங்கினாள்.

தம் தலைவியர் மோதிக் கொள்வதைக் கண்டதும், ஒருவரது மயில் மற்றவரது ஒள்ளிய மயிலோடு எதிர்த்துச் சண்டையிடத் தொடங்கியது. இருவரின் சிறந்த கிள்ளைகளும் தம் மழலை மொழிகளால் ஒன்றையொன்று ஏசிக்கொள்ளலாயின. வேறியாடலை ஏற்றுக் கொண்டு அருள்பவனாகிய முருகப் பெருமானின் பரங்குன்றத்தாள் வள்ளி நாயகிக்கு ஆதரவான வண்டுகள், தேவானைப் பிராட்டியின் செறிந்த கொண்டைமேல் மொய்த்துள்ள வண்டுகளின் மேற் சென்று பாய்ந்தன.

### தோழிமார் மோதினார்

தார்தார் பிணக்குவார் கண்ணிஓச்சித் தடுமாறுவார்
மார்பு அணி கொங்கைவார் மதம்திகையாப் படைப்பார்
கோதை வரிப்பந்து கொண்டு எறிவார்
பேதை மடநோக்கம் பிறிதாக ஊத
நுடங்கு நொசிநுசுப்பார் நூழில்தலைக் கொள்ளக்
கயம்படு கமழ் சென்னிக் களிற்றியல் கைம்மாறுவார் (50)
வயம்படு பரிப்புரவி மார்க்கம் வருவார்
தேர்அணிகயறு தெரிபு வருவார்
வரிசிலை வளைய மார்புற வாங்குவார்
வாளி வாளிகள் நிலைபெற மறலுவார்
தோள்வளை ஆழி சுழற்றுவார்
மென்சீர் மயிலிய லவர்!

இந்நிகழ்ச்சியை இரு தேவியரின் தோழியரும் கண்டனர். அவர்களும், தமக்குள் இரு சாராராகப் பிரிந்து சண்டையிடத் தொடங்கினர் என்பது இப்பகுதி.

வள்ளி நாயகியும் தேவானைப் பிராட்டியும் தத்தம் மார்பிடத்து மாலையைப் பறித்துத் தமக்குள் அடித்துக் கொண்டனர். தலைக் கண்ணிகளை ஓங்கியபடி மாறுபட்டாரை அடிக்க முற்பட்டனர். மார்பிடத்து அணிந்திருக்கும் கொங்கைக் கச்சினைச் சாட்டை வாராகப்

பற்றிக்கொண்டு புடைத்துக் கொண்டனர். மாலைகளையும், பூப்பந்துகளையும் ஒருவருக்கொருவர் கழற்றி எறிந்து கொண்டனர்.

இதனாற் பேதைமை கொண்ட தேவாளைப் பிராட்டியின் நோக்கமும் வேறுபட்டது. அவள் சோர்வுற்றாள். வாயால் ஊதும் காற்றுக்கே வளைந்தொடிவது போன்ற நுண்ணிடைகளை உடையாரான அப் பெண்கள், தம்முள் நெருங்கிப் போரிடலை அடுத்துத் தொடங்கினர்.

குளத்து நீருள் மூழ்கித் திளைக்கும், மதநீர் நாற்றம் வீசுகின்ற தலையினையுடைய, களிறுகளின் போரிடும் தகைமையைப் பெற்றவர்களே போல, ஒருவருக்கொருவர் கைவளைத்துப் பற்றியும் போரிடத் தொடங்கினர்.

வெற்றி கொள்ளும் கதியைக் கொண்ட போர்க்குதிரைகளைப் போல, அவர்களும் இடசாரி வலசாரியாகச் சுழன்றும் போரிட்டனர். தேருக்கு அழகுசெய்யும் அழகிய கயிற்றைப் பற்றும் முறை தெரிந்து பற்ற வருவாரைப் போல, ஒருவர் சடையினை ஒருவர் பற்றி இழுத்தும் போரிட்டனர். கட்டமைந்த வில்லினை வளைப்பதற்காக மார்புறத் தாங்கி வளைப்பதைப் போல, ஒருவர் மற்றவர் உடலைத் தாங்கி வளைத்தும் சிதைக்க முற்பட்டனர். ஒருவர் கண்களாகிய வாளிகள் பிறரது கணள்களாகிய அம்புகள் மேல் நிலையிட்டு நிற்குமாறு சினந்தும் நோக்கினர். தோள்வளைகளைக் கழற்றிச் சக்கரப் படை போலச் சுழற்றி எறிந்தும் போரிட்டனர்.

மென்மைத் தன்மை வாய்ந்த மயிலின் சாயலைக் கொண்டவரான அத் தோழிமார், இவ்வாறு ஒருவரோடொருவர் போரிடலாயினர்.

**குறவர்க்கு வெற்றி**

வாண்மிகு வயமொய்ம்பின்
வரை அகலத்தவனை வானவன்மகள்
மாண் எழில் மலா் உண்கண்
மடமொழியவா்உடன்சுற்றிக்
கடிசுனையுள் குளித்தாடுநரும்
அறை அணிந்த அருஞ்சுனையான்
நறவுஉண் வண்டாய் நரம்பு ஊா்நரும்
சிகைமயிலாய்த தொகைவிரித்து ஆடுநரும்
கோகுலமாய் கூவுநரும்

ஆகுலம் ஆகுநரும்
குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்
வித்தகத் தும்பை விளைத்தலான் வென்வேலாற்கு
ஒத்தன்று தண்பரங்குன்ற;

**குறிப்பு**

ஒளிமிக்கதும், வெற்றிதரும் ஆற்றலுடையதும், மலை போன்றதுமான மார்பினைக் கொண்டோனான முருகப் பிரானையும், வானவர் கோமானின் மகளாகிய தேவானைப் பிராட்டியையும், மிக்க எழிலையுடைய மையுண்ட குவளை மலரைப் போன்ற கண்களையும், மடப்பம் பொருந்திய பேச்சினையும் உடையவரான வள்ளி நாயகியின் தோழிமார் ஒருங்கே சுற்றி வளைத்துக் கொண்டனர்.

அந்த வெற்றிக் களிப்பினாலே வள்ளி நாயகியின் தோழிமார் மகிழ்ச்சி கொண்டனர். காவலையுடைய சுனைநீருட் குதித்துச் சிலர் நீராடத் தொடங்கினர். பாறைகளாற் சூழப்பெற்ற அரிய சுனையிடத்து மலர்களிற் சென்று தேனுண்ணும் வண்டுகளைப் போல, நரம்புக்கருவிகளை இயக்கிச் சிலர் இசைப்பாராயினர். ஆடுகின்ற மயில்களைப் போலத் தம் தலைமயிரையே தோகைகளைப் போல விரிந்தவராகச் சிலர் கூத்தும் ஆடத் தொடங்கினர். குயில்களைப் போலச் சிலர் கூவவும் தொடங்கினர்.

இவற்றைக் கண்டு தேவானைப் பிராட்டியின் தோழிமார் மேலும் துன்புறுவாராயினர்.

குறிஞ்சிக்குரிய குன்றவரின் மறத்தன்மை பொருந்திய வள்ளி நாயகியின் தோழிமார் சுற்றம் திறமையோடு போரிட்டு வெற்றி பெற்றதனாலே, வெற்றி வேலையுடையவனாகிய குமரப் பெருமானுக்குத் தண்ணிய பரங்குன்றமும் பொருத்தமுடையதாக ஆயிற்று.

**படாகை நிலைபெற்றது**

கடுஞ்சூர் மாமுதல் தடிந்து அறுத்த வேல் (70)
அரும்போ ராளநின் குன்றின் மிசை
ஆடல்நவின்றொா் அவர்போர் செறுப்புவும்
பாடல்பியன்றோரைப் பாணர் செறுப்பவும்
அல்லாரை அல்லார் செறுப்பவும் ஓர் சொல்லாய்ச்
செம்மைப் புதுப்புனல்
தடாகம் ஏற்ற தண்சுனைப் பாங்கர்ப்

படாகை நின்றன்று

கொடியோனாகிய சூரன், கடல் நடுவுள் உருக்கரந்து நின்ற மாமரத்தை வெட்டிச் சிதைத்தலின் மூலமாக ஒளிமிகுந்த, வெற்றி வேலினைக் கொண்ட, போராடும் ஆற்றலுடைய முருகப் பெருமானே!

நின் பரங்குன்றின் மேல் தொடங்கிய போராட்டம் அத்துடனும் நிற்கவில்லை. குறமகளிருள் ஆடவல்லவர் தேவ மகளிருள் ஆடல் வல்லவருடன் போரிட்டு அவரை வென்றனர். வானவர் மகளிருட் பாடல் பயின்றவரைப் பாணர் மகளிர்கள் தம் பாட்டால் வெற்றி கொண்டனர். இவ்வாறு ஒவ்வொரு கலையினும் வல்வர், அவ்வக் கலையில் வல்லவரான தேவானைப் பிராட்டியின் சுற்றத்தாரோடு போரிட்டு வென்றனர். கலை வல்லார் அல்லாரான பிறரை, அவ்வாறே கலைவல்லார் அல்லாரான குன்றவர் போரிட்டு வென்றனர். இவ்வாறு எப்புறமும் போரென்னும் ஒரே சொல்லாகவே பரந்தது.

செம்மையான புதுப்புனலை ஏற்றுள்ள தடாகத்தோடு மாறுபட்டாற் போல விளங்கிய தண்ணிய சுனையின் பக்கத்தே, வள்ளி நாயகியின் வெற்றிக் கொடியும் நின்று நிலைபெற்று.

**நாள்தொறும் சிறப்பாக!**

மே எ.்.கினவை
வென்று உயர்த்த கொடி விறல்சான்றவை
கற்பினை நெறிஊ டற்பினைக் கிழமை
நயத்தகு மரபின் வியத்தகு குமா
வாழ்த்தினேம் பரவுதும் தாழ்த்துத்தலை நினையா
நயத்தலிற் சிற்நதளம் அடிஉறை
பயத்தலிற் சிறக்க நாடொறும் பொலிந்தே

அன்பரால் விரும்பத்தகுந்த வேற்படையினை உடையோனே! இவ்வாறு வள்ளிநாயகியின் சுற்றத்தார், தாம் எதிரிகளான வானவன் மகளின் சுற்றத்தாரை வெற்றி கொண்டு உயர்த்த கொடியனது, அவர்தம் வெற்றியாற்றலுக்குச் சான்று பகரும். கற்பு மணத்தாலே ஒன்றுபடுதல் என்கின்ற வடபுலத்து ஒழுக்கத்தோடு, கலந்து அன்பினாலே ஒன்றுபடுதல் என்னம் உரிமையினையம் விருப்புடன் ஏற்று விளங்கும் பண்பினையுடைய வியக்கத்தக்க குமரப் பெருமானே!

யாம் விரும்புதலினாலே நாளுக்கு நாள் சிறப்புற்ற எம் அடியுறை வாழ்வானது. நீதான் எமக்கு அருளிச் செய்தலினாலே, நாள்தோறம் மேலும் அழகுபெற்றுச் சிறப்படையுமாறு, நின் அடிகளில் எம் தலைகளைத் தாழ்த்தினேமாய், யாம் நின்னை வாழ்த்தினேம்! நின் புகழினைப் பாடினோம்! எமக்கும் அருள்புரிக பெருமானே!

## 7.6 தொகுத்துக் காண்போம்

- பரிபாடல் பற்றி அறிந்து கொண்டீர்கள்
- கீரந்தையாரின் பாடற் குறிப்புகளின் மூலம் திருமாலைப் பற்றி உணர்ந்து கொண்டீர்கள்
- குன்றம் பூதனார் பாடிய பாடலின் மூலம் செவ்வேள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
- இவ்விருவரின் பாடல்கள் வாயிலாக பாடல் நுட்பத்தைப் புரிந்து கொண்டீர்கள்.

## 7.7 சோதித்தறியும் வினாக்கள்

**1.** பரிபாடல் பற்றி விளக்குக

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………

2. கீரந்தையார் பற்றிக் குறிப்பு வரைக

………………………………………………………………………………

………………………………………………………………………………

……………………….

3. குன்றம் பூதனார் பற்றி குறிப்பு வரைக

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………

4. திருமாலின் அவதாரம் பற்றி விளக்குக

………………………………………………………………………………

………………………………………………………………………………

……………………

5. குன்றம்பூதனார் குறிப்பிடும் செவ்வேள் பற்றி விளக்குக

குறிப்பு

### 7.8 பயிற்சி வினாக்கள்

1. உலகத் தோற்றத்தைக் கீரந்தையார் எங்ஙனம் குறிப்பிடுகிறார்?
2. முருகப் பெருமானின் தோற்றத்தையும், திருமணக் கோலத்தையும் கட்டுரைக்க

### 7.9 மேலும் படித்தறிக

புலியூர்க்கேசிகன் உரை, பரிபாடல் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை 600 014, முதற்பதிப்பு 2009.

# பிரிவு 3 திருக்குறள்

**கூறு 8: திருவள்ளுவர் - திருக்குறள் -**

**ஒழிபியல் - பொருட்பால் - 13**

**அதிகாரம்.-விளக்கம்**

### 8. பாட அமைப்பு

8.1 அறிமுகம்

8.2 குறிக்கோள்கள்

8.3 பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் இலக்கண அமைப்பு

8.4 பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

8.5 திருக்குறள்

8.6 திருக்குறள் அமைப்பு

8.7 திருவள்ளுவர்

8.8 திருக்குறளின் சிறப்புகள்

8.9 அறத்துப்பால்

8.10 பொருட்பால்

8.11 காமத்துப்பால்

8.12 நிறைவாக

8.13 சோதித்தறியும் வினாக்கள்

8.14 பயிற்சி வினா

8.15 மேலும் படித்தறிக

## 8.1 அறிமுகம்

திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது. இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப் ஆவார். திருக்குறள் இரண்டடிகளால் உள்ளதால் அனைவரும் எளிதில் கற்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் உள்ள பொருட்பால் ஒழிபியலில் 13 அதிகாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## 8.2 குறிக்கோள்கள்

- திருக்குறள் பற்றிய பொது வரையறையை அறிந்து கொள்வீர்கள்.
- ஒழிபியல் பற்றியும் ஒழிபியலில் உள்ள அதிகாரங்கள் பற்றியும் தெரிந்து கொள்வீர்கள்

## 8.3 பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் இலக்கண அமைப்பு

அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையோ, அன்றி ஒன்றையோ, ஐந்தோ அல்லது அதனினும் குறைந்த அடிகளிலோ வெண்பா யாப்பில் விளம்புவதாம். பன்னிரு பாட்டியல் இதற்கு இலக்கணம் பகர்கிறது:

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி

அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்

திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும். (248)

கணக்கு – நூல், கீழ் - சிறிய என்பதாம் (தாழ்ந்தது என்பதாகாது). தொல்காப்பியரும் ‘அம்மை’ எனும் வனப்பில் அமைக்கின்றார்.

“சின்மென் மொழியாற்றாய பனுவலின்

அம்மை தானே அடிநிமிர்பு இன்றே” (செய்:235)

என்று இலக்கணம் வரையறுக்கிறது.

## 8.4 பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

கீழ்க்கணக்கு நூல்கள் இன்னன்ன என்பதை,

‘நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்

பால்கழுகங் கோவை பழமொழி மாமூலம்

இந்நிலைய காஞ்சியோ டேலாதி என்பவே

கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு’ எனப்

பழம் பாட்டொன்று பதினெட்டாகப் பேசுகிறது.

கீழ்க்கணக்கு, தொகையால் ஒன்று. வகையால் பதினெட்டு. பாடியோர் பதின்மூவர். காலத்தால் இடத்தால் வேறுபட்டவர்கள், சமயத்தால் குலத்தால் மாறுபட்டவர்கள். அகம் பற்றியன 6, புறம் பற்றியன 12, அதிலும் அறம் பற்றியன 11, போர் பற்றியது 1. இதனைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயரோ காலமோ தெரியவில்லை. பதினெட்டில் ஒரு மறை. இரு நானூறு, மும்மருந்து, நானாற்பது, ஐயைந்திணை, மணிமொழிக் கோவை உள. அறம், திணை, காலம், இடம், மருந்து எனும் ஐந்திறத்தனவாம்.

கீழ்க்கணக்கு நூல்கள் மேற்கணக்கு நூல்கள் போல் செறிவும், நுட்ப திட்பமும் கொண்டு வாழ்வு நெறி காட்டும் வளமையன. கீழ்க்கணக்கில் முக்காற் பகுதி ஒழுக்கம் உணர்த்துவன. இவற்றில் பெரும்பாலன சமணர் செய்தவை. அதனைப் பின்பற்றித் தமிழ்ச் சமயங்கள் நீதி நூல்கள் இயற்றின. இவ்வற நூல்களை இலக்கிய நூல்களாகக் கொண்டு இலக்கிய வரிசையில் வைத்த சிறப்பு தமிழுக்கே உரியது. வேறெம் மொழியிலும் இத்திறம் இல்லை. அற நூல்கள்

இயற்றுவதனை விளையாட்டாகப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர் தமிழர் எனப் போப் ஐயர் போன்றோர் போற்றுமளவிற்கு நீதி நூல்கள் மிகுதியாக உள்ளன. தமிழர் சால்பும், உணர்வொழுக்கங்களின் உயர்வும் எடுத்தோதும் ஒளி விளக்கங்களாக இவை ஒளிர்கின்றன. அற நூல்கள் ஒழுக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஓதும் முறை, பிற்காலக் கோவை போன்ற அகப்பொருட் பிரபந்தங்கட்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

## 8.5 திருக்குறள்

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே தலைசிறந்து விளங்குவது திருக்குறள். இந்நூல் வரிசையால் முப்பால் என்ற பெயரால் திருக்குறள் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் வரிசையிலே முதலில் தோன்றியது திருக்குறள்.

இன்று தமிழில் உள்ள நூல்களிலேயே திருக்குறள்தான் உலகப் புகழ்பெற்ற நூலாக விளங்குகிறது. உலக மக்கள் அனைவரும் திருக்குறளைப் போற்றுகின்றனர். அதில் உள்ள உயர்ந்த கருத்துக்களைப் பாராட்டுகின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளில் உள்ள பல அறங்கள் இன்றைக்கும் பொருந்துவனவாயிருப்பது இதற்கொரு காரணம்.

அன்றியும் திருக்குறளின் பெருமைக்கு மற்றொரு சிறந்த காரணம் உண்டு. இந்நூலிலே கூறப்படும் கருத்துக்கள் உலக மக்கள் அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடியவை. இந்நூல் குறிப்பிட்ட ஒரு மதத்தினர்க்கோ, ஒரு இனத்தினர்க்கோ, ஒரு நாட்டினர்க்கோ, ஒரு மொழியினர்க்கோ என்று செய்யப்படவில்லை. மனித சமூகம் முழுவதற்கும் உலக மக்கள் எல்லோருக்கும் பொதுவாகச் செய்யப்பட்டதாகும். இதனாலேயே இன்று திருக்குறள் உலகப் பொது நூல் என்று கொண்டாடும்படி சிறந்து விளங்குகிறது.

தமிழிலே முதன் முதல் தோன்றிய நீதி நூல் திருக்குறள்தான். வட மொழியிலே ஸ்மிருதிகள் (சமூக வாழ்க்கை தொடர்பான கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் சேர்ந்து ஸ்மிருதி என்னும் பெயர் பெறுகிறது.) பல உண்டு. அவை மக்கள் இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டும், இன்னின்ன காரியங்களைச் செய்யக்கூடாது என்று கட்டளையிடுகின்றன. அந்நூல்களிலே, இல்லறத்தான் கடமை, துறவிகளின் கடமை, அரசியல் அறங்கள் முதலியவை கூறப்படுகின்றன.

குறிப்பு

அவை போன்ற நூல் தமிழிலே திருக்குறளுக்கு முன் ஒன்றேனும் இல்லை.

திருக்குறளை வட மொழியிலேயுள்ள ஸ்மிருதிகளுக்கு ஒப்பிடலாம். ஆனால் ஒரு வகையிலே அவற்றை விட உயர்ந்து நிற்கின்றது திருக்குறள். ஸ்மிருதிகளில் கூறப்படும் நீதிகள் அனைத்தும் வருணாஸ்ரம் தருமத்தை அடிப்படையாகக் கொண்டவை. சாதிக்கொரு நீதி கூறுவன. திருக்குறளோ மனித சமுதாயத்தை ஒன்றெனக் கருதி, மக்கள் அனைவருக்கும் பொதுவான நீதிகளையே கூறுகின்றது. இதுதான் திருக்குறளுள்ள தனிச்சிறப்பு.

திருக்குறளின் மாண்பைக் காட்ட அதற்கு அமைந்திருக்கும் பெயர்களே போதும். திருக்குறளுக்கு ஒன்பது பெயர்கள் அமைந்திருக்கின்றன. வேறு எந்த அற நூல்களுக்கும் இத்தனை பெயர்கள் இல்லை.

1.திருக்குறள், 2.உத்தரவேதம், 3.திருவள்ளுவர், 4.பொய்யாமொழி, 5.வாயுறை வாழ்த்து, 6.தெய்வ நூல், 7.பொதுமறை, 8.முப்பால், 9.தமிழ் மறை இவையே திருக்குறளைக் குறிக்கும் ஒன்பது பெயர்கள்.

சீரார் திருக்குறள் உத்தர
வேதம், திருவள்ளுவர்
பேரார் பொய் யாமொழி
வாயுறை வாழ்த்துப, பெருந் தெய்வநூல்,
ஊரார் பொதுமறை, முப்பால்
தமிழ்மறை, ஒன்பதும் நல்
காராளர் கற்றுணர் செய்யுட்கு
நாமங்கள் கார்குழலே

இப்பழம் பாட்டினால் அவ்வொன்பது பெயர்களையும் காணலாம்.

## 8.6 திருக்குறள் அமைப்பு

திருக்குறள், குறள் வெண்பாக்களால் அமைந்தது. இரண்டே அடிகளால் அமைந்த ஒருவகை வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர். பெரிய செய்யுட்களை விடச் சிறிய செய்யுட்கள் மக்கள் மனதிலே அப்படியே ஒட்டிக்கொள்ளும். ஆதலால்தான், மக்கள் பின்பற்றி நடக்க வேண்டிய நல்லுரைகளை நவில வந்த வள்ளுவர், சிறிய குறள்

வெண்பாக்களால் தமது நூலை இயற்றினார். இதுவே அவரது உயர்ந்த அறிவுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

திருக்குறளிலே ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்கள் அமைந்திருக்கின்றன. இவை பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பத்துப்பாடல்கள் கொண்டது ஒரு அதிகாரம். அவை நூற்று முப்பது மூன்று அதிகாரங்களாகக் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் தலைப் பெயர்கள் உண்டு. "1.கடவுள் வாழ்த்து, 2.வான் சிறப்பு, 3.நீத்தார் பெருமை, 4.அறன் வலியுறுத்தல், 5.இல்வாழ்க்கை, 6.வாழ்க்கைத் துணைநலம், 7.மக்கட்பேறு, 8.அன்புடைமை" என்று இவ்வாறு 133 அதிகாரங்களுக்கும் தலைப்பெயர்கள் உண்டு.

திருக்குறள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால்தான் இதற்கு முப்பால் என்று பெயர். முதற்பகுதி அறத்துப்பால். இதில் இல்லறம், துறவறம் இரண்டைப் பற்றியும் முப்பத்தெட்டு அதிகாரங்களில் கூறப்படுகின்றன.

இரண்டாவது பகுதி பொருட்பால். இதிலே, அரசாள்வோர்க்கு வேண்டிய தகுதிகள், அமைச்சருக்கு வேண்டிய தகுதிகள், அரசாங்கத்திற்கு வேண்டிய அங்கங்கள், பொருளீட்ட வேண்டிய முறை, அரசாட்சியின் கடமை, குடிமக்களின்கடமை ஆகிய அனைத்தும் வலியுறுத்தப்படுகின்றன. எழுபது அதிகாரங்களில் இச்செய்திகள் கூறப்படுகின்றன.

மூன்றாவது பகுதி காமத்துப்பால். இதிலே பண்டைத் தமிழர்களின் குடும்ப வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறப்படுகின்றது. ஒரு ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்வது, அவர்கள் உள்ளம் ஒன்றுபட்டுக் காதலனும், காதலியுமாய் மறைந்து வாழ்வது, பிறகு அவர்கள் எல்லோரும் காண மணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்துவது. இதுவே பழந்தமிழர் வாழ்க்கை முறை. இப்பண்பாட்டையே களவியல், கற்பியல் என்று இரண்டு பகுதியாகப் பிரித்துக் கூறுகின்றது. காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் இருபத்து ஐந்து.

இவ்வாறு அமைந்துள்ள திருக்குறளிலே, வள்ளுவர் தம் காலத்திலிருந்த எல்லாப் பொருள்களைப் பற்றியும் விளக்கியிருக்கின்றார். இவ்வுண்மையை,

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்

இல்லாத எப்பொருளும் இல்லையால்”

என்று ஒரு புலவர் பாராட்டிப் பாடியிருக்கின்றார்.

மற்றொரு புலவர், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் படித்தால் போதும். சிறந்த தமிழ்ப் புலவராகி விடலாம். மற்றொருவரிடத்திலே வேறொரு நூலையும் பாடங் கேட்க வேண்டியதில்லை’ என்று திருக்குறளைப் போற்றியிருக்கின்றார்.

குறிப்பு

திருக்குறளைப் போன்ற அதிகார அமைப்பும் பால் அமைப்பும் கொண்ட நூல் திருக்குறளுக்கு முன் வேறு ஒன்றுமேயில்லை.

## 8.7 திருவள்ளுவர்

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். அவர் ஒரு மாபெரும் புலவர். பல நூல்களையும் கற்றறிந்தவர். உலகச் செய்திகள் பலவற்றையும் உணர்ந்தவர். அவர் காலத்திலிருந்த சமுதாய நிலை, அரசியல் அமைப்பு எல்லாவற்றையும் நன்றாக அறிந்தவர். மனித சமுதாயம் நன்றாக வாழ வேண்டும் என்னும் அன்பும் கருணையும் உள்ளவர். தனித்தனி ஆண், பெண்கள் அனைவரும் மனிதத் தன்மையுடன் ஒழுக்கங் குன்றாமல் உயர்ந்த நிலையிலே வாழவேண்டும் என்னும் கருத்துள்ளவர்.

திருவள்ளுவருடைய பிறப்பு வளர்ப்பு வரலாற்றைப் பற்றி இறுதியாக ஒன்றும் கூற முடியவில்லை.

யாளிதன் என்னும் அந்தணன், ஒரு சண்டாளப் பெண்ணை மணந்து திருவள்ளுவர் முதலிய எழுவரைப் பெற்றான் என்பது ஒரு கதை. இது ஞானாமிர்தம் என்னும் நூலில் காணப்படுகின்றது.

பகவன் என்னும் அந்தணன், ஆதி என்னும் புலைச்சியை மணந்தான். ஏழு மக்களைப் பெற்றான். அவன் ஆதியுடன் யாத்திரை போகும்போது வழியிலேயே மக்களைப் பெற்றான். ஒவ்வொரு பிள்ளையையும் பிறந்த விடத்திலே அப்படி அப்படியே போட்டுவிட்டு ஆதியும், பகவனும் போய்விட்டனர். அப்பிள்ளைகளைப் பார்த்தவர்கள் எடுத்து வளர்த்தனர்.

இவ்வாறு பிறந்த பிள்ளையை வள்ளுவர். அவர் மயிலாப்பூரில் போடப்பட்டார். ஒரு வள்ளுவன் அவரை எடுத்து வளர்த்தான். அதனால் வள்ளுவர் என்று பெயர் பெற்றார். இது ஒரு கதை. இதற்குக் கபிலர் அகவல் என்னும் பிற்காலத்துச் சிறு நூலே ஆதாரம்.

திருள்ளுவர் மதுரையிலிருந்தவர் என்று திருவள்ளுவர் மாலையில் ஒரு செய்யுளில் காணப்படுகின்றது.

திருவள்ளுவர், வள்ளுவர் மரபைச் சேர்ந்தவர்தான். வள்ளுவர் மரபைச் சேர்ந்தவர் என்று இகழ்ந்துரைப்பவன் அறிவற்றவன். அவர் அறிவாளி, ஒழுக்கத்தால் உயர்ந்தவர், ஆதலால் அவரைப் போற்றுவதே அறிஞர் கடமை என்ற கருத்து திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒன்றிலே காணப்படுகின்றது.

இவ்வாறு திருவள்ளுவர் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அவருடைய உண்மை வரலாற்றை அறிவதற்கு இடமில்லை.

அவர் பிறப்பு வளர்ப்பு எப்படியாயினும், அவர் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தெய்வப் புலவர் என்ற பெயர் பெற்று வாழ்கின்றார். திருவள்ளுவரை நான்முகன் என்று போற்றியிருக்கின்றனர். அவரைப் பொய்யாமொழியார் என்று பாராட்டியிருக்கின்றனர். திருக்குறளைத் தமிழ் வேதம் என்று கொண்டாடி வருகின்றனர். திருக்குறளையும் பொய்யாமொழி என்று பாராட்டினர். பாராட்டுகின்றனர்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிலே பிறந்தவர். சாதி மத பேதம் பாராட்டதவர். மனித சமுதாயத்தையும், உலகையும் ஒன்றாகக் கருதிய ஒரு உத்தமத் தமிழ்ப் பெரியார். இதுதான் நாம் அவரைப் பற்றி அறியும் உண்மை.

## 8.8 திருக்குறளின் சிறப்புகள்

- திருக்குறள் உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும்.
- திருக்குறள் இரண்டு அடிகளால் ஆன குறள் வெண்பாக்களால் ஆனது.
- திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812
- திருக்குறளின் முதல் பெயர் முப்பால்
- திருக்குறளில் அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்களாக 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது.
- அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் 380
- பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் 700
- இன்பத்துப் பாலில் உள்ள குறட்பாக்கள் 250

குறிப்பு

- திருக்குறள் தமிழ்ச் செய்யுள்களில் முதல் பாவாகிய வெண்பாவில் முதல் வகையாகிய குறட்பாக்களால் ஆனது.
- திருக்குறளில் ஒரே பெயரில் அமைந்து 2 அதிகாரங்கள் குறிப்பறிதல் (பொருட்பால் அதிகாரம் 71, காமத்துப்பால் அதிகாரம்110)
- திருக்குறளில் முப்பால்களிலும் 120க்கும் மேற்பட்ட உவமைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.
- திருக்குறளில் யானை 8 முறையும், பாம்பு 3 முறையும் சுட்டப்பட்டுள்ளன.

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால் அதைச் சிறப்பித்துப் பல பெயர்களாய் அழைப்பர். திருக்குறள் முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி,வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை.

பழங்காலத்தில் இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் தற்சமயம் சிறப்பாகக் கருதப்படுவது திருக்குறள் முனுசாமியின் உரை. தனிமனிதனுக்கு உரிமையானது இன்பவாழ்வு. அதற்குத் துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன். மனத்துக்கண் ஆதலே அனைத்து அறம். அறத்தால் வருவதே இன்பம். அறவழியின் நின்று பொருள் ஈட்டி, அதனைக் கொண்டு இன்பவாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு உலகமாந்தரும் இன்பமுறச் செய்யவேண்டும். பொருளியலாகிய பொது வாழ்வுக்கும் இன்ப இயலாகிய தனிவாழ்வுக்கும் அடிப்படை அறம்தான் என்பது திருக்குறளின் மொத்தமான நோக்கு.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தைத் திருக்குறள் வகிக்கிறது. இதுவரை 80 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

“இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்

மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்”
என்று இதன் சிறப்பைப் பாடுவர்.

குறிப்பு

## 8.9 அறத்துப்பால்

அறத்துப்பால் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்திலிருந்து தொடங்குகிறது. உயர் ஞானமும் வரம்பிலாற்றலும் உடைய கடவுளைத் தொழுது ஞானத்தையும் ஆற்றலையும் பெற்று எண்ணிய பணியை இனிதே முடித்திட விரும்பிக் கடவுளை வாழ்த்துதல்.

காணப்படுதலைக் கொண்டு காணப்படாத காரணங்களைக் கண்டுபிடிக்கக் கடவுள் வாழ்த்து துணை செய்யும்.

உயிர் இன்ப துன்பங்களிலிருந்து விடுதலை பெறுதலே பிறவிக்கடல் நீந்துதல்.

‘வைகுந்தம் சொர்க்கம் எல்லாம் இந்த மானுட உடம்பிலேயே’ என்ற வள்ளலார் நெறி அறிக, உய்த்துணர்க

இவ்வறத்துப்பாலில் இல்லறவியலுக்கான அறங்கள், துறவறவியலுக்கான அறங்கள், ஊழியலுக்கான அறங்கள் கூறப்பட்டுள்ளன. வாழ்க்கைத் துணைநலம் என்பது இல்லறவியல் என்னும் பகுதியில் அடங்குவதாகும்.

## 8.10 பொருட்பால்

அரசும் சமுதாயமும் மனித நிறைவுக்கு வழிகோலும் முறையைச் சொல்கிறது. மக்கள் யாவரும் சமம். மனிதரிடையே ஏற்றத்தாழ்வு யாதுமில்லை. யாரும் எப்பணியையும் மேற்கொண்டு வாழ்வு நடத்தினாலும் எதுவும் ஒடுக்கப்படவில்லை. எல்லா வினைகளும் அறத்தின்பாற் பட்டனவாக இருத்தல் வேண்டும். இது பொருட்பால் கூறும் கருத்தின் சாரம்.

பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். அரசியல் 25 அதிகாரங்களையும், அமைச்சியல் 10 அதிகாரங்களையும், அரணியல் 2 அதிகாரங்களையும், கூழியல் 1 அதிகாரத்தையும், படையியல் 2 அதிகாரங்களையும், நட்பியல் 17 அதிகாரங்களையும், குடியியல் 13 அதிகாரங்களையும் உள்ளடக்கி மொத்தம் 70 அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

குறிப்பு

## 8.11 இன்பத்துப்பால்

இன்பத்துப்பால் தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையையும், கற்பு வாழ்க்கையையும் கூறுகிறது. இது களவியல் கற்பியல் என்ற இரு பகுதிகளை உள்ளடக்கியது. களவியல் 7 அதிகாரங்களையும், கற்பியல் 18 அதிகாரங்களையும் உடையது. மொத்தம் இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்கள் காணப்படுகின்றன.

## 8.12 நிறைவாக

- திருக்குறள் பற்றிய பொது வரையறையை அறிந்து கொள்வீர்கள்.
- ஒழிபியல் பற்றியும் ஒழிபியலில் உள்ள அதிகாரங்கள் பற்றியும் தெரிந்து கொள்வீர்கள்

## 8.13 சோதித்தறியும் வினாக்கள்

1. திருக்குறளின் சிறப்புகள் ஐந்தினைக் கூறுக

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………….

2. திருவள்ளுவரின் வேறு பெயர்கள் யாவை?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………….

3. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது?

…………………………………………………………………………

…………………………………………………………………………

……………………………………………..

4. திருக்குறளில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் எத்தனை?

…………………………………………………………………………

…………………………………………………………………………

……………………………………………

## 8.14 பயிற்சி வினா

1. திருக்குறளில் அமைந்துள்ள முப்பால்களின் கருத்துக்களை விளக்கி வரைக

**8.15 மேலும் படித்தறிக**



1. திருக்குறள், பரிமேலழகர் உரை, பதிப்பாசிரியர் பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108

## கூறு 9 குடிமை, மானம்

## திருக்குறள்

**9. பாட அமைப்பு**

9.1 அறிமுகம்

9.2 குறிக்கோள்கள்

9.3 திருக்குறளின் இயற் பாகுபாடுகள்

9.4 திருவள்ளுவமாலை

9.5 குடியியல் - ஒழிபியல்

9.6 ஒழிபியல்

9.7 குடிமை அதிகார வைப்புமுறை

9.8 குடிப்பிறந்தாரது இயல்பு

9.9 நற்குடிப்பிறந்தார் வறுமையுற்றவழியும் அவ்வியல்பின் வேறுபடார்

9.10 வேறுபட்ட வழிப்படும் இழுக்கு

9.11 குடிமைக்கு வேண்டுவன

9.12 நற்குடிப்பிறந்தார்க்கு வேண்டுவன

9.13 மானம்

9.14 தாம் தாழிதற்கு ஏதுவாயின் செய்யக்கூடாது

9.15 அவை செய்தற் குற்றம் ஆவன

9.16 மானம் பொருட்டாக இறப்பின் சிறப்பாகும்

9.17 நிறைவாக

9.18 சோதித்தறியும் வினாக்கள்

9.19 பயிற்சி வினா

9.20 மேலும் படித்தறிக

**9.1 அறிமுகம்**

தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கும் கிடைத்த அரிய நூல் திருக்குறள். திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருக்குறள் இன்று தமிழ் மறையாக மட்டுமின்றி, உலகப்பொதுமறையாகவும் விளங்குகின்றது. உலகத்தில் கிறித்துவர்களின் மறைநூலாகிய பைபிள், பலமொழிகளில் நூற்றுக்கணக்கான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பைபிளுக்கு அடுத்த நிலையில் நூற்றுக்கணக்கான மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதே அதன் பெருமையைக் காட்டிநிற்கும். தமிழக அரசு திருவள்ளுவரைச்சிறப்பிக்கும் வகையில் அவர் பெயரால் 'ஆண்டும்' - 'விருதும்' அமைத்துள்ளமை கருதத்தகும்.

## 9.2 குறிக்கோள்கள்

1. திருக்குறளில் **குடிமை-** என்ற அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொள்வீர்கள்

2. திருக்குறளில் **மானம்-** என்ற அதிகாரத்தின் கருத்தை அறிந்து கொள்வீர்கள்

## 9.3 திருக்குறளின் இயற்பாகுபாடுகள்

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் ஆகிய மூன்றுபெரும் பிரிவுகளைக் கொண்டது. இதன் இயற்பாகுபாடுகள்.

அறத்துப்பால் - பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல்

பொருட்பால் - அரசியல், அமைச்சியல், அரணியல், ஊழியல், படைஇயல், நட்பியல், ஒழிபியல்

காமத்துப்பால் - களவியல், கற்பியல்

## 9.4 திருவள்ளுவமாலை

திருக்குறள் இயல் அமைப்பை அறியத் திருவள்ளுவமாலை துணை செய்கின்றது. உரையாசியர்களின் கருத்தை ஒப்பிட்டுக் காண உதவுகின்றது. திருவள்ளுவமாலையில் உள்ள,

> "பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன்மூன்றே
> தூய துறவறம் ஒன்று ஊழாக – ஆய
> அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
> திறத்துப்பால் வள்ளுவனார் தெரிந்து

என்ற வெண்பா அறத்துப்பாலின் இயல்புகளைக் கணக்கிட்டு உரைக்கின்றது.

அரசியல் ஐயைந்து, அமைச்சியல் ஈரைந்து
உருவம் அரண்இரண்டு, ஒன்றுஒண்கூழ், - இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை

என்ற வெண்பா, பொருட்பாலை ஏழு இயல்களாகப் பிரித்துக் காட்டுகின்றது.

ஆண்பால்ஏழ், ஆறிரண்டு பெண்பால், அடுத்தன்பு
பூண்பால் இருபால் ஓர்ஆறாக – மாண்பாய
காமத்துப் பக்கம்ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு

என்ற வெண்பா காமத்துப்பாலை மூன்றாகப் பிரிக்கின்றது.

இவ்வாறே தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் கிடைத்த திருக்குறள் அதிகார அடைவு என்னும் பழஞ்செய்யுள் ஒன்றும் பால்தோறும் இயல்களைப் பிரித்துள்ளது.

## 9.5 குடியியல் - ஒழிபியல்

அரசியலிலும், அங்க இயலிலும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் முதற்கண் குடிமை இடம்பெற்றுள்ளது

## 9.6 ஒழிபியல்

பொருட்பாலில் இடம் பெற்றுள்ள ஒழிபியல் இறுதி பதின்மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒழிபியல் இக்காலத்தே குடியியல் என்று வழங்கப்படுகிறது. ஒழிபியலில் குடிமை என்ற அதிகாரமும், மானம் என்ற அதிகாரமும் இடம்பெறுகிறது

## 9.7 குடிமை அதிகார வைப்புமுறை (951 - 960)

அ∴தாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை, உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின் அச்சிறப்புப் பற்றி முன்வைக்கப்பட்டது.

## 9.8 குடிப்பிறந்தாரது இயல்பு

1. இற்பிறந்தார்கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு (951)

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார் (952)

3. நகை ஈகை இன்செயல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு (953)

இதன்கண் வரும் முதல் மூன்று குறட்பாக்களும் குடிப்பிறந்தாரது இயல்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கருத்தும் சொல்லும், செயலும் தம்முள் மாறாகாத செம்மையும், இழிசெயலுக்கு நாணும் நாணமும் ஒருசேர நற்குடிப்பிறந்தார் மாட்டு இயல்பாக உளவாகும். பிறர்மாட்டு இயற்கையாக உளவாகா. (951)

நற்குடிப்பிறந்தார் தமக்குரிய ஒழுக்கம், வாய்மை, நாண் இம்மூன்றன் இடத்தும் தவறி நடக்கமாட்டார். (952)

நற்குடிப்பிறந்தார்க்கு, முகமலர்ச்சியும், கொடுத்தலும் இன்சொற்கூறுதலும், இகழாமையும் ஆகிய நான்கும் மிகவும் வேண்டிய கூறுகளாகும். (953)

## 9.9 நற்குடிப்பிறந்தார் வறுமையுற்றவழியும் அவ்வியல்பின் வேறுபடார்

4. அடுக்கிய கோடிபெறினும் குடிப்பிறந்தார்
குன்றுப செய்தல் இலா (954)

5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று (955)

இவ்விரண்டு குறட்பாக்களும் நற்குடிப்பிறந்தார் வறுமையுற்ற வழியும் அவ்வியல்வினின்று வேறுபட மாட்டார்கள் என்பதை உணர்த்துகிறது.

பலவகை அடுக்கிய கோடி அளவிற்றாய பொருள்களைப் பெற்றாராயினும் நற்குடிப்பிறந்தார் தம் குடிக்குத் தாழ்வுதரும் செயல்களைச் செய்யமாட்டார்.

தொன்று தொட்டுவரும் பழங்குடியில் பிறந்தவர் தாம் கொடை செய்யும் பொருள் சுருங்கியவிடத்தும் தம் பண்புடைமைடயிலிருந்து நீங்கார். குற்றமற்ற தம் குடி மரபுக்கு ஏற்ப வாழக்கடவேம் என்ற கருதி அவ்வாறு வாழ்வர். வறுமையுற்ற இடத்தும் வஞ்சனை கொண்டு பொருந்தாக தொழில்களைச் செய்யார்.

குறிப்பு

### 9.10 வேறுபட்ட வழிப்படும் இழுக்கு

6. சலம்பற்றிச் சால்பில செய்யார் மா சற்ற
குலம் பற்றி வாழ்தும் என்பார் (956)

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
முதிக்கண் மறுப்போல் உயர்ந்து (957)

இவ்விரண்டு குறட்பாக்களும் வேறுபட்ட வழிப்படும் இழுக்கை உரைப்பதாகும்

நற்குடிப் பிறந்தார் மாட்டு உள்ள குற்றம் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்துத் தோன்றும் மறுப்போல வெளிப்படையாய் விளங்கும்.

ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையே ஈரமின்மை காணப்படுமாயின் அவனை அக்குலப் பிறப்பின்கண்ணே, உலகம் ஐயப்படும்.

### 9.11 குடிமைக்கு வேண்டுவன

8. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும் (958)

இக்குறட்பா குடிமைக்கு வேண்டும் செயல்கள் பற்றி உரைக்கிறது

ஒரு நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளை அறிவிக்கும்! அதுபோலக் குலத்தின் இயல்பை அக்குடிப்பிறந்தார் வாய்ச்சொற்களே காட்டும். ஒருவனுக்கு நலனுடைமை வேண்டுமானால் தான் நாணுடையன் ஆதல் வேண்டும்! குடி உயர்ச்சி வேண்டுவானாயின் யாவர் மாட்டும் பணிவு வேண்டும்.

### 9.12 நற்குடிப்பிறந்தார்க்கு வேண்டுவன

9. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் (959)

10. நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு (960)

இவ்விரண்டு குறட்பாக்களும் நற்குடிப்பிறந்தார்க்கு வேண்டுவன பற்றி சுட்டப்பட்டுள்ளன.

குறிப்பு

நற்குடிப்பிறந்தார் தம் இயல்புகளான நாணம், நடுவுநிலைமை, ஒழுக்கம், வாய்மை, முகமலர்ச்சி, இன்சொல், ஈகை, இகழாமை முதலியன முதல் மூன்று பாடல்களில் சுட்டப் பெற்றன.

நற்குடிப்பிறந்தர் கோடி பெற்றாலும் குன்றுவ செய்யார். பொருள் குறைந்தவிடத்தும் பண்புடைமையிலிருந்து நீங்கார்! வஞ்சனை கொண்டு பொருந்தாச் செயல்களைச் செய்யார். வறுமையற்ற வழியும் தம் இயல்பினை மாறார். குடிப்பிறந்தார் செய்யும் செயல்கள் மதிக்கண் மறுப்போல விளங்கித் தோன்றும்.

## 9.13 மானம் (961 - 970)

இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்களைக் கூறத் தொடங்கி முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதாவது எந்நிலையிலும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம்.

## 9.14 தாம் தாழிதற்கு ஏதுவாயின செய்யக் கூடாது

1. இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல் (961)
2. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர் (962)
3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (963)

கட்டாயம் செய்யவேண்டிய சிறப்புடைய செயல்களாக இருப்பினும் குடிப்பெருமை குறையக்கூடிய செயல்களைச் செய்தல் கூடாது.

புகழுடனே தம்மானத்தை நிலைநிறுத்த விரும்புவோர் புகழை நிலைநிறுத்தும் போதும் தம் குடிமைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்யார்.

குடிப்பிறந்தார் வளம்பெருகிய காலத்தில் யாவர்க்கும் பணிதல் வேண்டும்! ஆனால் வளம் குறைந்து வறுமையுற்ற காலத்தில் பெருமித உணர்வு கொள்ள வேண்டும்.

இம்மூன்று குறட்பாக்களும் தாழ்தற்கு ஏதுவான செயல்களைச் செய்யக்கூடாது என்று கூறுகிறது.

## 9.15 அவை செய்தற்குற்றம் ஆவன

4. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (964)

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (965)

நற்குடியில் பிறந்தார் தம் உயர்ந்த நிலையினின்றும் தாழ்ந்தவிடத்துத் தலையினின்றும் விழுந்த மயிர்போல குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்து நின்றாரும் தாழ்வுக்கு ஏதுவான செயல்களைக் குன்றிமணி அளவேனும் செய்யுங்கால் தம் நிலையில் தாழ்வர்.

மானத்தை விட்டுத் தம்மை அவமதிப்பார் பின்னே நிற்பது, புகழினையும் தாராது! தேவர் உலகத்தும் கொண்டு சேர்க்காது.

இவை இரண்டும் தாழ்ந்தவிடத்து செய்தற் குற்றம் ஆவன பற்றி உரைக்கிறது.

## 9.16 மானம் பொருட்டாக இறப்பின் சிறப்பாகும்

6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதல் என்மற்று
இகழ்வார் பின் சென்று நிலை (966)

7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று (967)

8. மருன் தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து (968)

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (969)

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு (970)

ஒருவன் தன்னை இகழ்வார் பின்னே சென்ற பொருள் பெற்ற அதனால் உயிர் வாழ்தலினும் அது செய்யாது அவன் அந்நிலையிலேயே மானத்தோடு இறத்தல் என்று கூறப்படுதல் நல்லது.

பெருந்தகைமையாகிய மானம் தன் பெருமை அழிய வந்த விடத்துச் சாவாது உடம்பைப் பேணிவளர்க்கும் வாழ்க்கை பின்னும் சாவாதிருக்க மருந்தாகுமோ?

தன் உடம்பினின்றும் ஒருமயிர் நீங்கினாலும் உயிர் வாழாது, அதனை நீத்த மானம் உடையாரது புகழ் உருவினை உலகோர் எஞ்ஞான்றும் தொழுது போற்றுவர்.

மானத்தோடு வாழும் வாழ்க்கைதான் சிறந்த வாழ்க்கையாகும். நற்குடிப்பிறந்தார் தம் குடிப்பெருமை தாழ்தற்குரிய செயல்களை ஒருபோதும் செய்யார் நற்குடிப் பிறந்தார் தம் மானத்துக்கு தாழ்வு வந்தக்கால் உயிர் வாழார்.

மானம் பொருட்டாக அமைந்தால் நற்குடிப்பிறந்தார் உயிர் வாழ மாட்டார்கள் என்பதை இந்நான்கு குறட்பாக்களும் உணர்த்துகின்றன.

## 9.17 நிறைவாக

- திருக்குறளில் குடிமை என்ற அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொண்டீர்கள்
- திருக்குறளில் மானம் என்ற அதிகாரத்தின் கருத்தை அறிந்து கொண்டீர்கள்

## 9.18 சோதித்தறியும் வினாக்கள்

1. குடிமை என்ற அதிகாரத்தின் பொருளைக் கூறுக

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………2. மானம் பற்றி பரிமேலழகர் கூறும் கருத்துக்களை எழுதுக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………….

3. நற்குடிப்பிறந்தாரின் இயல்புகள் யாவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………

4. மானம் உடைவரின் செயல்களாக திருவள்ளுவர் யாது உரைக்கின்றார்?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………………

## 9.19 பயிற்சி வினாக்கள்

குறிப்பு

1. குடிமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க
2. மானம் என்ற அதிகாரத்தின் சிறப்புக்களை விரித்துரைக்க

## 9.20 மேலும் படித்தறிக

1. திருக்குறள், ஆறுமுக நாவலர் ஆசிரியர், தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், வாணி நிகேதன் அச்சுக்கூடம் சென்னை

# கூறு 10

## பெருமை, சான்றாண்மை

## 3. பெருமை (971 - 980)

## 10 பாட அமைப்பு

10.1 அறிமுகம்

10.2 குறிக்கோள்கள்

10.3 திருக்குறளின் பெருமைகள்

10.4 பெருமை அதிகார வைப்புமுறை

10.4.1 பெருமையின் சிறப்பு

10.4.2 குடிமை செல்லும் இவற்றால் பெருமை வாராது

10.4.3 பெருமையின் நிறை உடைமை

10.4.4 பெருமை உடையார் ஆற்றல் வல்லார்

10.4.5 பெருமை இலார்

10.4.6 பெருமை உடையார் சிறுமை உடையார் செயல்கள்

10.5 சான்றாண்மை அதிகார வைப்பு முறை

10.5.1 சால்பிற்கு ஏற்ற குணங்கள் பொதுவானவை

10.5.2 சான்றாண்மை சிறப்பு வகையால் கூறப்பட்டது

10.5.3 சான்றாண்மை நிறைந்தார் தம் சிறப்பு

10.6 நிறைவாக

10.7 சோதித்தறியும் வினாக்கள்

10.8 பயிற்சி வினாக்கள்

10.9 மேலும் படித்தறிக

## 10.1 அறிமுகம்

ஆசிரியர் திருவள்ளுவர் திருக்குறளுக்கு இட்ட பெயர் 'முப்பால்' என்பதாம். பாலாவது பகுப்பு அல்லது பகுதி என்னும் பொருள் தருவது. திருக்குறள் அறம், பொருள், காமம் என்னும் மூன்று பகுதிகளாக உள்ளமையின், 'முப்பால்' என்பது முதற்பெயராய் அமைந்ததாம். திருவள்ளுவரின் நூலுக்குப், 'பொய்யாமொழி', 'பொதுமறை', தெய்வநூல்' முதலியனவாகப் பல பெயரிட்டுப் பிற்காலத்தார் போற்றி வழங்கினாலும், 'முப்பால்' என்னும் பெயரையே பெரும்பாலோர் குறிப்பிட்டுள்ளனர். திருக்குறளின் பல்வேறு சிறப்புகளையும் கூறும் திருவள்ளுவமாலையில் 'முப்பால்' என்னும் பெயர் வழக்கே மிகுதியாயுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்து உணர்த்தும் 'நாலடி நான்மணி' என்று தொடங்கும் பழைய செய்யுளில் 'முப்பால்' என்பதுவே இந்நூலின் பெயராகத் தரப்பட்டிருக்கிறது. தமிழ் நாவலர் சரிதையில்,

அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன் - குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்?

என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்காகத் தரப்பட்டிருக்கிறது. திருக்குறளில் அமைந்துள்ள பெருமை, சான்றாண்மை என்னும் அதிகாரங்களை அறிமுகப்படுத்தும் பகுதியாக இக்கூறு அமைகிறது.

## 10.2 குறிக்கோள்கள்

- திருக்குறளின் பெருமை பற்றிய அதிகாரத்தைப் புரிந்து கொள்வீர்கள்
- திருக்குறளின் சான்றாண்மை என்னும் அதிகாரத்தின் பொருளை அறிந்து கொள்வீர்கள்

## 10.3 திருக்குறளின் பெருமைகள்

### 1. சார்பின்மை

சாதி, இன, மொழி சமய நாடு எதையும் சார்ந்திராது இருப்பது திருக்குறளின் தமிழ் பற்றியோ எந்த ஒரு கடவுளின் பெயரோ, இனத்தின் பெயரோ குறிப்பிடவில்லை. அதே நேரம் எல்லா மதங்களின் கொள்கை விளக்கமாக இருக்கிறது என்பது தான் திருக்குறளின் பெருமை. மதங்கள் உரிமை கோருதலும் அதனால் தான்.

**2.எளிமை**

சங்க இலக்கியம் படிக்க வேண்டுமென்றால் தமிழ் படித்த கல்வியாளர்களுக்குக் கூட தமிழ் அதராதி துணை வேண்டும். ஆனால் தமிழ் படிக்கத் தெரிந்த எவரும் திருக்குறளைப் படித்து அறிந்து கொள்ள முடிகிற அளவிற்கு எளிமையானது குறள்.

3. **காலம் கடந்து நிற்கும் உண்மை**

அன்பு, அறம், நட்பு, காதல் இருக்கும் வரை திருக்குறள் வாழ்ந்திருக்கும். உலகம் உள்ளவரை குறளின் குரலும் ஒலித்துக் கொண்டிருக்கும். சமுதாயச் சீர்கேட்டை எதிர்த்து வள்ளுவர் அன்று காட்டிய சீற்றம் இன்றும் அவசியமாயிருக்கிறது. அன்று தனி மனித ஒழுக்க நெறிகள் பற்றிச் சாடியவைகள் இன்றைய தேவையாய் இருக்கிறது. அரசாள்வார் பற்றிவள்ளுவர் எள்ளி நகையாடியது இன்றும் பொருத்தமாக இருக்கிறது.

4. **இனிமை**

குறள் ஒவ்வொன்றும் பட்டை தீட்டிய வைரம். அதன் சொல்லாட்சியும் கருத்துச் செறிவும் கற்போர்க்கும் கேட்போர்க்கும் செவிக்கும் மனத்திற்கும் இனிமை தருவது குறள் தரும் சொல்லமுதம்.

குறளின் கருத்துச் செறிவு

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் என்றார் இடைக்காடர் என்னும் புலவர்
ஆனால் ஔவையாரோ இதில் நிறைவு அடையாமல்
அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்
எனக் கூறி எல்லாவற்றுக்கும் மேலாகக் கூறுகிறார்.

அறவாழ்வுக்குத் தெளிவான வழிகாட்டி

வீட்டில் அமர்ந்து கொண்டு நமது தந்தையோ தாத்தாவோ கூறும் ஆலோசனைகள் போல திருக்குறள். நம் வாழ்வில் தடுமாறும் போதெல்லாம் நல்வழி காட்டும் வழிகாட்டியாக விளங்குபவர் திருவள்ளுவரே!

குறிப்பு

## 10.4 பெருமை அதிகார வைப்பு முறை

அஃதாவது செயற்கு அரியசெய்தல், தமக்கு இன்மை பிறர்குற்றம் கூறாமை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை, நிலையினும் மேன்மேல் உயர்த்தல் பயக்குமாதலின், பெருமை உள்ள நிலையில் தாழாமை உள்வழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப்பட்டது.

### 10.4.1 பெருமையின் சிறப்பு

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இனி ஒருவற்கு
அஃது இறந்தும் வாழ்தும் எனல் (971)

ஒருவனுக்குப் புகழாவது ஊக்கம் மிகுதியாம் ஒருவனுக்கு இழிவாவது ஊக்கம் ஒழிந்து உயிர் வாழ்வோம் என்று கருதுதல்.

### 10.4.2 குடிமை, செல்லும் இவற்றால் பெருமை வாராது

2. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

மக்கள் யாவர்க்கும் பிறப்பியல் ஒக்குமே எனினும் செய்யும் செயல்களின் வேறுபாட்டால் சிறப்பியல்புகள் ஒத்துவாரா.

### 10.4.3 பெருமையாவது நிறை உடைமை

3. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் (973)

மேல்நிலையில் இருந்தாலும் மேன்மைப்பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர். கீழ் நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ் மக்கள் அல்லர்.

### 10.4.4 பெருமை உடையார் ஆற்றல் வல்லார்

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (974)

கற்புடை மகளிர் மனத்தின்மையால் நிறையின் வழுவாமல் தம்மைத்தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு போல, ஒருவன் நிறையின் வழுவாமல் காத்துக் கொண்டு ஒழுகுவானாயின் பெருமைப்பண்பு அவன்கண் உண்டாகும்

### 10.4.5 பெருமை இலார்

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் (975)

பெருமைப்பண்புகள் உடையரா, செயற்கரிய செயல்களை, உரியமுறைப்படி செய்து முடிக்க வல்லவராவா்.

குறிப்பு

### 10.4.6 பெருமை உடையார் - சிறுமை உடையார் செயல்கள்

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு (976)

7. இறப்பே புரிந்த தொழிலதாம் சிறப்பத்தான்
சீரல் லவர்கண் படின் (977)

8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (978)

9. பெருமை பெருமிதம் இன்மை, சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல் (979)

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும் (980)

பெரியவர்களைப் போற்றி, அவர்கள் இயல்பினைக் கைக்கொண்டு, துணையாக ஏற்றுக் கொள்வோம் என்னும் கருத்து சிறியராயினார் உணர்ச்சியின் இருக்காது.

பெரியோரிடத்து உளதாகிய சிறப்பு நிலை தனக்கு ஒவ்வாத சிறியார் இடத்துப்படுமாயின், அது வரம்பு கடந்த செயல்களைச் செய்விக்கும் தன்மை உடையதாம்.

பெருமை உடையார் அச்சிறப்பு தமக்குக்கிட்டிய பொழுதிலும் கூடத் தருக்கின்றி அமைந்து ஒழுகுவார்! மற்றைச் சிறுமையுடையார் அ∴து இல்லாத பொழுதும் தம்மை வியந்து பாராட்டிக் கொள்வர்.

பெருமைப் பண்பாவது, தருக்கின்றி இருத்தல், சிறுமைக்குணமாவது செருக்கின் உச்சநிலையில் நிற்றலாகும்.

பெருமைப் பண்புடையார் பிறா் குணநலன்களைக் கூறி, குற்றங்களை வெளிப்படுத்தாது மறைப்பர்! ஆனால் சிறுமைக்குணமுடையார், பிறா் குணநலன்களை மறைத்துக் குற்றங்களையே வெளிப்படுத்துவர்.

### 10.5 சான்றாண்மை அதிகார வைப்பு முறை (981 - 990)

சால்பு - இயல்பு - குணங்களான் - நிறைதல் - சான்றாண்மை குணங்களான் நிறைந்து ஆளுதல். சான்றாண்மை பல குணங்களையும் உள்ளடக்கிய சொல்.

அஃதாவது பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆள்தல் தன்மை. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

### 10.5.1 சால்பிற்கு ஏற்ற குணங்கள் பொதுவானவை

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளாதூஉம் அன்று (982)

கடைமையை அறிந்து, நிறை பண்புகளை மேற்கொண்டு ஒழுகுவோர்க்கு, நல்லனவாய் குணங்கள் எல்லாம் செய்யத்தக்க இயல்பான கடமைகளாம்.

சான்றோர் நலமாவது குணங்களாய நலங்களே; குணநலம் அதனை ஒழிந்த கல்வி அறவு முதலியவற்றால் வரும் பிற நலங்களாகிய எல்லா நலங்களிலும் உள்ளதொரு நலமன்று.

### 10.5.2 சான்றாண்மை சிறப்பு வகையால் கூறப்பட்டது

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் (983)

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு (984)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை (985)

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
தலையல்லார் கண்ணும் கொளல் (986)

எல்லோரிடத்தும் காட்டும் அன்பும், பழிபாவங்களுக்கு நாணுதலும், பொது நலத்தொண்டு செய்தலும் கண்ணோடலும், உண்மை கூறலும் ஆகிய ஐந்தும் சால்பு என்னும் மாளிகையைத் தாங்கும் தூண்களாம்.





தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு பிறருடைய தீமையை எடுத்துச் செல்லாத நற்பண்மை அடிப்படையாகக் கொண்டது. பிற அறங்கள் வேண்டுமாயினும் தவத்திற்கு மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவது கொல்லாமை என்னும் அறமாகும். அதுபோலப் பிற பண்புகள் வேண்டுமாயினும் பிறர் செய்த குற்றத்தைச் சொல்லாதிருப்பதே சால்பு.

ஒரு செயலைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது எல்லோரிடத்தும் பணிவாக நடந்து கொள்ளுதல் அப்பணிவு சால்புடையார் தம் பகைவரையும் ஒழிக்கும் கருவியாகும்.

நிறைகுணமாகிய பொன்னின் தரத்தை அளந்து அறிய உரிய கட்டளைக்கல் எதுவெனின் தோல்வியைச் சமமாகதவரிடத்தும் ஏற்றுக் கொள்ளுதலாகும்.

**10.5.3 சான்றாண்மை நிறைந்தார்தம் சிறப்பு**

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (987)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் (988)

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார் (989)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை (990)

தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் இனியவற்றைச் செய்யாராயின், நிறைகுணத்தால் உண்டாகும் பயன் என்?

சால்பு என்று சொல்லப்படும் உறுதிப்பாடு உண்டாகப் பெறின், ஒருவருக்கு வறுமை இழிவாகாது. அவர்கள் சால்புடைமையாகிய கடற்கரை என்று சொல்லப்படுவார், ஊழிக்காலத்தே கடல்கள் பெயர்ந்தாலும் தாம்தம் நிலையினின்றும் மாற மாட்டார்கள்.

குறிப்பு

பண்புகளான் நிறைந்தவர் தம் இயல்பு குன்றுவராயின் மற்றை இப்பெரிய உலகம் தானும் தன்பொறையைத் தாங்காதாய் முடியும்.

## 10.6 நிறைவாக

- திருக்குறளின் பெருமை பற்றிய அதிகாரத்தைப் புரிந்து கொண்டீர்கள்.
- திருக்குறளின் சான்றாண்மை என்னும் அதிகாரத்தின் பொருளை அறிந்து கொண்டீர்கள்.

## 10.7 சோதித்தறியும் வினாக்கள்

1. பெருமை அதிகார வைப்பு முறையைக் கூறுக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………2. 2.சான்றாண்மை அதிகார வைப்பு முறையை விளக்குக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………

3. பெருமை உடையாரின் செயல்கள் யாவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………

4. சால்பு ஊன்றிய தூண் விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………

5. சான்றாண்மைக்கு ஆழி எனப்படுபவர் யார்?

………………………………………………………………………………
………………………………………………………………………………
……………………………..

குறிப்பு

**10.8 பயிற்சி வினாக்கள்**

1. திருக்குறளின் பெருமைகளை தொகுத்துரைக்க
2. திருக்குறளின் சான்றாண்மையில் இடம்பெறும் கருத்துக்களை விரித்துரைக்க

**10.9 மேலும் படித்தறிக**

1.திருக்குறள் தெளிவுரை, ஏ.கே.ராஜா (உரையாசிரியர்), மணிவாசகர் பதிப்பகம்,சென்னை 108

## கூறு 11

### பண்புடைமை. நன்றியில் செல்வம்

11. பாட அமைப்பு பண்புடைமை (991 - 1000)

11.1 அறிமுகம்

11.2 குறிக்கோள்கள்

11.3 பண்புடைமை அதிகார வைப்புமுறை

11.3.1 பண்புடையாதற் காரணம்

11.3.2 பண்புடைமை உடையாரது சிறப்பு

11.3.3 பண்புடைமை இல்லாரது இழிவு

11.4 நன்றியில் செல்வம்

11.4.1 நன்றியில் செல்வம் அதிகார வைப்புமுறை

11.4.1.1 ஈட்டியானுக்குப் பயன்படாத செல்வம்

11.4.1.2 பிறருக்குப் பயன்படாத செல்வம்

11.4.1.3 ஈவதும் நுகர்வதும் இல்லாத செல்வம்

11.4.1.4 செல்வத்துக் குற்றம் கூறப்பட்டது

11.5 நிறைவாக

11.6 சோதித்தறியும் வினாக்கள்

11.7 பயிற்சி வினா

11.8 மேலும் படித்தறிக

குறிப்பு

## 11.1 அறிமுகம்

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். இருப்பினும் மாணவர்கள் சிறிதளவு படிப்பறிவு பெற்றவர்கள். தமிழ் இலக்கியம் சாரா துறையினர் மற்றும் உள்ள அனைவரும் படித்ததும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய அளவில், எளிய நடையில் பல உரைகள் காணப்படுகின்றன. அவற்றை முன் வைத்து பண்புடைமை என்னும் அதிகாரத்தையும் நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தையும் அறிமுகப்படுத்தும் பகுதியாக இது அமைகிறது.

## 11.2 குறிக்கோள்கள்

- பண்புடைமை என்னும் அதிகாரத்தைப் பற்றிப் புரிந்து கொள்வீர்கள்
- நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொள்வீர்கள்

## 11.3 பண்புடைமை அதிகார வைப்பு முறை

அ∴தாவது பெருமை, சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லார் இயல்புகளும் அறிந்த ஒத்து ஒழுகுதல். 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்ற கலித்தொகையின் அடிகளுக்கேற்ப அதிகார முறைமை அமைந்துள்ளது.

### 11.3.1 பண்புடையாராதற் காரணம்

1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார் மாட்டும்
   பண்புடைமை என்னும் வழக்கு (991)
2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
   பண்புடைமை என்னும் வழக்கு (992)

யாவரிடத்திலும் எளிய முறையில் பழகுவதால், பண்புடைமை என்னும் நல்ல நெறியினைப் பெறுதல் எளியது என்ற நூலோர் சொல்லுவர்.

பிறர் மேல்அன்புடையனாதலும், நல்லியல்புகள் நிறைந்த குடியின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும், பண்புடைமை என்று உலகோர் சொல்லும் நன்னெறியாகும்.

### 11.3.2 பண்புடைமை உடையாரது சிறப்பு

3. உறுப்பு ஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
   பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு (993)

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு (994)

5. நகையுள்ளும் இன்னாது இகழ்சிசி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு (995)

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (996)

உடல் உறுப்புகளால் ஒத்தல் மக்கள் ஒப்பாகாது. செறியத்தக்க பண்பால் ஒத்தலே பொருந்திய ஒப்பாகும்.

பிறர்க்கும் தமக்கும் ஈடுபாட்டுடன் பயன்பட்ட வாழ்க்கை உடையாரது பண்பினை, உலகத்தார் கொண்டாடா நிற்பர்.

விளையாட்டின் கண்ணும் ஒருவன் தன்னை இகழ்ந்த பேசுதல் துன்பம் தருவதாகும். ஆதலால் பிறர் பாடறிந்து ஒழுகுவாரிடத்துப் பகைமை உள்வழியும், இனியவாய் பண்புகளே உளவாவன.

பண்படையாரைப் பொருந்தி இருத்தலால் தான் உலகம் இயங்கி வருகின்றது. அவர்கள் இருத்தல் இல்லை என்றால் உலகம் மண்ணின்கண் புக்கு மாய்ந்து ஒழியும்.

### 11.3.3 பண்புடைமை இல்லாரது இழிவு

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் (997)

8. நண்பு ஆற்றார் ஆகி நயனில் செய்வார்க்கும்
பண்பு ஆற்றாக ஆதல் கடை (998)

9. நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் (999)

10. பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று
(1000)

நன்மக்கட்குரிய பண்பு இல்லாதவர், அரத்தின் கூர்மை போன்ற கூர்த்த அறிவுடயராயினும் ஓரறிவிற்றாய மரத்தினை ஒப்பர்.

தம்மோடு நட்பினைச் செய்யாது பகைமையைச் செய்து ஒழுகுவார் மாட்டும் தாம் பண்புடையராய் ஒழுகாதிருத்தல் அறிவுடையார்க்கு இழுக்காகும். பிறரோடு கலந்து பேசி, சிரித்துப் பழக

குறிப்பு

முடியாதார்க்கு இந்த மிகப் பெரிய உலகம், பகற்பொழுதாயினும் இருளின்கண் கிடப்பதாகும்.

பண்பு இல்லாதான் பெற்ற பெரிய செல்வம் அவனது குற்றத்தால் ஒருவனுக்கும் பயன்படாது கெடுதல், நல்லபால் வைத்திருந்த கலத்தின் குற்றத்தால் திரிந்து கெட்டாற் போன்றதாகும்.

உலக இயக்கமே பண்புடையாரால் நிகழ்வதாகும். பண்புடையார் இன்றேல் உலகம் மண்புக்குமாய் விடும்.

## 11.4 நன்றியில் செல்வம் (1001 - 1010)

செல்வத்துப் பயன் ஈதலாகும். செல்வத்தை உடையவன் தானும் நுகராமல் பிறர்க்கும் கொடுக்காமல் இருப்பது இவ்வதிகாரத்தில் விவரிக்கப்பட்டது.

### 11.4.1 நன்றியில் செல்வம் அதிகார வைப்பு முறை

அஃதாவது ஈட்டியார்க்கும். பிறர்க்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தினது இயல்பு உடையானது குற்றம் செல்வத்தின் மேல் ஏற்றப்பட்டது.

#### 11.4.1.1 ஈட்டியானுக்குப் பயன்படாத செல்வம்

1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃது உண்ணான்
செத்தான் செய்க்கிடந்தது இல்
(1001)

தன் மனையிடம் எல்லாம் நிறைதற்கு ஏதுவாய பெரும் பொருளை ஈட்டி வைத்தும், அதனை உண்டு மகிழாதவன் உலகில் உயிருடன் உளவாயினும் இறந்தான் ஆவன். ஏனெனில் அவனுக்கு அப்பொருள் இடத்துச் செய்யக் கூடிய உரிமை ஒன்றும் இல்லையாதலின்.

#### 11.4.1.2 பிறர்க்குப் பயன்படாத செல்வம்

2. பொருளானாம் எல்லாம் என்று ஈயாது இவனும்
மருளானாம் மாளாப் பிறப்பு
(1002)

3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை
(1003)

பொருளினால் எல்லாம் உண்டாகும் என்று எண்ணி அதனைச் சம்பாதித்து, பிறர்க்கும் கொடுக்காமல், தானும் உண்டு மகிழாமல் பொருளில் பற்றுள்ளம் கொண்டாழுகும் மயக்க அறிவினனாகிய ஒருவனுக்கு நிறைவற்ற பிறப்புதான் உண்டாகும் (பேய்ப்பிறப்பு என்பர் பரிமேலழகர்)

பொருள் ஈட்டுதலில் மட்டுமே விருப்பம் உடையனாகி அதன் பயனாய் புகழை விரும்பாத மக்களது பிறப்பு நிலத்திற்குப் பாரமாகும், சுமையாகக் கருதப்படுவான். பிறர்க்குக் கொடுத்தலை அறியாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாத ஒருவன் தான் இறந்து பின்னர் தனக்குப் பின் எஞ்சியிருப்பதாக எதனைக் கருதுவான்?

### 11.4.1.3 ஈவதும் நுகர்வதும் இல்லான் செல்வம்

4. எச்சமென்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
   நச்சப் படாஅ தவன் (1004)
5. கொடுப்பதூம்உம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
   கோடிஉண் டாயினும் இல் (1005)

பிறர்க்குக் கொடுப்பதும் தாம் நுகர்வதுமாய இருசெயலும் இல்லாதார்க்குப் பலகோடி பொருள் உண்டாயினும் ஒரு பயனும் இன்று.

தான் நுகராமலும், தகுதி உடையார்க்கு வேண்டியதொன்றினை ஈயும் இயல்பு இலனாயின், அவன்பெற்ற செல்வம் அவனுக்குத் துன்பத்தைத் தரும்.

### 11.4.1.4 செல்வத்து குற்றம் கூறப்பட்டது

6. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கு ஒன்று
   ஈதல் இயல்புஇலா தான்
   (1006)
7. ஆற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
   பெற்றாள் தமியள்மூத் தற்று
   (1007)
8. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
   நச்சு மரம்பழுத் தற்று
   (1008)
9. அன்பு ஓரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய

குறிப்பு

ஒண்பொருள் கொள்வார் பிறர் (1009)

10. சீருடைச் செல்வர் சிறுதுணி மாரி
வறங்கூர்ந்து அனையது உடைத்து (1010)

ஒரு பொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டிய பொருளைக் கொடாதவனது செல்வம், பயனின்றிக் கழியும்,

பெண்டிருள்ளும் மிக்க பண்புகளைப் பெற்ற ஒருத்தி, கொடுப்பார் இல்லாமையின் கணவன் இன்மையால் தனியளாய்க் கிழவியாகிய தன்மைத்தது.

பிறர்க்குக் கொடாமையின் மக்களால் விரும்பப்படாதவன் செல்வத்தை அடைதல் ஊர் நடுவே நின்ற நச்சு மரம் பழுத்தாற் போன்றது; பயன் தராது.

சுற்றத்தார், நற்பண்புடையார் ஆகியோர் இடத்து அன்பு செய்தலைத் தவிர்த்து தானும் உண்ணாமல், தன்னையும் வருத்திக் கொண்டு அறநெறியையும் எண்ணிப் பார்க்காமல் சேர்த்து வைத்தவனது சிறந்த பொருளைப் பிறர் கொண்டு போய்ப் பயன்கொள்வர்.

புகழுடைய செல்வத்தினை உடையார்க்கு உண்டாகும் சிறு வெறுப்பால் வறியார்க்குக் கொடுக்காவிட்டால் அது மழைவளம் கொண்ட மேகம் மழை பொழியாது ஒழிந்தது போன்றது.

## 11.5 நிறைவாக

- பண்புடைமை என்னும் அதிகாரத்தைப் பற்றிப் புரிந்து கொள்வீர்கள்
- நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொள்வீர்கள்

## 11.6 சோதித்தறியும் வினாக்கள்

**1.** பண்புடைமை என்னும் அதிகார வைப்பு முறையைக் கூறுக

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………

2. பண்புடையாதற்குக் காரணம் யாது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

………………………………

3. நச்சு மரம் பழுத்தற்று – விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

………………………………

4. நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தின் பொருளை விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

………………………………

5. ஈட்டியானுக்குப் பயன்படாத செல்வம் எதைப் போன்றது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

………………………………

6. ஒண்பொருள் கொள்வார் பிறர் - விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

………………………………

**11.6 பயிற்சி வினா**

**1.** பண்புடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க

2. நன்றியில் செல்வம் என்னும் அதிகாரம் எதனை உணர்த்துகிறது?

**11.7 மேலும் படித்தறிக**

1. திருக்குறள், பெரியண்ணன் உரை, வனிதா பதிப்பகம், சென்னை 17, பதிப்பு 2016

## பிரிவு 4: திருக்குறள் - உழவு

### கூறு 12

### நாணுடைமை, குடிசெயல் வகை

12. பாடப்பகுதி நாணுடைமை (1011 - 1020), குடிசெயல் வகை

12.1 அறிமுகம்

12.2 குறிக்கோள்கள்

12.3 நாணுடைமை

12.3.1 நாணினது இலக்கணம்

12.3.2 நாணின் சிறப்பு

12.3.3 நாணுடையார் தம் சிறப்பு

12.3.4 நாணுடையார் செயல்

12.3.5 நாணம் இல்லாரது இழிவு

12.4 குடிசெயல் வகை

12.4.1 குடிசெயற்குக் காரணம்

12.4.2 குடிசெயற்குத் தெய்வம் துணையாகும்

12.4.3 குடியை உயர்த்துவார் எய்தும் சிறப்பு

12.4.4 குடிசெய்வார் இயல்பு

12.4.5 குடிசெய்வார் இல்லாத குடிக்கு ஏற்படும் குற்றம்

12.5 நிறைவாக

12.6 சோதித்தறியும் வினாக்கள்

12.7 பயிற்சி வினாக்கள்

12.8 மேலும் படித்தறிக

## 12.1 அறிமுகம்

காதல், வீரம், கொடை முதலிய சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கையின்பத்திலும் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம் அடுத்த சில தலைமுறைகளில் நீதிகளைப் பாடும் நிலைக்கு மாறியது. அந்தக் காலத்தைச் சங்கம் மருவிய காலம் அல்லது நீதிநூல் காலம் என்பர். தமிழ்ப் புலவர்கள் காதலையும், வீரத்தையும் இருகண்களாகக் கருதினார்கள். அறத்தை உயிராக மதித்தார்கள். எனவே அவர்கள் அறநெறி நில்லாக் காதலையும் வீரத்தையும் எதிர்த்தார்கள். சங்கப்புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் அறக்கருத்துக்களை விளக்கவே தனி அறநூல்கள் தோன்றின. இவை வாழ்வு நூல்களாகப் போற்றப்பெற்றன.

உலகில் இலக்கிய அரங்கில் தமிழனின் பெருமையை நிலைநாட்டும் உயர்வுடையது இந்நூல். இதனை உலகப் பொதுமறை

என்றே அறிஞர்கள் குறித்தனர். உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மொழி, இனம், சமயம், நாடு கடந்த இந்நூலின் பெருமை காலம் கடந்தும் வளர்பிறை போல் வளர்ந்து வருகின்றது.

**குறிப்பு**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று தேசியகவி பாரதியாரும் வள்ளுவத்தின் பெருமையைச் சுட்டிக்காட்டியுள்ளார். உலகுக்கு உரிய நூலாகப் பாராட்டியுள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன் விளங்கிய ஒருவர் எல்லாச் சமயத்தாரும் போற்றக்கூடிய வகையில் எல்லார்க்கும் பொதுவான ஒருநூல் எழுதியிருப்பது பெரிய வியப்பாகும்.

அதனால் அவர்க்குப் பின்வந்த எல்லா நூல்களும் அவருடைய கருத்துகளையும் சொற்களையும் எடுத்தாளுகின்றன. வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் போரிட்டுக் கொண்டிருந்த காலங்களிலும் அவர்கள் எல்லோரும் திருக்குறளைப் போற்றிக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் தம் தம் சமயத்தைச் சார்ந்தவரே திருவள்ளுவர் என்று சான்றுகள் காட்டிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட திருக்குறளின் பெருமைகளை உலகறியச் செய்யும் விதமாக நாணுடைமை என்னும் அதிகாரத்தை அறிமுகப்படுத்தும் பகுதியாக இப்பாடப் பகுதி அமைகிறது.

## 12.2 குறிக்கோள்கள்

- நாணுடைமை என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொள்வீர்கள்
- குடிசெயல்வகை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்

## 12.3 நாணுடைமை

அ∴தாவது மேற்சொல்லிய சால்பு, பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையராம் தன்மை பற்றி நாணுடைமையில் கூறப்பட்டது.

### 12.3.1 நாணினது இலக்கணம்

குறிப்பு

1. கருமத்தால் நாணுதல் நாணுந் திருநுதல்
நல்லவர் நாணுப்பிற
(1011)

நன்மக்களின் நாணாவது இழிசெயல்கள் புரிந்தமையான் நாணுதல். நல்ல நெற்றியினை உடைய மகளிர் நாணத்தினின்றும் வேறுபட்டது அது.

## 12.3.2 நாணின் சிறப்பு

2. ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமைட மாந்தர் சிறப்பு
(1012)

3. ஊணைக் குறித்த உயிரெல்லாம் நாண் என்னும்
நன்மை குறித்தது சால்பு
(1013)

4. அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கு அ.்.து இன்றேல்
பிணியன்றே பீடு நடை
(1014)

உணவு, உடை போன்றவை எல்லாம் மக்கள் உயிர்க்குப் பொதுவானவை. ஆனால் நாணுடைமை நன்மக்கட்குச் சிறப்பினைத் தருவது.

பலவகையான உயிரினங்களும் தம் உடம்பினை நிலைக்களனாகக் கொண்டவை. அது போலச் சால்பு என்னும் நிறை, பண்பு, நாண் என்னும் நன்மைக் குணத்தை நிலைக்களனாகக் கொண்டது.

சான்றோர்க்கு நாணுடைமை அணிகலனாகும். அந்நாணுடைமை அவரிடம் இன்றேல் அவர்தம் பெருமித நடை அவர்க்கு நோய் ஆகும்.

## 12.3.3 நாணுடையார் தம் சிறப்பு

5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபாதி என்னும் உலகு
(1015)

பிறர்க்கு வரும் பழியையும் தன்பழிபோல் ஒப்ப மதித்து நாணுவாரை உலகோர் நாணுக்கு உறைவிடம் என்று கூறுவர்.

### 12.3.4 நாணுடையார் செயல்

6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்
(1016)

7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப் பொருட்டால்
நாண் துறவார் நாண் ஆள்பவர்
(1017)

உயர்ந்தோர் தமக்குக் காவலாக நாணத்தைக் கொள்வதன்றி அகன்ற உலகத்தைக் கொள்ள விரும்ப மாட்டார்கள்.

நாணினது சிறப்பறிந்து அதனை விடாது ஒழுகுவார் நாணத்தைக் காப்பதற்காக உயிரையும் விடுவர். உயிரைக் காக்க நாணத்தை விடமாட்டார்.

### 12.3.5 நாணம் இல்லாரது இழிவு

8. பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து
(1018)

9. குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை
(1019)

10. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாலை
நாணால் உயிர்மருட்டி யற்று
(1010)

பிறர் நாணத்தக்க பழியைக் கண்டு ஒருவன் தான் நாணுமாறு செய்யுமாயின் அந்நாணம் இல்லாமை அறக் கடவுள் அவனை அடையாது விட்டு நீங்கும். ஒருவன் ஒழுக்கம் பிழைப்பானாயின் அது அவன் தோன்றிய குடிப்பிறப்பு ஒன்றினை மட்டும் கெடுக்கும். அவனிடம் நாணம் இன்மை நின்றால் அது அவன் செய்த நன்மைகள் அனைத்தையும் கெடுக்கும்.

மனத்தில் நாணம் இல்லாதவர் நடமாட்டம் மரத்தால் செய்த பாவையை கயிற்றால் இயக்கி உயிர் உடையது போல மயக்கியது போன்றது.

பெண்களுக்கு இயல்பாக அமையும் நாணத்தினின்றும் வேறுபட்டது இது. ஒருவன் தான் செய்த இழிச்செயலை எண்ணி நாணுவதைப் பற்றியது இவ்வதிகாரம்.

## 12.4 குடிசெயல்வகை (1021 - 1030)

அ∴தாவது ஒருவன் தான் பிறந்த குடும்பத்தை உயரச் செய்தலின் திறம். இது தாழ்வின் கண் நாணுதல் உடையார்க்கு உளதாவது.

### 12.4.1 குடிசெயற்குக் காரணம்

1. கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
   பெருமையின் பீடுடையது இல்
   (1021)

2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
   நீள் வினையான நீளும்படி
   (1022)

ஒருவன் தான் பிறந்த குடியை உயர்த்தற்பொருட்டு நினைத்த செயலை நிறைவேற்ற இடையிலே அதனைக் கைவிட்டு நீங்கேன் என்ற கூறும் முயற்சியை விட மேம்பாடுடைய பெருமை வேறில்லை.

முயற்சியும், நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டையும் உடைய இடையறாத தொழிலினால் ஒருவன் குடி உயரும்.

### 12.4.2 குடிசெயற்குத் தெய்வம் துணையாகும்

3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
   மடிதற்றத் தான்முந் துறும்
   (1023)

4. சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
   தாழாது உஞற்று பவர்க்கு
   (1024)

என் குடும்பத்தை உயரச் செய்வேன் என்று முற்படும் ஒருவனுக்குத் தெய்வம் தன் உடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு முன்னே வந்து நிற்கும்.

தன் குடும்பத்தைத் தாழ்த்தாமல். வளர்சிக்கேற்ற வினையை விரைந்து செய்ய முயல்பவர்கட்கு அச்செயல் முடிக்கும் திறம் பற்றி ஆராய வேண்டாம்; தானே முடியும்.



### 12.4.3 குடியை உயர்த்துவார் எய்தும் சிறப்பு

5. குற்றம் இலனாயக் குடிசெய்து வாழ்வரைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு

(1025)

6. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்

(1026)

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை

(1027)

குற்றமாயின் செய்யாது தன் குடும்பத்தை உயரச் செய்ய ஒழுகும் ஒருவனை உலகத்தார் சுற்றமாகத் தாமே சென்று சூழ்ந்து கொள்வர்.

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்திச் சொல்லப்படுவது. தான் பிறந்த குடும்பத்தை ஆளும் தன்மையைத் தனக்குரியதாக ஆக்கிக் கொள்வதாகும்.

போர்க்களத்திற்குச் சென்றார் பலராயினும் போரைத் தாங்குதல் சிறந்த வீரர் பொறுப்பாதல் போல, ஒரு குடும்பத்தில் பிறந்தார் பலர் ஆயினும், அதன் பாரத்தைத் தாங்குதல் அவர்களுள் ஆற்றலுடையார் பொறுப்பாகும்.

### 12.4.4 குடிசெய்வார் இயல்பு

8. குடி செய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்

(1028)

தன் குடும்பத்தை உயரச் செய்வார் சோம்பி இருந்து காலத்தை எதிர்பார்த்தல் என்பது கூடாது. சோம்பலாக இருந்து கொண்டு மானத்தை நினைப்பாராயின் அவரது குடும்பம் கெடும். குடும்பத்தைத்

துன்பத்தினின்றும் காக்க முயற்சிப்பானது உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ?

### 12.4.5 குடிசெய்வார் இல்லாத குடிக்கு ஏற்படும் குற்றம்

9. இடும்பைக்கே கொள்கலன் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு
(1029)

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி
(1030)

துன்பம் வந்தபோது உடனிருந்து தாங்கி உதவும் நல்ல ஆள் இல்லாத குடும்பம் துன்பமாகிய கோடரி அடியிலே வெட்ட வீழ்ந்து விடும்.

ஒவ்வொருவரும் தான் பிறந்த குடும்பத்தை மேன்மேலும் உயரச் செய்தல் வேண்டும். குடி உயரக் கோல் உயரும், கோல் உயர நாடுயரும்.

### 12.5 நிறைவாக

- நாணுடைமை என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொண்டீர்கள்
- குடிசெயல்வகை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்

### 12.6 சோதித்தறியும் வினாக்கள்

1. நாணுடைமையின் இலக்கணம் பற்றி திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………

2. பிணியன்றே பீடுநடை விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………

3. குடிசெயல்வகை என்றால் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………

4. குடிசெய்வாரின் இயல்புகளை விளக்குக

குறிப்பு

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………

## 12.7 பயிற்சி வினா

1. நாணுடையாரின் சிறப்புகளையும் நாணம் இல்லாதவரின் இழிவையும் வள்ளுவர் வழி நின்று தொகுத்துரைக்க

2. குடிசெயற்குரிய காரணங்களையும், குடிசெய்வாரது இயல்பையும் விளக்கி வரைக

## 12.8 மேலும் படித்தறிக

1.திருக்குறள் தெளிவுரை, உரையாசிரியர் தூத்துக்குடி வழக்கறிஞர் ஏ.கே.ராஜா, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 108

2.முனைவர் வெ.திருவேணி தொல்காப்பியத்தில் வாழ்வியல் செய்திகள் சீதை பதிப்பகம், சென்னை -600005.(2017)பக்.9-19.

3. Neethi Noolgalil Thalaiyanadhu Thirukkural – University of London - 14-18-August -2013-International Conference Paper-Presented by Dr.V.Thiruveni.

# கூறு 13

## உழவு, நல்குரவு

13. பாட அமைப்பு

13.1 அறிமுகம்

13.2 திருக்குறளுக்கு வழங்கும் பெயர்களும், பெயர்க்காரணங்களும்

13.3 திரு என்னும் அடைமொழி

13.4 குறிக்கோள்கள்

13.5 உழவு

13.5.1 உழவின் சிறப்பு

13.5.2 உழவைச் செய்வாரது சிறப்பு

13.5.3 உழவுத் தொழில் செய்யுமாறு கூறப்பட்டது

13.5.4 உழுதொழில் செய்யாத வழி ஏற்படும் குற்றம்

13.6 நல்குரவு

13.6.1 வறுமை என்னும் துன்பம்

13.6.2 நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம்

13.6.3 வறுமை உளதாய வழிச் செய்வது

13.7 நிறைவாக

13.8 சோதித்தறியும் வினாக்கள்

13.9 பயிற்சி வினாக்கள்

13.10 மேலும் படித்தறிக



**குறிப்பு**

## 13.1 அறிமுகம்

பொதுவாக இலக்கியத் தோற்றத்தில் நம் நாட்டு இலக்கியங்களுக்கும் பிறநாட்டு இலக்கியங்களுக்கும், பெரிதும் வேறுபாடுண்டு. பிறநாட்டு இலக்கியங்கள், கவிஞருடைய அகவாழ்வு புறவாழ்வில் உண்டான துன்ப இன்பங்களை அடிப்படையாகக் கொண்டு மலர்ந்து விருப்பு வெறுப்புக்களாகிய மணங்களை வீசுவன. மலர்ந்த காலத்தில் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மலர்களைப் போலத் தோன்றிய காலத்தில் உலகத்தைச் சொக்க வைப்பன. காலங் கழிந்த பின்பு, வாடிய பூப்போலப் பழங்கதை தெரிந்து கொள்ளும் அளவிற்குப் பயன்படும். நம் நாட்டு இலக்கியங்களோ உலகியல் தத்துவங்களை அடியொற்றி எழுதப் பெறுவன. கவிஞன் வாழ்க்கைத்தரம் அவற்றில் தோன்றுவதில்லை எனலாம். கவிஞனின் வாழ்க்கை வறுமையால் வயிறு ஒட்டி நிற்கும். அவன் கவிதையில் அதனைக் காண முடியாது. கவிஞன் புடைசூழ அவனியெல்லாம் உலா வந்து, படிப்பவர்களையம் பக்கம் நின்று கேட்பவர்களையும் இந்த நிலையில் ஆக்கிவிடுவான். கவிஞன், ஓர் அரசிளங் குமரனாக இருப்பான். அவன் மேனியிற் சுருங்கிய தசையைக் காண இயலாது. ஒட்டிய கன்னமும் குழிந்த கண்ணும் அவன் முகத்தை அழகு செய்யமாட்டா. ஆனாலும் ஒரு துறவி காவியம் செய்வான். அது, உடும்பு போல உற்றார் உறவினரைப் பற்றி நின்று, பெண்டிரும் உண்டியும் இன்பம் என்றிருக்கும் பெருமக்களையும் அரச பதவியை நிலையென வாழும் மன்னாதி மன்னர்களையும், சீவகன் துறவு கொண்டது போல ஒரு நொடியில் மாற்றி விடும். ஆகவே நம் நாட்டுப்

புலவர்களின் வாழ்க்கைக்கும் கவிதைக்கும் இயைபு இருப்பதில்லை. அவர்கள் தம் வாழ்க்கையையோ - அதில் விளையும் கோபதாபக் கனலையோ பகைமைப் புகையையோ – நட்புத் தென்றலையோ வைத்துக் காவியம் எழுதுவதில்லை. உலகம் உணர்ச்சி நிலையில் உயர வேண்டும். அதற்காகத் தம் உணர்வைத் தம் வாழ்க்கையினின்றும் பிரித்து உயர்ந்தோருடைய குறிக்கோள் வாழ்வில் வைத்து அதுவே எங்கும் தோன்ற வேண்டும் என்று இலக்கியங்களை எழுதுகிறார்கள். அதனால் தான் நம் நாட்டுக் காவியங்களைகச் கொண்டு கவிஞன் வாழ்க்கை வரலாற்றைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. பிறநாட்டு இலக்கியங்களைப் படித்து ஊறிய அறிஞர்கள் சிலரும் பிறநாட்டு அறிஞர்கள் சிலரும் நம் நாட்டு இலக்கியங்களை அந்த முறையில் ஆராயப் புகுந்து முழுத் தோல்வியுற்றிருக்கிறார்கள். நமது திருவள்ளுவர் வாழ்ந்த வாழ்க்கையும் குடிசை வாழ்க்கையோ மாளிகை வாழ்க்கையோ என்று அறிய முடியவில்லை. ஆனாலும் அவர் சொல்லும் கருத்துக்களில் அரசனின் ஆண்மை புலப்படுகிறது. அமைச்சரின் அறிவு அலை பாய்கிறது. ஒற்றருடைய அரசியல் தந்திரம் ஆழங்காற்படுகிறது. தூதருடைய சொல் வன்மை தோன்றுகிறது. எழில் நிறைந்த இளமங்கையோடு நுகரும் இன்பத்தேன் எங்கும் களியூட்டுகிறது. அறவோராகவும், துறவோராகவும் இருந்து செய்யும் அறவுரைகள் ஒளிவிடுகின்றன. செம்பொருள் திகழ்கிறது. இதிலிருந்து இவர் எத்தகைய வாழ்க்கையினர் என்று துணியக் கூடும்? முடியாது. இதனாலேயே இந்நூல் எல்லார் வாழ்வோடும் ஒட்டி எல்லார்க்கும் இன்பம் பயப்பதாக பொது நூலாக அழியாப் பெருமையுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

உழவு நல்குரவு என்ற இரு அதிகாரங்களையும் அறிமுகப்படுத்தும் பகுதியாக இப்பாடப்பகுதி அமைகிறது.

## 13.2 திருக்குறளுக்கு வழங்கும் பெயர்களும் பெயர்க்காரணங்களும்

திருக்குறள் என்பது அழகிய குறள் வெண்பாவினாலாகிய நூல் எனப் பொருள்படும். குறள் என்னும் பாவின் பெயர் அதனாலாகிய நூலிற்கான கருவியாகுபெயர். அது திரு என்னும் அடைமொழி அடுத்து வந்தமையின், அடையடுத்த கருவியாகு பெயராயிற்று என்பது இலக்கண உரையாசியரியர் கருத்து.

குறிப்பு

அழகிய குறள் வெண்பாக்களுடைய நூல் எனப் பொருள்பட்டு அன்மொழித் தொகையாய் நூலுக்குக் காரணக்குறியாயிற்று என்பர் தமிழ் வரலாறு எழுதிய ச.பூபாலப் பிள்ளை அவர்கள்.

திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்று திருக்கோவையார் உரையில் பேராசிரியர் கூறுகிறார். வள்ளுவரும் அவர் மொழியும் திரு என்னும் அடைமொழியை அடுத்து இருப்பது மிகப் பொருத்தமானதே. குறளுக்கும் அதன் ஆசிரியருக்கும் கண்டவர்கள் கருத்தை எல்லாம் பிணித்து நிற்கும் பெருமை இருக்கின்றதல்லவா? என்பார்கள், பெருந்தகையாகிய மகாமகோபாத்தியாய ஐயரவர்கள்.

நாற்சீரும் முச்சீரும் கொண்ட குறள் வெண்பாக்களால் ஆகியது எனப் பொருள் காண்பார் தமிழிலக்கியம் சங்ககாலம் எழுதிய துரைசாமிப் பிள்ளை அவர்கள். சிறந்த குறள் வெண்பாவால் ஆகிய நூல், அடையடுத்த ஆகுபெயர் என்பர் சடகோபராமாநுச்சாரியார்.

‘கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய அழகினை உடைய குறட்பா எனப் பொருள்படும். இது வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் நூலுக்குக் காரணப் பெயராயிற்று என்பர் நாகை தண்டபாணிப் பிள்ளை. இவர்களில் ஆகுபெயராகக் கொள்பவர்கள், திரு என்னும் அடைமொழி குறளைச் சிறப்பியாமல் ஆகுபெயர்ப் பொருளாகிய குறள் நூலைச் சிறப்பித்து வந்ததாகக் கொள்வர். அப்போது குறள் வெண்பாவாலாகிய அழகிய நூல் எனத் ‘திரு’ நூல் முழுவதையும் சிறப்பித்து வந்தமை தெளிவு அன்மொழித்தொகை என்பார் திரு என்பது அழகு, அது பண்புப் பெயர், அது அதனை அடுத்து நின்ற பண்பாலாகிய குறளைச் சிறப்பித்து வந்தது, திருவும் குறளும் ஆகிய இரு சொற்களும் அழகாகிய குறள் எனப் பொருள் தரும் தொகைச் சொல்லாய்ப் பண்புத்தொகையாயிற்று. பின்னர் அந்தத் தொகைச் சொல்லின் ஆற்றலால் நூல் என்னும் அல்லாத மொழியும் விரிக்கப்பெற்று, பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆயிற்று என்பர். இப்பொருளில் திரு என்னும் அடைமொழி, ஒவ்வொரு குறளையும் சிறப்பித்து நின்றமை காண்க.

## 13.3 திரு என்னும் அடைமொழி

திரு என்பது தமிழிலக்கிய உலகில் பத்தொன்பது வகையான பொருள்களையுணர்த்தும் ஒரு சொல்லாகத் திகழ்கிறது. அங்ஙனமாயின்

ஒரு சொல் பல பொருளைக் காட்டுதல் எங்ஙனம்? என்பதையும் ஆய்தல் மிகமிக இன்றியமையாததாகும். எந்தச் சொல்லும் வண்ணம், வடிவு, அளவு, சுவை, தொழில் முதலான பண்புகளை உணர்த்தும் போது இடுகுறியாய், பின்னர் அப்பண்புகளையுடைய பொருளுக்கும், அப்பண்புகளால் விளையும் பெருமை, சிறுமை, நன்மை, தீமை, இன்ப துன்பம் முதலான பயன்களுக்கும் காரணக் குறியாய்ப் பெயராதலை இலக்கணக் கண்ணாடியின் வாயிலாகப் பல பொருள் ஒரு சொல்லை நோக்குவார் யாவரும் அறிவர். இவற்றை நிகண்டுகளும் அகர முதலிகளும் தொகுத்துக் காட்டும்.

அந்நிலையில் 'திரு' என்பது அழகையுணர்த்தும் சொல்லாய், அழகை உடையவளையும், அழகு விளைதற்குக் காரணமான 'செல்வம்' தெய்வத்தன்மை' முதலியவற்றையும், அழகாலும் அதன் வழிப் பொருளாலும் விளையும் பெருமை பொலிவு முதலியவற்றையும், இத்தனைக்கும் காரணமான நல்லூழையும் உணர்த்தும் பெயராகிறது. இத்தனையும் மங்கலப் பொருளாகவே விளங்குதலான், இச் செய்யுள் முதற்கண் வரும் போது மங்கல மொழியாகி விரும்புந்தன்மை, கவர்ச்சி முதலான பல பொருளையும் காட்டுவதாகின்றது.

இங்ஙனம் பல்வேறு வகையால் விரிந்து பரந்து கவர்ச்சியைத் தரும் எனும் சொற்கு வரைவிலக்கணம் தரும் திருக்கோவைக்கு உரை எழுதிய பேராசிரியர் "காண்போரால்" என்னாது, கண்டாரால் என இறந்தகால வாய்ப்பாட்டாற் கூறுவதால் பேராசிரியர் ஒருமுறை கண்டாரை மீள மீளக் காணத் தூண்டும் அழகே 'திரு' என்று கருதச் செய்கிறார். அதிலும் தன்மை என்ற அளவில் அமையாது 'நோக்கு' என்பதால் 'மாத்திரை' முதலாக அடிநிறை காறும் கலந்து நிற்கும் அழகைத் தனித்தனியே சுவைக்காது ஒரு பிண்டமாகச் சுவைக்கச் செய்வதே திரு அல்லது அழகு என்று உணரச் செய்கிறார். மற்றும் வனப்பியல்பை வகுக்கும்போது, வனப்பென்பது பெரும்பாலும் பலவுறுப்பு திரண்டவழிப் பெறுவதோர் அழகு என்பர் (தொல்.பொருள்.547)

அங்ஙனமே அத் 'திரு' என்பதைத் தனியடையாகப் பெற்ற திருக்குறளும் தங்கருத்துச் செறிவானும், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையோடும் ஒட்டி அவனை வளர்ப்பதானும், ஓசை நயத்தாலும் எந்நாட்டவரும் எம்மொழியினரும் எச்சமயத்தினரும் 'அகரமுதல' என்ற

அடி முதல் ‘முயங்கப் பெறின்’ என்ற முடிவு வரை பலகாலும் பயிலச் செய்கிறது.



குறிப்பு

## 13.4 குறிக்கோள்கள்

- உழவின் பெருமையையும், உழவின் சிறப்பையும் உழவு என்ற அதிகாரத்தின் மூலம் புரிந்து கொள்வீர்கள்.
- வறுமையின் துன்பத்தையும், வறுமையால் விளையும் குற்றத்தையும் நல்குரவு என்ற அதிகாரத்தின் மூலம் தெரிந்து கொள்வீர்கள்.

## 13.5 உழவு

அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும், பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதல் தொழில் செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து இதுமேல் குடியுயர்தற்கு ஏது என்ற ஆள்வினையாகலின் குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.

உலகில் மக்கள் பல தொழிலைச் செய்தாலும் உணவு இல்லையேல் வாழ்வு இல்லை. அதனால் உலகில் உழவுத்தொழிலே மேன்மையானது. உழவன் தனக்கும் உணவு படைக்கின்றான். உலகோர்க்கும் உணவு படைக்கின்றான்.

### 13.5.1 உழவின் சிறப்பு

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை
(1031)

உலகில் வாழ்பவர் பல தொழில்களைச் செய்து வாழ்ந்தாலும் உணவுக்கு உழவரையே எதிர்பார்க்க வேண்டியுள்ளது. எனவே உழவுத் தொழிலே தலைசிறந்த தொழிலாகும்.

### 13.5.2 உழவைச் செய்வாரது சிறப்பு

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து
(1032)

3. உழுவதுண்டு வாழ்வோரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்

(1033)

4. பலகுடை நீழலும் தன்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நிழ லவர்

(1034)

5. இரவார் இரப்பார்க்கென்று ஈவர் காவாது

கைசெய்தூண் மாலை யவர்

(1036)

உழவுத் தொழிலைச் செய்யாமல் வேறு தொழில்கள் செய்பவர்க்கும் உழவுத் தொழிலே உணவு வழங்குகின்றது. எனவே உழுதொழில் செய்பவர் உலகத்தோருக்கு கடையாணி போன்றவராவார்.

உழவுத் தொழில் செய்து வாழ்பவரே உரிமையுடன் வாழ்கின்றவர் ஆவார். மற்றவர்கள் உரிமையுடன் வாழாமல் பிறரைத் தொழுது அவர்கள் பின்னே சென்று வாழ்கின்றவரே ஆவார்.

உழவுத் தொழிலே அரசனுக்கு வெற்றியைத் தருவது. அது பலவேந்தர் ஆளும் நிலம் முழுவதையும் தம் அரசனின் குடைக்கீழ் கொண்டு வந்து நிறுத்தும்.

தம் கையால் உழுதலைச் செய்து உண்ணும் தன்மையுள்ள உழவர் பிறரிடம் இரக்க மாட்டார்கள். இரப்பவர்களுக்குத் தம்மிடம் உள்ளதை மறைக்காமல் கொடுப்பார்கள்.

### 13.5.3 உழவுத் தொழில் செய்யுமாறு கூறப்பட்டது

6. உழவினார் கைம் மடங்கி இல்லை விழைவதூஉம்

விட்டேம்என் பார்க்கும் நிலை

(1036)

7. தொழப்புழுதி க∴கா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்

(1037)

8. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்

நீரினும் நன்று அதன் காப்பு

(1038)

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து

இல்லாளின் ஊடி விடும்

(1039)

உழவுத் தொழில் நடைபெறா விட்டால், பற்றினை விட்ட துறவிகளுக்கும் இவ்வுலகில் வாழ்வு கிடையாது.

ஒரு பலம் மண்ணைக் கால்பலம் ஆகும்படி நன்றாக உழுது காய வைத்தால் படி எரு கூட வேண்டாமல் பயிர் செழித்து வளரும்.

உழுவதை விட எருவிடுதல் நல்லதாகும். பின் களை எழுத்து, நீர் பாய்ச்சுவதைக் காட்டிலும் அதனைப் பாதுகாத்தல் நல்லது.

உழவன் நிலத்தைப் போய் அடிக்கடி பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்காமலிருந்தால் மனைவி ஊடுதல் போல நிலமும் ஊடல் கொண்டு விளைவு தராது.

### 13.5.4 உழுதொழில் செய்யாத வழி ஏற்படும் குற்றம்

10. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமெனும் நல்லாள் நகும்.
(1040)

நாங்கள் ஏழைகள் என்று சொல்லிக் கொண்டு சோம்பலாய் இருப்பவரைக் கண்டு, நிலம் என்னும் பெண் சிரிப்பாள்.

### 13.6 நல்குரவு (1041 - 1050)

அஃதாவது நுகரப்படுவன யாவும் இல்லாமை. வறுமை நல்குரவின் கொடுமை

### 13.6.1 வறுமை என்னும் துன்பம்

1. இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
.இன்மையே இன்னா தது
(1041)
2. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்
(1042)
3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை
(1043)
4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த

சொற்பிறக்கும் சோர்வு தரும்

(1044)

5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்

குறிப்பு

(1045)

வறுமையைப் போலத் துன்பம் செய்வது எதுவென்றால் வறுமையேயன்றி வேறு எதுவும் இல்லை.

வறுமை என்று சொல்லப்படும் ஒப்பற்ற பாவி இப்பிறப்பு இன்பமும், மறுபிறப்பு இன்பமும் இல்லாமல் செய்து விடும்

பழைய குடிப்பெருமையையும், புகழையும், வறுமைக்குக் காரணமான ஆசை ஒன்றாகக் கெடுத்து விடும்.

வறுமை நற்குடியில் பிறந்தவரிடத்திலும் இழிவான சொல் பிறர்க்குச் சோர்வினை உண்டாக்கும்

வறுமைத் துன்பம் ஒன்றிலேயே பலவகைத் துன்பங்களும் வந்து தோன்றும்.

**13.6.2 நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம்**

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்

(1046)

7. அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்

(1047)

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு

(1048)

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதென்றும் கண்பாடு அரிது

(1049)

நல்ல நூல்களின் பொருளை வறுமையாளர்கள் நன்கு ஆராய்ந்து சொன்னாலும், அதை யாரும் கேட்க மாட்டார்கள்.

அறத்துக்குப் பொருந்தாத வறுமையுடையவனைப் பெற்ற தாய் கூட அயலானைப் போலக் கருதுவாள்.

நேற்று கொன்றதைப் போன்று துன்பம் செய்த வறுமை இன்றைக்கும் என்னிடம் வருமோ? வந்தால் என் செய்வேன்? என்று வறுமையாளன் அஞ்சுவான்.

ஒருவன் நெருப்பில் கிடந்து தூங்குதலும் முடியும். ஆனால் வறுமை அடைந்தவன் எவ்விதத்திலும் தூங்க முடியாது.

### 13.6.3 வறுமை உளதாய வழிச் செய்வது

10. துப்புரவு இல்லார் துவரக் துறவாமை
உப்புக்கும் கடிக்கும் கூற்று
(1050)

வாழ்விற்கு வேண்டிய பொருள்கள் இல்லாதவர்கள் முற்றும் துறவை மேற்கொள்ளாதிருத்தல், பிறருடைய உப்புக்கும் புளிக்கும் கேடாகும்.

## 13.7 நிறைவாக

- உழவின் பெருமையையும், உழவின் சிறப்பையும் உழவு என்ற அதிகாரத்தின் மூலம் புரிந்து கொள்வீர்கள்.
- வறுமையின் துன்பத்தையும், வறுமையால் விளையும் குற்றத்தையும் நல்குரவு என்ற அதிகாரத்தின் மூலம் தெரிந்து கொள்வீர்கள்.

## 13.8 சோதித்தறியும் வினாக்கள்

**1.** உழவின் சிறப்பை விளக்குக

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

……………………………………………………

2. உழவுத் தொழில் குடிசெயல்வகை என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டதன் காரணத்தைக் கூறுக

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

……………………………………………………

3. நல்குரவு என்ற சொல்லின் பொருளை விளக்குக

குறிப்பு

…………………………………………………………………………

…………………………………………………………………………

……………………………………………………..

4. இன்மையே இன்னாதது எது?

…………………………………………………………………………

…………………………………………………………………………

……………………………………………………..

**13.9 பயிற்சி வினாக்கள்**

1. உழவு என்னும் அதிகாரம் பற்றி தொகுத்துரைக்க

2. நல்குரவு என்னும் அதிகாரத்தின் மூலம் வள்ளுவர் கூறும் கருத்துக்களை விரித்துரைக்க

**13.10 மேலும் படித்தறிக**

**1.** திருக்குறள் அழகும் அமைப்பும், மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகர், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை – 600 005, முதற்பதிப்பு – டிசம்பர் 2009

2. திருக்குறள், பெரியண்ணன் உரை, வனிதா பதிப்பகம், சென்னை – 94, நாற்பதாவது பதிப்பு 2016

## கூறு 14

## இரவு, இரவச்சம். கயமை

14. பாட அமைப்பு

14.1 அறிமுகம்

14.2 குறிக்கோள்கள்

14.3 பாராட்டுரைகள்

14.4 திருக்குறளுக்கு வழங்கும் பிற பெயர்களும் காரணங்களும்

14.5 இரவு

14.5.1 நல்குரவான் உயிர்நீங்கும் எல்லைக்கண் இளிவில்லை இரவு

விலக்கப்படாது

14.5.2 உலகிற்கு இரப்பார் வேண்டும்

குறிப்பு

14.5.3 இரப்பார்க்கு இன்றியமையாததோர் இயல்பு
14.6 இரவச்சம்
14.6.1 இரவின் கொடுமை கூறப்பட்டது
14.6.2 வறுமை தீர்வதற்கு நெறி இரவன்று
14.6.3 இரத்தலைச் சால்புடையார் செய்யார்
14.6.4 முயற்சியான் வந்தது சிறிதேயாயினும் அது செய்யும் இன்பம் பெரிது
14.6.5 அறத்தை முயன்று செய்க இரந்து செய்யற்க
14.6.6 மானம் தீரவரும் இரவு விலக்கப்பட்டது
14.6.7 இரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன
14.7 கயமை
14.7.1 கயவரது குற்றமிகுதி
14.7.2 கயவர் பழிபாவங்கட்கு அஞ்சார்
14.7.3 விலக்கற்பாடின்றி வேண்டுவன செய்வர் கயவர்
14.7.4 கயவர் மேம்படுமாறு கூறப்பட்டது
14.7.5 ஆசாரஞ் செய்தல் இயல்பன்று
14.7.6 கயவர் செறிவின்மை
14.7.7 கயவர் கொடுக்குமாறு கூறப்பட்டது
14.7.8 பிறர் செல்வம் கண்டு பொறாமைப்படுதல்
14.7.9 கயவர் பிறர்க்கு அடிமையாய் நிற்பர்
14.8 நிறைவாக
14.9 சோதித்தறியும் வினாக்கள்
14.10 பயிற்சி வினாக்கள்
14.11 மேலும் படித்தறிக

## 14.1 அறிமுகம்

மொழியைவிட மொழியிலுள்ள ஒரு நூல் விளக்கம் பெற்றது ஒரு புதுமையே. செந்தமிழின் அமைப்பையும் போக்கையும் அறியாத நாடுகளும் திருக்குறளை அறிந்திருக்கின்றன. திருவள்ளுவரை அறிந்திருக்கின்றன. இதன் கருத்து மணிகளைத் தமது இலக்கியப் பொண்னணிகளில் பதித்து அழகு பார்க்கின்றன. அப்படியே இந்நூலை

மொழிமாற்றித் தமதாக்கிக் கொண்டும் இருக்கின்றன. அப்படித் தமதாக்கினாலும், கருத்தை அப்படியே எடுத்துத் தம் இலக்கியத்தில் பொதித்து வைத்துக் கொண்டாலும் திருவள்ளுவர் குறள் என்ற உரிமையை மாற்றவில்லை. தமிழ் தந்த வளன் என்ற நிலையை அழிக்கவில்லை. எமது கருத்தே திருவள்ளுவருக்கு வந்தது என்ற வறட்டுப் பெருமையும் பேச முற்படவில்லை. நம் நாடுகளிலுள்ள பேரறிஞர்கள் சிலர்தாம் திருவள்ளுவருக்குச் சொந்தக் கருத்து இல்லை என்று சொல்வதில் இன்புறக் கூடியவர்கள். மேலை நாட்டார் மேலை நாட்டாரே. வள்ளுவர் கருத்தை வள்ளுவரதாகவே வைத்துச் சுவைத்துப் பாராட்டி மகிழ்கிறார்கள். தமிழும் இந்தத் திருக்குறளைப் பெற்றதால் தன்மதிப்புடன் விளங்குகிறது.

இரவு, இரவச்சம், கயமை என்னும் அதிகாரங்களை அறிமுகப்படுத்தும் பகுதியாக இப்பாடப்பகுதி அமைகிறது.

## 14.2 குறிக்கோள்கள்

- இரவு என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொள்வீர்கள்.
- இரவச்சம் என்னும் அதிகாரத்தின் கருத்தை அறிந்து கொள்வீர்கள்.
- கயமை என்னும் அதிகாரத்தைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 14.3 பாராட்டுரைகள்

நூல் பிறந்த நாளிலேயே இந்நூலைப் பாராட்டிய உரை திருவள்ளுவமாலை. இது, திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகத் தொன்று தொட்டுப் போற்றப்படுகிறது. கடைச்சங்கப் புலவர்கள் பலரால் இயற்றப்பட்டது என்பது செய்தி. இதில் கவிதை நலம் சொட்டக் கற்பனையால் குறளைச் சிறப்பிக்கின்றன சில. திருக்குறளின் அளவும் பொருளாழமும் பற்றி வியக்கின்றன சில. வட வேதத்திற்கும் இதற்கும் வேற்றுமை காட்டி ஏற்றம் கூறுகின்றன சில. வள்ளுவரைப் பாராட்டுகின்றன சில. முப்பாலின் இயற்பகுப்புகளை எடுத்தோதுகின்றன சில. திருக்குறளைத் தாம் அனுபவிக்குந்தோறும் விளைந்த இன்ப அனுபவங்களை எடுத்தோதுகின்றன சில. இவை இந்நூலின் பாகுபாடு.

வள்ளுவ மாலையைப் பற்றிப் பேராசிரியர் கா.சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள், “திருவள்ளுவ மாலையானது வெவ்வேறு காலத்திலிருந்த பல புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்களின்

தொகுதியாகத் தோன்றுகிறது. நாமகள் முதலியோரால் பாடப்பட்டனவாகக் கூறப்படும் பாடல்கள், பிறரால் சேர்க்கப்பட்டனவோ என்ற ஐயம் நிகழக் கூடியதே. திருவள்ளுவ மாலை முழுவதுமே ஒரே புலவரால் பல புலவர்கள் பாடியது போலப் பாடப்பெற்ற நூல் என்று கருதுகிறார்கள். எவ்வாறாயினும் திருவள்ளுவரைப் பற்றி அறிதற்கு அ.'.தோர் பண்டைக் கருவி நூலாகத் திகழ்கிறது" என்று கூறுகிறார்கள்.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "திருவள்ளுவ மாலையின் தொடக்கத்தில் உள்ள இரு செய்யுட்களையும் அவை பற்றிய கதைகளையும் கழித்து விட்டு, முப்பால் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றப்பட்டது என்றும், அப்போது உடனிருந்து கேட்ட புலவர்கள் பலரும் அதனைப் பாராட்டினர் என்றும் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை. வள்ளுவ மாலையில் வரும் "வைவைத்த கூர்வேல் வழுதி", "தாதவிழ்தார் மாற", "வாளார் நெடுமாற" என்ற தொடர்கள், பாண்டியர் முன் பாடப்பட்டன என்பதற்குச் சான்றாகும். குலபதி நாயனார் என்றாற்போலும் சில பெயர்கள் எழுதுவோரால் திரிபுற்றிருத்தலும் கூடும். கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் சிறிது முற்பட்ட காலத்தே விளங்கினர் என்பது புலப்படினும் உக்கிரப்பெருவழுதி ஆட்சியெய்திய காலம் வரையில் அவர்கள் வாழ்ந்திருந்து, திருக்குறள் அரங்கேறிய ஞான்று அதனைப் புகழ்ந்துரைத்தனர் என்று கோடல் பொருத்தமேயாகும். மாறுபட்ட கருத்தினர் கூறும் சில ஏதுக்கள், இக்கருத்தை மாற்றும் வலிவுடையன அல்ல" என்று தம் துணிவு கூறிச் செல்கின்றனர். இவைகளைக் கொண்டு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்வது இன்றியமையாததாகின்றது.

வள்ளுவ மாலையில் திருக்குறளைப் பாராட்டிய தெய்வப் புலவர்கள் அசரீரியும் சரீரியுமாக ஐம்பத்து மூவர். திருவள்ளுவரின் உடன்பிறந்தார் என்று கருதப்படுகின்ற ஔவையார், இடைக்காடர் இவர்களையும் சேர்க்க ஐம்பத்தைவர். இவர்களில் அசரீரி வான்முதற் பூதமெல்லாவற்றையும் தமது வடிவாகக் கொண்டிருக்கும் கடவுள் வார்த்தையாகிய வானொலியாதல் வேண்டும். அது "சங்கப் பலகையில் திருவள்ளுவரோடு உருத்திரசன்மனே ஒக்க இருக்க" என்று ஆணை தந்த அளவில் அமைகிறது. உருத்திரசன்மர், இறையனார் அகப்பொருளுரையைக் கேட்டு மெய்ம்மயிர் சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர்

சொரிந்த ஐந்தாண்டு நிரம்பிய ஒரு மூங்கைப்பிள்ளை, உப்பூரிக்குடிகிழான் மகன் என்பது களவியலுரை தரும் வரலாறு. இதனால் திருவள்ளுவருக்குச் சங்கப்பலகையில் இடந்தரும் வகையில் புலவர்க்குச் சிறிது மனக்கசப்பு நிகழ அதனை அசரீரி நீக்கியதாக அறியலாம். இந்த வரலாற்றை வைத்து இந்தப் பாட்டு எழுதப்பெற்றிருத்தல் வேண்டும். அடுத்த பாடல், நாமகள் தந்தது. அதில், “நாமகளே நவில்கிறாள்,? நான்முகன் நாவிலிருந்து நான்கு வேதங்களை ஆதியில் தந்தேன், இடையில் வியாசர் நாவிலிருந்து பாரதம் பகர்ந்தேன், இன்று என் வாக்கு வள்ளுவர் வாயதாயிற்று என்று. இந்தக் கருத்து வேதத்திற்கு முதன்மை தந்து, பாரத, பஞ்சமோ வேத என்ற கருத்தை உட்கொண்டு, அதனோடு ஒருங்கு எண்ணத்தக்கது திருக்குறள் என்பதை வற்புறுத்துகிறது. நான்முகன் வாயினிடமாக விளங்கும் நாமகளே, வள்ளுவர், நான்முகன் அவதாரம் என்பதை உணராதிருக்க முடியாது. அங்ஙனமிருந்தும் நாவிலிருந்து பாரதம் வலையில் பகர்ந்த நாமகள் ‘என் வாக்கு அவன் வாயது’ என்று மட்டும் கூறுவது வள்ளுவர் நான்முகன் அவதாரம் என்று பேசுவது ஓர் உபசாரம் பற்றிய வழக்கே என்பதை வலியுறுத்தக்கூடும். இவை இரண்டும் கடவுளர் தந்த பாயிரங்கள். இவை நமக்குக் கிடைத்த வரலாறு.

இவர்கள் ஒழிய ஏனைய புலவர்கள் ஐம்பத்தொருவர். இவர்கள் பெயர்களை அறிதற்குரிய ஆதாரங்கள், கடைச்சங்க நூல்களன்றி வேறொன்றுமில்லை. அங்ஙனம் நோக்கும் போது வள்ளுவ மாலையில் காணப்படும் புலவர்களின் பெயர்களுட் சில இலக்கியங்களில் காணக் கிடைக்வில்லை. இறையனார் களவியலுரை “கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் எனக் கூறுகிறது. இவர்களில் சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறம், மருதனிள நாகனார் ஆகிய இவர்கள் பெயர் வள்ளுவ மாலையில் காணப்படவில்லை. வள்ளுவ மாலையில் காணப்படும் உருத்திரசன்மர், நத்தத்தனார், முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், எறிச்சலூர்க்கிழார் மலாடனார், போக்கியார், நாகன் தேவனார், செங்குன்றூர்க்கிழார்,

கவிசாகரப் பெருந்தேவனார், செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார், வண்ணக்கஞ்சாத்தனார், களத்தூர்க் கிழார், நச்சுமனார், அக்காரக்கனி நச்சுமனார், குலபதி நாயனார், தேனீக்குடிக்கீரனார், கொடிஞாழன் மாணிபூதனார், கௌணியனார், மதுரைப் பாலாசிரியனார் என்பவர்களைச் சங்க இலக்கியங்களில் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## 14.4 திருக்குறளுக்கு வழங்கும் பிற பெயர்களும் காரணங்களும்

இந்நூல் தோன்றி காலம் முதல் தமிழ் உள்ள வரையில் வாடாது அழியாது வளரும் தனிப் பெருமை படைத்தது. இதனிடம் கவிஞரும் புலவரும், பிறரும் அளவற்ற மதிப்பு வைத்தனர். ஆதலால் இதன் தன்மை நோக்கிப் பல பெயர்களைப் படைத்து வழங்கலாயினர். பெருமை மிகுந்த பொருள்களுக்குப் பெயர்களும் பலவாதல் இயல்புதானே. திருவள்ளுவமாலையில் முப்பால், குறள், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, முதுமொழி என்ற பெயர்கள் வழங்குகின்றன. இவற்றோடு உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், பொருளுரை, அறம் என்ற பெயர்களும் உள்ளனவாகத் திருக்குறள் ஏடுகளும் பதிப்புகளும் கூறுகின்றன.

**முப்பால்**

மூன்று பகுதியாக ஆக்கப் பெற்றமையில் வந்த பெயர். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் உடைமையின் முப்பால் நூல் என்பர் சபாபதி நாவலர். இப்பெயரே வள்ளுவமாலையில் பதின்மூன்றுக்கு மேற்பட்ட பாடல்களில் எடுத்தாளப்படுகின்றது.

**பொய்யாமொழி**

பொய்யாமொழியாக நடத்தலின் பொய்யாமொழி ஆயிற்று என்பர் சபாபதி நாவலர். பொய்யில்லாத சொற்களை உடைய நூல் என்பர் சடகோப ராமாநுச்சாரியார். பொய்த்தல் என்பது, இல்லையாதல், தவறுதல், எதிர்பார்த்ததை ஈயாமை முதலிய பல பொருள்களைக் காட்டும் கால மாற்றத்தானும், மக்களின் கருத்து மாற்றத்தானும், கருதிய பொருளைத் தர முடியாமல் ஒழிகின்ற ஏனைய மொழிகளைப் போல் அல்லாமல், கருதியதைக் கருதிய வண்ணம் தரும் மொழியாதலின் பொய்யாமொழி ஆயிற்று எனவும் பொருள் சொல்லலாம். பொய்யாமொழி சத்தியம் என்றும் உள்ள பொருள். அதனை உணர்த்தும் நூலாதலின்,

பொய்யாமொழியாயிற்று எனலும் பொருந்தும். பொய்யில் புலவனது மொழியாதலின் பொய்யாமொழி ஆயிற்று எனலும் ஆம்.

குறிப்பு

**வாயுறை வாழ்த்து**

இது ஒரு புறப்பொருள் துறை. இதன் இலக்கணம் தொல்காப்பியத்துள், "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின், வேம்புங் கடுவும் போல வெஞ்சொல், தாங்குதலின்றி வழி நனி பயக்குமென்று, ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே" என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு உரை கண்ட பேராசிரியர் "வாய்-வாய் மொழி, உறை-மருந்து, வாயுறை-சொல் மருந்து எனப் பண்புத்தொகையாம், இனி வாய்க்கண் தோன்றிய மருந்து என வேற்றுமைத் தொகையும் ஆம். மருந்து போறலின் மருந்தாயிற்று" என்பர். ஆதலால் திருவள்ளுவர் வாய்க்கண் வாய் மொழியாகத் தோன்றிப் பயிலுகின்ற மக்களுக்கு மருந்தாகப் பயன்படுதலின், வாயுறை வாழ்த்து ஆயிற்று என்றல் மிகப் பொருந்துவதாம். வேம்பும் கடுக்காயும்உண்ண முடியாதன, உண்டாலுளதாகும் பயன் மிகுதி. அது போலக் கேட்டவுடன் இன்னாததாய்ப் பயன் பெரிது பயத்தலின் இது வாயுறை வாழ்த்தாயிற்று. களவழி, முதுமொழிக் காஞ்சி என்ற புறத் துறைகளின் பெயர், அவற்றை உணர்த்தும் நூலுக்கே பெயரானாற் போல வாயுறை வாழ்த்தை உணர்த்தும் இந்நூலும் வாயுறை வாழ்த்தெனவே வழங்கலாயிற்று.

**முதுமொழி**

முதுமை என்பது தொன்மையையும், பேரறிவுடைமையையும் காட்டும் பண்புச் சொல். தமிழில் இன்றுள்ள நூல்களில் தொன்மையானதாக, பேரறிவு பயப்பதாக இருக்கும் நூல் இதனையன்றி வேறொன்றும் இல்லையாதலின், முதுமொழி என்று போற்றப்படுவதாயிற்று. அன்றியும் இதனைக் கற்றவன் ஆண்டில் இளையனாயினும், அனுபவ அறிவால் பண்பட்ட முதியோனாகிறான். ஆதலால், முதுமையைப் பயக்கு மொழி முதுமொழி என்றல் மூதுரை, முது மொழிக் காஞ்சி முதலானவற்றாலும் அறியலாம். சோமேசர் முதுமொழி வெண்பா, முதுமொழி மேல் வைப்பு என்ற நூற் பெயர்கள், முதுமொழி என்ற திருக்குறளின் பெயராலேயே அமைந்தன. முதியோர் மொழி, முதுமொழி ஆயிற்று என்றலும் பொருந்தும். திருவள்ளுவரை விட முதியோர் யார்?

**உத்தர வேதம்**

வேதம் விதி விலக்குகளை விளக்குவது. இதுவும் அங்ஙனமாதலின் வேதமே எனத் தகும் சிறப்பினது. தொன்மை நான்மறைகளைக் காட்டிலும் காலத்தாற் பிற்பட்டதாதலின் உத்தர வேதம் எனப்பட்டது. வேதத்தின் முற்பகுதி விதி. பிற்பகுதி தத்துவ உண்மைகள். அவை உபநிடதம் என்று பேசப்பெறும் உபநிடதங்களைப் போல அறத் தத்துவங்களைத் தெரிவிப்பதாக இது உத்தர வேதம் என்றாயிற்று எனலே மிகப் பொருந்துவதாம்.

**தெய்வ நூல்**

தெய்வத் தன்மை, எங்கும் எப்பொருளிலும் ஒரு படித்தாய்ப் பரவியிருந்து எல்லார் மனத்தையும் கவர்ந்து நிற்பது அழியாதது மாற்றம் இல்லாதது. மாற்றம் மனம் கழியநின்ற மாண்பினது. அங்ஙனமே இந்நூலும் இருத்தலின் தெய்வ நூல் எனப்பட்டது. அன்றி இந்நூலைப் படித்துப் பலகால் பயின்று நெஞ்சிற் பதித்த மனிதன், கவலையில்லாமையாகிய தெய்வத் தன்மையை அடைதலின், தெய்வத் தன்மையை அளிக்கும் நூல் தெய்வ நூலாயிற்று எனலும் சிறந்த உரையாகலாம்.

**திருவள்ளுவர்**

இலக்கணங்களில் நூல்களுக்குத் கருத்தனாற் பெயர் வருதலை அறிவிக்க அகத்தியம் தொல்காப்பியம் என்பர். இவை கருத்தனாற் பெயர் பெற்றனவேயன்றிக் கருத்தன் பெயரையே தம் பெயராக கொண்டனவல்ல. இந்நூலோ திருவள்ளுவர் பெயரையே தம் பெயராகக் கொண்டு விளங்குகிறது. இலக்கண உரைகள் தோன்றிக் காலந்தொட்டு இன்று வரை கருத்தா ஆகுபெயர்க்கு “திருவள்ளுவர் படித்தான்” என்ற உதாரணமே போட்டியின்றி காட்டப்படுகிறது. இதிலிருந்து இந்தச் சிறப்பு வேறு எந்த நூலுக்கும் கிடைக்கவில்லை என்பதுதானே துணிபு.

**தமிழ்மறை**

மறைவாய பொருள்களைத் தமிழாற் கிளத்தலின் வந்த பெயர் என்பர் சபாபதி நாவலர். முறை என்பதற்கு மறைத்தற் பொருளை உடையது என ஆன்றோர் உரை காண்பர். திருக்குறள் ஒழுக்கக் கருத்துக்களை வெள்ளிடை மலையாய் விளக்கக் காட்டுதலின், அந்தக் காரணம் பற்றி வந்த பெயராகுமா என்பது ஆராயத்தக்கது. மறை-

மறைத்தலைச் செய்வது. தன்னைப் பயின்றார், தீய ஒழுக்கத்தின் கண் செல்ல மறுத்தலின் மறை என்றாயிறு என்றலே சிறப்புடைப் பொருளாம். முறை என்பது இடுகுறி அளவாய், வேதத்தறிவாகி அது போன்ற தமிழ் நூலுக்கும் ஆதலின் தமிழ் மறை என்றாயிற்று என்பாரும் உளர். இங்ஙனம் பொருள் காண்பார், வடமொழி வேதக் கருத்துக்களை இது தாங்கி நிற்கின்றது என்ற எண்ணத்தாலும் ஆரிய வேதம் அனைவராலும் எடுத்தாளப்படுவது போல இதுவும் எடுத்தாளப்படுகின்ற சிறப்பாலும் எனக் கருதுவர். தனக்கெனச் சிறப்பில்லாத ஒன்று சார்பினால் உயர்ந்தது என்றால் அத்துணைச் சிறந்த கருத்தன்மையறிக.

**பொதுமறை**

வேதம் ஓதுதற்குரியார் அந்தணர், அரசர், வணிகர் என்ற முதன் மூன்று வருணத்தாரும் ஆவார். "ஓதற்றொழில் உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்" என்று தொல்காப்பியம் சொல்கிறது, அந்த வேதம் போலன்றி, ஆண், பெண், உயர்ந்தோர், இழிந்தோர் என்ற வேறுபாடின்றி எல்லாச் சமயத்தாரானும், எல்லாச் சாதியாரானும் எக்காலத்தும் பயிலப்படுதலின், பொதுமறை எனப் பெற்றது. பொது என்பது, ஒருவர்க்கு உரிமை என்னும் சிறப்பிற்கு அப்பாற்பட்டதாய்க் கடந்து நிற்பது. இது காலம், இடம், இனம் முதலிய எல்லாவற்றையும் கடந்து நிற்றலின் பொது மறை என்றாயிற்று என்பதே இதன் தனிப்பெருமையை விளக்குவதாகும்.

## 14.5 இரவு

இனி மானம் தீரா இரவு, இரவாமையோடு ஒத்தலின் அதனாலும் வீடு எய்தற்பயத்தாய உடம்பு ஓம்பப்படும் என்னும் அறநூல் வழக்குப் பற்றி, மேல் எய்தியது வரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறப்பட்டது.

முன் செய்த தீவினைக் குற்றத்தால் வந்த இவ்வறுமைத் துன்பமே அதற்குச் சான்றாக அமையும். இரத்தல் இழிவானது எனினும் கரப்பிலா நெஞ்சுடன் ஈவார் முன்னின்று இரத்தல் தவறன்று என்று கருதுக உலகத்தில் ஈவாரும், இரப்பாரும் இல்லையாயின் உலக மக்கள் இயக்கம், மரப்பாவையின் இயக்கம் போன்றதாகும்.

உலகில் ஈவாரும் இருத்தல் வேண்டும். உலகில் மானத்திற்கு இழுக்கு வாராமல் இரப்பாரும் இருத்தல் வேண்டும்.

## 14.5.1 நல்குரவான் உயிர்நீங்கும் எல்லைக்கண் இளிவில்லா இரவு விலக்கப்படாது



1. இரக்க இரந்தார்க் காணின் கரப்பின்
   அவர்பழி தம்பழி அன்று
   (1051)
2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தலை
   துன்பம் உறாஅ வரின்
   (1052)
3. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்ற
   இரப்பும் ஓர் ஏள் உடைத்து
   (1053)
4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
   கனவிலும் தேற்றாதார் மாட்டு
   (1054)
5. கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
   இரப்பவர் மேற்கொள்வது
   (1055)
6. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் இரப்பிடும்பை
   எல்லாம் ஒருங்கு கெடும்
   (1056)

வறுமையுடையார் இரத்தற்கு ஏற்புடையாரைக் காணில் அவர்மாட்டு வேண்டியதை இரந்து கேட்க; கேட்ட போது அவர் கொடுக்காமல் மறைப்பாராயின் அது அவர்க்குப் பழியாவதல்லது, இரப்பார்க்குரிய பழியாகாது.

இரத்தலும் ஒருவற்கு இன்பம் தருவதாம்; இரந்த பொருள் ஈவார்க்கும், இரப்பார்க்கும் துன்பம் செய்யாமல் கிடைக்குமானால், இல்லை என்று கூறும் கரத்தல் இல்லாத நெஞ்சினை உடையார் முன்னர் நின்று அவர்மாட்டு ஒன்று இரத்தலும் இரப்பார்க்கு ஓர் அழகுடைத்து.

தம்மிடத்து உள்ளனவற்றை களவின் கண்ணும் அறியார் இடத்துச் சென்ற ஒரு பொருளை இரத்தலும், ஈதல் போல இன்பம் தரும் செயலாம்.

ஈவாரின் முன்னின்ற இரத்தல் தொழிலை மேற்கொள்வதற்கு காரணம் உள்ளதை மறைக்காது, வழங்கும் வள்ளல் சிலர் இருப்பதால்தான்.

உள்ளது கரத்தலாகிய நோயில்லானாக கண்டால் மானம் விடாது இரப்பார்க்கு வறுமையான் வரும் துன்பங்கள் எல்லாம் ஒருங்கே கெடும்.

உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் தன்மையுடையவர் உலகில் பலர் இருக்கின்றனர். அதனால்தான் யாசிப்பவர் யாசிப்பதை மேற்கொள்கின்றனர்

### 14.5.2 உலகிற்கு இரப்பார் வேண்டும்

7. இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து
(1057)

8. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று
(1058)

9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை
(1059)

தம்மை அவமதித்து இழிபு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால், இரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவக்கும் தன்மையுடையது.

வறுமையுற்று இரப்பார் இல்லையாயின் குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ள மக்களின் நடமாட்டம் உயிரில்லாத மரப்பாவையின் நடமாட்டம் போன்றது.

பொருளை விரும்பி யாசிப்பவர் இல்லாவிட்டால் கொடுக்க முடியாது. கொடுக்கவில்லையானால் இவ்வுலக மக்களுக்குப் புகழ் இல்லை.

### 14.5.3 இரப்பார்க்கு இன்றியமையாததோர் இயல்பு

10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி
(1060)

இரந்து பொருளை விரும்புவார் இல்லாத இடத்து கொடுப்பார் இடத்து என்ன புகழ் உண்டாகும்? யாதும் இல்லை. இரத்தல் தொழில்புரியும் வறியவன் இவன் எனக்கு பொருள் கொடுக்கவில்லையே என்ற பிறரைச் சினத்தல் கூடாது.

## 14.6 இரவச்சம் (1061 - 1070)

அஃதாவது மானந்தீரவரும் இரவிற்கு அஞ்சுதல்

முயற்சி செல்வத்தைக் கொடுக்கும், இரத்தல் இழிவினைக் கொடுக்கும். இரத்தலுக்கு அஞ்சுதல் வேண்டும்.

### 14.6.1 இரவின் கொடுமை கூறப்பட்டது

1. கரவாது உவந்துஈயும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி வறும்
(1061)

2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்
(1062)

தம்மிடத்துள்ளவற்றை மறைக்காமல் தாமே முன்வந்து உள் மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார் மாட்டும் ஒன்றை வேண்டி இரவாது இருத்தல் இரந்து பொருள் பெறுதலைக் காட்டிலும் கோடி மடங்கு நல்லது.

இவ்வுலகத்தைப் படைத்தவன் பிறரிடம் இரந்தஉயிர் வாழ்வதையே ஒருவனுக்கு உரிமைப்படுத்தினன் ஆயின. அங்ஙனம் செய்த உலகத்தைப் படைத்தவன் தானும் அவனைப் போல அலமந்து கெடுக.

### 14.6.2 வறுமை தீர்வதற்கு நெறி இரவன்று

3. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்
(1063)

வறுமையால் வரும் துன்பத்தை முயற்சி செய்து நீக்கிக்கடவேம் என்று கருதாது, இரந்து நீங்கக் கடவேம் என்று கருதும் கொடுமை போலக் கொடுமை உடையது பிறிதில்லை.

### 14.6.3 இரத்தலைச் சால்புடையார் செய்யார்

குறிப்பு

4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்

காலும் இரவொல்லாச் சால்பு

(1064)

ஒருவன் நுகரவேண்டுவன இன்றி, வறுமை அடைந்த இடத்தும்,பிறரிடம் சென்று இரத்தலை உடன்படாதவன் நிறைகுணம் எல்லா உலகமும் ஒருங்கு இயைந்தாலும் கொள்ளாத பெருமை உடைத்து.

### 14.6.4 முயற்சியான் வந்தது சிறிதேயாயினும் அது செய்யும் இன்பம் பெரிது

5. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தான் தந்தது

உண்ணலின் ஊங்கினியது இல்

(1065)

நெறியாய முயற்சியியான் வந்த பொருள் தெளிந்த நீரான் சமைத்த எளிய உணவாக ஆயினும், அதனை உண்ணுதலினும் இனிய உணவு வேறில்லை.

### 14.6.5 அறத்தை முயன்று செய்க இரந்து செய்யற்க

6. ஆவிற்கு நிரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல்

(1066)

தண்ணீர் பெறாது இறக்கும் நிலையிலுள்ள பசுவிற்கென நீரினைப் பிறரிடம் இரந்து பெற்றாலும், அவ்விரத்தல் போல ஒருவன் நாவிற்கு இழிவு தருவது வேறில்லை.

### 14.6.6 மானம் தீரவரும் இரவு விலக்கப்பட்டது

7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்

கரப்பார் இரவன்மின் என்று

(1067)

இரப்பவர்களை எல்லாம் யான்வேண்டிக் கொள்கிறேன். இரக்கும் நிலை ஏற்பட்டால் பொருளை வைத்துக் கொண்டு மறைப்பவர்களிடம் சென்று இரவாதீர்கள்

### 16.6.7 இரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன

8. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்

குறிப்பு

பார்தாக்கப் பக்கு விடும்

(1068)

9. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்

(1069)

10. கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்

(1070)

வறுமைக் கடலைக் கடக்க ஒருவன் இரத்தல் என்னும் பாதுகாப்பற்ற தோணியிற் செல்லும் போது கரத்தல் என்னும் கற்பாரை போதுமாயின் அத்தோணி சிதைந்து ஒழியும்.

வறியர் இரத்தலை நினைக்கும் பொழுது நம்முடைய உள்ளம் உருகும். செல்வர் கொடுக்காமல் மறைத்து வைக்கும் கொடுமையை நினைக்க உள்ளம் உருகும் நிரையன்றி உள்ளமே கெட்டுவிடும்.

கரப்பார் இல்லை என்று சொல்லாடிய அளவானே, இரப்பவர் உயிர்போகா நிற்கும்; பொருளை மறைத்து வைப்பார் உயிர், இல்லை என்று கூறிய பின்னும் நிற்றலான். அஞ்சி எங்குச் சென்று மறைந்து கொண்டிருக்கும்.

## 14.7 கயமை (1071 - 1080)

அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்கவியல் உள்ளும் சிறப்பு வகையான் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன. குறிப்பினால் யாவர்க்கும் எய்த வைத்தமையின் ஆண்டுக் குறிப்பால் கூறியனவும், ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவும் இலர் ஆய கீழோரது தன்மை.

உலகத்துக் கயவர்கள் உளர். அவர்கள் கடையாய கீழ்மக்கள் என்பனாற்தான் வள்ளுவர் இறுதி அதிகாரத்தில் அவர்களைப் பற்றிக் கூறினர் என்க.

### 14.7.1 கயவரது குற்றமிகுதி

1. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல் (1071)

கயவர் தோற்றத்தால் மக்களே போன்று காணப்படுவர்; அவர் மக்களை ஒத்துத் தோன்றுவது போன்ற ஒப்புமையை வேறு எந்த இனத்திலும் யாம் கண்டதில்லை.

### 14.7.2 கயவர் பழிபாவங்கட்கு அஞ்சார்

2. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர் (1072)

தமக்கு உறுதியாய அறத்தை அறியும் நல்லோரிலும் அவை அறியாத கீழ்மக்கள் நன்மை உடையர்; ஏனெனில் அறத்தை அறியாது மனம் போன போக்கில் நடப்பதால் நெஞ்சின்கண் கவலை இல்லாதவர்கள்.

### 14.7.3 விலக்கற்பாடின்றி வேண்டுவன செய்வர் கயவர்

3. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (1073)

தேவரும் கயவரும் ஒத்த இயல்பினர்; ஏனெனில் தேவரைப் போன்று தம்மை ஏவல் கொள்வார் இன்றி, கயவர் மனம் விரும்பியவற்றைத் தொடர்ந்து செய்கின்றனர்.

### 14.7.4 கயவர் மேம்பாடுமாறு கூறப்பட்டது.

4. அகப்பட்டு ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ் (1074)

கீழ்மகன், தன்னிலும் தாழ்ந்த நெறிகடந்து ஒழுகுபவாகளைக் கண்டானாயின் தான் அத்தீய ஒழுக்கத்தினரைக் காட்டிலும் மேம்பட்டு நின்று, இறுமாப்பு அடைவான்.

### 14.7.5 ஆசாரஞ் செய்தல் இயல்பன்று

5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவா உண்டேல் உண்டாம் சிறிது (1075)

கீழ்மக்களின் ஆசாரத்திற்குக் காரணமாக இருப்பது அச்சமே. எஞ்சியவற்றில் அவா உண்டானால் அதனாலும் சிறிதளவு ஆசாரம் உண்டாகும்.

### 14.7.6 கயவர் செறிவின்மை

6. அறைபறை அன்னார் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் (1076)

தாம் கேட்ட மறைவான செய்திகளை இடந்தோறும் சுமந்து கொண்டு பிறர்க்குப் பரப்புதலால் கயவர் மறையப்படும் பறைக்கருவியை ஒப்பர்.

### 14.7.7 கயவர் கொடுக்குமாறு கூறப்பட்டது

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு (1077)

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல
கொல்லப் பயன்படும் கீழ் (1078)

கயவர் தம் கன்னத்தில் அறைந்து, பல்லை உடைக்கும் வளைந்த கையினை உடைய முரடர் அல்லாதவர்களுக்குத் தாம் உண்டு கழுவிய ஈரக்கையையும் உதறமாட்டார்கள்.

பிறர்தம் குறைகளைச் சொல்லிய அளவிலேயே சான்றோர் மனம் இரங்கிப் பயன்படுவர். ஆனால் கரும்பு போல் கொடியவர் நையப் புடைத்த வழி பயன்படுவர்.

### 14.7.8 பிறர் செல்வம் கண்டு பொறாமைப்படுதல்

9. உடுப்பதூஉம் உண்பதூஉமட் காணின் பிறர்மேல்
வடுக்காண பயன்படும் கீழ் (1079)

பிறர்செல்வத்தால் உடையணிந்தும், உடுத்தும் நிற்றலைக் காணின், கீழ்மக்கள் மனம் பொறாமல், அவரிடம் குறை இல்லை என்றாலும், அவர் மாட்டு, தாமே உண்டாக்கிக் கூறும் வல்லமையுடையர்.

### 14.7.9 கயவர் பிறர்க்கு அடிமையாய் நிற்பர்

10. எற்றிற் குரியர் கயவர் ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து (1080)

கயவர் தமக்கு ஏதேனும் ஒரு துன்பம் உற்ற இடத்து, அதனை நீக்கிக் கொள்ளத் தம்மையே பிறர்க்கு விரைந்து விற்பர். அதுவன்றி வேறு எந்தத் தொழிலுக்கு உரியர்.

## 14.8 நிறைவாக

- இரவு என்னும் அதிகாரத்தின் பொருளை உணர்ந்து கொண்டீர்கள்.
- இரவச்சம் என்னும் அதிகாரத்தின் கருத்தை அறிந்து கொண்டீர்கள்.

• கயமை என்னும் அதிகாரத்தைத் தெரிந்து கொண்டீர்கள்.



## 14.9 சோதித்தறியும் வினாக்கள்

குறிப்பு

1. இரவு என்பதன் பொருளை விளக்குக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………

2. இரப்பார்க்குரிய இன்றியமையாத இயல்புகளைக் கூறுக

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………..

3. இரவச்சம் என்பது யாது?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………

4. இரவச்சத்தின் கொடுமைகளாக வள்ளுவர் உரைப்பன யாவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………..

5. யாரிடம் இரவக்கூடாது என்று வள்ளுவர் கூறுகிறார்?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………..

6. கயமை என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………..

7. கயவரின் தோற்றம் யாரைப் போன்று இருக்கும் என்று திருவள்ளுவர் உரைக்கிறார்?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………8. கயவரின் செயல் எதைப் போன்றது?

…………………………………………………………………………

…………………………………………………………………………

………………………………………………….

## 14.10 பயிற்சி வினாக்கள்

1. இரவு என்ற அதிகாரத்தின் வழி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க

2. இரவச்சம் என்ற அதிகாரத்தை வள்ளுவர் வைத்ததற்குரிய காரணங்களை விரித்துரைக்க

3. கயமை என்ற அதிகாரத்தின் மூலம் வள்ளுவர் சுட்டும் கருத்துக்களை ஆராய்க

## 14.11 மேலும் படித்தறிக

1. திருக்குறள் அழகும் அமைப்பும், மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகர், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை – 600 005, பதிப்பு – டிசம்பர் 2009

2. திருக்குறள், பெரியண்ணன் உரை, வனிதா பதிப்பகம், சென்னை – 600 017, நாற்பதாவது பதிப்பு 2016.

## மாதிரி வினாத்தாள் - 1

**தாள்: 10751 பண்டை இலக்கியம்**

**காலம்: 3 மணி**

**மதிப்பெண் - 75**

**பகுதி – அ**

**அ)அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி (10×2=20)**

1. கையறுநிலை என்றால் என்ன?

2. உள்ளுறை உவமை என்பதை வரையறு

3. பதிற்றுப்பத்து பற்றிக் குறிப்பு வரைக

4. செலவுப் பத்து என்பதை விளக்குக
5. பரிபாடலில் திருமாலின் அவதாரத்தை எழுதுக
6. திருக்குறளின் சிறப்புகள் பற்றி எழுதுக
7. மானம் என்பதற்கு பரிமேலழகர் கூறும் விளக்கம் யாது?
8. பெருமையின் சிறப்பு யாது?
9. பிணியன்றே பீடுநடை விளக்குக
10. கயவரின் செயல் எதைப் போன்றது?

**பகுதி – அ**

**ஆ) அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி**

**(5×5=25)**

11.அ)தலைமகன் பருவங்கண்டு சொல்லிய சொற்களைப் புலப்படுத்துக

அல்லது

ஆ)குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆவூர் மூலங்கிழார் எங்ஙனம் பாடுகிறார்?

12.அ)நெடுநல் வாடையில் மகளிரின் குளிர்காலத் தோற்றத்தை விளக்குக

அல்லது

ஆ)கட்டிலின் ஒப்பனைத் திறம் எத்தகைய தன்மையுடையதாக இருந்தது என்று நக்கீரர் விளக்குகிறார்?

13.அ)செலவழுங்குவித்த பத்தில் தலைவனின் மன இயல்பை விளக்குக

அல்லது

ஆ)செலவுப் பத்தில் தலைமகள் தோழிக்கு உரைக்கும் செய்திகளைப் புலப்படுத்துக

14.அ)பெருமையுடையார், சிறுமையுடையாரின் செயல்கள் யாவை?

அல்லது

ஆ)சான்றாண்மை நிறைந்தவர் எத்தகையவராக இருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

15.அ)வறுமையுடையவரின் இளிவில்லா இரவு விலக்கப்படாது - விளக்குக

அல்லது

ஆ)இரவின் குற்றத்தையும், கரவின் குற்றத்தையும் கூறுக

குறிப்பு

பகுதி – இ

**இ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளி**

**(5×5=25)**

16. தலைவன் இடந்தலைப்பாட்டின் கண் கூடலுறு நெஞ்சிற்குச் சொல்லியது பற்றிக் கட்டுரை வரைக

17. கண்டார் கூற்று பற்றி தொகுத்துரைக்க

18. திருக்குறளில் அமைந்துள்ள முப்பால்களின் கருத்துக்களை விளக்கி வரைக

19. நாணுடையாரின் சிறப்புகளையும் நாணம் இல்லாதவரின் இழிவையும் வள்ளுவர் வழி நின்று கட்டுரைக்க

20. உழவு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக

## மாதிரி வினாத்தாள் - 2

**தாள்: 10751 பண்டை இலக்கியம்**

**காலம்: 3 மணி**

**மதிப்பெண் - 75**

பகுதி – அ

**அ)அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி (10×2=20)**

1. பண்டை இலக்கியங்கள் என்பவை யாவை?
2. தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது யாது?
3. கருப்பக் கிருகம் என்பது என்ன?
4. நெய்தல் திணை பற்றி விளக்குக
5. பரிபாடல் பற்றிக் குறிப்பு வரைக
6. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது?
7. சான்றாண்மைக்கு ஆழி எனப்படுபவர் யார்?
8. குடிசெய்வாரின் இயல்புகளை விளக்குக
9. ஒண்பொருள் கொள்வார் பிறர் - விளக்குக

10. இரவச்சம் என்பதைக் கூறுக

**பகுதி – அ**

**ஆ) அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி**

**(5×5=25)**

11.அ)தலைவி பருவங்கண்டு அழிந்து சொல்லியதை சிறைக்குடி ஆந்தையார் எங்ஙனம் உரைக்கின்றார்?

அல்லது

ஆ)நெடுநல்வாடையில் இடம்பெற்றுள்ள மழைவளக் காட்சியை விளக்குக

12.அ)நெய்தற்கலியில் தோழியின் கூற்றைச் சுட்டுக

அல்லது

ஆ)பரிபாடலில் ஊழி பற்றி கீரந்தையார் கூறுவனவற்றை விளக்கி எழுதுக

13.அ)பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் அமைப்பு முறையை விளக்குக

அல்லது

ஆ)திருக்குறள் உலகப்பொதுமறை என்ற கூற்றை ஆராய்க

14.அ)பிறர்க்குப் பயன்படாத செல்வம் பற்றி வள்ளுவர் யாது கூறுகிறார்?

அல்லது

ஆ)நாணின் சிறப்பு பற்றி விளக்குக

15.அ)உழவுத்தொழிலின் மேன்மையை வள்ளுவர் எங்ஙனம் புலப்படுத்துகிறார்?

அல்லது

ஆ)கயவரின் செயல்களை விளக்குக

**பகுதி – இ**

**இ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளி**

**(5×5=25)**

16. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரத்தைப் புலவர் வழி நின்று விரித்துரைக்க

17. கண்டார் கூற்று பற்றி தொகுத்துரைக்க

18. குடிமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களை கட்டுரை வடிவில் விடை தருக

19. குடிசெயற்குரிய காரணங்களையும் குடிசெய்வாரது இயல்பையும் புலப்படுத்துக

20. நல்குரவு என்னும் அதிகாரத்தைப் பற்றி கட்டுரைக்க

குறிப்பு

# NOTES

# NOTES

NOTES